கனவுகள் விற்பவன்



பாலகுமாரன்

மின்நூல் உருவாக்கம்
சுபாஷ் சண்முகா

கனவுகள் விற்பவன்

பாலகுமாரன்

விசா பப்ளிகேஷன்ஸ்

சுகான்ஸ் அப்பார்ட்மெண்ட்ஸ்

பழைய எண் : 28 புது எண்.13, சிவப்பிரகாசம் சாலை,

தி.நகர், சென்னை–600 017.

தொலைபேசி : 2434 2899, 24327696

பேக்ஸ் எண் : 91–44–24341559

முதற் பதிப்பு செப்டம்பர், 1990
இரண்டாம் பதிப்பு செப்டம்பர், 1991
மூன்றாம் பதிப்பு ஆகஸ்ட், 1993
நான்காம் பதிப்பு மே, 1997
ஐந்தாம் பதிப்பு ஆகஸ்ட், 2009
ஆறாம் பதிப்பு அக்டோபர், 2013

உரிமை ஆசிரியருக்கு ©

KANAVUGAL VIRPPAVAN

By : BALAKUMARAN

Sixth Edition October, 2013
No. of Pages 368
Paper Used 11.6 Kg.

விலை : ரூ.165.00

THIRUMAGAL NILAYAM
Sucons Appartments,First Floor,
No.13, Sivaprakasam Street,
T.Nagar, Chennai - 600 017.
Phone : 044 - 24342899, 24327696
E-mail : enquiry@thirumagalnilayam.com
website : www.thirumagalnilayam.com

கனவுகள் விற்பவன்

1

கிழவனுக்கு எதிரே சோற்றுப் பாத்திரம் டொக்கென்ற ஓசையோடு வைக்கப்பட்டது.

விரிந்த காதுக்குள் விழுந்த எந்த சப்தத்தையும் மனசுள் வாங்காத கிழவன், இந்த ஓசை கேட்டதும் மெல்ல திரும்பினான். அவன் திரும்புவதற்குள் வாயில் எச்சில் சுரப்பிகள் மலர்ந்தன, கசிந்தன. கிழவன் தலை திரும்பப்படுவதைக் கட்டுப்படுத்தினான். இன்னும் இரண்டடங்குலம் வலப்பக்கம் திரும்பினால் சோற்றுத் தட்டை முழுவதும் பார்த்துவிட முடியும். விளிம்பு மட்டுமே இப்போது தெரிகிறது.

தலை நேராகி கிழவன் மறுபடி தெருவை வெறிக்க ஆரம்பித்தான்.

இப்படி உட்கார்ந்து முப்பத்து நாலு வருடமாகி விட்டது. இன்னும் புத்தியை நிறுத்த முடியவில்லை. காது ஓசையை அறுக்க முடியவில்லை. எப்பவாவது காது ஓசை மொத்தமும் அடைத்து கண்ணைப் பஞ்சாக்கி, உடம்பை லேசாக்கி, நெற்றியை நெருப்பு மாதிரி சுட வைக்கிறது. சில சமயம் ஐயோ என்று எழுந்திருக்கும் படியாகிறது.

சில சமயம் மறந்து பசி தெரிகிறது. மனிதர்களை மனிதர்களால் அடையாளம் தெரிகிற உலக வழக்குகள் நினைவுக்கு வருகின்றன. அம்மா, அப்பா, தம்பி, மனைவி, குழந்தைகள் என்று தெரிகின்றன.

தூக்கம் விழிப்பு, விழிப்பு தூக்கம் என்று மனசு அல்லாடுகிறது. எது தூக்கம், எது விழிப்பு என்று இனம் கண்டு கொள்ள முடியவில்லை.

'வரும்.... வரும்... விழிப்பு, வரும். சும்மா இரு' என்று உள்ளே குரல் கேட்கிறது. என்ன வரும், ஏது வரும் என்று கூட எதிர்பார்க்காதே என்று மனசு கட்டளையிட்டது.

இப்படியே திண்ணையில் முப்பத்து நாலு வருஷம். பகல் பதினோரு மணிக்கு டொக்கென்று சத்தம் கேட்கும். மனசு அழிந்து வாயில் நீர் ஊறும், இரைப்பை தா தா என்று கெஞ்சும். உருட்டி உருட்டி முழுங்கி நீர் குடித்து ஓரம்போய் உட்கார்ந்ததும் களைப்பு தாக்கும். கண்மூடி உட்கார்ந்திருக்க, உணவு செரிமானமாவது புரியும். வயிற்றிலிருந்து சக்தி பிரிந்து உடம்பு முழுக்க பரவுவது உணரமுடியும். மண்டை ஆவலுடன் ரத்தம் வாங்கிக் கொள்ளும்.

என் உடம்பு முழுக்க எனக்குக் தெரிகிறது. உள்ளே அசைந்து புரள்வது எல்லாம் உணர முடிகிறது. கால் விரல் நுனியில் ரத்தம் சுழன்று போவது தெரிகிறது. கால் தொட்ட ரத்தம் தொடை ஏறுவதும், இடுப்பு பரவுவதும் புரிகிறது. சுவாசப்பை, இருதயம், இரைப்பை எல்லா அசைவுகளும் தெரிகின்றன. நாடியின் நிதானம் தெரிகிறது.

ஆனால், புத்தி அவ்வப்போது வசப்படுகிறதே தவிர, முற்றிலும் அடிமையாகவில்லை.

பதினாறு வயசில் இப்படி உட்கார்ந்த முதல் நாள் பயந்துபோய் 'ஓ'வென்று கூச்சலிட்டான். உடம்பில் ஒரு துணி கனம்கூட தாங்காமல் அவிழ்த்து, காற்றுக்காகத் தெருவில் ஓடி, காற்று தாக்குதலையும் தாங்காது தொப் பென்று விழுந்துவிட, பைத்தியம் என்றார்கள். கொஞ்சம்

அடித்தார்கள். சாமியாரிடம் கூட்டிப் போனார்கள். சாமி உற்றுப் பார்த்தது.

"அவனை விட்டுடு!"

"இவன் எனக்கு மூத்த பிள்ளைங்க சாமி. இப்படி பண்றானே." அப்பா பதறினார்.

'அவன் உனக்கும் மூத்தவன்."

"சாமி..."

'போன ஜென்மத்து வாசனை.... வெறும் பதினாறு இல்லை. கூட எண்பது சேர்த்துக்கோ. உனக்கு வச்சக்க முடியலைன்னா எங்கயாவது கோவில் குளத்துக்கிட்ட வுட்டுடு - ஜனங்க பார்த்துக்கும்."

"இல்லீங்கய்யா. நானே வளர்க்கறேன்."

அப்பா குளிப்பாட்டுவார். துணி மாத்துவார், நெற்றியில் திருநீறு பூசுவார். சோறு ஊட்டுவார். எப் போதாவது தலை உச்சிக்கு வேகம் ஏறி, துணி இல்லாது ஓடுகிறபோது கூடவே ஓடி வருவார்.

"ஐயா துரை... என்னடா செய்யுது உனக்கு? ஏண்டா இப்படிப் பண்ற...?"

நின்று கை நீட்ட பற்றிக்கொண்டார். ஐயோ என்று கத்தினார். உடம்பு கனம் மொத்தமும் இழந்து லேசாகி சாவு மாதிரி தோன்றிவிட்டது அவருக்கு. கை உதறியதும் பயந்து போனார்

"இதானா.... இதானா... ஐயோ... அஞ்சு நொடி தாங்க முடியலையே.... புள்ளை எத்தினி அவஸ்தைப் படுதோ தெரியலையே...

அன்றிலிருந்து வீட்டில் மரியாதை அதிகமாயிற்று

"போன ஜென்மத்து மிச்சம், துரை எனக்குப் புள்ளையா வந்து பொறந்திருக்கு. நான் பட்ட கடனோ,

அது பட்ட கடனோ தெரியலை." ஊர் மொத்தமும் கும்பிட்டுவிட்டுப் போகும், திருட்டு கேஸில் மாட்டி வேலை போன ஐயர் குடும்பம் அங்கே குடிபெயர்ந்தது. விதி வசத்தால் நொந்துபோன ஐயர் வெயிலுக்குத் திண்ணையில் வந்து உட்கார்ந்தார். "உன் பக்கத்துல இருக்கற மணைக்கட்டைய தர்றயா தம்பி.... தலை சுத்தறது.. வெயில்."

அவனிடமிருந்து மணைக்கட்டையை இழுத்து தலைக்கு வைத்துக் கொண்டார் தூங்கினார்.

இவனுக்கு அவர் துன்பம் தெரிந்தது. செய்யாத குற்றத்திற்கு தண்டிக்கப்பட்டோமே என்கிற அவரது அழுகை புரிந்தது, எப்பவும் உள்ளே புலம்பிக் கொண்டிருப்பது காண முடிந்தது. 'தூங்கு... தூங்கு...' அவரை சமனப்படுத்தினான். இருட்டுன்னா வெளிச்சம். வெளிச்சம்னா இருட்டு. எப்பவுமே வெளிச்சமா இருந்தா தூங்க முடியுமா... தூங்கறதுக்குத்தான் இருட்டு. தூங்கு, இப்ப உனக்கு இருட்டுக் காலம். அவன், அவர் புத்தியிலிருந்து துருப்பிடித்த ஊசிகளைப் பிடுங்கிப் போட்டான்.

மாலை நேரத்தில் ஐயரை, மனைவி தேடி வந்து விட்டாள்.

"என்ன இங்க தூங்கறேள்...?" உலுக்கி எழுப்பினாள்.

"தூங்கினேனா.. எப்போ... ஆமா, மணி ஆறே காலா. எப்ப படுத்தேன்? சரஸ்வதி நிஜமாவே தூங்கிட்டேனாடி? என்ன தூக்கம்.... அடேயப்பா? என்ன இப்படி... நான் தூங்கினதேயில்லையே? மன்னிக்கணும். ரொம்ப நேரம் தூங்கிட்டேன்." மணைக்கட்டையை திரும்ப நீட்டினார். அவன் அருகே வைத்தார். "உங்களை

எங்கேயோ பார்த்திருக்கேனே... எங்க.. ஊசி பிடுங்கி னேளோ... ரொம்ப தாங்க்ஸ். தலைலேர்ந்து... ஐயோ.... உளறறேனே? என்ன நடந்தது? என்னமோ... என்னமோ... நடந்துருக்கு சார். யார் நீங்க?"

இரவு பதினோரு மணிக்கு டார்ச் எடுத்து வந்தார். முகத்தில் வெளிச்சம் அடித்து உற்றுப் பார்த்தார். வீட்டு வாசல் பூட்டியிருந்தது. தெருவில் நடமாட்டமில்லை.

"எனக்கு நல்ல காலம் பொறக்குமா சொல்லுங்கோ. எனக்கு விடியுமா? என் குழந்தைகள் படற வேதனை தாங்க முடியலையே. மனசு அல்லாடறதே. தூங்க முடியலை. கொஞ்சம் மணைக்கட்டைய தரேளா... சித்த இப்படித் தூங்கட்டுமா.." அவனுக்கு அருகே படுத்துக் கொண்டார்.

அவர் நெஞ்சு தட்டினான். முதுகு தடவினான் கைகளை நகர்த்தாமல் சகலமும் மனசு வழியே செய்தான். விரல் நுனிகூட அசைக்காமல் ஆசுவாசப் படுத்தினான். இறுக்க அணைத்துக் கொண்டான்.

"போறும்? போறும்? பகவானே இது போறும்." குழந்தை மாதிரி அழுதார். காலில் பல முறை விழுந்து நமஸ்கரித்தார்.

அப்பா சத்தம் கேட்டு வாசல் வர, புரியாது விழித்து "என்னங்க இது?" என்று தடுத்தார்.

"இது பிரம்ம சொரூபம் ஐயா. ரணம் போக்கற மருந்து.. கிழக்கப் பார்த்து நில்லுங்க. இது உங்க புள்ளையா... உங்களையும் நமஸ்காரம் பண்றேன்..."

விழுந்தது, குடும்பமே வந்து வணங்கிற்று. ஊர் வேடிக்கை பார்த்தது. கூட்டம் சேர்ந்தது. மாலை மரியாதை எல்லாம் நடந்தது.

"ஒரு வாரம் பார்த்துவிட்டு எதுவும் நடக்காமல் ஐயோ ஏதோ பயந்துட்டு பினாத்தறாரு" என்று அலுத்துக் கொண்டது.

மணைக்கட்டையை ஒரு ஆள் எடுத்துக்கொண்டு போனான். இரண்டு நாள் கழித்து திரும்பக் கொண்டு வந்து போட்டு விட்டான்.

அப்பாவை மிரட்டினார்கள் "என்ன இது? புது பிஸினஸா.. பைத்தியக்காரப் பையனுக்கு சாமியார் வேஷம் போட்டு துட்டு சம்பாதிக்கப் பார்க்கறியா...' கூச்சலிட்டார்கள்.

"நான் சம்பாதிக்கலீங்க."

"அப்ப போன வாரம் கலெக்ஷனெல்லாம் கொடு."

"என்கிட்ட இல்லை."

ஐயர் பால் பவுடர் டப்பாவில் ஒட்டை போட்டு வைத்திருந்த உண்டியல் திண்ணையிலேயே இருந்தது. எடுத்துக் கொண்டார்கள். வாசலில் பலகை போட்டு மௌனசாமி என்று பெயர் எழுதி, பூட்டு போட்ட உண்டியல் தொங்க விட்டார்கள் 'அவரு மணைக் கட்டைல படுத்துக்கிட்டா எல்லா நோவும் தீர்ந்துவிடும்' என பரப்பினார்கள். கற்பூரக் கடை வைத்தார்கள். மாலைக்கு எட்டு ரூபாய், சாத்துவதற்கு இரண்டு ரூபாய் என்றார்கள். போட்ட மாலையையே கழட்டி காசு வாங்கிப் போட்டார்கள்.

அவன் பேசாதிருந்தான்.

புருஷன் பெல்ட்டால் அடித்து விளாசிய பெண் வந்து அழுதது. அவன் மனசுள் தொட்டில் கட்டினான். அவளைக் குழந்தையாக்கினான் தாலாட்டினான். அவள் கண்ணில் கட்டியிருந்த கருவளையங்களைக் கழற்றி

வெளியே எறிந்தான். அடர்ந்த கூந்தலுக்கு நடுவே ஒரு முடி தவறாக இருந்தது. பிடுங்கிக் காற்றில் ஊதினான்.

அவள் தினமும் வந்தாள். 'அப்பா... அப்பா' என்று உபசரித்தாள். "தனிக்குடித்தனம் போயிட்டேம்ப்பா. அவரு இப்ப திட்டறதுகூட இல்லை. உனக்கு வேட்டி தோச்சுப் போடறேன், குடு." அவள் அப்பா கிணற்றில் நீர் சேந்தித் தர, அவள் முதுகு சொறிந்து குளிப் பாட்டினாள். தலை துவட்டினாள். 'அப்பா' என்று கூப்பிட்டு ஐந்து வயசுக் குழந்தையைச் சீராட்டுவது போல் உபசரித்தாள்.

"சாமி கூப்புடுது" என்று ஒரு நாள் உண்டியல் ஆட்கள் அவளை இருட்டில் அழைத்து வந்தார்கள். பனந்தோப்புல இருக்குது என்று இழுத்துக் கொண்டு போனார்கள்.

"எங்களுக்கு குளிப்பாட்டுடீ" என்று புடவையை இழுத்தார்கள். அவன் பனைமரத்துப் பொந்தில் உள்ள தேனீக்களை உசுப்பி விட்டான். தேனீக்கள் விடாது அவர்களைக் கொட்டின. துரத்தின. எல்லா இடங் களிலும் கடுப்பு ஏற்பட்டது. அவள் வீட்டுக்கு ஓடிப் போனாள். மறு நாள் வந்து மௌனசாமி என்றெழுதி யிருந்த பலகையை உடைத்து எறிந்தாள். உண்டியலை நசுக்கிப் போட்டாள். ஓலைக் கூரைக் கடையை வேரோடு பிடுங்கினாள். அவளை யாரும் தடுக்க வில்லை. தடுக்கும் அளவு ஆட்கள் இல்லை. உண்டியல் ஆட்களைக் காணோம்.

"அப்பா. எப்படி செஞ்சே இதெல்லாம்" வியந்து கேட்டாள்.

இது யாரும் செய்ய முடியும். எல்லா மனிதருக்கும் செய்ய முடியும். விரலே நகர்த்தாமல் தழுவிக்கொள்ள

முடியும். இடம் பெயராமல் அடித்துத் துரத்த முடியும். உட்கார்ந்த இடத்துலயே எல்லாரையும் நேசிக்க முடியும். உதவி செய்ய முடியும், இது எவருக்கும் சாத்தியம். முயல்வதில்லை.

யாரும் உள்ளே பார்ப்பதில்லை. வெளியே பார்க்கிறார்கள். வீட்டுக்குள்ளேயே ஆயிரம் குழப்பம் வைத்து வெளியே என்ன வேலை செய்ய முடியும்? செய்தால் எது சரியாய் இருக்கும்? வீட்டைக் கவனிக்க வேண்டாமா... உள்ளே ஒழுங்கு பண்ண வேண்டாமா... தொடு, உள்ளே தொடு. நடந்து உன் உடம்பு வீட்டுக்குள் போ. ஒவ்வொரு இடமாய் பார்த்துப் பார்த்து சரிசெய். உத்திரக் கட்டைகளை நிமிர்த்தி, ஒழுங்காகக் கூரை வேய்ந்து தரை மெழுகு. சுவருக்கு சுண்ணாம்பு அடி. வாசக்காலை உயரமாய் வைத்து படி கட்டு. கொல்லைப் புறம் காற்றோட்டமாக வை. வெளிச்சம் புக விடு. காற்று வரச்செய். இண்டு இடுக்கெல்லாம் வெளிச்சமும் காற்றும் புகட்டும். சுத்தமானதும் வெளியே வா. வாசலில் நின்று, வந்தவரைக் கூப்பிடு. உள்ளே அழை. உட்கார வை. உனக்கும் சந்தோஷம். அவருக்கும் சந்தோஷம்.

சுத்தமான வீடு எல்லோருக்கும் சந்தோஷம்.

இது யாருக்கு கடினம்.. என்ன வேதனை ஏன் மறந்து போகிறது... எது தன் இடம் என்பதை மறந்துவிட்டு, எல்லா இடத்துக்கும் போய் களைப்புதான் மிஞ்சும்.

நீ எங்கு தங்குகிறாய்.... உள்ளேதானே. எங்கு தூங்குகிறாய்... உள்ளேதானே. தூக்கம் உள் விஷயமா.. வெளி விஷயமா....

சோற்றுப் பாத்திரம் நோக்கி கிழவன் திரும்பினான். முப்பத்து நாலு வருஷம் வீட்டுக்குள்ளே... முப்பத்தி நாலு வருஷம் எது வீடு? மனசே வீடு.

கொஞ்சம் எடுத்து வாயில் போட்டுக் கொண்டான். விழுங்கினான். வீட்டுக்குள் வெளிச்சம் இறங்கிற்று. இன்னொரு கவளம் விழுங்கினான், வெளிச்சம் உயர்ந்தது. இன்னொரு கவளம்.. மூலையிலெல்லாம் சுடராயின. ஐந்தாவது கவளம் விழுங்கிவிட்டு தண்ணீர் குடித்தான். வீடு முழுக்க வெளிச்சம் நிழலே இல்லாது பிரகாசித்தது.

தம்பி மனைவி தட்டெடுத்துக் கொண்டு போனாள். தம்பி மகள் ஈரத்துண்டு எடுத்து உதடும் கன்னமும் துடைத்தாள். அவன் திண்ணை மூலைக்குப் போய் உட்கார்ந்து கொண்டான். துடைப்பம் எடுத்து அவன் இடம் விட்டு பெருக்கினார்கள். ஈரத்துணி போட்டுத் துடைத்தார்கள்.

"அம்மா.... தட்டு வை. எனக்குப் பசிக்குது."

அவன் சாப்பிட்ட பிறகுதான் சாப்பிட உட்கார்ந்தார்கள்.

உள்ளே வெளிச்சம் நூல்கற்றைகள் மாதிரி பரவியிருந்தது. கொஞ்சம் இழுத்து உருட்டினான். மெல்ல இழுத்து இழுத்து பெரியதாக்கினான். வழக்கம் போல் கரைத்துவிடாது சிறு உருண்டைகளாய் வெளிச்சம் எழுப்ப முடிந்தது. வெளிச்சம் பந்தாய் சுருண்டு இருந்தது. தினமும் இப்படிப் பந்து பண்ணிக் கொண்டிருந்தான். ஆனால், காணாது போகும். இன்று தங்கியது.

ஐயருக்கு ஊசிகளை மூளையிலிருந்து எடுத்தது இப்படி ஒரு வெளிச்சக் குறடாவால்தான்.

அந்தப் பெண்ணைக் காப்பாற்ற வெளிச்ச ஊசியாய் தேனீக்களை உசுப்பியதும் இப்படித்தான். இன்று பந்தாய் உள்ளே இருந்தது. வெளிச்சத்தில் பந்து

செய்ய முடியும் இன்று என்னவோ பந்து பண்ணத் தோன்றியது.

தரை பார்த்து பந்துடன் உட்கார்ந்திருந்தான். தெரு முனையில் ஆள் வருவது புரிந்தது.

காத்திருந்தான்.

சில சமயம் இந்த மாதிரி பந்து செய்து நாய்களுக்கு போட்டு விடுவான். எல்லாம் விழுங்கி நாய்கள் அமைதியாய் உட்கார்ந்திருக்கும். ஒரு முறை தெருவோடு போன யானையிடம் வீசினான். அது சந்தோஷமாய்ப் பற்றிற்று. நெற்றி முழுக்க வெள்ளைத் தழும்புகள் யானைக்குத் தோன்றின. எதிர்வீட்டு செடி வாங்கிக் கொண்டது. பூத்து குலுங்கிற்று. புழலேரியில் வீசி எறிந்தான். மீன்கள் பெருகின.

இந்த முறை பந்து உள்ளே இருந்தது. ஆள் வாசலில் நிற்பது தெரிந்தது.

"என்ன சாமி, எப்படி இருக்கிற? வெயிலு மண்டை புளக்குது. பத்து மணிக்கே அறுத்துப் போட்டுடுது. தண்ணிகொடேன், குவளையில் மீதி தண்ணி இருக்கா?" எக்கி இழுத்தான். மொத்தமும் குடித்தான். "உனக்கு இல்லையா.. பைப்புக்காரம்மா, பார்த்தசாரதி வந்துருக்கேன்." உள்ளே குரல் கொடுத்தான்.

"கொஞ்சம் இரு. சாப்பாடு நடக்குது."

"மொள்ள வா... வர்றபோது குடிக்க தண்ணி எடுத்தா. சாமி தண்ணிய குடிச்சிட்டேன் தாகத்துக்கு."

"அப்புறம்... என்னமோ இந்த இடம் குளு குளுன்னு இருக்குது. வாசப் பந்தலா காத்தா தெரியலை. பால் காசு வாங்கிட்டுப் போக வந்தேன். குழந்தைக்குப் பசும்பால் வேணும்னாங்க. அரை லிட்டர் ஊத்தறேன். ஏன் சாமி, நீ குடிக்கறதில்லையா? பாலு நூறு மில்லி ஊத்தவா

உனக்கும்? போன மாசம் எத்தினி அரை லிட்டர். முப்பதா, முப்பத்தியொண்ணா.... நாலோன் நாலு, நாமூணு பன்னெண்டு. நூத்தி இருவத்து நாலு. இரண்டு நா ஊத்தலை. மாடு உதைச்சுடுச்சு. எட்டுப் போக நூத்திப் பதினாறு."

"யம்வோவ்... நூத்திப் பதினாறு ரூபாய் மோவ்."

"வரேன்னில்ல. ஏன் கத்தற?"

"சரி. கத்தலை. அப்புறம் எதுனா சொல்லு சாமி. யப்பா. விரல் எல்லாம் நோவுது. மடக்கறது, நிமித்தறதே கஷ்டமா இருக்குது. கவுறு புடிச்சு, குவளை புடிச்சு, மடி புடிச்சு அப்புறம் பிசிற பிசிற புண்ணாக்கை வேற கரைக்கணும். வலுவே வரலை. கட்டை போட்டு கலக்கினா அப்படியே நிக்குது. மாடு முழுங்கினா தொண்டை நோவும். என்ன செய்யறது? கை வுட்டுப் புண்ணாக்கப் பிசிறினா மாதிரி ஆவுமா.... நீட்டினா கை உதறது பாரேன். இதுக்கு எதுனா செய்யேன். ஆந்தை பாக்கற மாதிரி பார்க்கறியேகண்டி ஒண்ணும் செய்ய மாட்டேன்ற.

அப்படி எதுனா செஞ்சி கிஞ்சி ஊரை ஒரு கலக்கு கலக்கினா அப்படி... ஜே ஜேன்னு ஆயிடாது ஊரு.. கூட நாலு டீக்கடை.... நாலு பலகாரக் கடை வராது? ஊர்ல வியாபாரம் பெருகி.. ஜனங்க ஓடியாடி நல்லா இருக்குமே. எதுனா செய் சாமி. உன் வேலையைக் காட்டு. அப்படி கை தூக்கினா துன்னூறு கொட்டணும். இப்படி கை நீட்டினா கிருஷ்ணன் பொம்மை வரணும். எலுமிச்சம் பழம் டான்ஸ் ஆடணும். சொல்லு.... உனக்கு பால் ஊத்தறேன். நூறு போறுமில்ல. வூட்ல கேளு, பால் எத்தினி சுத்தமுன்னு. பைப்புக்காரரு சொன்னாரு.. குழந்தைக்குப் பாலு வேணும், பார்த்தசாரதின்னு. டீக்கடைக்கு மூன்று பொழுது ஊத்தறேன். இங்க நாலு

ரூபா... தோ வந்துட்டானே நம்ம பால் குடிக்கிற மவராசன். டேய் வாடா..." தம்பி மகன் எட்டிப் பார்த்து விட்டு உள்ளே ஓடினான்.

ம்ம்... அப்புறம். நான் பேசறது புரியுதா. எதுனா செய்யேன். உன்னிய மாதிரி சமாசாரம் என் கிட்ட இருந்தா இப்படி மாடு தேச்சு கஷ்டப்படுவேனா. புண்ணாக்கு மெறிச்சு நொந்துக்குவேனா? காலு ஊன முடியலை. ஆணி இடதுகால்ல. அப்பப்ப ப்ளேடு போட்டு அறுத்தாலும் நோக்காடு சாமி. யப்பா... என்னா குளு குளுன்னு இருக்குது சாமி இந்த இடம். கண்ணை சுத்துது. மூன்றரைக்கு முழிச்சுது. கண்ணை சுத்துது. இன்னிக்கு ஏன் இப்படி கண்ணு சொருகுதுன்னு தெரியலை. பக்கத்து வூட்ல பொம்பளைகிட்ட ஆடினதா.... காலைல கொல்லைப்பக்கம் உட்கார்ந்து இருக்குப்பா, அந்த பொம்பளை எப்ப நான் முழிப் பேன்னு...

ஆமா தப்பா நினைக்காதே. ஊரான் பொண் டாட்டி தொடறது தப்புன்றியா. அதும் இஷ்டப்பட்டு கூப்புட்டா? நாம போய் மடக்கறது தப்பு. அது கண்ணடிச்சா....? எனக்குப் புரியலை சாமி. கப்புன்னு சுவரு தாண்டி உள்ளே போயிடறேன், வேற நினைப் பில்லாத. அப்புறம் பால் கறக்கச் சொல்ல தவறோன்னு தோணுது. சாமி, நல்லது எது? கெட்டது எது? எனக்குப் புரியற மாதிரி சொல்லுங்க."

கிழவன் வெளிச்சப் பந்து எடுத்து அவன் மீது எறிந்தான். நெஞ்சுக் குழியைப் பந்து தாக்கி பந்து உள்ளே போயிற்று. மிதத்தது. கரையத் துவங்கியது. அந்த பால்காரன் உள்ளே பந்து இருட்டு கிழித்தது. உடம்பு மூலை முடுக்கெல்லாம் பரவிற்று. பால்கார பார்த்தசாரதி மிரண்டு போனான்.

2

'இரண்டு நாள் பால் தரலை. எட்டு ரூபாய் போக நூத்தி பதினாறு ரூவா... இன்னிக்குக் கூட அரை லிட்டரு கொடு. இருக்குமா.. அவள் வாசலுக்கு வந்தாள்.

பார்த்தசாரதி எழுந்து நின்றான்.

உடம்பு ஆடிற்று. நூத்திப்பதினாறு சரிதான். ஆனா, வேணாம் என்று தோன்றியது. ஏன் தள்ளுது இப்படி.... எதுனா தப்பா ஆயிடுச்சா.... வெயிலா... கூட அரை மணி நேரம் மாடுகளைப் குளிப்பாட்டி விட்டதா.... இல்லை காலங்காலைல போய் வம்பு பண்ணிட்டு வந்ததா... ஆணிக்கால்ல எதுனா மெதிச்சு விஷம் ஏறிட்டிருக்குமா. விஷம் ஏறினாப்பல சுத்துதே...

"என்ன பார்த்தசாரதி, கூட அரை லிட்டர் இருக்குமா இன்னிக்கு?"

"தரேன்."

"என்னமோ மாதிரி இருக்கற...,'

"தெரியலைம்மா."

"தண்ணி போட்டியா?"

"இல்லம்மா. தலை சுத்துதே."

"உட்காரு... உட்காரு அப்பவே குடிக்க தண்ணி கேட்டல்ல... அம்மா, ஒரு லோட்டா தண்ணி எடுத்தா .உட்காரு உட்காரு." தடுமாறி பொத்தென்று தரையில் விழுந்தான். பிருஷ்டம் தரை தாக்கி, வலி மண்டைக்குள் ஏறி அலைகள் பரவின. கண்கள் கூசின வெள்ளைச் சுவரில் பட்ட வெயில் விழிகளைத் தாக்கிற்று. கண் மூடிக்கிடக்கத் தோன்றியது.

"ஐயோ... யாராச்சும் வாங்களேன், பார்த்தசாரதி வுழுந்துட்டுது." மண்ணில் சரிய இருந்தவன் தோள்

பிடித்துக் கொண்டாள். எதிர் வீடு, பக்கத்து வீட்டு ஆட்கள் ஓடி வந்தார்கள்.

"என்னடா... என்ன ஆச்சு..." எதிர்வீட்டு நாயக்கர் அக்குளில் கைகொடுத்துத் தூக்கி திண்ணையில் உட்கார வைத்தார்.

"தெரியலை நாயக்கரே... சுத்துது."

"வெயில் பேஜார் பண்ணுது." தண்ணீர் எடுத்து முகத்தில் தெளிக்கப்பட்டது.

"தலைல ஊத்து."

"தலைல ஊத்து. அப்படியே.... சூடு குறையும்."

திடீரென்று தவலை ஜலம் தலையில் ஊற்றப் பட்டது. உடம்பெல்லாம் ஓடியது. அவன் தலையில் ஊற்றிய ஜலம் கிழவன் மேலும் சிதறிற்று. வாயில் சுண்டின ஒரு துளி நீர் எகிறி பார்த்தசாரதி முகத்தில் பட்டது. உள்ளே வெளிச்சம் மெல்ல சுருங்கி நீர் பட்ட தணல் போல் அடங்கிற்று. சூடு மட்டும் இருந்தது.

பார்த்தசாரதி கண் விழித்தான். கூச்சம் குறைந் திருந்தது. கண்களை முழுவதும் திறக்க, லேசான பிசி றுடன் சகல விஷயங்களும் தெரிந்தன. உடம்பு ஆட்டம் குறைந்திருந்தது. படபடப்பு போகவில்லை.

"என்னடா ஆச்சு?"

"தலை சுத்தல் நாயக்கரே."

"தண்ணி குடி." அவள் முன் வந்தாள்.

"இரும்மா, நெஞ்சு நோவுதா?"

"இல்லை நாயக்கரே!"

"முதுகு?"

"இல்லை"

"தாடை, இடது கை எதுனா வலி இருக்கா?"

"இல்லை."

"எழுந்து நின்னு கைகால் உதறு."

உதறினான்.

"எதுனா சாப்பிட்டியா?"

"இல்லை நாயக்கரே... இவரு பக்கத்துல செம்புல தண்ணி இருந்தது. எடுத்து குடிச்சேன் தாகத்துக்கு."

"கேட்காத குடிச்சிருப்ப?"

"இல்லை நாயக்கரே, கேட்டுத்தான் குடிச்சேன். அவரு ஒண்ணும் சொல்லலீங்களே."

"ஏங்க..." நாயக்கர் கிழவரை விசாரித்தார். "எதுனா செய்துட்டீங்களா பையனை?"

"அவரு ஒண்ணும் செய்யலீங்க. பேசக்கூட இல்லை. நான்தான் பேசினேன்."

"உனக்குத் தெரியாது.... இந்தாளு ஒரு மாதிரியான ஆசாமி. நாம நடக்கச் சொல்லி தள்ளி வுட்டுரும்."

'தள்ளி வுட்ருமா?"

"சும்மா பத்துப் பதினைஞ்சு அடிக்குத் தூக்கிப் போட்டுரும்."

பார்த்தசாரதி விழித்தான்.

"அதெல்லாம் சொல்லாதீங்க. அவரு யாரையும் நோகப் பண்ண மாட்டாரு." தம்பி மனைவி சமாதானப் படுத்தினாள்.

"என்ன ஆச்சு உனக்கு? சொல்லு.." நாயக்கர் கேட்டார்.

"ஏதோ நெருப்பு நெஞ்சுல வச்ச மாதிரி உடம்பெல்லாம் சுறுசுறுன்னு ஆவுமே... அது மாதிரி உள்ள மரத்துப் போயி ரத்தம் பாஞ்ச மாதிரி."

"இந்தாளுதான். என்ன பேசின...."

"நூறு மில்லி பால் தரட்டா உனக்கு.... சும்மா தரேன்னேன். பதிலே சொல்லலை."

"நக்கல் பண்ணியா?"

"இல்லை நாயக்கரே. எதுனா செய்... விபூதி கொட்டு. கிருஷ்ணர் பொம்மை கொண்டா... ஊர் பெரிசாயிடும்னேன்."

"தேவைதானா உனக்கு?' நாயக்கர் சிரித்தார்,

"எது பேசினாலும் அது தப்பா எடுத்துக்காது. நான் கூட சில சமயம் திட்டறதுதான்." அவள் பரிந்து பேசினாள்.

பார்த்தசாரதி வியப்புடன் பார்த்தான். கிழவன் வெளியே வெறித்துப் பார்த்தபடி இருந்தான். இதுவா தள்ளும்? இதுவா பதினைந்தடி தூக்கிப் போடும். இதுவா பயம் காட்டும்?

"இல்லீங்க. எனக்கு ஏதோ உடம்பு தொந்தரவு பித்த மயக்கம்."

"சரி. கொஞ்சம் உட்கார்ந்துட்டுப் போ."

"இல்லீங்க. காசு வாங்கிட்டுப் போய் புண்ணாக்குக் கடைல கொடுக்கணும்."

காசு நீட்டினதை வாங்கி பெல்டில் சொருகிக் கொண்டான். திரும்பி கிழவரைப் பார்த்தான்.

"எதுனா தப்பா பேசிட்டேனாப்பா..." உள்ளே குரல் எழுப்பி அவருக்கு மட்டும் கேட்கும்படி பார்த்தான்.

கிழம் 'இல்லை'யென்று தலையசைத்தது.

உள்ளே சூடு வெகுவாய் குறைந்திருந்தது. ஒரு இடம் மட்டும் ஒரே ஒரு கடலைப் பருப்பு அளவு லேசாக

சுட்டுக் கொண்டிருந்தது. நகர்ந்து தெருவுக்குப் போனான். தம்பி மனைவி உள்ளே போனாள்.

நாயக்கர் மட்டும் திண்ணை அருகே நின்றிருந்தார். இடுப்பில் கை வைத்துக் கிழவனை உற்றுப் பார்த்தார்.

"சும்மா இருக்க முடியலையா உனக்கு... ரோட்ல் போறவன் வர்றவனை எல்லாம் நாய் மாதிரி கடிச்சுத் தொலைக்கிறியே... அதொண்ணும் பண்ணாதுன்றா பைப்புக்காரம்மா.... நீ யாருன்னு எனக்குத் தெரியாதா.... உன் ஆட்டம் என்னாண்ட நடக்காது. ஞாபகம் வச்சுக்கோ..." உரக்கக் கத்தினார்.

கிழம் பேசாமலிருந்தது.

நாயக்கர் வீட்டுக்குள் நுழைந்தார். கதவு சாத்தினார். கதவுக்குள்ளே இருந்து எதிர்வீட்டுத் திண்ணையில் உள்ள கிழத்தைப் பார்த்தார். கிழம் வாயைத் திறந்தது. அதன் பற்கள் நாயின் பற்கள் போலிருந்தன. பகீரென்று ஒரு பயம் நெஞ்சுள் குலுங்கிற்று. பளீரென்று கதவு திறந்தார். தெருவில் இறங்கினார், அருகே ஓடினார்.

"பட்டா.... ஒரே குத்து.... கொலை பண்ணிடுவேன் உன்னை. நாய் வேஷமா போடற பட்டா..."

மடமடவென்று மறுபடி ஆட்கள் கூடினார்கள். கிழவர்கள் அதிகம் இருந்தார்கள். பெண்கள் வெளியே வந்தார்கள்.

"என்ன நாயக்கரே... என்ன ஆச்சு..."

"இந்த ஆள்... இந்த இடம் சரியில்லை. நான் பல தடவை சொல்லிட்டேன். யாரும் காதுலயே போட்டுக்க மாட்டேன்றீங்க. மனுஷாள் குடித்தனம் இருக்கற இடத்துல இப்படிப்பட்ட ஆளை வச்சுருக்கறது தப்பு."

"த்தே... சும்மா இரு." நாயக்கர் மனைவி வெளியே வந்தாள். அதட்டினாள்.

"அந்த ஆள் சும்மாதான இருக்காரு. ஏன் கத்தற நாயக்கரே?"

"உங்களுக்கு ஒரு மயிரும் புரியலை. இந்த ஆளு பேய் புடிச்சவன்; சூன்யக்காரன்; நெருப்பு ஊதறவன், யாருக்கும் தெரியலை அது."

"ஆமா, நெருப்பு ஊதறாங்க, இவரு பீடி பத்த வைக்கறதுக்கு." கிழவி கிண்டல் செய்தாள். இரண்டொருவர் சிரித்தார்கள்.

"அது குழந்தை. அது இம்புட்டு உசரமா இருக்கத் தொட்டே தெரியும். புத்தி சரியில்லை... பேச்சு வராது. தான்பாட்டுக்கு இருக்குது.... அதப்போய் நாயி பேயின்னுக்கிட்டு... போ அன்னாண்ட."

"உங்ககிட்ட என்ன பேச்சு... டேய் கிழவா. ஒரு நாள் இல்ல ஒரு நாள் உன்னை ஒரே அடில கொன்னுடறேன் பார்.... ஒண்ணுமில்ல, அரை பாட்டில் கிரஸின் மேல ஊத்திட்டு பத்த வச்சுடப் போறேன்."

"என்ன பேச்சு அது... அப்ப எங்க கை என்னா பூப் பறிச்சுக்கிட்டு இருக்குமா?" கிழவி துணி வரிந்து இடுப்பில் சொருகி எதிர்த்தாள்.

"சண்டை வேணாம், சண்டை வேணாம்." பைப்புக் காரம்மா தடுத்துவிட, அவள் பெண் ஓடிவந்து திண்ணை விளிம்பில் கொடி கட்டி போர்வை தொங்கவிட்டது கிழவனை முற்றிலும் தெரியாதபடி மறைத்தது.

"என்ன இது இப்படி ஆவுதே... வாய்க்கு வந்தபடி பேசறாங்க. நமக்கு வேணாம் இதுன்னா உங்கப்பாரு கேக்கறதில்லே. வூட்ல வயசுப்பொண்ணு இருக்கு.

அதுக்கு காலாகாலத்துல நல்லது நடக்கணும். இப்படி பேச்சுப் பட்டா மனுஷா வருவாங்களா.... தள்ளவும் முடியலை, கொள்ளவும் முடியலை. அடியே, இது சொம்புல தண்ணி வை. வெயிலு நமக்கே ஆவலை. ஏம்ப்பா, தூங்கறதுதான. ஊரு வம்பு விலைக்கு வாங்கிட்டிருக்கியே...” நீர் ஊற்றப்பட்டது. ஜனங்கள் கலைந்து போனார்கள்.

தம்பி மகள் ஈரத்துணி கொண்டு வந்தாள். வாசலில் ஒட்டப் பிழிந்தாள். உதறினாள். திண்ணையில் ஏறி கிழவனின் முகம் துடைத்தாள். கழுத்து முகம் எல்லாம் துடைத்து கைகளுக்கு ஈரம் ஊட்டி துடைத்து துண்டு எடுத்து வாசற் கொடியில் போட்டாள். கொடியில் துண்டு பட்டதும் உலர்ந்துவிட்டது. அவள் திண்ணையை விட்டு இறங்கும்போதே மொடமொடப் பாகி விட்டது.

கொடித்துண்டு நழுவி விழ, அவள் அரை புத்தி யுடன் குனிந்து துண்டு எடுத்து மறுபடி கொடியில் போட்டாள். அந்த மொடமொடப்பு ஆச்சரியமாய் இருந்தது ‘இப்ப நனைச்ச துண்டா இது... இத்தினி சுருக்க ஈரம் போயிடுச்சே...’ எம்பி ஆராய்ந்தாள்.... எந்த துணியிலும் ஈரம் இல்லை. நல்ல வெயில். நாலு மணி நேரம் உலர்ந்த துணி போல ஈரம் சுத்தமாய் இல்லை. திரும்பி கிழவரைப் பார்த்தாள் ‘வெயில் சூட்டுல ஈரம் போச்சா.. இல்லை இது உடம்பு சூட்டுல ஈரம் போச்சா...’ கேள்வி வந்தது. மறுபடி ஈரம் செய்து கிழவரின் உள்ளங்கைகளைத் துடைத்தாள். கால் பாதங்களை ஈரம் செய்தாள். துண்டை உற்றுப் பார்த்தாள். மெல்ல மொடமொடப்பு ஏறியது. துணி லேசாய் வெளுத்து ஈரத்தை இழந்தது.

‘அம்மா’ என்று பயக்கூச்சல் எழும்பி நெஞ்சுள் அடங்கியது.

பயத்துடன் நிமிர்ந்து கிழவனைப் பார்த்தாள். 'நீ பேயா...' என்று கேள்வி வந்தது. கிழவன் பேசாது இருந் தான். துணியோடு எழுந்து திண்ணைவிட்டு கீழிறங்கி னாள். வாசல் கதவு தள்ளினாள். தலை மட்டும் திரும்பி எட்டிப் பார்த்தாள். கிழவன் இல்லை. திண்ணை ஓரத்தில் ஊஞ்சல் கட்டி, விரல் உயரம் சாமி பொம்மை ஆடிக் கொண்டிருந்தது. என்ன சாமி என்று தெரியவில்லை. ஆனால், சாமி பொம்மை என்பது தெரிந்தது. அவளுக்கு நடுங்கிற்று. கண்களை மூடிக்கொண்டாள். மூடின கண்களோடு திண்ணையில் மறுபடி ஏறினாள், குனிந்து வணங்கினாள்.

தலை உயர்த்திப் பார்த்தால் கிழம் எங்கோ வெறித்திருந்தது. மெல்லப் பின்னடைந்து இறங்கி வீட்டிற்குப் போனாள். இதை யாருக்கும் சொல்லக் கூடாது. தேவையில்லை. அது கடவுள், தெய்வம். அவள் துண்டு மடித்து கண்ணில் ஒற்றி தன் பீரோவில் வைத்துக் கொண்டாள். வெளியே சூரியன் மேற்கே நகர, காற்றுவீசத் துவங்கியது. நகரின் புழுக்கம் குறைய, லேசாய் மேகங்கள் சூழ்ந்து கொண்டன.

பார்த்தசாரதிக்கு பசித்தது. தட்டு நிறைய அம்மா சோறு வைத்தாள். குழம்பு ஊற்றினாள். முதல் பிடி எடுத்து வாய்க்கு அருகே கொண்டு வந்தபோது, கிழவர் முகம் தோன்றியது.

'அப்பா... உன் பேரு சொல்லி சாப்பிடறேன்., நெஞ்சு வணங்கிற்று. உணவு விழுங்கினான். இன்னும் கொஞ்சம் கேட்டான். மறுபடி பிசைந்து உணவு முடித்தான். நீர் குடித்தான். வீட்டு பின்பக்கம் கயிற்றுக் கட்டில் நிமிர்த்திப் போட்டுப் படுத்தான். படுத்த சில நொடிகளில் தூங்கிப் போனான். பசுமாடு மெல்ல நகர்ந்து அவன் கால்களை முகர்ந்து மெல்ல

நக்கிக் கொடுத்தது. உமிழ்நீரால் கால் ஆணிகளை அடைத்தது.

"மணி மூணாவுதே. ஏழுந்திருப்பா..." அம்மா குரல் கொடுத்தாள்.

காலையில் நடந்ததெல்லாம் கனவு போலப் பட்டது. பயந்துட்டம் என்று சிரித்துக் கொண்டான். முதல் எருமையை அவிழ்த்துத் தனியே கொண்டு போனான். கஞ்சி நீர் காட்டினான். வைக்கோல் பிரித்துப் போட்டு, மடியில் கை வைத்து அலசினான். காம்புகளை நீவிக் கொடுத்தான்.

நாலாவது தடவலில் பால் வழிந்தது. கையில் கசிந்த பாலை மறுபடி மடியில் தடவி குவளையை எடுத்து பீய்ச்ச, நுரை செறிந்த குவளை நிரம்பியது. ஏழு மாடுகளையும் கறந்து டீக்கடை ஆட்கள் அளந்து வாங்கிக் கொண்டு போக, மீதி பாலைத் தகர ஜோடு தவலையில் எடுத்து ஓரம் வைத்துவிட்டு, கொட்டிலை பெருக்கத் துவங்கினான். சாணிக்குப்பை வாரி ஓரம் போட்டான்.

"இரு நூறு பால் இருக்குமா?"

பக்கத்து வீட்டிலிருந்து பெண் குரல் கேட்டது,

நிமிர, அவள் சிரித்தபடி நின்றிருந்தாள்.

'என்ன திடீர்னு சாயந்திரம் பால் கேக்கற?"

"அந்தாளுக்கு இன்னிக்கு நைட் வேலையாம். தயிர் சோறு கேட்டுது. கடைத் தயிரு புளிக்கும். அதான் பாலு காச்சி கொஞ்சம் தயிரு ஊத்தி அனுப்பினா புளிக்காம நல்லா இருக்கும்"

"தரேன்."

"காலைலதான் வரும். ஓவர்டைம்."

"சரி."

"நீ சினிமாக்கு போகணுமா?"

"இல்லியே!"

'ராவுக்கு வந்துடுறயா..."

ஒரு கணம் யோசித்தான். "வேணாம்." பதில் சொன்னான். கண்ணுக்குள் முப்பது வயதுப் பெண் உடம்பு அசைந்தது, "இத்த வுட்டா வேறா நாள் கிடைக்காது. ராத்திரி பூரா முழிச்சிருந்து எப்படா விடியும்னு பார்த்து மூணு மணிக்கு பின்பக்கம் வர்றது பேஜாரா இருக்குய்யா. எது எப்ப முழிச்சுக்குமோன்னு பயம் வேற."

பேசாது வைக்கோல் பிரித்துப் போட்டான்,

"நிம்மதியா இது எம் புருஷன்னு உன் கூட ராத்திரி முழுக்க இருக்கலாம். எதுனா கதை பேசலாம். ஊர் அடங்கிடுச்சுன்னா, தாய்ப்பாஸ்கூட ஆடலாம். வாயேன்."

"இது சரியில்லை... வுட்டுரு."

"அப்படி சொல்லிடாதய்யா. உன்கூட இருக்குற சந்தோஷம் ஒண்ணு தவிர, எனக்கு வேற ஒண்ணும் இல்லை."

"கட்டினவனோட சந்தோஷமா இருக்க வேண்டியதுதான்."

"முடியலையே!"

"யாருக்கு?"

"இத்தனை கேட்டு நான் சொல்லி அழுத பிறகுதான் வரணுமா... ரொம்பத்தான் கிராக்கி பண்ணிக்கிறியே... தேவையில்லை, போ."

"பால் கேட்டியே."

"ஒண்ணும் வேணாம். புளிச்ச தயிரு போதும்."

"நான் பால் தரமாட்டேன்னு சொல்லலியே."

"நீ குடுத்தாக்கூட வேணாம்."

"ரொம்ப அக்கறையா புருஷனுக்குக் கேட்ட... புளிப்பில்லாம பாலும் தயிரும் ஊத்தி சோறு அனுப்பணும்னு..... ட்ராமாதானா?"

"அது அக்கறையா. சந்தோஷம்தான். ராத்திரி வராதுன்ற சந்தோஷம் நீ வருவேன்ற நம்பிக்கை. இல்லேன்னு ஆயிட்ட பிறகு, என்னா சாப்பிட்டா என்னா?"

யோசித்தான்.

சுவரில் இருந்த குவளை எடுத்து அது நிரம்ப ஊற்றினான்.

"எதுனா வறுத்து வை."

"எதுக்கு?"

"ராத்திரி வரேன்."

"நிசமாவா?" அவன் அவளை உற்றுப் பார்த்தான்.

இது வரை இல்லாத அந்தப் பார்வை அவளுக்குப் புதுசாய் இருந்தது.

"உனக்கோசரம் வரேன்."

"ஏன்... உனக்கு வேணாமா?"

அவன் பதில் சொல்லவில்லை. மனசு ஏனோ விசித்திரமாக விலகி இருந்தது. எல்லாவற்றோடும் விலகி இருந்தது. காலில் எறும்புகள் ஊற, உதறினான். தடாரென்று தரை மிதித்தான் அவசரமாய் தூக்கி உள்ளங்கால் பார்த்தான். கால் ஆணிகள் மஞ்சள் பூசி அடைக்கப்பட்டிருந்தன.

3

"உலகத்துல வேறே எனக்கு ஒரு சந்தோஷமும் இல்லேப்பா... உன் கூட இருக்கிறது தவிர."

அவள் மெல்லிய குரல் காதுக்குள் ரீங்கரித்துக் கொண்டிருந்தது.

கொல்லைப்புறத்தில் இருந்து ஹரிக்கேன் விளக்கை மாட்டுக் கொட்டிலுக்குக் கொண்டு போய் மாட்டினான். மாடுகளை மெல்லத் தடவிக் கொடுத்தான். எருமைகளின் முதுகை உள்ளங்கையால் அழுத்தித் தேய்த்தான்.

"போலாம்ன்றியா. வேணாம்கறியா..." மாடு களைக் கேட்டான்.

"சிவப்பி, நீ சொல்லு.... போலாமா, வேணாமா?'

பசு நின்ற வண்ணம் அதுபாட்டுக்கு அசை போட்டுக் கொண்டிருக்கிறது.

நேற்றுவரை இந்தக் கேள்வி வரவேயில்லை. உடம்பில் ஒரு திமுதிமு என்கிற உணர்வு வந்ததும் பெண்ணை மனசு தேடும். குனிந்து சாணம் உருட்டிக் கொண்டிருக்கிற அந்தப் பொம்பளையின் உடம்பு முழுக்கக் கண்கள் மேயும். நாட்டுக்கட்டை மகளேஎன்று வெறி பொங்கும். பளீரென்று ப்ருஷ்டத்தில் அடித்து முடியைப் பிடித்து உள்ளே இழுத்துப் போகும் திமிர் வரும்.

இன்று என்னவோ வேதனை வயிற்றுக்குள்ளே பிடுங்கி எடுத்தது. சுவர்கூட தாண்ட முடியாதபடி ஒரு நொய்மை இருந்தது, மறுபடி படுத்துத் தூங்க வேண்டும் போல் ஒரு அயர்ச்சி இருந்தது. புத்தி தூங்காது என்று தோன்றியது.

'உனக்கு வேணுமா பார்த்தசாரதி?' உள்ளே கேள்வி வந்தது. 'வாணாம்' பதில் உடனே வந்தது.

'அப்ப.... போகாதே.' குரல் கட்டளையிட்டது.

'உலகத்துல வேற எனக்கு ஒரு சந்தோஷமும் இல்லைய்யா... உன் கூட இருக்கிறது தவிர.' அவள் முகம் கெஞ்சியது.

'உனக்கோசரம் வரேன்.' வாக்குக் கொடுத்தது நினைவில் மின்னிற்று.

பொம்பளை.... போக்கத்த பொம்பளை... புருஷன் திடமில்லாத பொம்பளை.... இதுதான் சந்தோஷம்கற பொம்பளை... போகாது போனால் என்ன செய்வாள்? புரண்டு புரண்டு படுப்பாள். கொல்லைப்புறத்துக்கும் வாசலுக்கும் நடப்பாள். நூறு முறை சீண்டி குரல் தருவாள். துவண்டு போய் உட்காருவாள். அழுவாள். என்னை இப்படிட யாருமில்லாத கிணத்துல தள்ளிட்டியேடி பாவி' என்று செத்துப் போன தாயாரை ஏசுவாள். விடிந்து தூங்குவாள். புருஷன் வர, கதவு திறந்துவிட்டு பேசாது பின்பக்கம் போவாள். 'எனக்கு உடம்புக்கு முடியலை' என்று மறுபடி தூங்குவாள் இரவு கண் விழித்து பட்ட அவஸ்தைகளை உள்ளே வைத்துப் பொருமுவாள்

"ஒரு வாய் காபி குடேண்டி...?" அவன் உலுக்க உதறுவாள்.

"வரச் சொல்லவே எங்கனா குடிச்சுட்டு வரவேண்டியதுதானே... இங்க வந்து உயிர வாங்குற..." சீறுவாள். அவள் எகிற, பதிலுக்கு எகிறுவான். அவன் கத்த, எதிர் குரல் தருவாள். அடிபடுவாள் அழுவாள். ஊர் உலகம் எல்லாம் சபிப்பாள் "கொல்லு, என்னைக் கொல்லு. என்னை ஒரேயடியாகக் கொன்னு போட்டுரு...

நான் போய்ச் சேர்ந்துடறேன்... யாருக்கும் தொந்தரவு இல்லாம செத்துப் போறேன்.”

செத்துப்போனாலும் போகலாம். தற்கொலை செய்து கொள்ளலாம்.

போன பிறகு எல்லார் நெஞ்சிலும் துக்கம் மண்டலாம்.

“என் தாயி... எங்கம்மா போயிட்டியா...” புருஷன் நெஞ்சில் அடித்து அழலாம். “சுமங்கலியா போயிட்டா.... பெரும் படையலு போடணும்.” ஊர் ஜனம், கல் வைத்து விளக்கேற்றி கும்பிடலாம். அவளுக்குப் பிடித்தது என்ன என்ன என்று யோசித்து இலையில் பரிமாறலாம். “பதினாறு நாள் காரியம் முடிஞ்சு தீட்டு கழிஞ்சுடுச்சு. நல்லதா பேசுங்கப்பா.” ஊர் திண்ணையில் நல்ல விஷயம் பேசும். ராமர் கதை கேட்கும். மறந்து போகும்.

பார்த்தசாரதியால் மறக்க முடியாது. இருட்டில் மாடு தடவும்போது திடுக்கிட்டு நிற்க வேண்டியிருக்கும். சுவரோரம் நடமாடுவது தெரியும். முருங்கைக் கிளையில், ஓட்டுச் சரிவில், கொடித் துணி உருவில் அசைவுகள் தெரியும் ‘உலகத்துல எனக்கு ஒரு சந்தோஷமும் இல்லப்பா... உன் கூட இருக்கறது தவிர...’ குரல் கேட்கும்.

‘என்னிய கொன்னுட்டப்பா...’ அழும்.

இது நல்லதா, கெட்டதா... இது சரியா, தவறா.... பார்த்தசாரதிக்கு உடம்பு ஆடிற்று. ஏன் மனிதனாய் பிறந்தோம் என்று தோன்றியது. பசுவாய், எருமையாய் பிறந்திருக்கலாமே என்கிற துக்கம் வந்தது.

‘சிலீர்’ என்று நாலு முறை தாயக்கட்டை உருளும் சத்தம் கேட்டது.

'யப்பா.... யப்பா என்ன செய்யறது நான்?' கிழவனை மனசுள் வேண்டினான்.

"ப்போ..." கடைசி மாடு பதில் சொல்லிற்று.

"என்னது..." மாட்டின் அருகில் ஓடினான். மாடு அவன் வீட்டுச் சுவர் மீது வேகமாய் முட்டிற்று. வழக்க மாய் இவன் கால் வைத்து ஏறும் இடத்துக் கற்கள் பெயர்ந்தன. தடதடவென்று கீழே விழுந்தன. இடை வெளி பெரியதாயிற்று. இப்போது ஏறிக் குதிக்க வேண்டியதுகூட இல்லை. கால் வைத்து ஏறி இறங்கி னால் போதும்.

பார்த்தசாரதி இறங்கினான். கொடித் துணிகளை விலக்கி, தாழ்வாரம் ஏறினான், நகர்ந்து பின்பக்க ஜன்னல் வழியே பார்த்தான். புடவை துணியை வாயில் சொருகிக் கொண்டு ஜாக்கெட் அவிழ்த்துக் கொண்டிருந்தாள். எதிரே தாயக்கட்டம் மாக்கல்லால் வரையப்பட் டிருந்தது. விடிவிளக்கில் அவள் கறுப்பு முதுகு எண்ணெ யுடன் தெரிந்தது. முதுகு நீரோடை போல வளைந்து போயிற்று. கை தூக்கி இறக்க, இடுப்பு சதை சுழன்று ஆடிற்று.

உடம்புதான் படுத்துது இவளை. எல்லார் உடம்பும் எல்லாரையும் படுத்தும். தினம் படுத்தும். எல்லா ராத்திரியும் படுத்தும். இன்னி பொழுதுக்கு தீர்ந் துடுமா... இன்னி ராத்திரிக்கு போதும். இனி வேணாம்னு நிக்குமா?

சொல்லிவிடலாமா, இன்னியோட போறும்னு...

"ஏன் உனக்கு பயம் வருது." பார்த்தசாரதி கேட்டுக் கொண்டான்.

"ஊர் பார்த்தா உதைக்குமேன்னா..?"

'அவ புருஷன்கிட்ட பயமா... பின்னால் எதும் கெடுதல் வரும்னா.... எனக்கு இந்த பொம்பளை தேவையில்லை... எனக்கு தூங்கணும். காலைல எழுந்து மாடு கழுவணும். வைக்கா பிரிச்சு போடணும். பால் கறக்கணும். இப்ப தூங்கணும்."

'அப்ப ஏன் வந்த... போ திரும்பி போ.'

'அந்தப் பொம்பளை அழும்... பாவம்.'

'அப்ப கதவு திற."

"யப்பா.... நான் என்ன செய்யறது?"

கதவு திறந்தது. அவன் திடுக்கிட்டான். 'வந்துட்டியா.' அவள் எழுந்தாள். முன் அறையிலிருந்து சமையலறைக்கு ஓடி வந்தாள்

'எப்படி கதவு...' இவனுக்கு பயம் மறுபடி வயிற்றைச் சுருட்டிற்று.

"கதவு திறந்துட்டு ஜன்னல் வழியா என்ன பார்வை.... உள்ளே வர வேண்டியதுதானே..." அருகே வந்து கைப் பிடித்தான்.

"ஏன் உன் உடம்பு ஜில்லுன்னு இருக்கு.... வெளியே பனி.... அதான். உள்ள வா. எதுனா சாப்பிட்டியா... ரொம்ப நேரமா உன் குரலே காணோம், தூங்கிட்டியா..."

"இல்லை..."

"சாப்பிடுறியா?"

"போடு."

மூடி வைத்த அடுக்கிலிருந்து தோசை எடுத்து தட்டில் போட்டாள். குழம்பு ஊற்றினாள். பொரித்த மீனை வேறொரு தட்டில் வைத்தாள்.

"பாட்டில் கொண்டாரலியா?"

"இல்லை"

"சாப்பிட்டே வந்துட்டியா?"

அருகே உதடு முகர்ந்தாள்,

"பால் வாசனைதான் வருது. சரக்கு சாப்பிட லையா?

"இல்லை. கிடைக்கலை."

"சொல்லியிருந்தா நான் அந்தாளை வாங்கி வரச் சொல்லியிருப்பேனே. தோசை சூடா இருக்கு, சாப்பிடு."

அருகே உட்கார்ந்து முதல் விள்ளல் எடுத்து குழம்பில் தோய்த்து அவன் வாயில் இட்டாள்.

"சாப்பிடு." தலை தடவினாள். புஜங்களைப் பற்றிக் கொண்டு கழுத்துப் பக்கம் தலை வைத்தாள்.

"ரொம்ப சந்தோஷமா இருக்குதுப்பா நீ வந்தது... சாப்பிடு."

மடமடவென்று சாப்பிட்டான். காரம் தொண்டையில் இறங்கி உணவுக் குழலைச் சுட்டது. கண்ணில் நீர் ஏறிற்று. ஓடிப்போய் சொம்பு நிறைய நீர் கொண்டு வந்தாள். சேலை தலைப்பு விலகி செழுமை யான தோள் காட்டிற்று.

"ஏன். இன்னிக்கு பேயடிச்ச மாதிரி இருக்க..."

"உனக்குக் கஷ்டமாயில்லை."

"எது?"

"இப்படிச் செய்யறது."

"இலைக்குக் காத்து கிடக்கற நாய் மாதிரி காத்துக் கிடக்கிறேன். எப்படி கஷ்டமா இருக்கும்?"

"இது தப்பில்லையா?'

"நாயா பொறந்துட்டம். அப்புறம் குலைக்கிறது தப்புன்னா எப்படி?"

"நாமா மனுஷங்க இல்லியா?"

"இல்லப்பா... இங்க ஒருத்தர்கூட மனுஷங்க இல்லை. ஒவ்வொரு ஆளும் ஒவ்வொரு மாதிரி மிருகம். என் புருஷனைப் பார்க்கச் சொல்ல குரங்கு ஞாபகம் தான் வரும். என் மனசுல எப்பவும் ஒரு நாய்தான் நிக்கும். நான் வாசப்படில உட்கார்ந்து வர போற மனுஷங்களை, இது என்ன மிருகம்னுதான் பார்ப்பேன். பன்னி, ஆடு, மாடு, கழுதை, நரின்னு கணக்கு போட்டுக்குவேன்."

"என்னிய....?"

"சொல்லட்டா...."

"ம்ம்..."

"சோச்சுக்கக் கூடாது"

"இல்ல... சொல்லு."

"உன்னைப் பார்த்தா பொலிகாளை மாதிரி தோணும். அரக்கி அரக்கி புண்ணாக்குத் தொட்டியில் பிசைவியே, மாடு மாதிரி தோணும். அன்னிக்கு தெருக் கோடில சண்டைன்னு ஓடினியே, தும்பு அறுத்துக் கிட்டுப் போற மாதிரி பட்டுச்சு."

அவன் பேசாது அவளைப் பார்த்தான்.

"கோவமா?"

"இல்லை..."

"இன்னிக்கு என்னவோ மாதிரி இருக்கியே. ஏன்?"

"அந்தக் கிழவன் கிட்ட பேசிக்கிட்ருந்தேன்."

"பைப்புக்கார அம்மா வீட்லயா?"

"ஆமா."

"அந்த பைப்புக்கார அம்மாதான். அவங்க வீட்ல ஒரு பொண்ணு இருக்கு தெரியுமா..."

"வளர்த்தியா, உசரமா...."

"ஆமா, அது பசு, பதினெட்டு வயசுக்கு அது கை கொள்ளாத வளர்ந்துடுச்சு பாரேன்."

"ஊட்டம்!"

"இல்லை... மனசு. அதுக்கு ஒண்ணும் தெரியாது. கை கழுவு, தாயபாஸ் போடட்டா."

"வேணாம்."

"பின்ன என்ன பண்றதாம்?"

"பேசிக்கிட்ருப்போம்"

"ஏம்ப்பா..."

"உன்னோட நிறைய பேசணும்னு தோணுது."

"என்ன பேசணும்?"

"நீ பொறந்தது, வளர்ந்தது..."

"எதுக்கு?"

"என்னவோ உன்னைப் பார்க்கறப்பல்லாம் ஒரு அதிசயம் தட்டுது, ஏன் என்னாண்ட இத்தினி பிரியம்னு."

"எனக்கும் அப்படித் தோணும். ஏன் இந்தாளை நமக்குப் புடிச்சுப் போச்சுன்னு புரியாம நிப்பேன். நீ நடந்து போச்சொல்ல ஒரு தடவை பார்ப்பேன். திரும்பி வரச் சொல்ல ஒரு தடவை பார்ப்பேன். அடுப்புல வேலையா இருந்தாலும் நீ வீட்டுக்கிட்ட வரேன்னு ஏதோ தெரியும். வாசலாண்ட வரப்ப நீ தாண்டி போவ, ஏம்ப்பா அப்படி?"

"ஏதோ ஒரு பிரியம்."

"உனக்குமா?"

"எனக்கும்தான்.'

"எம் மேலயா?"

"எல்லார் மேலயும் இருக்குது. உம் மேலயும் இருக்கு."

"எம் புருஷன் மேல கூடவா?"

"பாவம். அந்தாள் என்னை என்ன செஞ்சான்." அவன் தலை குனிந்தான்.

"உன்னியக் கண்டா அந்த குரங்குக்குப் புடிக்காது. மாட்டுக்காரப் பையன்னு பேசும்."

"பேசிட்டுப் போறான்."

"எனக்கு உன்கிட்ட இதான் புடிச்சிருக்கு."

"எது?"

'எதுபத்தியும் கவலைப்படாத நீபாட்டுக்கு போற வர இல்ல..."

"பொலிகாளை அப்படித்தான் போவும்."

"பொலிகாளைக்கு எம்மேலே எப்படிப் பிரியம் வந்துச்சு?"

"அலையறதப் பார்த்து ஒரு பரிதாபம். அலையாத சும்மாக் கிடன்னு ஒரு பிரியத்துல அதட்டல்."

"நான் அலையறேனா..."

"பிறகு எப்படி?"

"அலையற பொம்பளைன்னா நாலு பக்கமும் போவணுமே. நான் மாட்டுக்காரன்.... மாட்டுக்காரன்ல சுத்துறேன். இந்தப் புண்ணாக்கு கை என்னைப் புடிக்கா தான்னுல்ல ஏங்குறேன்."

அவன் கை கொடுத்து நெஞ்சில் வைத்துக்கொண்டான். அவன் அவளை இழுத்து அணைத்துக் கொண்டான். உடம்பு முழுதும் நீவிக் கொடுத்தான். முதுகு தடவி, கழுத்து சொறிந்தான். முகவாய் அழுத்தி பிடித்து முகர்ந்தான். கூந்தலுக்குள் கைவிட்டு இறுக்கினான். அவள் கிறங்கினாள். நெகிழ்ந்தாள்.

காளை தன் முழு பலத்தையும் அவள் மீது பிரயோகித்தது. தரையோடு தேய்த்தது.

"அம்மா.... அம்மா.... கடவுளே..." அவள் சந்தோஷத்தில் திக்குமுக்காடினாள்.

"உனக்கு எது புடிக்கும்.... எங்கே தொடப் புடிக்கும்.... எது செய்ய கிறங்கிப் போகும். சொல்... உன்னை உன்னால் அழிக்கிறேன், சொல்!" பல்வேறு விதமாக அவளைப் புரட்டி எடுத்தான்.

அவள் அழுதாள்.

"இப்படி ஒரு ராசா எனக்குக் கிடைக்கலியே.... இப்படி ஒரு ராசா எனக்குன்னு இல்லியே?"

"எதுக்கு ராசா வேணும்?" அவனுள் கேள்வி வந்தது.

"உடம்பு ராசாவா... மனசுக்கு ராசாவா.... ராசாக்கள் வருவார்கள். போவார்கள். மனசுக்குள் ஆள் வேண்டாமா?" அவளை நோக்கி அவன் மனசு கேட்டது.

இந்தக் கூட்டுக்குள்ளே ஒரு விஷயம் இருக்கிறதே. அதற்கு ஆண் துணை வேண்டாமா? எது நீ? இதற்கு உள்ளே எந்த இடத்தில் நீ இருக்கிறாய்? என்னை உணருகிற நீ. இதில் எங்கே.... மண்டை ஓட்டுக்குள்ளா... நெற்றிப்பொட்டுக்கு நடுவிலா... கண்ணுக்குள்ளா... தொண்டைக் குழியிலா... நெஞ்சுக் கூட்டிலா.... நீ யார்? எங்கிருக்கிறாய்.... எந்தவிதமாய் இருக்கிறாய்? அது

என்னைத் தேடுகிறதா? என்னுள் என்னைப் பார்க்கிறதா?

இது சதை. இந்தச் சதை. அழியும். பூமிக்கடியில் அழுகும். எறும்புகள் அரித்துப் போட்டு, கபாலத்தில் பூச்சி புகுந்து மூளையைச் சாப்பிட்டுவிடும். கண்களைக் கிருமிகள் அழிக்கும். ஆயினும் நீ இருப்பாய்..... எங்கோ. ஏதோ விதமாய்... அது எங்கே? இப்போது.... அது எங்கே இருக்கிறது? இந்த உடம்பில்.... இப்படி அழச் சொன்னது எது... அதுதானே... அது எங்கே...

வாரி அவளை நெஞ்சில் போட்டுக்கொண்டு முகம் முழுவதும் படர்ந்த வியர்வையைத் துடைத்தான்.

அவள் செத்துப்போனவள் மாதிரி கண்மூடிக் கிடந்தாள். இறக்கிப் படுக்க வைத்தான். புடவை எடுத்து அவளைப் போர்த்தினான், எழுந்து உடுத்தி பின்பக்கம் போனான். சுவர் ஏறி தன் வீட்டில் இறங்கினான் மாடுகளைத் தடவிக் கொடுத்தான். மாடுகள் நகர்ந்து அவன் முதுகு வியர்வை முகர்ந்தன. நாக்கால் தடவின. தூக்கம் சுத்தமாய் போய்விட்டது. கிணற்றுப் பக்கம் இருந்த வாளியில் முகம் கழுவி துண்டு நனைத்து உடம்பு துடைத்துக் கொண்டான். கால் கழுவினான் வீட்டுச் சுவரோரம் மாடு வரும் சந்து வழியாக வெளியேறினான். தெரு திரும்பி பைப்புக்காரம்மா வீட்டிற்கு நடந்தான். அந்த வீட்டு வாசல் சுற்றி துணி கட்டியிருந்தது.

சற்று நேரம் நின்று கவனித்தான். மெல்ல அருகே போய் துணியைத் தூக்கி பார்த்தான்.

கிழம் உட்கார்ந்திருந்தது.

திண்ணையில் அமர்ந்து கொண்டான், நெஞ்சுக் கூட்டுக்கு உள்ளே வெளிச்சம் மெல்ல விடியல் மாதிரி பரவிற்று.

மெல்ல நகர்ந்து கிழவன் காலைத் தொட்டான். அது நீட்டியது.

பிடித்து விட்டான். முழங்காலிலிருந்து ஆடு தசைக்கு இறங்கி நிதானமாய் நோகாமல் அழுத்தி விட்டான். கணுக்காலை உணர்ந்து மெல்ல விரல்களால் நீவினான். பாதத்தை மடியில் போட்டுக் கொண்டு சொடக்கு எடுத்தான். இரண்டு கைகளையும் சேர்த்து அழுத்தி அழுத்தி வலது பாதம் பிடித்துவிட்டான், குனிந்து தலையில் வைத்துக் கொண்டான்.

"யப்பா... யப்பா... என்னப்பா இதெல்லாம். என்னிய என்ன பண்ணிட்ட...?"

'விபூதி கொட்டு, கிருஷ்ணர் பொம்மை காட்டுன்னுதுக்கு கோச்சுக்கிட்டியா? நான் தப்பா சொல்ல லைப்பா உன்னைக் கேலி பண்ணலை. எல்லாருக்கும் நல்லது பண்ணுவேன்னு நினைச்சு சொன்னேன். தப்புன்னா மன்னிச்சுக்கப்பா பார்த்தசாரதிக்கு என்னா தெரியும்? அது ஒரு மக்கு முண்டம். தடிமாடு. அத கோச்சுக்காதப்பா. அத திட்டாத. உன்னையவுட்டுப் போகமாட்டான். நீ எட்டி உதைச்சாக்கூட போகமாட்டான்.

ஏம்ப்பா... நாயும், மாடும் எப்படி ஒண்ணா சேரும்? சேர்ந்துச்சே. எப்படி... தப்பில்லைன்றியா? உலகத்துல ஆம்பளை பொம்பளை இரண்டும்தான் சேரணும்னு இல்ல, எல்லாத்துலயும் எல்லாரும் கலந்துடலாம்ல? கலந்து கலந்துதான் மனுஷன் வந்தான் இல்ல? அது கேட்ட விதம் தாங்கலை. சரி, வரேன்னு போயிட்டு வந்துடறேன். அசந்து தூங்கிடுச்சு. ஒரு தடவை பார்த்தா பெத்த தாய் மாதிரி இருக்கு. ஒரு தடவை பார்த்தா நான் பெத்த பொண்ணு மாதிரி இருக்கு. இன்னொரு தடவை பார்த்தா எனக்குன்னு பொறந்த பொறப்பு மாதிரி இருக்கு. அது யாருய்யா... ஏன் அழுவுது?'

கதவு திறந்தது. அந்தப் பெண் எட்டிப் பார்த்தாள். பசும்பால் வாசனை வீசிற்று.

4

வாசலில் ஆண் உட்கார்ந்து கொண்டிருப்பது பார்த்ததும் அனிச்சையாய் அந்தப் பெண் பின்னடைந்தது.

"யார் அது?"

பார்த்தசாரதி கிழவர் காலை விட்டு விட்டு ஒரு எட்டு நகர்ந்து திண்ணை விளிம்புக்கு வந்து கீழிறங்கினான்.

"பார்த்தசாரதீங்க...."

"என்ன வேணும்?"

"ஒண்ணுமில்ல.... கிழவரு காலு பிடிச்சு விட்டேன். என்னமோ வந்து எதுனா கிழவருக்கு செய்யணும்னு தோணிச்சு.... அவரையே பார்த்துக்கிட்டிருந்தேன். எதுனா வேணுங்கள...."

"இல்லை, பேச்சு சத்தம் கேட்டு வந்தேன். விடிஞ்சிடுச்சா?"

"இல்லீங்க. கொஞ்ச நேரம் ஆவும். சுத்தி துணி கட்டியிருக்கவே பார்க்கக் கூடாதுன்னு போட்டிருக்கீங்க ளோன்னு பயந்துட்டேன். துணி தள்ளி பார்த்தேன். உட்கார்ந்துக்கிட்டிருக்காரு. எதுனா சாப்பிட்டாரா?"

"ஒரு வேளைதான் சாப்பாடு."

"தூங்கறதுக்கு துணி கட்டினீங்களா?"

"இல்லீங்க. அவரு தூங்க மாட்டாரு. எதிர்வூட்டு ஆளு திட்டினதால துணி கட்டினேன்."

"திட்டினாரா.... எதுக்கு?"

"நீங்க மயக்கம் போட்டு வுழுந்தீங்கள்ல... எழுந்து காச வாங்கிட்டு நீங்க பேசாம போயிட்டீங்க. ஆனா, அந்தாளு கிழவருக்கு பேய், பிசாசு, கெட்ட ஆளுன்னு பயங்கர கூச்சல்..."

"அடப்பாவிங்களா.... என்னமோ இவரைப் பாக்க றப்ப எங்கப்பாவ பார்க்கற மாதிரி இருக்கு. ஒரு நினைப்பு தாளாமதான் ராத்திரியானாலும் பரவாயில்லைன்னு வந்தேன்."

'அது நாம நினைக்கிற மாதிரி காட்டும்."

"அப்படின்னா.?"

"நீங்க எப்படி நினைக்கறீங்களோ அப்படி நிக்கும்."

"உங்களுக்கும் காட்டுமா?"

"எல்லோருக்கும்!"

"என்னமோ இருக்குதுங்க இவராண்ட. ஏதோ ஒரு நல்லது இருக்குது, நமக்குத் தெரியலை, ஊதக்காத்து அடிக்குது. ஆத்தா, உள்ளே போய்ப் படுத்துக்க. நான் கிளம்பறேன். ஐயா போயிட்டு வரட்டுங்களா." கை கூப்பினான். நாலடி பின்னே நகர்ந்து நிலம்பட விழுந்தான். "வரேன் ஆத்தா!" அவளையும் கும்பிட்டான்.

இருட்டில் நகர்ந்து நடந்தான்.

அவள் வயிறு குழைந்து ஒருவித உணர்வு பொங்கிற்று. அவன் விழுந்து வணங்கியது பிடித் திருந்தது. எட்டி அவன் போகும் திசை பார்த்தாள். நகர விளக்கின் வெளிச்சம் பட்ட வெளிர் வானத்தில் கரும் புலமாய் அவன் நடப்பது தெரிந்தது.

"எதுனா வேணுமா..." கிழவனை நோக்கிக் கேட்டான். தண்ணி சொம்பு தூக்கிப் பார்த்தாள்.

சொம்பு நீர் வைத்தது போலவே இருந்தது. மறுபடி அதைக் கிழவன் அருகே வைத்துவிட்டு துணி தொங்க விட்டு கதவு சாத்தினாள் விடிந்ததும் அப்பாவிடம் பார்த்தசாரதி வந்து வணங்கிப் போனது சொல்ல வேண்டும் என்று நினைத்தாள். படுத்தவுடன் தூங்கிப் போனாள்.

அவன் வீட்டின் கொல்லைப்புறம் போய் நீள சிமெண்ட் தொட்டி நிறைய தண்ணீர் இறைத்தான். முதல் கோழி கூவியவுடன் தவிடும் புண்ணாக்கும் கரைக்கத் துவங்கினான். நாலு பக்கெட் கலந்தவுடன் எடுத்து எருமைகளுக்கும் வைத்தான். பசுக்களுக்கு பருத்திக் கொட்டையும் புண்ணாக்கும் நீர் ஊற்றி கொட்டிலில் வைத்தான்.

கறவைகள் உண்ணத் துவங்கியதும் பால் கறந்தான்.

வெளிச்சம் வரும் நேரத்தில் டீக்கடை ஆட்கள் வர, தன் தாயாரை எழுப்பி வாசல் தெளிக்க சொல்லிவிட்டு திண்ணையில் படுத்தான். ஆழ்ந்து உறங்கினான்.

"பார்த்தசாரதி!" யாரோ எழுப்பினார்கள்.

"திடுக்கிட்டு எழுப்ப, அடுத்த வீட்டுப் பெண்ணின் புருஷன் நிற்பது தெரிந்தது.

"என்ன செல்வமணி..."

"எங்க வீட்ல பின் கதவு திறந்திருக்குதா பார்?"

"ஏம்ப்பா..."

"வாசல் கதவு உள்ள தாழ் போட்டுருக்குது. இடிச்சாக்கூட திறக்கலை'

'அடட..." எழுந்து லுங்கி உடுத்தி பின்னால் ஓடினான். சுவர் ஏறி இறங்கினான். கொல்லைக் கதவு திறந்திருந்தது. அவள் தூங்கிக் கொண்டிருந்தாள். அவன் போர்த்திய புடவை அப்படியே இருந்தது.

"ஏய்..." அடிக்குரலில் சன்னமாய் அவளை அசைத்து எழுப்பினான்.

'என்ன இப்படித் தூங்கற... வாசல்ல புருஷங்காரன் கூப்பிடறான்....

அவள் எழுந்து நின்று நெஞ்சில் சரிந்த புடவையைப் பிடித்துக் கொண்டாள்.

"தூங்கிட்டேன்... ஐயோ!" புடவையைச் சுற்றிக் கொண்டு கதவு திறக்க ஓடினாள்.... தயங்கினாள்.

"நான் பின்பக்கம் இருக்கேன்னு சொல்லு. நீயே கதவு திற."

கொல்லைப்புறம் இறங்கி கிணறு தாண்டி ஓடினாள்.

பார்த்தசாரதி கதவு கொக்கி நீக்கினான்...

"என்ன பார்த்தசாரதி?"

"ஆள் இல்லையே... உள் தாப்பா போட்டிருக்கு..."

"எங்க போயிடுச்சு நாறக்கழுத..." செல்வமணி பல் கடித்தான்.

"கொல்லைக் கதவு திறந்திருக்குப் பாரு, பின்பக்கம் போயிருக்கும்."

"படுக்கைகூட சுருட்டல பாரேன்" தலை யணையை எட்டி உதைத்தான்.

"உடம்பு சரியில்லையோ என்னவோ... பின்னால போய் குரல் கொடு."

"ஏய் மரகதம்..."

"என்னப்பா, வந்துட்டேன்..." குரல் கேட்டது.

"யப்பா, இருக்குது... நான் வந்துட்டேன். எங்க.... வேலைலேர்ந்து வரியா?"

"ஆமா... இன்னிக்கு ஓவர் டைம் தயிர் சோறுகட்டி அனுப்பிச்சாளே.... வந்த ஆள் ஒண்ணும் சொல்லலையே உடம்புக்கு கேடுன்னு."

அவள் பின்பக்கமிருந்து தள்ளாடி வந்தாள். மரம் பிடித்து நின்றாள்.

'என்னடி?'

"வயித்து நோவுங்க..."

"அப்படியே புரட்டி எடுக்குது."

"என்னா பாரு செல்வமணி. உடம்பு சரியா இருந்தா இப்படி நிக்காதே. டக்குன்னு எழுந்துடுமே... என்னம்மா செய்யுது?"

"கேரா இருக்குது"

"என்ன சாப்பிட்ட?"

"தயிர் சோறுதான், இதுக்கு கட்டி கொடுத்துட்டு மிச்சம் சாப்பிட்டேன். என்னவோ வயிறே சரியில்லை."

"நல்லா இருந்துதே தயிர் சோறு... ரொம்ப மணமா... உனக்கேன் வவுறு நோவுது? உள்ள வா. வந்து நிழலா உட்காரு." புருஷன் அவளை நோக்கிப் போனான். தாங்கியபடி பார்த்தசாரதியைத் தாண்டினான்.

தாண்டுகிறபோது மறுபடி தள்ளாடினாள். புருஷனுக்கு முதுகு காட்டி 'யம்மா' என்று முகம் சுருக்கி நெளிந்தாள், பார்த்தசாரதியை நோக்கி கண் சிமிட்டினாள். பார்த்தசாரதி பேசாது நின்றிருந்தான்.

"மெள்ள ரிக்ஷா வச்சு டாக்டர் கிட்ட கூட்டிட்டுப் போ. செல்வமணி"

"இதென்ன கிரகச்சாரம்... இப்படி செய்றா... வந்து தூங்கலாம்னு பார்த்தா...." செல்வமணி அலுத்துக் கொண்டான்.

"எங்கம்மாவ அனுப்பட்டா டாக்டர் வீட்டுக்கு?"

"வேணாம். நானே போயிக்கறேன். ஒரு வண்டி மட்டும் புடிச்சு குடுத்தா போறும்."

புருஷனும் மனைவியும் வீட்டுக்குள் போக, பார்த்த சாரதி இடைவெளி வழியே வீட்டுக்கு வந்தான்- செல்வமணியை நினைக்கும்போது மனசு பாவமாய் இருந்தது.

வாசலில் வேட்டியை மடித்துக்கொண்டு சைக்கிளில் உட்கார்ந்தபடி பஞ்சாயத்து பிரஸிடெண்ட் எதிர்வீட்டாருடன் பேசிக் கொண்டிருந்தார்.

அவன் தலை தெரிந்ததும், "டேய், இங்க வாடா... இவன்தான் சரியான ஆளு."

"என்னங்க பிரஸிடெண்டு."

"போன வருஷம் ஊருக்கு குழாய் சாங்ஷன் ஆச்சுல்ல..."

"ஆமா."

"அது போடா ஆரம்பிச்சிட்டாங்க, மெயின் ரோட்ல..."

"அடிசக்கை... அப்ப அடுத்த வருஷ பிரஸிடெண்ட்டும் நீங்கதான்..."

"போட்டும் புண்ணியமில்லை போலிருக்குதே!"

"ஏன் தலைவரே..."

"மெயின் ரோடு குறுக்கே பைப்பு வரணும். எதிர்க் கரைல பெரிய பைப்பு போவுது. அதுலேர்ந்து சரிச்சு கீழ் வாட்டமா வச்சாதான் ஊர் மொத்தமும் தண்ணீர் சப்ளை ஆவும். இல்லன்னா, நானும் போட்டேன் பைப்புன்னு வெறும் குழாய் பார்க்க வேண்டியதுதான்."

"புரியலை."

விளக்கினார்கள்.

எதிரே புழல் ஏரிக்கரைக்கும் மெயின் ரோடுக்கும் நடுவே ஒரு அடி விட்டம் உள்ள பெரிய மெயின் லைன் போகிறது. அதிலிருந்து இரண்டடங்குல விட்டமுள்ள பைப் ரோடு குறுக்கே போடப்பட்டு மெயின் ரோடின் மறுபக்கம் உள்ள ஊருக்கு வரவேண்டும். அப்படி வெட்டுகிற பள்ளத்தை ஆழ தோண்டி பைப்பை சரிவாய் வைத்தால் ஒழிய தண்ணீர் கிடைக்காது. மேடு நோக்கி நீர் ஏறாது.

"ஆமா... கரெக்ட்டு. என்ன பண்ணப் போற? நாலரை அடி ஆழத்துல நோண்டச் சொல்றதுதானா...."

"ட்ரங்க் ரோடுட. ணங் ணங்குன்னு கடப்பாரை போட்டு பாறைக் கல்லு புரட்டி மண்ணு பார்க்கவே உன்னைப் புடி என்னைப் புடின்னு ஆவும். இரண்டு அடி ஆழம் தோண்டி பைப்பு போட்டு முடிஞ்சு போச்சுன்னு போயிடுவான். மெயின்ல முழுக்க தண்ணி போனா இங்க மெலிசா தண்ணி விழும். வெய்ய காலத்துல சுத்தமா வராது,"

"புண்ணியமில்லையே. கூட துட்டு தரோம், ஊர்ல கலெக்ட் பண்ணுன்னு சொல்லுங்களேன்...!"

"நிறைய கேட்கறாங்க."

"நிறையன்னா?"

"ஆறு ஏழு ரூபா கேட்கறானுங்க"

"ஐயோ!"

"அதுக்குத்தான் ஒரு ஐடியா சொல்றாரு. அவனுங்க மேல் தார் ரோடு பொத்து எடுத்துக்கிட்டா.... நாலடி நோண்டறது நம்ம ஆளே செய்யலாமுன்னு....

வூட்டுக்கு ஒரு ஆளுன்னு எடுத்தா எழுபது ஆளுங்க பத்து பொம்பளை. பொம்பளையாள கூலிக்கு வெச்சிக்கலாம்."

"கரெக்ட் தலைவரே."

"நீ சொல்லிட்ட.... ஊர்ல ஆம்பளையே காணம்டா.... ஒருத்தன் கை நோவுன்றான்... ஒருத்தன் காசு கொடுத்துட்றேன், ஆள வச்சுக்கன்றான். பத்துப்பேர் கூட தேறலையே?"

"பத்துப் பேர் போறாதா?"

"நூத்து நாப்பதடி ரோடு பார்த்தசாரதி. பத்துப் பேரு.... நாலடி ஆழம்.... முடியுமா? இரண்டு நாள்ல முடியணும். உன் இஷ்டத்துக்கு நோண்டிக்கிட்டு இருக்க முடியாது. லாரி ட்ராஃபிக் போற ரோடுல்ல..."

"இரண்டு நாள்ல பத்துப் பேர் நாலடி நாலடி நோண்ட முடியாதா? முடியும் தலைவரே! அதும் மேல் தார் ரோடு நீக்கி பாறாங்கல்லு புரட்டி கொடுத்துட்டா செம்மண் பூமி. சரசரன்னு முடிச்சுடலாம்."

"சொல்ல சுளுவா இருக்கும் பார்த்தசாரதி."

"அந்த ஆறாயிரம் என்னண்ட தரீங்களா.... முடிச்சுத் தரேன்."

"அது முடியாதுன்னுதானேடா ஆள் கூப்பிட றேன்."

"பேர்பாதி தாங்க. என்னாங்க, உப தலைவரே." பார்த்தசாரதி தொடை தட்டினான்.

"வெறும் பேச்சு."

"இன்னொரு தடவை சொல்லு."

"உன்னால முடியாது பார்த்தசாரதி. ஆறாயிரம் எம்படியாவது புரட்டி அவன்கிட்ட கொடுத்து தண்ணி வரப் பார்க்கணும்."

"தலைவரே, நம்ம ஊர் பொது கடப்பாரை யெல்லாம் இருக்குல்ல... ரெண்டு எடுத்தாங்க. மூணு கூலி ஆளுங்களோடு நான் இறங்கறேன்."

"எப்ப?"

"இப்பமே."

"நீ தூங்க வேணாம்... மூணு மணிக்கே முழிச்சிருப்பியே."

"தூக்கம் வரலை. கடப்பாரை கொண்டாங்க,"

ஆறு பேர் இறங்கினார்கள். பஞ்சாயத்து பிரஸி டெண்ட் மண்வெட்டி எடுத்தார். அரசு ஊழியர்கள் மேலோட்டமாய் புரட்ட, ஊர் ஆட்கள் குழி வெட்டி னார்கள்.

பார்த்தசாரதி ஓங்கி கடப்பாரையில் செம்மண் பூமியில் குத்தினான். கண் மூடினான். "கடவுளே! நல்லபடியா முடியட்டும்." கை கூப்பினான்.

"வேண்டுதலா.... எதுனா செய்யுங்கப்பா."

"நம்ம ஊர் மாரியாத்தா கோயிலுக்கு.... பிரஸிடெண்ட் பேசத் துவங்க.

"அது இருக்கட்டும்." பார்த்தசாரதி இடை மறித்தான். "பைப்புக்காரர் வூட்ல இருக்கற பெரியவர் கிட்ட போய் ஒரு விண்ணப்பமா சொல்லிட்டு வா."

"அந்தாளே கிறுக்கன்னாங்களே?"

"கிறுக்கனா இருக்கறவன்தான் அவரை அப்படிச் சொல்வான்."

"கோயிலுக்கு வேண்டிக்குவோம்."

"இல்ல தலைவரே, கோயிலுக்கும் வேண்டிக்கங்க. இவராண்ட ஒரு வார்த்தை சொல்லிட்டு வரலாம்."

"அட போய்யா. அது சீக்குக் கிழவன், புத்தி சரியில்லை. சும்மா திண்ணைல இருக்கு. அதைப் போய் பெரிசாக்கிட்டு..." உபதலைவர் அலட்டினார்.

"அப்ப வேற ஆள் பார்." பள்ளம் தோண்டாது பார்த்தசாரதி கடப்பாரை விட்டு நகர்ந்தான்.

"அட இருப்பா, அவசரப்படாத. நான் போய் சொல்லிட்டு வரேன்." பஞ்சாயத்து பிரஸிடெண்ட் சாலை தாண்டி ஊருக்குள் இறங்கினார்.

பார்த்தசாரதி கடப்பாரை பிடித்தான். "ஐயா, உன்னை நினைத்து மொத குத்து வைக்கறேன். நீ முடிச்சு வை." கடப்பாரையை பற்றி தூக்கி ஓங்கி தரையில் குத்தினான். நெம்பி மண் புரட்டினான்.

'தடேர் தடேர்' என்று கடப்பாரை மண் இறங்கியது. புரட்டப் புரட்ட பூ மாதிரி பூமி வளைந்து கொடுத்தது. சின்ன மேகம் சூரியனை மறைத்தது. மூன்று கூலி வேலை செய்யும் பெண்களும் அசராது மண் வாங்கி ஓரம் போட்டும் உள்ளே கடப்பாரை பட்டுத் தெறித்து மண் குவியல் இருந்துகொண்டே இருந்தது.

"சொல்லிட்டேன் பார்த்தசாரதி கிழவராண்ட. கைகூப்பி வாய்விட்டு உரக்க சொல்லிட்டேன்."

"நல்லது!" பெரிய மண் கட்டி சிதறி எகிறிற்று ஆறு பேர் ஊருக்காக பாடுபடுகிறார்கள் என்று தெரிய, மேலும் சில ஆண்கள் வந்தார்கள்

"எனக்குக் கடப்பாரை புடிக்க முடியாது சும்மா உக்காந்து பேச்சுக் கொடுக்கறேன்."வயசாளி உட்கார்ந்து

கொண்டான். பையன்கள் லாரியை மடக்கி சாலையின் மறுபாதையில் சுற்றிப் போகச் சொன்னார்கள். பத்தடி நீளத்துக்கு நாலடி ஆழம் தொட்டதும் ஊர் பெண்கள் நாலு பேர் கூடையுடன் வந்தார்கள்.

"கூலி ஆள் மண்ணு வாரியும் முடியலியாமே? நாங்களும் வாரி எடுக்கறோம்..." உதவி செய்தார்கள். வேலை ஆட்களுக்கு பிரஸிடெண்ட் வீட்டு டீ வந்தது பார்த்தசாரதி தாயார் ஒரு மணி நேரம் கழித்து மோர் கொண்டு வந்தாள்,

பிற்பகல் இன்னும் இரண்டு ஆண்கள் இறங்கினார்கள்.

பார்த்தசாரதி அசராது கடப்பாரை போட்டுக் கொண்டிருந்தான். இருபதடிக்கு நாலடி ஆழம் தோண்டப்பட்டது.

"மணி என்னாச்சு, பார்த்தசாரதி சாப்பிட்டு படு மிச்சம் நாங்க பார்க்கறம்."

பார்த்தசாரதி ஊருக்குள் நுழைய, பெண்கள், சந்தோஷ சிரிப்புடன் பார்த்தார்கள்.

"மொத்த வேட்டியும் சிவப்பு மண்ணாயிடுச்சே. ஐயோ பாவம்!" என்று பரிதாபப்பட்டார்கள்.

அவன் உணவுக்கு உட்கார, எதிர்வீட்டு உப தலைவர் மீன் துண்டுகள் வறுத்து அனுப்பினார். யாரோ கறிக்குழம்பு கிண்ணத்தில் கொண்டு வைத்தார்கள்

"இன்னும் எவ்வளவுடா இருக்கு..." அம்மா கேட்டாள்.

"நிறைய ஆத்தா."

"மாட்டுக்கு தண்ணி காட்டணுமே?"

"காட்டிட்டுப் போறேன்."

உணவு முடித்து நீர் இறைக்க ஆரம்பித்தான்.

"என்ன பார்த்தசாரதி.... மண்ணு வேலையும் செய்துட்டு தண்ணியும் இழுக்கற...." செல்வமணி தூக்கம் கலைந்து கேட்டான்.

"வேற வழி?"

"இரு. நீ புண்ணாக்கு கரை. நான் தண்ணி இறைக்கறேன்." சுவர் தாண்டி வந்தான். நாலு வாளி இறைத்தான்.

"உனக்கு எதுக்குப்பா கஷ்டம்?"

"அட.... நீ ஊருக்குக் கஷ்டப்படற.... உனக்கு நான் கஷ்டப்படக் கூடாதா?"

"வவுத்து நோவுன்னுச்சே... எப்படி இருக்கு உம் பொண்டாட்டிக்கு?"

"தூங்குது."

"தூங்குதா?"

"அதென்னளமோ பேய் தூக்கம். மாத்திரை வாங்கிக் கொடுத்தேன். போட்டுக்கிட்டுப் படுத்தவதான், நானும் எழுப்பலை. வுட்டுட்டேன். தண்ணி போறுமா? புண்ணாக்குக் கரைக்கட்டுமா..." கை விட்டு களைய ஆரம்பித்தான். பால் கறந்து முடிக்க மணி நான்கு.

"கொஞ்சம் படுத்து தூங்குடா." அம்மா கத்தினாள். பால் தவலையை வெளியே கொண்டுபோய் வைத்தான்.

"வேணாம், நான் ரோடுக்கு போறேன்"

"மறுபடியுமா?" தெரு பெண்கள் வியந்தார்கள். ஐயோ பாவம் என்றார்கள். "ஆண்டாளம்மா எதுனா வூட்டு வேலை இருந்தா குடு. பாவம் உன் புள்ளை இத்தினி கஷ்டப்படுதே!"

"மாடு குளிப்பாட்டணும்... கொட்டா பெருக்கணும்."

ஒரு பெண் புடவை தூக்கி சொருகி கொட்டகைக்குப் போனாள். துடைப்பம் எடுத்துப் பெருக்கத் துவங்கினாள்.

"ஊருக்கு இது இத்தினி செய்யறபோது, நாம செய்யக்கூடாதா?"

இருட்டும் நேரம் அவள் கண் விழித்து எழுந்தாள். முகம் கழுவிக் கொண்டாள். மேலுக்கு இறைத்துவிட்டுக் கொண்டாள். பொட்டும், பூவும் வைத்து வாசலுக்கு வந்து புருஷனிடம் விஷயம் கேட்டாள்.

"நீ போகலியா ரோடு நோண்ட?"

"நாளைக்குப் போறேன்."

""மண்ணு வாரப் போயிருக்கலாமில்ல..."

"நைட்டு வேலைடி. இப்ப கிளம்பணும்."

"அப்ப நான் போகட்டா மண்ணு வார..."

"உனக்குத்தான் முடியலியே."

"அது பார்த்தா. ஊரே போவுது பொது வேலைக்கு, நாம போவாத..."

"முடிஞ்சா போ." சட்டையை மாட்டிக் கொண்டு சைக்கிளில் கிளம்பினான். அவன் தலை மறைந்ததும் சோறு அள்ளி குழம்புடன் போட்டு சாப்பிட்டாள். கை வீசிக்கொண்டு இருட்டில் சாலை நோக்கி துள்ளலுடன் நடந்தாள்.

5

வேலைக்குப் போயிருந்த ஆண்கள் விவரம் சொல்ல, சிறிதளவு உணவு முடித்து சாலைக்கு

வந்தார்கள். சில ஆண்களோடு பெண்களும் வந்தார்கள். ரோடு நடு வரையில் தார் பகுதி பிரிக்கப்பட்டு அடிப்பக்க கற்கள் புரட்டப்பட்டு செம்மண் தெரியக் கிடந்தது. பார்த்தசாரதி சாலை மத்திக்கும், எதிர்ப்புற கரைக்கும் நடு மையத்தில் மிக வேகமாய் கடப்பாரை போட்டுக் கொண்டிருந்தான். நாலடியில் ஆரம்பித்து நாலரையடி. ஆழம் என்று நகர்ந்து கொண்டிருந்தான், பார்த்தசாரதி டீ குடிக்க மேலே ஏறினபோது இரண்டு ஆட்கள் கீழே இறங்கி தகர்க்க ஆரம்பித்தார்கள்.

மரகதம் சாலை ஏறியபோது பார்த்தசாரதி நடு ரோட்டில் புரட்டப்பட்ட கல் மீது உட்கார்ந்து கொண்டிருந்தான். அவன் முதுகு மட்டும் அவளுக்குத் தெரிந்தது. ஒரு வேளை மேலே ஏறிவிட்டானா. வேற ஆள் மாறிடுச்சா... அட கஷ்ட காலமே. அது ரோடுக்கு வந்துரச் சொல்ல நாம வேடிக்கை பார்க்க வந்தமே. உள்ள வந்துட்டு இரண்டு கூடை மண்கூட தூக்காத போயிட்டா இடிப்பால்ல பேசுவாங்க.

"வேலை முடிஞ்சு போச்சா?" மண் தூக்கிவந்த பெண்மணியிடம் ரகஸ்யமாய் கேட்டாள்.

"அது எப்படி முடியும்..... இதோன்னா நாலு நாள் ஆவும்."

"ராத்திரி முழுசா வேலை நடக்குமா?"

"தெரியலையே. முடிஞ்ச வரைக்கும் பள்ளம் நோண்டிட்டு வீட்டுக்குப் போயிற வேண்டியதுதான்"

"பார்த்தசாரதி தோண்டல?"

"அது தோண்டினதாலதான் இந்த தூரமாவது வந்துச்சு இங்கிருக்கிற மத்த ஆம்பளைங்களுக்கு முடியலை."

"எத்தினிதான் ஒரே ஆள் செய்ய முடியும். எந்திரிச்சுப் போன்னுட்டாங்க. டீ குடிச்சிட்டுப் போறேன்னு சொல்லிடுச்சு."

"ஐயோ!"

"ஏன்..."

மரகதம் விழித்தாள், கண்ணுக்குள் மிதந்த கனவு கலைந்தது. அவசரமாய் சிரித்தாள்.

"நாளைக்குத் தண்ணி வந்துடும்னு நினைச்சேன்."

"வூட்ல உட்கார்ந்து ஊர் மொத்தமும் தூங்கிட்டு காலைல தண்ணி வரும்னு நினைச்சா இது என்ன ஜீபூம்பா வேலையா?"

"இல்ல... சும்மா சொன்னேன்."

"வா... வந்து நாலு கூடை தூக்கு." செவப்பு மண் தலைல பட்டதும் அரிக்கும். மரகதம் தலைக்கு சும்மாடு சுத்தி வைத்துக்கொள்ள, மண்சரியலை வெட்டிப் போட்ட ஆளிடமிருந்து யாரோ ஒரு கூடையை வாங்கி தலையில் வைத்தார்கள். பார்த்தசாரதி ஏரியையே பார்த்துக் கொண்டிருந்தான். அவளுக்கு முதுகு காட்டிக் கொண்டிருந்தான்.

நாலாவது கூடைக்கு மண் கழுத்தில் பட்டு அரிக்கத் துவங்கியது. துடைக்க, உடம்பு முழுவதும் வியர்வையில் கலந்தது. சிவப்பு நிறமாய் முதுகில் இறங்கியது.

காலிக்கூடையோடு மண்சரிவுக்கு அருகே போனவள் தயங்கினாள். கூடையைப் போட்டுவிட்டு அவனை நோக்கிப் போனாள்.

"மோர் சாப்பிட்டுட்டு வந்துடறேன். மிச்ச தூரம் முடிச்சுடலாம்." அவனுக்குப் பின்னே நின்று பேசினாள்.

திரும்பினான்.

"நீயா...?'

"ஏன் உட்கார்ந்துட்ட?"

"சும்மா. கொஞ்ச நேரம்.... செல்வமணி வந்துருக்கானா?"

"இல்ல ட்யூட்டிக்குப் போயிடுச்சு."

"நீ மட்டுமா வந்த....?"

'நீ மண்ணு தோண்டிப் போடறதா சொன்னாங்க. இருப்பு கொள்ளல...."

"உடம்பு சரியில்லைன்னு..."

"அதான் கண்ணடிச்சேனே..."

சட்டென்று அவனுக்குள் அந்த இடம் திரைப் படமாய் ஓடிற்று. அவள் கண்ணடித்தது மறந்து விட்டது. வயிறு பிடித்துக் கொண்டு நின்றது மட்டும் ஞாபகத்தில் இருந்தது.

"ஆமாம்..."

"நல்லா தூங்கிட்டேம்பா..."

"ஏன்?"

"என்னவோ பூமியோட புதைச்ச மாதிரி ஆயிடுச்சு. குழில தள்ளி மண்ணு போட்டு இறுக்க மூடின மாதிரி கை காலும் கூட அசைக்க முடியல."

"ஏன் வந்த இங்க?"

"அது ட்யூட்டிக்கு போயிடுச்சே அதான்."

"வேலை இருக்கு. பாதி ரோடாவது நோண்டி ரணும்."

"நான் இருக்கேன் உங்கூட..."

"எதுக்கு?"

"மண்ணு வாரிப் போட..."

"வேணாம் மரகதம். அதுக்குத்தான் கூலி ஆள் போட்டிருக்கே."

"அட.... ஊருக்கு நான் செய்ற உபகாரமா இருக்கட்டுமே. உனக்கு என்ன, கூலியா தராங்க?"

"மண்ணு வேலை ரொம்ப கஷ்டம்."

"நீ கூட இருக்கச்சொல்ல எதுவும் கஷ்டமா தோணாது. இருக்கட்டா?"

"எனக்கோசரமா செய்யற... ஊருக்கோசரம்தானே?"

"எனக்கு ஊரா முக்கியம். நீ முக்கியம். ஊர் காரியம்கறது ஒரு சாக்கு. ஏதோ இந்த வேலை சாக்குலயாவது. உன் கூட இருக்கேனே. அது போதும்."

"ஆளுங்க சமாளிக்காது ஒன்பது மணிக்கு ரோடுல ஏறிடும்."

"மிச்சம்."

"மொள்ள மொள்ள செய்யணும்."

"இடிக்கறதுக்கும் ஆள் போட்டுருக்கா?"

"வரமாட்டானுங்க. ஊருல துட்டு வாங்கறதும் கஷ்டம். எல்லாம் சின்ன சம்பளங்க்காரங்கதான, பெரியதனமா ஆள் இல்லையே."

"அப்ப நீயும் வந்துடு. ஒண்டியா எதுக்கு பாடு படணும்?"

"அப்படியா... ஊருக்குத் தண்ணின்னா அது நல்ல காரியமில்லியா? எனக்கு ஒரு கஷ்டமும் இல்ல. நோண்டி

போட்டுருவேன் தனியா. இடிக்கணும். கூலி ஆளுங்க இப்பவே சோர்ந்து உட்காருது?"

'அதான் நான் மண்ணு தட்டு தூக்கறேன்."

"முடியாது மரகதம்!"

"முடியும்?"

"செய். நான் இறங்கி இடிச்சுப் போடுறேன், நகரு. பொட்டிக்கடைக்காரரே இடம் வுட்டுப் போ." அவன் பள்ளத்தில் குதித்து கடப்பாரை வாங்கினான். கையில் இறுக்கி நேர் குத்தாய் பூமியில் பதித்தான்.

மண் புரண்டது.

குத்தி நகர, ஆட்கள் மண் புரட்டி மேலே போட்டார்கள். கூடைகளில் வாங்கி உள்ளே மண் விழாது தள்ளி குவியலாக்கினார்கள். குனிந்து கூடை வாங்கும்போதெல்லாம் அவன் முதுகை, தோளை, பிடரியை ஆவலுடன் பார்த்தாள். அவனைத் தெரியும் என்கிற எண்ணம்கூட உள்ளே குதூகலம் கொடுத்தது. அவன் எனக்கு உறவு என்று யாரிடமாவது சொல்ல வேண்டும் போலிருந்தது. அவனைக் கெட்டவன் என்று யாரும் சொன்னால் கடும் சண்டையிடலாம் என்று தோன்றியது.

"போறும், மாப்ளே."

மண் வெட்டிக் கொண்டிருந்தவன் கூவினான்.

"ஏங்க?"

"ஒன்பதாயிடுச்சில்ல?"

"வேலை முடியலீங்களே... ரோடு பாதிகூட தாண்டலையே?"

"அது பார்த்தா.... செய்வோம் நிதானமா."

"டிராஃபிக் முட்டி நிக்கிது. தோண்டுவதை அடைங்கன்னுட்டா மொத்தமும் வேஸ்டா போயிடுமே."

"யாரு தோண்டியிருக்காங்க? எதுக்குத் தோண்டியிருக்குன்னு யாருக்கும் தெரியாது மாப்ளே! இத்தினி நீளம் தோண்டினதை அடைச்சுடா முடியுமா? இன்னும் பத்துப் பாறாங்கல்லு வரிசையா வச்சுட்டா லாரிக்காரன் தானா ஒதுங்கிப் போய்டுவான்."

மனசு ஒப்பாமல் கூட்டத்தோடு கூட்டமாய் திரும்பினான். ரோடு தாண்டி சரளைக்கல் சரிவில் இறங்கினான். இங்கனதான் குழா வரும் என்று ஒரு இடம் காட்டினான். கூட்டம், விட்டால் போதும் என்று வேகமாய் போயிற்று. குழாய் வரும் இடத்தில் மெல்ல கடப்பாரை போட்டு நோண்டினான். மண்வெட்டிகளுடன் போனவனும் சரிவு இறங்க, அவள் மட்டும் தயங்கி நின்றாள்.

"ஏன் நின்னுட்ட"

"இல்லை. மடமடன்னு சிரமம் பார்க்காத செய்தா சரியா இந்த இடத்துல குழாய் வந்துடும். ஓடறானுங்க பாரு, விட்டா போதும்னு. உடம்பே வணங்கலை எவனுக்கும். நாலு கூடை மண் வார்றதுக்குள்ள பீடி, புகையிலைன்னு உட்கார்ந்துடறாங்க. நேர்கோடா போட்டா இங்கதான் குழா வரும்."

"வரட்டும், போய் தூங்கு."

"எனக்கு தூக்கமே வரலை மரகதம். வேலைன்னு ஆரம்பிச்சிட்டம். மடமடன்னு ஆளுக்கு ரெண்டு கை மண்ணு வாரினா நல்லது. இப்படிப் பதுங்குதே இந்த ஊரு?"

"முடியல."

"இல்ல, மனசு ஒட்டல. அவன் வெட்டட்டும்னு இவன்... இவன் வெட்டட்டும்னு அவன். வெட்டற போதே வெட்ட வராதவனப்பத்தி கேலியும் கிண்டலும். இவன் வெட்ட வந்ததுகூட நக்கல் செய்யறதுக்குத்தான். தன் வேலைன்னு வரல. நான் வந்துட்டேன் பாருன்னு சொல்லறதுக்குத்தான்."

"அப்படித்தாம்பா உலகம்."

"என்னத்துக்கு இது... யாராச்சும் நாலு பேர் மண்ணு வாரிப் போட்டா நானே குத்தி பாதி வந்துருவேன் இங்க. இங்கதான் குழா வரும்." மறுபடி கடப்பாரையால் இடித்தான். ணங்கென்று விநோதமாய் ஒரு உலோக சப்தம் கேட்டது. சந்தேகம் வர, மறுபடி அடித்தான் தெளிவாய் கேட்டது.

"என்ன அது?"

"தெரியலையே? இரும்பு மாதிரி ஏதோ அடிபடுது."

"நோண்டு...." அவள் ஆவலுடன் கூவினாள்.

யாராவது சொல்ல மாட்டாங்களா என்று காத்திருந்தவன் போல் ஊர் முனையில் சரிவுச் சரளையைக் குத்தி சரிக்க, பெரிய குழாய் முணங்குல விட்ட குழாய் தெரிந்தது.

"என்ன மரகதம் இது.... பைப்பு மாதிரி....'

மண் மொத்தமும் தள்ள, இப்போது பைப் சுத்தமாய் தெரிந்தது. கடப்பாரையை பைப்புக்கு உள்ளே அனுப்ப கடைசிவரை தடங்கலின்றி போயிற்று

"குழாதான். எப்ப போட்டது?"

"நீ ஒண்ணு செய்.... பைப்புக்காரர் வீட்டுக்குப் போய் அவரைக் கூட்டியா முத முத இங்க வீடு

கட்டினது அவருதான். அவருக்குத் தெரியும். இது என்ன ஏதுன்னு... கூட்டி வா. ஓடு."

அவள் ஓடினாள்.

குலுங்கலுடன் பைப்புக்காரர் வீட்டு வாசல் கதவு தட்டினாள்.

"யார் அது?" பெண் குரல் கேட்டது.

"நான் மரகதம்.... செல்வமணி பொண்டாட்டி."

கதவு திறக்க அந்தப் பெண் வாசலுக்கு வந்தாள்.

"என்னாக்கா?"

"கலாவதி, அப்பாவ கூப்பிடேன். ஊரு முனைல பெரிய பைப்பு பூமில இருக்குது. நானும் பார்த்த சாரதியும் கண்டுபிடிச்சோம்."

"அப்பா தூங்குதே."

"எழுப்பேன். எத்தினி நீளம் பைப்புன்னு தெரியல. நோண்டற இடத்துல போடற பைப்பைப் போட இதை மாட்டி வுட்டுறலாம்னு பார்த்தசாரதி யோசிக்குது."

"இன்னும் அங்கனதான், இருக்குதா?"

"எது?"

"நீ சொன்னியே அவருதான்..."

"ஆமா... வூட்டுக்கு வர மனசே ஆவலை."

"இரு. உள்ளே வாயேங்க்கா..."

"வேணாம் இங்கனயே இருக்கேன்." உட்கார்ந்து கொண்டாள். அவளுக்கு ஊருக்குத் தண்ணி வருவது பற்றி அக்கறை இல்லை. பார்த்தசாரதியும் உதவுவது ரொம்ப சந்தோஷம். நானும் பார்த்தசாரதியும் கண்டு பிடிச்சோம் என்று சொல்வதில் சுகம். கண்டுபிடித்தது

பைப்பாக இருந்தாலும் நாலணா காசாக இருந்தாலும் கவலை இல்லை.

திண்ணையில் உட்கார்ந்து மெல்ல திரும்பினாள். கிழவன் அவளையே பார்த்துக் கொண்டிருந்தான்.

"ஊருக்குத் தண்ணி வந்தா நல்லா இருக்கும் இல்ல.... அதான் கஷ்டப்படறோம்." அவளுக்கு நானும் பார்த்தசாரதியும் என்று சேர்த்துச் சொல்லும் ஆசை வந்தது. பேர் பாதி ரோடு நோண்டி போட்டாச்சு. மிச்சம் பைப்புத் தடம் தெரிஞ்சா இப்பவே முடிச்சுடலாம்னு தான் பைப்புக்காரரைக் கூட்டிக்கிட்டுப் போக வந்தேன். பாவம் ஒத்த ஆளா கடப்பாரை தூக்கி.... முடியுமா? எல்லாரும் வுட்டா போறும்னு போயிட்டாங்க. நானும் பார்த்தசாரதியும்தான் அங்க இருக்கறது. பால்கார ஆளு.... தெரியுமில்ல.... உன்கூட நேத்திக்கு பேசிட்டிருந்த தாமே. பைப்புத் தடம் தெரிஞ்சுது... மிச்ச இடமும் பரபரன்னு தோண்டிப் போட்டுரலாம். கிழவன் கைக்குச்சியை எடுத்து தரையில் படுக்க வைத்தான். அவள் பார்த்துவிட்டு நிமிர, பின்னால் சத்தம் கேட்டது.

"என்ன மரகதம்." பைப்புக்காரர் வெளியே வந்தார்.

"பெரிய பைப்பு... இத்தினி அகலம் நம்மூர் முனைல பூமில கிடக்குது. பாத்தசாரதி சொல்லிவிட்டுது. உனக்கு எதுனா தெரியுமா?"

"பைப்பா. தெரியலையே..."

"நீ பைப்புக்கார ஆளுன்னு உன்னைக் கேட்டுது போல..."

"பைப்புக்கார ஆளுன்னா நான் கார்ப்பரேஷன்ல பைப்பு போட்டவன். இப்ப என்ன அதுக்கு... எங்க அந்த இடம்?"

"ஊருக்கு வல சரிவுல"

"கோயிலாண்டையா....

"இல்ல, கொஞ்சம் தள்ளி...."

"அதுவா, அது எண்ணெக் குழாயில்ல..."

"எண்ணெய்க் குழாயா?"

"ஆமா, முன்ன இங்க ஒரு ஏர்போர்ட் இருந்துச்சு, அதுக்கு பெட்ரோல் போட லாரில எண்ணெய் வரும். அதை இங்க டாங்க் கட்டி., ஆமா... எதுக்கு அது நோண்டிக்கிட்டு..."

"தெரியலையே..."

அவர் கீழே இறங்க, அவள் பின்தொடர்ந்தாள். அந்தப் பெண்ணும் கீழிறங்கியது.

"நீயும் வரியா கலாவதி?"

"சும்மா அப்பாவோட வேடிக்கைப் பார்க்க."

"வாயேன். இந்த இடத்துல தண்ணி பைப்பு எப்படி வரும்னு என்கிட்ட காமிச்சது பார்த்தசாரதி. இத்தினி அகலப் பைப்பு..."

"நீங்க பக்கத்து வீடு இல்ல"

"ஆமா. ஒட்டினாப்பல வீடு"

"உங்க வீட்டுக்காரர் வரலியா?"

"அது வேலைக்குப் போயிருக்கு. நான் சும்மா இருக்கமேன்னு மண்ணு வாரப் போனேன். முடிச்சிட்டு வரபோது பேசிக்கிட்டே வந்தோம். தட்டுன்னு கால்ல சிக்கின மூலிகை மாதிரி..."

"அவரு ஒண்டியா வேலை செய்றதா சொன்னாங்க." கலாவதி ஆவலுடன் விசாரித்தாள்.

"ஆமா.... அந்தாளு இல்லன்னா முடியுமா இத்தினி தூரம் நோண்டிப் போட"

"பார்த்தசாரதி எங்க வூட்டுக்கு பால் ஊத்துது. நீங்களும் அவரு வீட்லதான் பால் வாங்கறீங்களா?"

"எப்பனா வாங்குவேன்."

"உன் வீட்டுக்காருக்கு சிநேகமா?"

"என் வீட்டுக்காரரோட யார் சிநேகிதமா இருக்க முடியும்? அது வரது தெரியாது. போறது தெரியாது யாருக்கும். நான்தான் போய் பேசிக்கிட்டிருப்பேன்."

"பக்கத்து வீட்லயா?'

"ஆமா. பார்த்தசாரதிக்கு அம்மா இருக்கே."

"பார்த்திருக்கேன். பேசனதில்லே."

"நம்மளே இத்தினி நாள் இல்லாம இன்னிக்கு பேசறோம். நீ படிக்கலையா?"

"நிறுத்திட்டாங்க."

"எத்தினியாவது?"

"பத்தாவது."

"நான் அஞ்சாவதுதான் படிச்சேன்."

திரும்பி ஊர் எல்லைக்கு வந்து சரிவில் ஏற, உச்சியில் பார்த்தசாரதி நின்றுகொண்டிருந்தான்.

"வாங்கய்யா. இது என்னன்னு புரியலை."

"டேய் பார்த்தசாரதி!" பைப்புக்காரர் இடம் சோதித்துவிட்டு நிமிர்ந்தார்

"என்னப்பா?"

"இது நேர நடு ரோடாண்ட முடியுது."

"அதனால?"

"ஒண்ணு செய்.... கைகால் நோவுதா?"

"இல்ல."

"இன்னும் ஒரு இரண்டடி ஆழமா நோண்டிடு."

"எங்க?"

"ரோடுக்கு மத்தில."

"எங்க?"

"எண்ணெய் பைப்பு இது. இப்ப உபயோகம் இல்ல."

"தண்ணி பைப்புல சேர்த்துடலாமா?"

"சேர்க்க முடியாது. ஆனா, வேற வேலை செய்யலாம்."

"என்ன?"

"இது தடம் புடிச்சா அதுக்குள்ள இரண்டங்குல பைப்பு விட்டுருலாம், ரோடு நோண்டாத. போய் மண் எடு சொல்றேன்."

"மண் தூக்க ஆள் இல்லியே..."

"த்தே. நானிருக்கேன்ல?"

"எத்தினி தூக்க முடியும்.... பாவம்."

"நானும் வரேன்." அந்தப் பொண்ணும் இடுப்பில் புடவை சொருகிக் கொண்டது.

பார்த்தசாரதி ஓடிப்போய் இறங்கினான். கடப்பாரையை வேகமாய் மண்ணில் போட்டான். இரண்டு பெண்களும் அவன் அருகே நின்றார்கள்.

6

முன்பு தோண்டிய இடத்திலேயே இன்னும் ஆழமாய்த் தோண்ட, ஒரு அடியில் ணங்கென்று மறுபடி பைப் தட்டுப்பட்டது.

தோண்டிய பார்த்தசாரதியே கடப்பாரையை மேலே வைத்துவிட்டு மண்வெட்டி வாங்கி மண் வாரினான்.

மரகதம் சும்மாடு கழற்றினாள். கூடையைக் குனிந்து நீட்டினாள். அவன் வாரிப்போட்ட மண்ணை எடுத்து தலையில் தூக்கி வைத்துக் கொண்டாள். நாலடி தள்ளிப் போய் குவியலில் கொட்டினாள். நின்று கொண்டிருந்த இரண்டு பேரும்தான் மாங்கு மாங்கென்று வேலை செய்யறோம் என்கிற கர்வம் தெரிந்தது.

"நானும் கொட்டறேன்ங்கா..." அந்தச் சிரிப்பு புரிந்துகொண்டு கலாவதி முன் வந்தாள்.

"வேணாம் கலாவதி. தலையெல்லாம் மண் ஆயிடும்."

"ஆகட்டுமே! ஊரு சமாசாரம்தானே... போய் எடு கலாவதி. இரண்டு பேரு கொட்டினாதான் சரிப்படும். எனக்கு நெஞ்சு நோவு பாரம் தூக்க முடியாது."

"இரண்டு பேரு வேணாம். அது மட்டும் கொட்டட்டும்." பார்த்தசாரதி மரகதம் பார்த்துப் பேசினான்.

கலாவதிக்குச் சின்னதாய் ரோஷம் எழும்பியது. அவளும் மண்கூடை எடுத்துத் தலையில் வைத்தாள் கனம் தெரியாது கை நழுவ விட்டு, பாதி மண்ணை தரையில் சரித்தாள் மண் சிந்தி சிறிது குழிக்குள் இருந்தவன் முகத்தில் அடித்தது.

‘த்தே.... நீ நடக்கிற வேலையைக் கெடுத்துடாதே. உறுதியா புடி.” தகப்பன் கத்த, பாதி கூடையைக் கொட்டிவிட்டு வந்தாள்.

“அது என்னிக்குக் கூடை தூக்கியிருக்கு. பாவம். இப்பிடி நடுவாந்தரமா புடி. தவலை தூக்கினாப்பல... நுனி புடிக்காதே..” மரகதம் சொல்ல, மாறி மாறி மண் அடித்தாள்.

பைப் கன்னங்கரேல் என்று வெளியே தெரிந்தது. பைப்புக்காரர் இறங்கி தட்டிப் பார்த்தார். கடப் பாரையை அந்த பைப்புள் செலுத்தினார் தங்கு தடையின்று போயிற்று.

“அட.... அப்படி ஒரு யோசனை செய்றியா நீ...” பார்த்தசாரதி வியந்தான்.

“உள்ள நேர நம்ம பைப்பு போடறது போகணும். கடைசி முட்டும். நடுவுல எதுனா முட்டாத இருக்கணும். முட்ட தோது இல்லை பார்த்தசாரதி. பைப்பு வெள்ளைக்காரன் காலத்தது. கலவைப் பைப்பு. நொறுங்கல் இல்லை.”

“இரண்டங்குல பைப்பு கொண்டாரலாமா?” பார்த்தசாரதி கேட்டான்.

“எங்க இருக்குது?”

“இங்கதானே டெண்ட் போட்ருக்காங்க ஊராட்சி ஆளுங்க.”

“அப்ப எடுத்தா.”

பார்த்தசாரதி குழிவிட்டு எகிறினான்.

“இரண்டு பேரும் கூட போங்கம்மா, பைப்பு எடுத்தார.”

பார்த்தசாரதி அங்கே டெண்ட் போட்டு, கருவிகள் பைப்புகள் கட்டி வைத்த ஆளை எழுப்பினான். "மொத்தமும் தோண்டிட்டம். பைப்பு கொடு" என்று கேட்டான் "இன்ஜினீயர் வரணுமே" என்று அவன் வழிந்த போது "நாலு நாள் வேலை செய்ததா துட்டு வாங்கப் போறீங்க. இப்ப கொடுத்தா கூடாதுன்னா சொல்வாரு?"

ஆறு பைப்புகள் தரப்பட்டன. கலாவதியும் மரகதமும் இரண்டு பைப்புகளை தோளில் வைத்து முன்னும் பின்னும் பிடித்துக் கொண்டு போனார்கள் பார்த்தசாரதி இரண்டு பைப்புகள் நடுவாந்தரமாகப் பிடித்துக் கொண்டான். கப்ளிங் தரப்பட்டது.

முதல் பைப்பு முழுவதும் உள்ளே போயிற்று.

பைப்புக்காரர் எழுந்தார் 'பார்த்தசாரதி, கொஞ்சம் வூட்டுக்குப் போய் சாமான்களை எடுத்தாந் துடட்டுமா.... பொண்ணுங்களை பத்திரமா பாத்துக்க, ஹோன்னு இருக்குது ரோடு."

"நீ போ அப்பா.... நான் இங்கியே இருக்கேன்." கலாவதி தைரியம் சொன்னாள்.

"இன்னிக்கு முடிச்சிடலாமா, பைப்புக்காரரே?"

"அப்படித்தான் தோணுது. விடிஞ்சா தண்ணி வந்துரலாம்."

"அப்ப போ... போய் உன் மூட்டையோட வா..."

ஏறி இரண்டு பெண்களோடு சரிவில் உள்ள மரத்தடிக்கு வந்தான்.

"யப்பா... எவ்வளவு சுளுவா போச்சு வேலை நாம பாட்டுக்கு போயிருந்தம்னா?"

"நான்தான் சொன்னேன், ணங்குன்னு பட்டது என்னவோ இரும்பா தெரியுதேன்னு..." மரகதம் பேசினாள்.

"நீயும் இல்லை. நானும் இல்லை. பெரியவரு வேலை. சுளுவா செய்துட்டாரு."

"யாரு... பைப்புக்கார வூட்டுக் கிழவரா?"

"ஆமா."

"இப்பக்கூட பேசிட்டு வந்தேனே... எனக்கு ஒண்ணும் தெரியலியே."

"எல்லாருக்கும் தெரியாது" கலாவதி பேசினாள்.

"என்ன தெரியாது?"

"அது ஒரு தினுசான ஆளு சாமியார் மாதிரின்னு வச்சுக்கயேன். டக்கு டக்குன்னு வெவ்வேறு உருவம் காட்டும்"

"யாரோ கூட இத சொன்னாங்க." மரகதம் வியப்போடு பதில் சொன்னாள்.

"நேத்து எண்ணிய கவுத்து வுட்டுருச்சு. என்னவோ செஞ்சு.... மயக்கம் போட வச்சிருச்சு." பார்த்தசாரதி சொன்னான்.

"நேத்துன்னா எப்போ?"

"பகல்ல பால் கணக்கு கேட்கறப்ப."

"நீங்க துட்டு வாங்கிட்டுப் போனீங்களா.... அப்ப நான் வெயிலா இருக்கேன்னு உடம்பு துடைச்சேன். ஈரத் துணியே அப்படிப் படபடன்னு உடைஞ்சு போற மாதிரி காஞ்சி போச்சு."

"துணியா!" மரகதம் கண் விரித்துக் கேட்டாள்.

"எதிர்வீட்டு நாயக்கரு கத்தினாரு. இவன் பேய் புடிச்சவன். பூச்சிக் காட்டறான். நாய் மூஞ்சி காமிக்க றான்னு திட்டினாரு."

"நாய் மூஞ்சியா?"

"அப்பப்ப எதுனா காட்டும்."

"நிசமாலும் நாய் மூஞ்சியா?"

"தெரியலை. அவரு அப்படித்தான் சொன்னாரு."

"மரகதம். அந்த ஆள் ரொம்பப் பெரிய மனுஷன் நம்ம யாருக்கும் தெரியலை அது பத்தி. சித்து விளையாடற மனுஷன். யார்கிட்டயும் சொன்னா நம்புறதில்லை. நான் இது நோண்டறப்ப அதுக்கிட்ட கும்பிட்டுக்கிட்டுத்தான் நோண்ட ஆரம்பிச்சேன்"

"யாரோ வந்து அவருகிட்ட சொன்னாங்க போல இருக்கே, நோண்டப் போறோம்னு...." கலாவதி பேசினாள்.

"நான்தான் அனுப்பினேன்."

"எனக்குக்கூட நேத்து உருவம் காட்டுச்சு..."

"என்ன உருவம், கலாவதி?"

"துணி மொடமொடப்பா ஆனதும், ஏம்பா என்ன சாமியான்னு கேட்டேன். உடனே ஊஞ்சல் சாமியாடுது... இத்தினி.... இத்தினிதான் உசரம் சிலை பூமாலை போட்டு ஆடுது."

"அட நெசமாவா? நான் இப்ப உன்னை இட்டாரு சொல்ல பேசினேன். ஒண்ணும் சொல்லலியே எ கிட்டே...."

"சொல்லியிருக்கும், உனக்குப் புரிஞ்சிருக்காது."

"கைல இருந்த கம்பு எடுத்துக் கீழே வச்சது அவ்வளவுதான்."

"அதுக்கு எதுனா அர்த்தம் இருக்கும்."

"இதுக்குப் போய் அர்த்தம் யாருகிட்ட கேக்கிறது?"

"போய் பேசிப் பாரு... புரியும்."

"ஐயோம்மா.... எனக்கு சாமி, பூதம்னா பயம்."

"ஏன்?"

"நாம ஒண்ணும் நல்லத்தனமா இல்லை. மனசுக்குள்ள ஆயிரம் இருக்கு.... நல்லதும் கெட்டதும்."

"அதனால என்ன மரகதம். மனுஷங்கதானே நாம. நல்லது மட்டுமே வருமா?"

"பெரியவங்க முன்னாடி எப்படிப்பா. கூச்சமா இருக்குமே போய் நிக்க."

"அதுக்கு நல்லது கெட்டது கிடையாது. அடுத்தாளை தொந்தரவு பண்ணாத இருந்தா போறும்."

"அப்படி எதுனா உண்டா? உடுத்தறது, துன்றதுலேர்ந்து பலவிதமா சொல்லியிருக்குதே."

"எதுனா தின்னு.... எதுனா உடுத்து. இவ சோறை நீ துன்னாத. என் துணியை நீ திருடாத..."

"அது போறும்ன்றீயா?"

"நிச்சயமா போறும்."

"எதும் தப்பு இல்லைன்றியா?"

"அப்படி தப்பு எதுனா நாம செய்திருந்தா இந்த பைப்பு இப்ப கிடைச்சிருக்குமா?"

கலாவதி கூர்மையாய் இருவரையும் பார்த்தாள். மரகதம் கண்ணில் நாணமே இல்லை. அடுத்த ஆண் என்கிற எண்ணம் இல்லை, அவளுடைய ஆள் என்கிற மாதிரி கண்ணோடு கண் பார்த்துப் பேசுகிறது வியப்பாய் இருந்தது. இவர்களுக்குள் ஏதாவது தொடர்பு இருக்குமோ என்கிற யோசனை வந்தது.

'இருந்துவிட்டுப் போகட்டுமே எனக்கென்ன' என்கிற நினைப்பும் எழுந்தது.

"எல்லாரும் சந்தோஷமா இருக்கணும். அதான் முக்கியம் மரகதம். நல்லது கெட்டது அப்புறம். யாருக்கும் காயம் படாத நடந்து போவணும். இதுல நல்லது என்னா, கெட்டது என்னா..."

"நீ ஒண்ணுமே சொல்லலியே கலாவதி!" மரகதம் அவள் ஆர்வமாய் கவனிப்பது பார்த்துவிட்டு பேச்சுக்கு அழைத்தாள்.

"அது சின்னப் பொண்ணு, அதுக்கென்ன தெரியும்."

"பத்தாவது படிச்சிருக்கே."

"படிப்பு எதுக்கு உதவும். படிப்பு முக்கியம் இல்ல. என்ன புரிஞ்சுக்கறங்கறதுதான் முக்கியம். புரிஞ்சுக்கறது படிப்புல வராது. பெரிய மனுஷன் பழக்கத்துல வரும். நம்ம இடத்துல பெரிய மனுஷன் அந்தக் கிழவருதான். அவருக்குத் தெரிஞ்சது இங்க யாருக்கும் தெரியாது. இது சத்தியம்.'

"மந்திரம் கத்து வச்சிருப்பாரு போல!"

"மந்திரம் இல்லை கலாவதி. அந்தாளு எல்லாம் புரிஞ்சுகிட்டவர். உன்னை, என்னை, ஆடு, மாடு, நாய், பூனை எல்லாம் எது... யாருன்னு புரிஞ்சுக்கிட்டவர். நீ சொல்லாதயே உன்னைப்பத்தி சொல்லிடுவார்.... என்னைத் தொடாதயே என்னை எங்கோ தூக்கிப் போட்டுருவார்."

'அப்பா போனாரு, இன்னும் காணுமே."

"மூட்டை தூக்க முடியலியோ என்னவோ..."

"நீங்க ரெண்டு பேரும் போய் பாருங்களேன்."

"நீ தனியா இருப்பியா?"

"எனக்கு என்னா பயம். என்னை யாரும் ஒண்ணும் பண்ண முடியாது, பெரியவர் இருக்கறவரைக்கும்"

"விட்டா கோயில் கட்டிடுவே போல இருக்கு."

"கோயிலா. ஊரே கோயிலாகப் போறது பாரு, சீக்கிரம்."

"அப்ப நீதான் ஊர்ப் பூசாரி! வா கலா.... போலாம்."

அவர்கள் இறங்கி நடந்தார்கள். அவன் மரத்தடியில் குத்திட்டு உட்கார்ந்து கொண்டான். மரத்து வேரில் முதுகு சாய்த்து கொண்டான். நிமிர்ந்து வானம் பார்த்தான்.

முதுகில் ஏதோ ஒட்டியது. நகர்ந்து இருட்டில் மரம் தடவிப் பார்த்தான். பிசுபிசுத்தது.

என்ன மரம் இது.... வன்னிமரம்... பால் ஒழுகுதா.... இல்லை எதுனா அசிங்கமா....

முகர்ந்தான். பச்சை வாசனை அடித்தது. பால் வுடுது மரம். வன்னி மரம் பால் வுடுமா? மரம் சுற்றித் தொட்டான். எல்லா இடமும் திட்டுத் திட்டாய் பிசுபிசுத்தன. மரம் சிறியதாய் ஒண்ணரை ஆள் உயரத் துக்கு இருந்தது. துடைத்த கையை மரநிழல் விட்டு நிலவொளியில் பார்க்க விரும்பினான் நகர, ஏதோ காலில் இடறி மல்லாக்க சாய்ந்தான். பிருஷ்டம் நச்சென்று மண்ணில் மோதியது. வலித்தது,

இடறிய இடத்தில் குத்துக்கல் இருந்தது.

வெள்ளைக்காரன் நட்டுவச்ச கல்லா. எப்படி இது.... தனியா முளைச்சுக் கிடக்கு.... பாறாங்கல்லே கிடையாதே இங்க...

மர நிழல் இருட்டில் தொட்டுத் தடவ, கல் உயரமாய் மழுமழுப்பாய், தலைப்பக்கம் வழுக்கையாய் இருந்தது. லிங்கமா? 'என்னடா இது.... எதுனா கோயில் பூமியா.... இல்லை சுடுகாடா இது?'

கல் அசைக்க, பளிச்சென்று கையோடு வந்தது. அரையடி பூமி விட்டு நெகிழ்ந்தது. மறுபடி மல்லாக்க சரிந்தான். கல் நெஞ்சு மேலே இருந்தது. பளிச்சென்று மேகம் நிலவு மூடியது. நெஞ்சில் கல் வைத்த இடத்தில் உஷ்ணம் பரவியது. பரபரவென்று வெப்பம் ஏறியது. அடுப்பில் வைத்த தோசைக்கல் போல் வேகமாய் சூடாக்கியது.

வெறும் கல்லில் இத்தனை சூடா?

"ஐயா!" கண் மூடி கூவினான்.

கல் சட்டென்று சில்லிட்டது,

ணிக் ணிக் என்று ஒற்றைச் சதங்கைச் சத்தம் கேட்டது. கல்லெடுத்து மறுபடி குழியில் வைக்க, குழி கல்லை சரக்கென்று வாங்கிக் கொண்டது.

அவன் உடம்பு நடுங்க காலைப் பிடித்துக் கொண்டு உட்கார்ந்திருந்தான்

மெல்ல உடம்பில் ஒருவித உணர்ச்சி ஏறியது. கண் முன்னே பெரிய கோயில் நின்றது. கோயில் உள்ளே கல் மீது சேலை போர்த்தப்பட்டது. சேலை குறுக்கே சூலம் வைக்கப்பட்டது. சூலத்துக்கு மாலை போடப்பட்டது. ஒரு சிறிய கைக்குழந்தை துணிமீது கிடந்தது. உடம்பில் பொட்டுத் துணியில்லாமல் கைகால் உதைத்துக் கொண்டிருந்தது.

உள்ளே போய் குழந்தையைத் தூக்கினான் தூக்கியதும் உடம்பு நனைந்தது. விலகிப் பார்த்தான். பெண்குழந்தை.

"ஆத்தா... நீ யாருடி.... யார் குழந்தை?"

"உன் குழந்தை."

"உன் அம்மா யாரு தாயே?"

"நீதான் எங்கம்மா."

"நான் ஆம்பளை ஆத்தா!"

"ஆம்பளைதான் பொம்பளை..... பொம்பளை தான் ஆம்பளை."

"புரியலியே."

"புரியும்."

"உனக்கு என்ன செய்யணும் நான்?"

"உன்னோடயே வெச்சுக்க."

"புரியலை."

"நானில்லாம நீ உண்டா.... உனக்கு நான் எல்லாமுமா இருக்கறப்ப எனக்கு நீ எல்லாமுமா இருக்க வேணாமா?"

"ஆமா."

"இரு."

"எல்லாமுமாவா..... அப்படின்னா?"

"அப்பனா இரு.... புள்ளையா இரு.... புருஷனா இரு."

"நீ யாரு தாயே?"

"தெரியலை." காட்டியது, சிரித்தது. அவன் மயங்கினான். கண்கள் சொருகினான்.

"எங்கிருந்து வந்தனை
எங்கு வந்து தங்கினை

தங்கி நின்ற பின்பு
நீயும் என்னவாக மாறினை
நீயும் நானும் வேறெதோ
நானும் நீயும் உள்ளதோ
வந்ததும் விழுந்ததும்
விழுந்தபின்பு தந்ததும்
என்னைப்போல் இல்லையோ
உன்னில் நானும் வேறெதோ”

குழந்தை பாடியது. அவன் அழுதான்.

ஆமென்றான்.

பின்னே காலடி ஓசை கேட்டது. கிழவன் நின்றிருந்தான். ‘உனக்கு புரிஞ்சுதா அந்தப் பாட்டு’ கண்களால் கேள்வி கேட்டான்.

7

கலாவதி உள்ள நுழைந்தபோது அவள் அப்பா படுக்கையில் படுத்துக்கொண்டிருந்தார்.

ஐயோ என்கிற பயம் வந்தது. ஏதாவது நேர்ந்து விட்டதோ என்கிற கலக்கம் தாக்கிற்று. ஓடிப்போய் தொட்டாள். ‘அக்கா’ என்று வாசலைப் பார்த்து அழைத்தாள்.

திண்ணையைச் சுற்றி மூடியிருந்த துணியை விலக்குவதா வேண்டாமா என்று நின்றிருந்த மரகதம், அந்தக் குரல் அவசரம் கேட்டு உள்ளே ஓடினாள்.

“என்ன கலா?”

“அப்பா தூங்கறாரு.”

“அடக்கூத்தே.... ஏன்?”

"அப்பா..... அப்பா...." உலுக்கி எழுப்பினாள்.

"பைப்புக்காரர் தூக்கம் கலைந்து எழுந்தார்.

"ஏன் தூங்கிட்டீங்க?"

"ஏம்மா?"

"ஏம்மாவா.... பை ஏடுத்தாரேன்னு இங்க வந்து தூங்கிட்டிருக்கீங்க...."

"ஆமா.... ஏன் தூங்கிட்டேன், தெரியலையே..... ஏதோ வந்தேன்... படுக்கை பார்த்ததும் படுத்துட்டேன்."

"நல்லா இருக்குது கூத்து. ஒரு நிமிஷம் பயந்துட்டேன். ஏதோ என்னவோன்னு." மரகதம் குரல் கேட்டு கலாவதி அண்ணனும் அம்மாவும் எழுந்தார்கள்.

"எதுனா மயக்கமா இருக்கா?" அண்ணன் கேட்டான்,

"இல்லடா தூக்கம் தூக்கமா வருது."

"சரி. காலைல பார்த்துக்கலாம்...."

"பார்த்தசாரதி அங்க இருக்கே."

"சொல்லிட்டு வந்துடு...." அம்மா பதில் சொன்னாள்.

"அட, பார்த்தசாரதிய அங்கேயே விட்டுட்டு வந்துட்டேனில்ல.... எல்லாம் மறந்து போச்சு. என் பை எங்கடா, எடு. அந்தப் புள்ளை பாவம்.... தனியா அங்க கிடந்து மாடா வேலை செய்யுது. நான் தூங்கிட் டிருக்கேன் பாரு, பை எடுறா."

"முடியலேனா போவாதப்பா."

"முடியும். போலாம்."

"நான் வரட்டா கூட....

"காலைல கருக்கல்ல வேலைக்குப் போகணுமே..... நீ படு. நான் போறேன்."

முற்றத்திற்குப் போய் நீர் முகத்தில் அடித்து அலம்பிக் கொண்டார்.

"வயசாயிடுச்சுப்பா உனக்கு" படியிறங்கி நடமாடும்போது மரகதம் அவரைப் பிடித்துக் கொண்டாள்.

"ஆமா மரகதம்! இந்த வருஷம் ஏனோ ரொம்ப தள்ளாமை தெரியுது."

"புள்ளைதான் வேலை செய்யுதே! நீ இங்க வீட்டோட இரேன்."

"இப்ப மட்டும் நான் என்னத்த கிழிக்கிறேன். சும்மா மூலைக்கடைல போய் உட்கார்ந்துருக்கேன். ஒண்ணு ரெண்டு சுளுவான வேலை வந்தா செய்யறேன். போர் பைப்பு போடறவன் கூப்பிட்டா, கூடப் போய் இடம் பார்த்து தரேன். கடுமையா ஒண்ணும் வேலை செய்யறதில்லையே. செய்ய முடியறதும் இல்லை."

"போலாமா?"

மரகதம் கோணிப்பை வாங்கி இடுப்பில் வைத்துக் கொண்டாள்.

"கலா, ஒரு தவலை தண்ணி எடுத்தா."

கிணற்று ஜலம் பிடித்து வைத்திருந்த தவலையைத் தூக்கிக் கொண்டாள், மறுபடி ஊர் தொலைவு நோக்கி நடந்தார்கள்.

வீடுகள் இருளில் மூழ்கியிருந்தன. தெருமுனை குழல் விளக்கு மட்டும் பாதை காட்டிக் கொண்டிருந்தது.

"ஒருத்தனுக்காவது உதவற புத்தி இருக்கா பாரு.... எல்லாரும் தூங்கறானுங்க."

"எப்படி.... தூங்காத. அதது காலைல கிளம்பி ராவில அடையுதுங்க. ரெண்டாயிரம் மூவாயிரம்னு வாங்கிப் போட்ட நிலத்துல சும்மா செங்கல்லு எழுப்பி கூரை போட்டு, காசு கிடைச்சபோது ஓடு போட்டு.. ஜாஸ்தி கிடைச்சா தளம் போட்டு..... இங்க தளம் போட்ட வீடு நாலு இருக்குமா.... மிச்சமெல்லாம் ஓட்டு வீடுதானே. உட்கார்ந்து சாப்பிடறவங்க யாரு இங்க..."

"பொம்பளைங்களாவது வந்திருக்கலாம்."

"எப்படிப்பா..... அதது ரெண்டு மூணு பெத்து வச்சிருக்கு. விட்டுட்டு வர முடியுமா... எனக்கு படிப்பு இல்லை. பொழப்பு இல்லை, அலையறேன்."

"பத்து வருஷம் ஆச்சா.... உனக்குக் கல்யாணம் கட்டி...."

"இதோட எட்டாவது வருஷம்."

"எதுனா டாக்டர் கிட்ட போய் காட்டறதுதானே!"

"போனேன். சீட்டு எழுதிக் கொடுத்தாரு... நிறைய சோதனை பண்ணணுமாம். முந்நூறு ரூபா கேட்டாங்க. சரிதான் போன்னு வந்துட்டேன்."

"மத்தபடி எல்லாம் சரியாத்தானே இருக்கு, குடித்தனம்..." கிழவர் கேட்டார்.

"இருக்குது என்னவோ!"

கலாவதி அவள் அலுப்பை நிமிர்ந்து பார்த்தாள். அவள் கண்ணிலும் உதட்டிலும் துக்கம் ததும்பி வழிவது தெரிந்தது.

பைப்புக்காரருக்கு அதற்கு மேல் கேட்க முடியவில்லை. வயசுப் பொண்ணு கூட வரபோது இதுக்குமேல் பேசுவது சரியில்லை. கால் வீசிப் போட்டார். முன்னே நடந்தார்.

கலாவதி, மரகதம் அருகே நடந்தாள். சற்றுநேரம் நடை சத்தம் கேட்டதில் போயிற்று.

"நீ சந்தோஷமா இல்லையக்கா!"

மரகதம் திரும்பினாள். சிரித்தாள்.

"ஏன் கேட்கறே?" கேட்டு என்ன செய்யப் போகிறாய் என்கிற த்வனி உள்ளே மறைந்திருந்தது.

"சொல்லேன்."

"எந்த பொம்பளை சந்தோஷமா இருக்கா சொல்லு. எல்லாத்துக்கும் எதுனா குறை. கிடைச்ச வரைக்கும் திருப்திபட்டுக்க வேண்யதுதான்."

"வந்து எங்க பெரியவரைக் கேளேன். எதுனா செய்யும்."

"போடி.... நான் சுத்தாத கோயிலில்லை. வேண்டாத சாமியில்லை. வூட்ல அதுக்குத் தோணுனுமில்ல. ஐயோ... நமக்குப் புள்ளை வேணும்னு. நாம மட்டும் அலைஞ்சு என்னா புண்ணியம்?"

"உன் பேரு சொல்லி நான் கேட்கட்டா?"

"என்ன கேட்பே?"

"மரகதம் அக்காளுக்கு எப்ப குழந்தை பிறக்கும்னு கேட்கட்டா?"

"சொல்லுமா?"

"எதுனா சொல்லும்."

"வந்து சொல்லு."

"உனக்கு நம்பிக்கை இல்லையா அவர் மேல..."

"எனக்குத் தெரியலை மனுஷ உடம்பு எடுத்துட்டம். என்ன கிடைக்கணும்னு இருக்கோ அது

தான் கிடைக்கும். இருக்கற முட்டும் எல்லாருக்கும் உபகாரமாக இருந்துட்டுப் போயிடணும்."

"ஏங்க்கா இப்படி அலுத்துப்போய் பேசற."

"எனக்குக் கல்யாணம் காட்சியே பிடிக்கலை கலாவதி. ஒருத்தனுக்குன்னு வாக்கப்பட்டு அல்லாடறது புடிக்கலை."

"வேற...?"

"எல்லாருக்கும் பொதுவா இருந்துட்டுப் போயிடணும்."

"அசிங்கமில்லை....?"

"உபயோகம்தானே.... காசுக்கு இல்லை. வீடு நிலம், நீச்சுக்கு இல்லை.... உடம்பு விக்கறதுதான் அசிங்கம். உடம்புல தெம்பு இருக்கறவரைக்கும் உதவி செய்யணும். உடம்புல தெம்பு குறைஞ்சுதா அப்ப வேற எதுனா உதவி செய்யணும். மாட்டுக்கு தீனி வைக்கிறது. நாலு பேர் கூடிப் பேசறதுக்கு இடம் கொடுக்கற..... ஊருக்கு மண் தூக்கறது.... எவளோ பெத்துப் போட்ட குழந்தைக்கு சோறு ஊட்டறது, சாவு வீட்ல போய் அழுது ஆர்ப்பாட்டம் பண்ணாத, கூடமாட உதவி செய்யறது, எதுனா செய்துகிட்டே இருக்கணும்."

"எப்படி இது முடியும்?"

"ஏண்டி இப்படிச் செய்யறேன்னு யாரும் கேட்கக் கூடாது. அல்லது எனக்கு மட்டும் செய்யுன்னு எவனும் அதிகாரம் செய்யக் கூடாது."

"ஐயோ.... தப்பா பேசுவாங்களே"

"பேசிட்டுப் போவட்டும்."

"அக்கா."

"என்னா?"

"ஒண்ணு கேட்கட்டுமா?"

"கேளு..."

"உனக்கும் பால்காரருக்கும் தொடர்பா?"

"கால் மண்ணில் தேயும் சப்தம் மட்டும் சிறிது நேரம் கேட்டது.

"ஆமா..."

"நெனைச்சேன்."

"ஆனா, அது ஒட்டாது, எனக்கும் அது ஒட்டலைன்னு வருத்தம் இல்லை. ஆனா..."

"சொல்லுக்கா?"

"அது ரொம்ப நல்ல மனுஷன். ரொம்ப நல்லது.... சொல்ல முடியாத நல்லது. வந்து படுத்துட்டாளேன்னு ஒரு இளக்காரம். கேலி, அதட்டல் எதுவும் செய்யாது. மிரட்டாது."

"உங்க வீட்டு ஆளு..."

"அது பல்லி.... தின்றதுக்குத்தான் ஓடும்.... மத்தபடி அசையாத கிடக்கும்."

"புரியலையே."

"அது சுகம்தான். அடுத்தவ பத்தி யோசனையே கிடையாது."

"புரியலையே?"

"சுவத்துல பல்லி பார்த்திருக்கியா. ரொம்ப நேரம் அப்படியே நிற்கும். வாலு கூட ஆட்டாது. அதுக்கு சந்தோஷமே இல்லேன்ற மாதிரி நிக்கும். சுவர்ல பூச்சிப் புழுவு கூட அலையும். இது ஓடாது. எங்காளு அதமாதிரி

சோறு தின்னுட்டு திண்ணைல உட்கார்ந்துடும். பேசாது. தெருவுல யாரு போனாலும், யார் வந்தாலும், மூஞ்சில சிரிப்புக்கூட வராது. மணி எட்டாச்சே.... சாப்பிடறியான்னு கேட்டா நகர்ந்து தட்டு முன்னாடி உட்கார்ந்திடும்."

"உனக்கு பேசணுமா?"

"பேசணும், பழகணும், நல்லது கெட்டது தெரிஞ்சிக்கணும். மனுஷாளோட மனுஷாள் கலந்து காணாத போயிடணும். நான் தூக்கத்துல யார்கிட்டயாவது பேசிக்கிட்டிருப்பேன்."

"பால்காரரு பேசுவாரா?"

"நான் பழகினதே பேசறதுலதான். இது என்ன வைக்கோலுன்னு ஒரு கேள்வி கேளு. ஊர்ப்பட்ட பயிர் பத்தி தானா சொல்லும். ஒரு பசு வாங்கிப் போட லாமான்னு கேளு... நாலு பசு வூட்டுக்குக் கூட்டிக் கிட்டு வரும். நானும் தொணதொணன்னு ஏதாவது கேள்வி கேட்டுக்கிட்டே இருப்பேன். உன்னைப் பத்திக்கூட பேசினோம்."

"என்னைப் பத்தியா.. என்ன பேசினீங்க?"

"அது வேணாம்."

"சொல்லேன்."

"உங்க வூட்டு கிழவரு பத்தி பேச்சு வந்தது. அப்ப சொன்னேன்.... அந்தப் பைப்புக்கார வூட்டுப் பொண்ணு கலாவதி பசுன்னு...."

"பசுன்னு?"

"எப்பவும் ஒரு மிரட்சி உங்கிட்ட இருக்கும். ஒரு துடிப்பு இருக்கும். நேர் பார்வையா இருக்க மாட்ட.... துளாவிகிட்ட இருப்ப கண்ணால."

"ஆமாக்கா."

"கலாவதி.... நாம பேசினத யார்கிட்டயும் சொல்லிடாதே..."

"இல்லக்கா, உன்னைப் பார்த்தா அதிசயமா இருக்கு எனக்கு. பால்காரர் மேலயும் ஒரு அதிசயம். அந்த ஆளும் ஊருக்கு உழைக்கற ஆள் இல்லை...."

"இந்த பள்ளம் யாரு வெட்ட முடியும், இது வலுவா..... அதும் மனசு"

"ஆனா, பால்காரர் என்னாண்ட பேசறதில்லையே ஏன்?"

"வெட்கமோ என்னவோ?"

"ஏன் வெட்கம்?"

"பெரியதனக்கார வூட்டுப் பொண்ணு.... வயசுப் பொண்ணு.... அதனால இருக்கும்."

"பால்காரர் ஏன் கல்யாணம் கட்டல?"

"அதுக்கு அமையல. ஒரு தடவை பொண்ணு பார்க்க போச்சாம். சீரு பேசி முடிக்க நேரமாயிட்டாப் போல... எனக்கு நேரமாயிடுச்சு. மாடு தண்ணிக்கு நிக்கும்னு வந்துட்டாராம். அதுவே கேலியாகி, அவன் மாட்டைத்தான் கவனிப்பான், அவனைக் கட்டிக்க மாட்டேனுடுச்சாம் பொண்ணு. அந்த ஆளும் வுட்டுடுச்சு."

"நீ சொல்றதுதான...."

"யார் கட்டுவா அந்த ஆளை...."

"அந்தாளுக்குன்னு எவளாவது இருப்பாள்ல...?"

"நீ கட்டிக்கிறியா சொல்லு? இப்பவே பேசறேன் அதுகிட்ட."

சட்டென்று கலாவதி முகம் மாறியது. ஒரு கண நேரம் ஆவல்ல தோன்றி கலைந்தது.

"என்ன கலாவதி?"

"வேணாங்க்கா."

"ஏன்?"

"நாங்க முதலியார். அவரு யாதவர். முதலியாரு... யாதவரு."

"ஆமா... அந்த ஆள் ஆம்பளை. நீ பொம்பளை .போறாதா?"

"வேணாங்க்கா."

"அதான் ஏன்னு கேட்கறேன்?"

"மனசு அலைய வுட்டுட்டு அப்புறம் முடிய லேன்னா வேற ஒருத்தனுக்கு தலை குனிஞ்சு நின்னு என்ன செஞ்சாலும் ஒத்துக்கிட்டு.... மனசுல இடங் கொடுக்காத இந்தாளை மனசுல வச்சிக்கிட்டு. உடம்பு ஏக்கத்தோட.... வேதனை இது."

"கலா..... உனக்குப் பால்காரனைப் புடிச்சிருக்கா?"

"தெரியலையே."

"மனசுல இருக்கற பளிச்சுன்னு சொல்லேன்."

"எனக்கும் எதுனா ஊர் உலகத்துக்கு செய்யணும் போல இருக்கு. என்னால செய்ய முடியாட்டியும் வீட்டுக்காரனுக்கும் உதவியா... உபகாரமா இருக்கணும். எங்க ஆளு நல்லவன்.... நாலு பேருக்கு உதவி செய்யறவன்னு.... இது எப்படி என் மனசில வந்துச்சுன்னு தெரியலை. கேட்கணும்..."

"யாரை?"

"எங்க வீட்டுப் பெரியவரை."

"அந்தாளப் பத்தி பெரிசாத்தான் சொல்றீங்க. எனக்கு ஒண்ணும் புரியல."

"ஏய்..." இருளில் குரல் கேட்டது.

"அப்பா கூப்பிடறாங்க. சீக்கிரம் வாக்கா." சரிவு ஏறினார்கள். பைப்புக்காரர் ரோடில் நின்றிருந்தார். ஒரு லாரி வெளிச்சம் வீசிப்போயிற்று. பார்த்தசாரதியைக் காணோம்.

"டீ சாப்பிட போயிருக்கா."

"இங்க கிடையாது. இரண்டு பர்லாங் போகணும்."

"அப்பா. அங்க தூங்கற மாதிரி இருக்கு."

"தூக்கமா?"

வன்னிமரத்தடியில் அவன் ஒருக்களித்துக் கிடந்தான். அவன் கைகள் ஒரு கல்லை இறுகப் பிடித்திருந்தன.

"ஐயோ.... புள்ளை ஒரு மாதிரி கிடக்கே. இங்கே வா மரகதம்!" பைப்புக்காரர் பார்த்தசாரதியைப் புரட்டிப் போட்டார்.

"எதுனா மயக்கமா..." மரகதம் கேட்டாள்.

"தவலைத் தண்ணி ஊத்தும்மா."

நின்றபடி இடுப்பில் தூக்கிய தவலையைச் சுற்று அவன் முகத்துக்கு நேரே கை வைத்துச் சரித்தாள்.

அந்தத் தவலை நீர் அந்த நீளக்கல்லில் முதலில் பட்டது. சிதறி அவன் முகத்தில் தெறித்தது. அவன் முகம் சுருக்கி தெளிந்தான். கையூன்றி எழுந்தான்.

"எங்க அவரு?"

'யாரு பார்த்தசாரதி?"

"பெரியவரு."

"எந்தப் பெரியவரு?"

"இங்க நின்னுக்கிட்டிருந்தாரே?"

"கனா கண்டியா.... பாவம் அசதில தூங்கிட்ட."

"இல்லீங்க..."

உள்மனசுள் அந்தப் பெரிய குழந்தை வாய் வைத்துப் பேசாதே என்றது.

அவன் பேசாது எழுந்து நின்றான்.

கலாவதி அந்தக் கல்லையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

8

"ஒரு ஆளு செய்யற வேலையா இது.... சும்மா ஒரு வீம்புக்கு நான் செய்யறேன், நானே செய்யறேன்னு கடப்பாரை புடிச்சா... இப்படித்தான் பேய் பிசாசு அடிச்சாப்பல சாச்சுடும். அப்பா, மரத்தடி விட்டு எழுந்துரு. இங்க முள்ளுச் செடியா இருக்குது. பூச்சு பொட்டு கடிக்கப் போவுது..."

அவன் எழுந்து நின்றான். கல்லில் பட்ட நீர் முகத்தில் பட்டு சுயத்திற்கு கொண்டு வந்தது.... அவள் இடுப்புத் தவலையுடன் கல்லை வெறிப்பது பார்த்தான்.

"ஒரு கை தண்ணி சரி புள்ளே..."

அவள் நகர்ந்து அவனுக்கு சிறிது தண்ணீர் சரித்தாள். அவள் உள்ளங்கை வழியே நீர் வழிந்து அவன் கைகளில் விழுந்து தரையை நனைத்தது. முகத்தில் சுள் சுள்ளென்று நீரால் அடித்துக் கொண்டான். பார்த்த சாரதி கை குவித்து குடித்தான். திரும்பிக் கல்லைப்

பார்த்தான். அந்தப் பெண்ணைவிட்டு இரண்டடி நகர்ந்து போய் முகம் திருப்ப, அவளும் கல்லையே பார்த்துக் கொண்டிருப்பது தெரிந்தது. சோடியம் விளக்கில் அவள் உதடுகள் துடித்துக் கொண்டிருந்தன. அவளுக்கும் கல் முகம் காட்டுகிறதோ.... விஷயம் பேசுகிறதோ. பேசட்டும். ஏதோ ஒரு விஷயம் இந்த இடத்தில் நிகழப் போகிறது. யாரோ வந்து, கொலு இருக்கப் போகிறார்கள். கடவுள் அம்சமாய் வந்து அரசு நடத்தப் போகிறார்கள்.

கிழவன் நின்று பார்த்ததேயில்லை. எப்படி அருகே வந்து நின்றது? பேசிக் கேட்டதேயில்லை. ஏன் புரிகிறதா என்று கேட்டது. என்னவோ நடக்கப் போகிறது. நடக்கட்டும்.

முகத்தில் தண்ணீர் பட்டு, தண்ணீர் பட்ட இடத்தில் காற்று பட்டதும் உடம்பு, மனசு எல்லாம் விழித்துக் கொண்டது.

தோண்டிய இடத்தில் இறங்கி முதல் பைப்பை மரகதம் எடுத்துக் கொடுக்க, எண்ணெய்க் குழாய்க்குள் செலுத்தினான். அடுத்த குழாய் இறக்கினான். அவன் நகர. பள்ளத்தில் இறங்கி இரண்டையும் இணைத்து கலாவதியின் தகப்பன் கப்ளிங் போட்டார். கப்ளிங் போட்ட இடத்தில் மெழுகு வைத்து அடைந்தார். மேலே ட்யூப் ரப்பர் சுற்றி காக்கி காகிதப் பையிலிருந்த சிமெண்ட் எடுத்து தண்ணீர் விட்டுப் பிசைந்து அழுத்தினார். மேல்துண்டு கிழித்து சிமெண்ட் கலவை ஊற்றினார். உள்ளே மெல்ல தள்ளினார். அடுத்த பைப் கப்ளிங் அதே விதமாகப் போடப்பட்டது. ஆறாவது பைப் கப்ளிங் போட, அவருக்கு வியர்த்தது. மூச்சு வாங்கியது. "நான் போடறேங்க." பார்த்தசாரதி அவரைப் பின்னுக்கு இழுக்க 'வேண்டாம்' என்று

கையசைத்தார். சிறிது நேரம் மௌனமாய் உட்கார்ந் தார்கள். காற்று சில்லென்று வீசத் துவங்கியது.

"இரண்டு ஆயிட்டிருக்குமா மணி...." பைப்புக்காரர் கேட்டார்.

"லாரி வண்டிங்க நின்னுபோச்சே.... ஆயிட் டிருக்கும்." நகரத்து வெளிச்சம் வானத்தில் பட்டு மறுபடி நகரத்தின் மீதே சிதறிக் கொண்டிருந்தது. மேகங்கள்.... லேசான மஞ்சள் நிறத்தில் மிதந்தன.

"இன்னொரு ஆறு போடணுமா?"

"ஆமா.... அப்பதான் மெயின் பைப்புக்குப் போகும்."

"மொள்ள போட்டுருப்பா.... விடியறபோது தப தபன்னு தண்ணி கொட்டினா நல்லா இருக்குமில்ல?"

"போட்டுரலாம்.... பைப்பு இறக்கு."

அடுத்த பைப் இறக்கினார்கள். ஸ்பானரால் கப்ளிங் பொருத்தினார். சிமெண்ட் பூசி உள்ளே தள்ளினார். "போய் பாரு குழாயாண்ட."

மரகதம் ஓடிப்போய் பார்த்தாள். குழாய் இரண்டடி வெளியே நீட்டிக் கொண்டிருந்தது.

"வந்துடுச்சுப்பா... வந்துடுச்சுப்பா" என்று கூவினாள்.

"நல்லது.... இப்ப நோண்டினது எப்படியும் போட்டுரலாம். கொண்டா.... கொண்டா...." கீழே ஒரு பைப் போட மேலே மண்குவியலில் நின்று கலா வதியைப் பைப் பிடித்துக் கொள்ளச் சொல்லி... கப்ளிங்கால் பார்த்தசாரதி ஸ்பானர் வாங்கி இணைத் தான். அப்படியே குவியலில் நடந்து மறுமுனையில் உட்கார்ந்து மறுபடி கலாவதி பிடித்துக் கொள்ள இன்னொரு கப்ளிங் போட்டான்.

"அப்பா. இவரு ஜாயிண்ட் போடறாரு. நீ அப்படியே ரப்பர் கட்டி சிமெண்ட் பூசிடு.... போறும்." கிழவர்மேலே நின்று இணைப்பு சரிபார்த்து ரப்பர் சுற்றி கட்டினார்... சிமெண்ட் கலவை வைத்து துணியால் கட்டினார். "துண்டு தீர்ந்து போச்சு. பனியன் கிழிச்சுரட்டா?"

"இரு, புடவை கிழிச்சுத் தரேன் இது கட்டு..." கலாவதி புடவை தலைப்பு கிழித்து நீட்ட, அடுத்த கப்ளிங்குக்குப் புடவை சுற்றினார். ரோடின் எதிர்முனை வரை பைப் இணைக்கப்பட்டது. அப்படியே குழியில் இறக்கப்பட்டது. எண்ணெய்க்குழாய் துருத்திக்கொண்ட இடத்துக்கும், குழியில் தள்ளின பைப்புக்கும் கப்ளிங் போடப்பட்டது.

மெயினிலிருந்து ஒரு கொக்குக் கழுத்தாய் ஒரு நிப்பிள் நிற்க, அதன் முனையில் இருந்த அடைப்பை மெல்ல ஸ்பானர் போட்டு திருகினார். திருகு தளர்ந்தது. "தண்ணீர் பீச்சி அடிக்கும். தள்ளிப் போங்க.... பார்த்தசாரதி, நான் சொன்னதும் டக்குன்னு குழாய் ஓரடி முன்னால தள்ளிவுடு. உறுதியா பிடிச்சுக்க. மூஞ்சில தண்ணி அடிக்கும். பதறாத புடி. பரபரனு ஜாயிண்ட் போட்டுர்றேன்." திருகு திறந்தது. பளீரென்று மெயின் பைப்பில் ஓடும் நீர் கொக்கி வளைவிலேயே பீச்சி அடித்தது. எல்லோர் மீதும் தெறித்தது.

"நவுத்து." கிழவர் கத்தினார்.

ஓரடி முன்னே நகர்த்தி பிடித்துக் கொண்டதும் அங்கே கப்ளிங் பொருத்தி குழாய் இணைப்பு போடப்பட்டது. ரப்பர் அகற்றப்பட்டது. கயிறு போட்டு இறுக்கிக் கட்டி சிமெண்ட் உப்பி ஈரம் கசிந்தது. "துணி கொடு..." சட்டென்று தலைத்துணி அவிழ்த்து பார்த்தசாரதி நீட்டினான். அப்படியே அதைக் கிழவர்

சுற்றிக் கட்டினார். குழாய்க்கு கீழே கல் வைத்து அசையாது நிறுத்தினான்.

"அந்தப் பக்கம் தண்ணி வருமா?"

"வராது."

"ஏன்?'

"கடைசி குழாய்ல லாக் போட்டு மூடியிருக்கேன். அங்க தண்ணி கசியுதா பார்."

மரகதம் ஓடினாள். கலாவதி பின்தொடர்ந்தாள். "தண்ணி லேசா வருதுங்க."

"அப்ப சரி."

"மண்ணு போட்டு மூடிடலாமா?"

"வேணாம். இன்ஜினீயர் காலைல வந்து பார்க்கட்டும்."

"தண்ணி கொட்டறது பார்க்கணுமே."

"காலைல பார்க்கலாம்."

"இத்தினி கஷ்டப்பட்டுட்டு இப்ப பார்த்தாதான் நிம்மதி பைப்புக்காரரே....." மரகதம் கெஞ்சினாள்.

ஸ்பானர் எடுத்து ரோட்டின் குறுக்கே நடக்க மூவரும் பின்தொடர்ந்தார்கள். கடைசி பைப் மூடியில் ஸ்பானர் வைத்துத் திருகி திறக்க, பளீரென்று தண்ணீர் பீச்சியடித்தது. ஆறடி தூரம் போய் விழுந்தது. தரை நனைந்தது.

"ஐயோ...." பெண்கள் கூவினார்கள்

பார்த்தசாரதி தலைக்கு மேல் கை குவித்தான்.

கிழவர் வாய்விட்டுச் சிரித்தார்.

தண்ணீர் போல சந்தோஷமும் அங்கே சிதறியது. நாலு பேர் மனசும் மகிழ்ச்சியில் நனைந்தன.

"தண்ணி வந்துடுச்சு பால்காரரே."

மரகதம் சட்டென்று கை பிடித்துக் கொண்டாள்

"ஆமாம் மரகதம்! இனிமே தண்ணிக்காக ரோடு தாண்ட வேணாம். கிணறு இழுக்க வேணாம். புழலேரி தண்ணி கொட்டும்."

'யப்பா.... என்ன ருசி..." கலாவதி ஒரு கை வாங்கிக் குடித்தாள். இன்னொரு கை எடுத்து பார்த்தசாரதி மீது வீசினாள். பார்த்தசாரதி குனிந்து கொண்டான்.

"இந்த ஆளுதான் காரணம், ஊருக்குத் தண்ணி வந்ததுக்கு." மறுபடி தண்ணீர் வீசினாள்.

"நான் இல்லம்மா... அந்தக் கிழவரு.... உங்க வூட்டுக் கிழவரு.... அவரு கட்டளை இது. அது பெரும் பிறப்பு தாயி..."

'சில பேர் திட்டறாங்களே."

"தெரியாதவங்க திட்டுவாங்க."

"பைப்புக்கார ஐயா அது பத்திப் பேசறதே யில்லையே!" மரகதம் கேள்வியாய்ப் பேசினாள்.

"பேசி என்ன மரகதம்? அது பத்திப் பேசினா பலது சொல்லணும். யாரும் நம்பமாட்டாங்க."

"தண்ணி அடைச்சிருங்க பைப்புக்காரரே. பூமி நனையுதே."

மெல்ல திருகி ஸ்பானர் போட்டு அழுத்தி இறுக்கினார். தண்ணீர் நின்று சொட்டுச் சொட்டாய் தரை நனைத்தது.

"கலாவதி, போய் சாமான்களை அடுக்கி எடுத்தா, போகலாம்." கலாவதி ரோடுக்கு நடுவே இருந்த பையில் கருவிகளை அடுக்கி கயிறு போட்டுக் கட்டினாள்.

"என்ன அது. நம்ப முடியாதுன்னியே... என்னா அது?"

"அது எங்க ஆத்தா கதை."

"சொல்லேன்?"

"நாங்க ரெண்டு பேர் பொறந்ததும் எங்க ஐயா தீட்சை வாங்கிட்டாரு திருவண்ணாமலை. ஒங்கம்மா விவரம் புரியாத அழுதது. அவரு வீட்டை விட்டுப் போகக் கூடாதுன்னு சண்டை போட்டது. அதையும் கூட்டிக்கிட்டு திருவண்ணாமலைக்குப் போய் அதுக்கும் தீட்சை வாங்கிக் கொடுத்தாரு. புருஷன் பொஞ்சாதியா ஊருக்கு இருந்தாலும் ரெண்டு பேரும் ஒண்ணா படுக்காத ஒரே வீட்ல இருந்தாங்க. எங்க ஐயா தீட்சை மட்டும் போறலை. வேற ஏதாவது செய்யணும்னு சக்கரம் வச்சு பூஜை பண்ணாரு. செடி கொடிக்கு கல்யாணம் பண்ணாரு."

"செடி கொடிக்குக் கல்யாணமா?"

"ஆமா மரகதம். அது ஒரு ரசமான விஷயம். அசையாத தாவரம். வாயில்லாத ஜீவன்.... அது கிட்டக்க அதுக்கு இதமா ஒரு தாவரம் கொண்டாந்து வைக்கறது பெரும் புண்ணியம். அதுவும் போறலை..... எங்கம்மாவை உட்கார வச்சு தினம் பூஜை பண்ணாரு."

"பொண்டாட்டியவா?"

"ஆமா... அபிஷேகம், நைவேத்தியம், உபசாரம் எல்லாம் நடக்கும். தினம் பூஜை..."

"உங்க முன்னாடியா?"

"இல்ல. நாங்க தூங்கினபொறவு.... நடு நிசில."

"யாரும் பார்க்கலையா?"

"இல்லை.... அவரு பாத்துட்டாரு."

"யாரு... திண்ணைக் கிழவரா?"

"ஆமா."

"அப்பால."

"சாமிக்குப் பதிலா தன் பொண்டாட்டிய பூஜை பண்றதா?"

"ஆமா... விழுந்து கும்புடறதுகூட உண்டு. கால்ல பூப்போட்டு, போட்ட பூவ தலைல வச்சுக்குவாங்க அப்பா."

"கடவுளே."

"பொண்டாட்டி கடவுள் மரகதம், உலகத்துல எல்லா உயிரும் கடவுள்"

"நான் கடவுளா?"

"ஆமா..."

"இல்லை பைப்புக்காரரே!"

"ஏன் தாயி.... இந்த ராத்திரில ஊருக்காக இத்தினி மண்ணடிச்சு..."

"அதெல்லாம் ஒரு கூலிக்காகங்க."

"கூலிக்காக இந்த நேரத்துல கஷ்டப்படணுமா? மத்தவங்க மாதிரி போயிட்டு நாளைக்கு வந்துருக்க லாமே..."

"இது இத்தினி அவஸ்தைப்படுதுன்னு ஓடி வந்தேன். ஊருக்கு என்னால உபயோகம் என்ன..."

"அவ்வளவுதான் விஷயம். புருஷனுக்கு சோறாக்கி ஒரு புடி காக்காய்க்கு போடலையா... நாய்க்குப் போடலையா.... ஊருக்குத் தண்ணி வர நீயும் காரணம்தான்."

'என் புத்தி கெட்டதுல நிக்குதே."

"பசிய யார் பொறுத்துக்க முடியும்? மனுஷனா பொறந்துட்டு..."

"முடியலை, அதான்..."

"அப்படியா... பசிக்கு எத்தினி தின்ன முடியும்."

"அதுவும் முடியாதுதான்."

"ஆனா, சாப்பிட்ட சுகத்துல ஓடி வந்துட்டல்ல."

"உண்மைதான் பைப்புக்காரரே."

"தின்னது செரிச்சுடலை? தின்னதே ஊருக்கு உழைக்கணுன்னு தோணலை?"

"ஆமா...."

"முடிஞ்சு போச்சே."

"சந்தோஷப்பட்டா ஊர் சந்தோஷப்படும்.... இதுல தப்பு, சரி ஏது மரகதம்?"

"புரியுது ஐயா."

"கோவப்படாத இரு. எது மேலயும் கோவப் படாத.... தப்பு ஜெயிக்கவே ஜெயிக்காது. சந்தோஷமே படாது. இது சத்தியம்."

"ஊர் உலகத்துல அட்டூழியம் பண்றவன் ஜெயிக்கலையே."

"உனக்குத் தோணுது அப்படி. போய்ட்டு உட்கார்ந்து பார். அவன் நாய் படாத பாடு படறது தெரியும் சருகு நகர்ந்தாலும் பயந்து சாவறத பக்கத்துல உட்கார்ந்து பார். அட்டூழியம் பண்ணோமேன்னு அப்ப உறுத்தும். சொல்ல நோவு தரும்."

"நல்லவனுக்கு நோவு வருதே."

"செய்திருப்பான். எங்கனா எப்பவாவது எதை யாவது மிதிச்சிருப்பான்."

'எனக்கொண்ணும் புரியலை பெரியவரே." பார்த்தசாரதி கவலையுடன் பேசினான்

"புரியும் தம்பி. ஊருக்குள்ள நாலு பேர் கஷ்டப் பட்டு தண்ணி கொண்டாந்தா அது தரைல சிதற அடிச்ச போது ஒரு சந்தோஷம் வந்துச்சே... அதை ஞாபகம் வச்சுக்க... எப்பவும் அதையே மனசுல வை. புரியும்."

'அப்பா.... போலாமா?'

"மூட்டையை என்னாண்ட கொடும்மா..." கலாவதியிடம் பார்த்தசாரதி கை நீட்டினான்.

"வாணாம்!" என்று அவள் விலகிப் போனாள்.

கடப்பாரைகளை, மண்வெட்டிகளை ஆளுக் கொன்றாய் எடுத்துக்கொள்ள, அந்தக் கூட்டம் ஊருக்குள் நுழைந்தது.

திண்ணையில் புரண்டு கொண்டிருந்த ஒரு பெண் விலுக்கென்று எழுந்தாள்.

"குழா போட்டாச்சா?"

"போட்டாச்சு!" மரகதம் கைவீசி நடந்தாள்.

இரண்டு மூன்று பேர் எழுந்தார்கள். அவர்களுக்கு நடந்தது புரியவில்லை. அந்த நாலு பேரும் பதில் சரியாய் சொல்லாது தெருவோடு போக, திண்ணையில் இருப்பவர்களுக்கு ஒரு எரிச்சல் வந்தது.

சதம் முடித்துவிட்டு திரும்புகிற கிரிக்கெட் வீரன், நூறு பேருக்கு சமைத்துவிட்டு நெஞ்சில உடுப்பு உஷ்ணத்தோடு மீள்கிற சமையற்காரன், காதலி யோடு சல்லாபித்து விட்டுவரும் இளைஞன், ஆழ்ந்த தியானத்தில் இருந்துவிட்டு உலக வெம்மைக்கு மீளும் சாது, இவர்கள் யாரும் வேறு எவர் குரலுக்கும் செவி சாய்க்க மாட்டார்கள். வழியில் மடக்கிக் குசலம்

கேட்டாலும் விநோதமாய் பேசுவார்கள். அல்லது பேசாது போவார்கள்.

அவர்கள் நிகழ்காலத்தில் இல்லை. செய்து முடித்த வினையின் தாக்கத்தில் இருக்கிறார்கள். கடந்த கால வேகத்தில் நடப்பு காலத்தை இழந்தார்கள். இது தனிப் பட்ட குறைவில்லை. மனித இயல்பு. தான் மூழ்கிக்கிடந்த செயலில் தாக்கம் குறையாது கிடக்கும் நிலை.

9

ஆனால், ஜனக்கூட்டத்துக்கு சதம் போட்டவனை உடனே சந்தித்து கை குலுக்க வேண்டும்; ஆட்டம் பற்றிப் பேச வேண்டும். 'நாமா சதம் போட்டோம்' என்ற பிரமிப்பில் இருக்கிறவனுக்கு மேலே பாய்கிறவர்களை விட்டு விலகத் தோன்றும். "ரொம்ப நல்லா இருந்தது சமையல்.... ஆனா பாவம், ரொம்ப சிரமப்பட்டுட்டு டீங்க." சமையல்காரனுக்குக் கூலி கொடுக்குமுன் பேசி னால் பதில் சொல்லாது புகையிலை அடக்கிக்கொள் வான். 'பார்த்தியாடா அவளை.... என்னா சொன்னா..' விசாரிக்க, நெடுமூச்சு பிரியும். கண்கள் கனவில் சொருகி காதலி மீதே மனசு நிற்கும். மனசு முழுக்க நீலம் பரவி உச்சிமண்டையில் சுடர் நின்று உன்மத்தம் ஆனவ னுக்குக் கேள்வியே காதில் விழாது. செவி உள்ளே திரும்பி செவிக்குள் உள்ள குழல் ஒலியோடு லயித் திருக்கும் மனசு மீண்டிருக்காது, "எங்க போயிருந்தீங்க என்ன கேட்டே? என்ன கேட்டேனா.... செவிடா நீ. நான் செவிடில்லை. உன் கேள்வி சரியில்லை. இதுக்கு எந்த பதிலும் இல்லை, போ அப்பால்,"

திமிர் என்பார்கள்.

இது திமிர் இல்லை. ஸ்நேகம் அழிக்கும் விஷயம் இல்லை. துளிகூட கர்வம் இல்லை. இது யோக நிலை.

வினை முடித்த இனிமை, தன்னுள் தான் பரவசப்பட்ட சுகம்.

அரைகுறைதான் கூவும், யார் உதவியாலோ ஜெயித்த ஆள்தான் 'கிரீடம் இல்லையா, மாலை கொண்டாய்யா' என்று அதட்டும். பாராட்ட, தானே கூட்டம் ஏற்பாடு செய்து தனக்கு இப்படி ஒரு பட்டம் கொடு என்று பணிந்து 'வேண்டாம் வேண்டாம்னேன்.... கேட்கலை... அன்பர்கள் விரும்பினார்கள்' என்று பொய் சொல்லும். 'நான் ஜெயித்தேன். நான் ஜெயித்தேன்' என்று அலறும். தேர்விட்டு முதலில் கீழிறங்கி 'என் எதிரே கை கட்டி நில்லு' என்று கட்டளை போடும். அர்ஜுனன் செய்த அசட்டுத்தனம் செய்யும்.

இழுத்து அர்ஜுனனை இறக்கிவிட்டு கிருஷ்ணன் இறங்கிய பிறகு தேர் எரிந்து சாம்பலாயிற்று.

தான் ஜெயிக்கவில்லை என்று அர்ஜுனன் அசடனுக்குப் புரிந்தது. தான் மட்டும் காரணமில்லை என்று புரிந்தது. தானே நின்று வினை முடித்தவன் கூவுவதில்லை. தனக்கு மட்டும் இல்லை. இது ஊருக்கு உண்டான உபகாரம் என்று தெரிந்தவன் கர்வம் காட்டுவதல்லை. சமைத்ததும், சதம் போட்டதும், நேசித்ததும், நெஞ்சுள் மூழ்குவதும் தனக்காக மட்டு மில்லை எல்லாருக்காகவும் என்பது தெரியவர, அதிரடித்தனம் வருவதில்லை. ஆனால், இது எல்லோ ருக்கும் புரிவதில்லை. எதிர்ப்பட்டவனுக்கு வினை முடித்தவன் பேரமைதி தெரிவதில்லை.

வினை முடித்தவன், வெற்றி பெற்றவன், என்று பிறர் பார்க்கும்போது தன்னால் முடியவில்லையே, தான் இதைச் செய்யவில்லையே என்கிற ஒப்பிட்டு எரிச்சல் முதலில் வரும். 'என்னத்தைக் கிழிச்சுட்டான்' என்கிற இளக்காரம் அடுத்து வரும். அவனா முடிச்சான்

எல்லாம் ஒரு லக், நேரம். பிட்ச் ஈரமாயிடுச்சு. பந்து எழும்பலை, அடிச்சு ரன் ரொப்பிட்டான் போன மேட்சுல டக்கு. பத்து பேருக்குப் பண்றதுதான் நூறு பேருக்கும், என்ன பெரிய வேலை... ஊர்ல இவனைவிட பெரிய சமையக்காரன் இல்லியா என்ன.... இவருக்கு லல்வுன்னா எனக்கு என்னாப்பா. அது கேஸு. யார் கூப்புட்டாலும் போவும். ஏமாறப் போறான் பாரேன். உனக்கு தியானம் பண்ணணும்னு ஆசையா.... நான் ஒரு வழி சொல்றேன், கேள்.... அரை பாட்டில் ரம் வாங்கிக்க. ஒரு பாட்டில் பீர்ல பஞ்ச் பண்ணு. ஸ்ட்ரெயிட்டா அடி.... கிக் ஏறும் போது மகிஷாசுமரர்த்தினி காஸெட் போட்டு கேளு, தானா சித்தி வரும். எச்சில் தெறிக்க ஊர் தூற்றும். எதிர்க்கும். கேலி செய்யும்.

வினை முடித்தவன் இதையும் உணரான்.

அந்த நான்கு பேரும் வேலை முடித்த சுகத்தில் போனதன் வேகம் ஊர் உணர்ந்தது.

"குழா போட்டாச்சாமேடி!" குற்றஉணர்வுடன் குரல் கொடுத்தது. 'தான் இதில் சரியான பங்கு வகிக்க வில்லையோ' என்று நெஞ்சு கடித்தது. கடித்த வலியில் தூக்கம் கலைந்து நிமிர்ந்தது.

"நோண்டின வரைக்கும் போட்டுருப்பாங்க." அருகே படுத்திருந்த பெண் அரைத் தூக்கத்தில் பேசிற்று.

"முழுசும் போட்டாச்சுன்னு சொல்லுச்சே."

"முழுக்கப் போட்டாச்சுன்னு கேட்டியா?"

"எங்க கேட்கறது... கை வீசிக்கிட்டுப் போயிட்டாங்களே."

"யாரு.... என்னது?" இன்னொரு பெண் எழுந்தாள்.

"மரகதம், குழா போட்டாச்சுன்னு போவுது."

"குழா போட்டுறலாம் தண்ணி வரணுமே."

"பார்த்தசாரதி உடம்பெல்லாம் நனைஞ்சிருந்தது."

"வேர்வையா இருக்கும். ஒரே நாளில் போட முடியுமா?"

"அதுங்க போன தினுசு பார்த்தா மொத்தமும் முடிச்சிட்டிருக்கும்னு தோணுது."

"கேட்க வேண்டியதுதானே."

"கேட்டா பதில் சொல்லாது போவுதுங்களே..."

"என்ன கேட்டே?"

"குழா போட்டாச்சான்னு கேட்டேன். போட்டாச்சுன்னு போவுது"

"எழுந்து போய் விசாரிக்காத, தூங்கின நாய் நிமிர்ந்த மாதிரி கேட்டிருப்பே."

"நிமிர்ந்த மாதிரி கேட்காத தூக்கி சொருகிக்கிட்டு பின்னாடி ஓடச் சொல்றியா?"

"கேட்டதுக்கு பதில் சரியா சொல்லலியே."

"போய் பார்த்துட்டு வந்துடலாம் வரியா?"

"இருளோன்னு கிடக்கே."

"என்ன பயம்.... உன்னிய யாரு இழுத்துட்டுப் போவப் போறா?" இந்த இடக்கலுக்கு எல்லா பெண்களும் சிரித்தார்கள்

"இழுத்துதான் பார்க்கச் சொல்லேன்..."

'அப்படி ஒரு ஆசையா?"

"ஏய்..... என்னடி அங்க தொணதொணன்னு.... உள்ளேயிருந்து ஆண் குரல் அதட்டியது.

"குழா போட்டாச்சாம்"

கட்டில் அசைந்தது. எழுந்து வெளியே வந்து லுங்கி உதறி கட்டிக்கொண்டதும், மேல்துண்டால் உடம்பு துடைத்து நின்றது.

"யார் சொன்னாங்க?"

"மரகதம்?"

"மரகதம் மட்டுமா குழா போட்டுச்சு!"

"எல்லாரும் சொன்னாங்க."

"யார் யாரு?"

"பைப்புக்காரரு, அவரு மக, பார்த்தசாரதி."

"அப்ப முடிஞ்சுட்டிருக்கும்."

"இப்ப தண்ணி வரும்ன்றியா?'

"பைப்பு வேலை முடிஞ்சிருக்கும். தண்ணி கனெக்ஷன் இன்ஜினீயர் வந்து தருவாங்க. நாளைக்கு இல்லாட்டி நாளன்னி வந்துடும்."

"தவலை தூக்கிட்டுப் போனாளே கலாவதி."

"குடிக்கிற தண்ணியா இருக்கும்."

"ஈரமா கிடந்தது எல்லார் மேலயும்."

"கேட்கறதுதானே...."

"தண்ணி வந்துடுச்சான்னு கேட்டேனே.... பதிலே சொல்லலை"

"நீ கேட்காதயே கேட்டேன்னுடுவியே."

நாலைந்து பேர் குரல் கேட்டு, மேலும்கூட பத்து பேர் தெருவுக்கு நடுவே வந்தார்கள்.

"அடியே.... டார்ச் எடுத்தா, ஒரு நடை பார்த்துட்டு வந்துரலாம். எதிர்வூட்டு ஆளை எழுப்பு."

"எழுந்துட்டேம்பா." குரல் வந்தது.

முண்டாசு தலைகள் நாலைந்து எழுந்து வந்தன. பெண்கள் தலைப்பு இழுத்து போர்த்திக் கொண்டார்கள். யாரோ ஒருவன் தடியோடு வந்தான்.

"எதுக்கு தடி?"

"பூச்சி பொட்டு வராது.... அதுக்கு."

"மந்திரக் கோலா?"

"அது தனியா வெச்சிருக்கேன். இது வெறும் தடி."

பெண்கள் சிரித்துக் கொண்டார்கள்.

ஊர்வலமாய் டார்ச் விளக்கு மாடு தலை மாதிரி ஆட, கிளம்பினார்கள். தெரு திரும்புகையில் பின்னால் தபதபவென்று சிலர் ஓடிவந்து கலந்துகொண்டார்கள்.

"கடைசில வெறும் பைப்புத் தரையைப் பார்த்துட்டு வரப்போறோம்."

"சொல்றத பார்த்தா தண்ணி வந்துட்டுருக்கும்."

"எனக்கும் அப்படித்தான் தோணுது. லபலபன்னு பேசினதும் முழிச்சிட்டேன்." இன்னொரு ஆண் தெருவோடு வந்தான்.

"உன் பேச்சு சத்தம் கேட்டுத்தான் நான் எழுந்தேன்." இன்னொரு ஆண் சேர்ந்தார்.

"விவரமா கேட்டிருக்கணும். நம்மூட்டு மூதேவிக்குத் தெரியலை. வா போகலாம்." எல்லோரும் எல்லை நோக்கி நடந்தார்கள்.

"த்தே, என்னை ஏன் மூதேவின்றே? ஆளு நடக்கிற சத்தம் கேட்டு தலை தூக்கிப் பார்த்தேன். என்னான்னு கேட்டதுக்கு பதிலே சொல்லலை. சரசரன்னு சாரையும் நாகமும் ஒளியற மாதிரி நவுந்துட்டாங்க."

பார்த்தசாரதி ஒண்டியா பைப்பு போட்டுருப் பானா.... குத்தி வுட்டுருப்பான்.... கொஞ்சம்."

"தவலை எடுத்தாந்தாங்களாமே."

"ஏதாவது வேண்டுதலோ, என்னவோ... தூக்கம் போச்சு."

தெரு திரும்ப, ஊர் எல்லை வந்தது. இருட்டான இடத்தில் கூட்டமாய் நகர்ந்தபோது முதல் ஆள் பளிச்சென்று நின்றான். டார்ச் தரை தேடியது.

"என்ன..." எல்லோரும் பயந்தார்கள்.

"தரை ஈரமா இருக்கு." கால் உதறினான்.

"மாடு பேஞ்சுருக்கும்."

"ஈரம்ப்பா, இடம் மொத்தமும்கறேன்...." டார்ச் ஒளி மங்கி மங்கி தரையை நக்கியது

"நிறைய தண்ணி"

"சேறு இருக்கே."

கூட்டம் பிரிந்து எல்லா இடத்திலும் கால் பதித்து உறுதி செய்து கொண்டது.

"தண்ணி வந்துருக்குப்பா."

டார்ச் உயர எழும்பி பைப்பை அடையாளம் காட்டியது. திருகு லாக்கப் போட்டு மூடின பைப்பி லிருந்தது ஈரம் கசிந்தது. 'மொத்த குழாவும் போட்டுட்டானுவப்பா!' ஆச்சரியம் பரவிற்று.

"பாரு தரை முழுக்க ஈரம்."

"பீச்சியடிச்சிருக்கு. எவ்வளவு தொலைவு பாரேன்."

"அது ஓடின தண்ணி."

"ஓடினதோ.... ஒழுகினதோ... தண்ணி வருது."

'அத திறந்து வுடு பார்க்கலாம்."

"ஊஹூம்..... முடியலை."

"ஏன்.... மயிரு மாதிரி மூடிட்டுப் போய்ட்டான்."

"வந்து ஒரு வார்த்தை சொல்லிட்டுப் போயிருக்கலாமில்லை."

"எதுக்கு, தவலை கொண்டாந்துருக்கலாமே னுட்டா?"

"நான் அப்பவே கேட்டேன், தவலை கொண்டார வான்னு. இது வேணாம்னுச்சு."

"ஏன் இப்பத்தான் போய் எடுத்தாயேன்.'

"போய் எடுத்தாரவா... மூடின எடத்துலேர்ந்து கசியுதே."

'ஒரு கல்லுல அடிச்சுத் திறந்து பார்க்கட்டா?"

கட்டையால், கம்பால் தாக்கினார்கள். அசைய வில்லை.

"மூடிட்டுப் போயிட்டாம் பாரு தலைக்கனம் புடிச்சதுங்க."

"டேய்... போய் ஒரு ஸ்பானர் எடுத்தா,"

"எங்கிட்டேயில்லையே"

"கட்டிங் ப்ளேயர்..."

"ம்ஹூம். என்னாண்ட கத்திரிக்கோல்தான் இருக்கு."

"அது எதுக்குடா... கட்டிங் ப்ளேயர் வேணும்."

"நான் எடுத்தாரட்டா" ஒரு பெண் கூவினாள்.

"ஓடு.... ஓடு...." எல்லோரும் விரட்டினார்கள். அந்தப் பெண் ஓடியது. இருட்டில் தடுமாறியது.

"ஏய்.... ஏன் நிக்கற. நீயும் ஓடேன்." டார்ச் ஆள் அதட்டினான்.

"நம்மக்கிட்ட இல்லையே."

"போய் தவலை எடுத்தாயேன். திறந்தா தண்ணி கொட்டுமில்லே,"

அவளும் ஓடினாள். இருட்டில் அலைந்தாள்.

"அங்கே மூடியிருப்பாங்கப்பா."

"மயிராண்டி! ஒரு வார்த்தை சொல்லிட்டுப் போகக் கூடாது, இந்த பைப்புக்காரன்."

"பார்த்தசாரதியாவது நம்மகிட்ட சொல்லியிருக்கணும்."

"தானா பைப்பு போட்ட திமிரு. அலட்டறானுங்க. வந்து ஏன் திறந்தேன்னு கேட்பாங்க பாரு."

"திறந்தா என்ன.... வெட்டிருவாங்களா.... ஊர் குழாதான.... அவங்க வூட்டுக் குழாவா....?"

"புழலேரித் தண்ணி, ஐயா குடி..... அம்மா குடி....

பத்து நிமிடத்தில் நாலைந்து பேர் ஓடி வந்தார்கள். எல்லோர் கையிலும் இரண்டிரண்டு தவலைகள் இருந்தன. ஒரு பெண் குடத்துள் கைவிட்டு பெரிய கட்டிங் ப்ளேயர் எடுத்துக் கொடுத்தாள். வாய் பிரித்து லாக்கில் பொருத்தி திருப்பினார்கள். மாற்றி மாற்றி கஷ்டப்பட்டார்கள். "இதுல திறக்காதுப்பா."

"திறக்கும். ட்ரை பண்ணு..."

"போட்டது போட்டாங்க... ஒரு திருகு குழா போட்டு போகக்கூடாது. இறுகி மூடிட்டுப் போயிட்டான் கிழவன்."

"குழா இருந்துருக்காது."

"என்கிட்ட கேட்டா நான் தரமாட்டேனா.... எங்க வூட்டுக் குழா கழட்டி...."

"சும்மா இருடி!" பல் கடித்து முழு பலத்துடன் லாக் நட்டைத் திருப்ப, அசைந்தது. நீர் கோடாய்த் தரை இறங்கியது.

"தவலை வைக்கட்டா?"

"தள்ளிப் போ. குறுக்க நிக்காத..."

"தண்ணி வீணாப் போவுதே."

"திறந்தப்புறம் புடிச்சுக்கலாம்."

"பைப்புல இருந்த தண்ணி வருது. தபதபன்னு கொட்டும்னு நினைக்காதே,"

"அதான் புடிச்சிக்கிட்டா வர தண்ணிய.... அப்புறம் இதுவும் இல்லாத போயிடப் போவுதேன்னு கேட்டேன்."

மறுபடி பலம் கொண்ட மட்டும் அசைக்க, மறை திரும்பியது, மெல்ல சுழன்றது. கடைசி சுழற்சியில் ஓர் உந்து உந்தி மறையை திருப்ப, மறையை அடித்து தடேரென்று கூட்டத்துக்கு நடுவே தண்ணீர் விழுந்தது. கூட்டம் துரத்தப்பட்டு ஆட்டு மந்தை போல சிதற, ஒரு பெண்மணி குத்துக்கல் இடறி செடியில் விழுந்தாள். எல்லோர் மீதும் நீர் வஞ்சனையின்றி தெறித்தது.

கீழே வைத்த தவலையைத் தண்ணீர் உதைத்து உருட்டியது. அழுத்திப் பிடிக்க, உள்ளே குதித்து வெளியே பொங்கியது. பிடித்தவன் சுத்தமாய் நனைந்தான், வயிறு சில்லிட்டு தொடைகளில் தனி ஈரம் உணர்ந்தான். யாருக்குத் தெரியப் போகிறது என்று அழுத்திப் பிடித்துக் கொண்டான்.

மெல்லிய நாற்றம் பரவிற்று. நீர் வேகம் அதையும் கலைத்தது.

"மறைய வுட்டுட்டேம்பா. முதல்ல அதைத் தேடணும்."

"எதுக்கு?"

"மூட்ணுமே."

முதலில் பிடித்த பெண்மணி இரண்டு தவலைகள் நிறைந்ததும் இடுப்பில் ஒன்றும், தலையில் ஒன்றும் தூக்கிக் கொண்டு ஊருக்குள் ஓடினாள். "தண்ணி வருது, தண்ணி வருது" என்று கூவிய சப்தம் ஊர் எல்லைக்குள் கேட்டது.

எல்லோருக்கும் சந்தோஷமாகவும் இருந்தது. துக்கமாகவும் இருந்தது.

"முதல்ல மறையக் கண்டுபிடிக்கணும்யா.... அதவுட்டுட்டு இடத்தை நடந்து நடந்து சேறாக்க றீங்களே...."

குடத்திலிருந்து தெறிக்கும் நீருக்கு நேராய் இன்னொருவர் குடம் நீட்ட, பத்து விநாடிகளில் இன்னொரு குடம் நிரம்பியது.

"தண்ணி எடுத்துடலாம். பாதைதான் இரு ளோன்னு இருக்குது."

"அப்படியே ஈரம் பார்த்துக்கிட்டே போ. தெரு திருப்பிடலாம்."

"முனைல பொதுவுல விளக்கு போட்டா நல்லா இருக்கும்."

"காஞ்சனா, மாலா உங்க வீட்டு முனைலேர்ந்து ஒரு ஒயர் இழுத்து பல்பு போட்டா?"

"ஒயரு இல்லியே."

"என்கிட்ட இருக்குது. நான் தரேன்."

"முன்னும் பின்னும் பெண்கள் குடத்தோடும் நீரோடும் அலைந்தார்கள்.

'இரு. ஏன் துடிக்கறே.... நான் புடிக்கறேனில்ல."

"நாங்கதான் குழா திறந்தோம். நாங்க முடிச்சதும் நீ புடிச்சுக்க."

10

"ஆறு குடம் முன்ன நின்னு புடிச்சுட்டுப் போனியே. இன்னமும் வந்து முன்னால நின்னா எப்படி....?"

"முதல்ல திறந்தாளாம். பேசறா பாரேன். பைப்பு போட்டது யாரோ, பூமி குத்தினது யாரோ, இவ திறந்தாளாம்..."

"த்தே.... வாய மூடிக்கிட்டு தண்ணி புடிங்களேன். ஏன் அடிச்சுக்கறீங்க. தண்ணிதான் வருதே...." ஆண் குரல் அதட்டியது.

"ஏய்யா மேல இடிக்கிற..."

"ஆமா..... இடிக்கிறேன்... சேறு வழுக்கி விடுது. முட்டிக்கிட்டேன்"

"இருட்டா இருக்குதுன்னு மேல மேல மோத றாங்க."

"தே..... நான்தான் இடிக்கறேன். பெரிசா கூவாதடி. தண்ணி வர சந்தோஷத்துல இடிக்கிறது ஆம்பளையா பொம்பளையான்னு தெரியாத போச்சு."

"இருட்டா இருக்கே...."

"ரொம்பிடுச்சா.... நவுரு."

"முக்கா குடம்தான் ரொம்பிருக்கு."

"தண்ணி பீச்சி அடிக்குதுல்ல. அடுத்த ஆள் பிடிக்கும்போது முன்னாடி குடம் புடிச்சுக்க."

"மறை காணமப்பா. கண்டுபிடிக்கணும்."

" இந்த ஆளைப் பாருடி, எதையோ காணம் காணம்னு காலப் புடிச்சு இழுக்கறாரு."

"மறை காணாம தேடறாரு."

"தெறக்கும்போதே இல்லைன்னு சொல்லிடு."

"செருப்பால அடி, மறை காணம்னு ஒரு தேக்சா தண்ணி கூட புடிக்காத தேடறேன். கிண்டலா இருக்கா."

"எங்கியோ வுட்டுட்டு என்கிட்ட வந்து கத்தறியே."

"இந்தாம்மா நவுரு.... ஆளு கால் பட்டு பூமில புதைஞ்சிடப் போவுது."

"போனா போட்டுமே. மறைதானே..."

"குழா மூடணுமே."

"ஏன் மூடணும்? ஊர் ஜனம் புடிச்சுக்கிடட்டுமே."

"இங்க ஊத்தற தண்ணிக்கு அரை அவர்ல தண்ணி ரொம்பிடும். அப்பால."

"எதுனா போட்டு அடைச்சிடுப்பா."

"துணி வச்சு அடைச்சுடலாம். கவலைப்படாதே."

"துணி வச்சா நிக்காது, தண்ணி ஸ்பீடு ஜாஸ்தி. கை வச்சா தள்ளுது பாரு."

"யோவ், மூடாத.... மூடாத... என் குடம் ரொம்பலய்யா...."

"கஷ்ட காலம், புடிச்சுக்க."

"மரக்கிளை சைஸா ஒடிச்சு உள்ள அழுத்திட்டு அப்படியே துணி போட்டு சுத்தினா நின்னுடும். மரக்கிளை ஒடி."

மறை தேடியவன் மெல்ல புதர்களூடே மரக்குச்சி தேடினான் மரத்துக்கு அருகே போனான். கீழே உடைந்த குச்சிகள் இருக்கிறதா என்று பார்த்தான். ஒரு குத்துக்கல் இருந்தது. பூமியோடு பதிந்திருந்தது. 'லிங்கமா...' தொட்டுத் தடவினான், சிலிர்த்தது. 'மடிப்பு மடிப்பு கல்லா இருக்கே... வாசப்படிலே போடலாம்.' தொட்டுத் தூக்கினான். ஒரு வேகம் சுளீரென்று அடித்தது.

"ஐயோ...' என்று கத்தினான்.

"என்னப்பா..."

"கரண்ட் ஷாக் அடிக்குது."

"தண்ணி எங்கனா பட்டிருச்சா இங்க அடிக்க லையே." கூட்டம் பயந்து பின்வாங்க, தண்ணீர் தரையில் அடித்து உயர எழும்பியது.

"ஒரு தவலை புடிச்சுக்கட்டா?"

"போ. போய் புடிச்சு சாவு."

'குழா நிறுத்துய்யா... குழா நிறுத்து."

"மறை இல்லையே."

"அப்பமே சொன்னேன்.... திறக்காதேன்னு."

"எங்க சொன்ன. வாய்க்கு வந்தபடி பேசாதே."

"த்தே.... தண்ணி புடிச்சாச்சுல்ல... போ."

"நீ வரல்லியா."

"வரேன் போ."

"ஷாக் அடிக்குதுன்றாங்க, ஏன் நிக்கறே.. வா"

"யோவ்.... மயிராச்சுன்னு புருஷனும் பொண்டாட்டி யுமா போயிட்டீங்கன்னா என்னா பண்றது?"

"நீ போடி.... நான் வரேன். தள்ளிப் போ சீக்கிரம். துண்டு எடுத்து அப்படியே அடைச்சுடலாம்."

துண்டு சுற்றி அடைக்க, இடைவெளியில் சக்கரம் போல் தண்ணி அடித்தது. குத்துக்கல் மீது தண்ணீர் விழுந்தது.

"போய் பைப்புக்காரரை இட்டா."

"என்னா சொல்றது....?"

"இன்னொரு மறை வேணும்னு சொல்லு."

"நாங்க ஒண்ணும் புடிக்கலை. அதுக்குள்ள குழா மூடினா கெட்ட கோவம் வரும்."

"மூஞ்சியைப் பாரு.. பீடை.... இங்க பைப்பை எப்படி மூடித் தொலைக்கிறதுன்னு திண்டாடுது. இது தண்ணி.... தண்ணின்னு அலையறது பாரேன்."

"நீ புடிச்சா போறுமா?"

"ஆமா, என்னத்தை புடிச்சாங்க..."

"நல்லா வருது வாயில...."

"சொல்லேன் பார்க்கலாம். வா.... வந்து புடி."

"த்தே. எங்க ஆளு எங்க. இந்தாளப் பாரு... பொம்பளைக்கிட்ட ஏடாகூடமா பேசறான்."

"யாருப்பா எங்க வூட்டு பொம்பளைக்கிட்ட வம்பு பண்றது?"

"வாய்யா பிஸ்தா, வந்து பைப்புப் புடி."

"ஒழுங்கா இப்படிச் சொல்ல வேண்டியதுதானே?"

"தேவைதானா எனக்கு இது.... என்னய்யா ஒழுங்கு தவறிப் போச்சு இப்ப...."

"உம் பொண்டாட்டிக்கிட்ட நான் இப்படிப் பேசினா வுட்றுவியா?"

"யோவ், ஏய்யா சண்டை போடாதீங்கய்யா... தண்ணி நிறுத்துற வழி பாருங்க."

"தண்ணி நிறுத்தக் கூடாது. நாங்க புடிக்கலை"

"அப்ப புடிச்சிட்டு நீயே நிறுத்து. நாங்க புடிக்கலை."

"ஏன் நாங்க நிறுத்தணும்? நாங்களா பைப்பு தொறந்தோம். நாங்களா மறை தொலைச்சோம்... எல்லாரும் புடிச்சாப்பல நாங்களும் புடிச்சப் பிறகுதான் மூடணும்."

"புருஷனும் பொண்டாட்டியும் நிதானமா புடிச்சிட்டு வாங்க. நாங்க போறோம்..." பைப்பிலிருந்து கையெடுத்தான்.

எதிரே நின்றுகொண்டிருந்த பெண் நெஞ்சில் தடேரென்று தண்ணீர் வேகமாக அடித்தது, அசால்ட்டாய் நின்றவள், மல்லாக்க சரிந்தாள். தலை சேற்றில் பட, கால் மேல் எழும்பிற்று. கூட்டம் வாய்விட்டுச் சிரித்தது.

"ஒரு வேலைக்குத் துப்பில்லை..... எழுந்துருடி!" அவள் புருஷன் அவளை எட்டி உதைத்தான்.

தண்ணீர் தரையைத் தாக்கித் தாக்கி விழுந்தது.

"போய் பைப்புக்காரனைக் கெஞ்சிக் கூத்தாடி கூட்டிட்டு வாய்யா."

'மறை, ஸ்பானராவது வாங்கிட்டு வா. இந்தாமா. நீ போயேன்.... தண்ணி புடிச்சிட்டேல்ல?"

"ஆறு நடை போனது கால் இழுக்குது. போய் சொல்லி அனுப்பறேன்."

"சொல்லி அனுப்பறியா? யார் தண்ணி மூடறது?"

"யார் திறந்தீங்களோ அவங்களே மூடுங்க."

"நடுவுல நீங்க பூந்து வழிய வழிய தண்ணி புடிச்சிக்குவீங்களோ?"

"அட, போய்யா!" அவள் குடத்துடன் இருளில் மறைந்தாள்.

"கேடு கெட்ட ஜென்மம்பா."

"மறைக்கு யார்னா போகணும்."

"யார் திறந்தது?"

"டெய்லர் சபாபதி."

"என்ன..... என்ன.... டெய்லர் சபாபதிக்கு என்ன வச்சிருக்கீங்க. ஏதோ ஜனம் தண்ணி கேட்டதால புடிச்சுக்கட்டுமேன்னு திறந்து வுட்டேன் எப்படின்னா போங்க. வந்து இன்ஜினீயர் அடைச்சுக்கட்டும்."

"இன்ஜினீயரா.... வந்து மொத்தமா அடைச்சுட்டுப் போயிடுவாரு.... ஏற்கெனவே கேட்காத போட்டுருக்கம்,"

"அப்ப போய் மறை வாங்கி வா."

சேறு மிதித்து யாரோ போனார்கள்.

அவள் பிரா ஹுக்குகள் அவிழ்த்துத் தரையில் எறிந்தாள். பாவாடையைத் தளர்த்தி மார்பு வரை மூடிக் கொண்டாள். கிணற்றில் பக்கெட் விட்டு எட்டிப் பார்த்தாள். பக்கெட் தண்ணீரில் மோதி, அலையலில் ஒரு வெளிச்சம் தெரிந்தது. மெல்ல மேலே இழுத்தாள். பக்கெட்டை எட்டிப் பிடித்து கிணற்றுச் சுவரில் வைத்தாள்.

"யப்பா..... இனிமே இப்படி கஷ்டப்பட்டு தண்ணீர் இழுக்க வேணாம். ஊர் முழுக்க குழாய் வந்துடும்

குழாயில் நீர் வரும். நாளையிலிருந்து ஒரு பத்து நாள்.... ஒரு மாசத்தில் எல்லா வீட்டிற்கும் வரும். தவலையும் குடமும் எடுத்துப் போய் வர வழியில் பேசிக்கொண்டே நடந்து வரலாம். தூக்கும் சுமை தெரியாது. அப்படிப் பேச ஒரு துணை கிடைத்துவிட்டது. மரகதம் பேசப் பேச கேட்டுக் கொண்டேயிருப்பாள் போலத் தெரிகிறது.

"உனக்கு பால்காரன் வேணுமா.... கட்டிக்கிறியா சொல்லு...." என்கிறது. ஏதோ நாளைக்கே கல்யாணம் என்பது போல் பேசுகிறது.

'பால்காரனோடு உனக்குத் தொடர்பா' என்றால், ஆமாம் என்கிறது. பேசுமாம்.... பால்காரனோடு நிறைய பேசுமாம். பட்டென்று நெஞ்சு திறந்து கொட்டி விட்டது.

'ஆமாம்... அதுக்கு என்னங்கற' என்கிற மாதிரி பேசி விட்டது. புருஷனைப் 'பல்லி' என்கிறது. என்னைப் 'பசு' என்கிறது. என்னைப் பற்றியும் பேசியதாம். பால் காரனோடு பழக்கமே இல்லை அதிகமாய், ஆனாலும் பேசியிருக்கிறதாம்.

நான் மட்டும் என்ன.... பால்காரனோடு எனக்குப் பழக்கமா? கை நிறைய தண்ணி வாரி முகத்தில் அடித்தேன் அதுவும் அப்பா எதிரில். கடவுளே... காலைல அப்பா எதுனா கேட்குமா? ஏன் அப்போதே கேட்கலை? தண்ணி வந்த சந்தோஷம் போல அப்பாவுக்கும்.

'ஐயா.. தலையெல்லாம் மண் பத்துக் கூடை மண்ணு தூக்கின மாதிரி உடம்பெல்லாம் வலி. பார்த்தசாரதிக்கு எப்படி நோவும்...' பக்கெட் எடுத்து தலையோடு கவிழ்த்துக் கொண்டாள் மறுபடி சரசர வென்று இழுத்து தலையில் கவிழ்த்தாள். சோப்பு எடுத்து கையில் குழைத்து தலை, பிடரி, உடம்பு முழுவதும் தேய்த்தாள். 'பார்த்தசாரதிகூட குளிச்சுக்

கிட்ருக்குமில்ல. ஒருவேளை மரகதம் முதுகு தேச்சு வுடுமா.... வுடட்டும் எனக்கென்ன....' எழுந்து நின்று மறு படி தண்ணீர் இறைத்துத் தலையில் விட்டுக் கொண்டாள்.

யாரோ கதவு தட்டினார்கள்.

'பைப்புக்காரரே.... பைப்புக்காரரே...' என்றார்கள். எங்கோ கூச்சல் கேட்டது.

அவன் தண்ணீர் இழுத்து சிமெண்ட் தொட்டியில் விட்டான். பத்து பக்கெட்டில் சிமெண்ட் தொட்டி நிரம்ப, எருமையை அவிழ்த்து அருகில் கொண்டு வந்தான். இரண்டு செம்பு நீர் ஊற்றி உடம்பு தேய்த்தான்.

"ஏம்ப்பா குளிக்கலை...." மரகதம் குரல் கேட்டது.

"மாடு குளிப்பாட்டிட்டு குளிக்கணும்...."

"காலை தேய்ச்சு குளிப்பாட்டறது?"

"அப்புறமும் ஒரு தடவை குளிக்கணும்." திரும்பாமல் பதில் சொன்னான்.

"தூக்கம் வரலையா?"

"ஒரேமுட்டா பால் கறந்துட்டு படுத்துறலாம்னு பாக்கறேன். மணி மூணரை ஆவுதே."

"நான் எதுனா செய்யட்டா?"

"வேணாம்."

அவள் சுவரில் விரிசல் வழியே வந்தாள். "நீ தண்ணி இழு. நான் மாடு தேய்க்கறேன்." அவன் கை பிடித்து வைக்கோல் சுருணையை வாங்கி கொண்டாள்.

"உனக்கு தூக்கம் வரலையா?"

"இல்லை. என்னவோ திக்குமுக்காடற சந்தோஷம் வந்து கொஞ்ச நேரம் சாஞ்சேன். உன் சத்தம் கேட்டது. எழுந்துட்டேன்."

"போய்த் தூங்கேன்."

"வேணாம். எதுனா பேசணும் போல இருக்கு."

"என்ன....?"

"அந்தப் பொண்ணு கலாவதி என்ன கேட்டது தெரியுமா?"

"யாரு?"

"பைப்புக்காரர் பொண்ணு கலாவதி."

"என்ன?"

"உனக்கும் பார்த்தசாரதிக்கும் தொடுப்பான்னு."

திரும்பினான்.

"ஆமான்னுட்டேன். தப்பா?"

"எதுக்கு சின்னப் பொண்ணுக்கிட்ட இதெல்லாம் போய் பேசிக்கிட்டு...."

"அது நல்ல மாதிரி."

"கெடுத்துறாதே. நல்லபடியா கல்யாணம் காட்சி ஆக வேண்டிய பொண்ணு."

"பேசறாங்களாமே."

"பேசட்டும்."

"உன்னைக் கேட்டது."

"என்னையா?"

"பார்த்தசாரதி பேசுவாரான்னு கேட்டுச்சு. பேச ஆரம்பிச்சா வுடாது பேசிக்கிட்டே இருக்கும்னேன், என்ன, பார்த்தசாரதிய விசாரிக்கிறேன்னேன் அது ரொம்ப நல்ல மாதிரி படுதுன்னு சொல்றா."

அவன் தேய்த்த மாட்டைக் கொண்டு போய் கட்டிவிட்டு இன்னொரு மாட்டை இழுத்து வந்தான்.

"இதெல்லாம் வேணாம். அவங்க பெரிய தனக்காரர். கொஞ்சம் மரியாதையா நடந்துக்கறது நல்லது."

"அது யோசனை பண்ணித்தான் தொடுப்புன்னேன். அப்புறமும் பேசுது. உன் மூஞ்சில தண்ணிகூட அடிச்சுதுல்ல....?"

"குழந்தைப் பொண்ணு."

"அதா குழந்தை. அது பசு. நல்ல ஜாதிப்பசு."

"வேணாம். என் வரைக்கும் போதும். ஊரைக் கெடுக்காத."

"கட்டிக்கிறயான்னு கேட்டேன்."

"யாரை?"

"உன்னைத்தான். அதக் கேட்டேன் நாங்க முதலியாரு, அவரு யாதவரு. அதெல்லாம் நடக்காதுன்னு சொல்லிடுச்சு. இந்தாளை மனசுல நினைச்சுட்டு, இன்னொரு ஆளுக்குக் கழுத்து நீட்டி எதுக்கு அசிங்கம்னுதுப்பா."

அவன் யோசனையுடன் கிணற்று நீர் பார்த்தான். இழுத்தான். நீரைத் தொட்டியில் சரித்தான், நிமிர்ந்தான்.

"ஒண்ணு சொல்றேன் கேட்டுக்க, அவுங்க வீட்டு விஷயத்துல விளையாடாதே. உன் காலோ என் கை காலோ அங்க படறது நல்லதில்லை. நம்ம மரியாதையை நாம கெடுத்துக்க வேணாம். மனுஷாளை மெறிச்சா மன்னிப்பு கேட்டுக்கலாம். தெய்வத்தை மெறிச்சா பாழா போயிடுவம். ஞாபகம் வச்சுக்க."

"டேய் பார்த்தசாரதி. குழால தண்ணி கொட்டு தாமேடா!" அம்மா கிழவி தட்டுத் தடுமாறி எழுந்து கொல்லை விளிம்புக்கு வந்தாள். சட்டென்று மரகதம் கிணற்று சுவரோரம் மறைந்து உட்கார்ந்தாள்.

தண்ணீர் பட்டு ஓரம் வெளுத்த அவன் பாதங்கள் அவளுக்கு அருகே இருந்தன. மின்விளக்கு ஒளியில் நீர் பூத்துக் கிடந்தன. அகலமாய், முரட்டுத்தனமாய், உறுதியாய் நகங்கள் சுத்தமாய் வெட்டப்பட்டு இருந்தன.

மெல்ல தொட்டு கண்களில் ஒற்றிக் கொண்டாள். சுள்ளென்று காதுக்குள் ஒரு குழந்தை அழுதது. பெண் குழந்தை என்று தோன்றிற்று.

11

"யம்மோய், நீ ஏன் அலையறே.... நேரங்கெட்ட நேரத்துல.... போய் படு...."

"தண்ணி வருதாமே ஊர் முனைல." கிழவி வாசல் விட்டுப் படியிறங்கினாள்.

"ஆமா வருது. நீ ராத்திரி நேரத்துல எங்கியாவது போய் தடுமாறாத. உள்ளே போ."

"அங்க போய் ஒரு நடை . புடிச்சாரலாமேடா."

"நட்டு போட்டு இறுக்கி வச்சுருக்கேன். நாளைக்கு இன்ஜினீயர் வந்து திருகு குழா போட்டுக் குடுப்பாரு."

"தவலை எடுத்துக்கிட்டு போவுதுங்களே ஜனங்க."

"எங்க?"

"ஊர் முனைக்கு."

"இல்லையே."

"இப்ப பார்த்தேனே!"

"கனா கண்டியா?"

'போடா முண்டம். வாசல்ல கூவிக்கிட்டுப் போவுது ஜனம்."

"நின்று உற்றுக் கேட்டான். ஏதோ கூச்சல் கேட்டது. கிணற்றடி எருமை நகர்ந்து வைக்கோல் போரில் முட்டி, வாய் நிறைய திணித்துக்கொண்டது.

பசுவை அவிழ்த்து விட்டான்.

"சரி.... நான் பார்த்துக்கறேன் போ ஒண்ணு குளிப்பாட்டி ஒண்ணு குளிக்கலேன்னா கத்தும். நீ உள்ள போ."

கிழவி முணுமுணுத்தபடி உள்ளே போனாள்.

"உனக்கு சத்தம் கேட்டுதா மரகதம்?"

"குழந்தை அழுவுற சத்தம் கேட்டது..." மெல்ல எழுந்தாள். வயிறு கனத்தது.

"இல்லை. கூச்சலா?"

"ஜனங்க கூச்சல் கேட்கலை."

"இல்லியே."

"இப்ப கேளு."

உற்று கவனித்தாள்.

கேட்டது. இருவரும் நிமிர்ந்து பார்த்து கொண்டனர்.

"புடுங்கிட்டாங்களா குழாய்."

"தெரியலியே."

"நாம வரச்சொல்ல குழா போட்டாச்சா. குழா போட்டாச்சான்னு கேட்டுதுங்களே...."

"போய் பாத்துருக்குமா..."

"செய்துருப்பாளுங்க."

"ஐயோ.... அந்த இன்ஜினீயர் திட்டுவாரே..... ஏன் போட்டேன்னு பைப்புக்காரரைத் திட்டுவாரே....

பிரச்சினை வருமே.... இந்த மாடு மட்டும் தேச்சுடு மரகதம். நான் போய் பார்க்கறேன்."

அவன் உள்ளே ஓட, பசு அவளை நோக்கி திரும்பியது.

'த்தே?' என்று மறுபடி அதட்ட, பசுவின் வாய் நெஞ்சக் குழியில் இடித்தது. வால் மொத்தமும் வயிறு மீது பட்டது.

முதுகில் கை வைத்துத் தள்ளினாள்.

மறுபடி பசு பின்பக்கமாய் அழுத்தியது. பசுவின் உடம்பிலிருந்து ஒரு சூடு சக்கென்று அவள் வயிற்றில் பதிந்து இறங்கியது. உடம்பு முழுக்கப் பரவியது. நெஞ்சு மூச்சடைத்தது போல சுருண்டு கொண்டது. விழிகள் பிதுங்கின காதுக்குள் இடைவிடாது குழந்தை அழுகை கேட்டது. பெண்குழந்தை அழுகை என்பதால் புரிந்தது. தலை சுற்றியது.

மரகதம் சுவர் பிடித்துக் கொண்டார்.

"கடவுளே!" என்றாள். பசு நகர்ந்தது.

மரகதம் தள்ளாடினாள். அவள் புத்தி கட்டளையில் இல்லை. விலா எலும்புகள் விம்மி விம்மி அடங்கின. தலை உச்சியில் ஒரே ஒரு ரோமம் உயர்ந்து சிலிர்த்து நிற்பதாய் உணர்ந்தாள். உள்ளங்காலில் சகிக்க முடியாத குறுகுறுப்பு தோன்றி, திணற அடித்தது. கால் உதற நினைப்பெடுத்தும் செயல்படுத்த முடியவில்லை. தொடைகளை இருக்கிக் கொண்டாள் யாரோ அடைத்துவிட்டது போல் உணர்ந்தாள். முதுகுத்தண்டு நிமிர்த்தினாள். வயிற்றுள் கனம் ஏறியது இடுப்பு தள்ளாடியது அவளுக்குள் ஒரு தனிச் சிலிர்ப்பு ஓடியது. 'யம்மா.... யம்மா' பயத்தில் அழுகையாய் கத்தினாள். அவளுக்குத் 'தான் கர்ப்பம்' என்று தெரிந்துவிட்டது.

இன்னொரு முறை பக்கெட் இறக்கி பரபரவென்று நீர் இழுத்தாள். தலையில் அலசி அலசி ஊற்றிக் கொண்டாள். சட்டென்று நகர்ந்து கொடித்துணியை உறுவி மேலே போட்டுக் கொண்டாள். உள்ளே வந்து கொல்லைக் கதவு சாத்தி. தாழ்போட்டு பாவாடை அவிழ்த்து சுற்றிய துண்டுடன் அறைக்குள் ஓடி மடமடவென்று உடுத்திக் கொண்டாள்.

மறுபடி கதவு இழுத்தார்கள்.

"யாரது " அம்மா குரல் கொடுத்தாள்.

"பைப்பு மரை கழண்டு போச்சும்மா. பெரியவரை எழுப்பும்மா."

"இப்பத்தானே படுத்தாரு. யாரது எழுப்பச் சொல்றது."

"நான்தான். டெய்லர் சபாபதி."

"கலாவதி!" அம்மா குரல் கொடுத்தாள்

ஜாக்கெட் ஹுக் பொருந்த மறுத்தது. மூச்சு உள்ளிழுத்து அழுத்திப் பொருத்தி மாட்டி மேலே துணிபோட்டு சட்டென்று பொட்டு வைத்துக் கொண்டாள். ஈரத்துண்டு முகர்ந்தபடி கதவு திறந்தாள்.

"வாச விளக்கு போடும்மா...." அம்மா குரல் பின்னே கேட்டது. விளக்குக் குமிழ்களில் கை வைக்க, பளீரென்று வராண்டா குழல் விளக்கும் வாசல்படி விளக்கும் எரிந்தன.

"என்னங்க?"

"பைப்புக்காரர் வேணும்."

"தூங்கறாரே. இப்பத்தான் படுத்தாரு, பைப்பு வேலை முடிச்சு."

"ஜலம் கழட்டிப் போட்டுருச்சும்மா."

"எதை?"

"பைப்பு நட்டை.

"ஐயோ...."

"தண்ணி பீச்சியடிக்குது. வர பாதையெல்லாம் தண்ணி. மரக்கட்டை சீவி அடைக்க கிளை ஒடிக்கப் போனா ஷாக் அடிக்குது மரத்தாண்ட..."

"எந்த மரத்தாண்ட?"

"தெரியலை"

"மரத்துலியா.... பக்கத்துலியா?"

"இல்ல, அங்க தரைல கல்லு கிடந்துச்சு, தூக்கினேன். சுள்ளுன்னு புடுங்கிடுச்சு. ஷாக் மாதிரிதான் இருந்தது."

"அது ஷாக் இல்லை."

"பின்ன என்னா?"

"ஒண்ணுமில்லை. அவரு தூங்கறாரு."

"ஸ்பானர், நட்டு கொடுங்களேன்."

"என்ன நட்டுன்னு தெரியலியே. கோணி கொண்டாரேன். அதுல இருக்கா பாருங்க."

உள்ளே போய் கோணி மூட்டை தூக்கி வந்தாள் கீழே சாய்த்துக் கொட்டினாள்.

விதம் விதமாய் நட்டும், போல்ட்டும், கப்ளிங்கும் பைப்பு துண்டுகளும் கட்டி வைக்கப்பட்டிருந்தன.

"இதோ..... அது மாதிரிதான்."

"இல்லை. இது சின்னதா இருக்கே."

"அந்த பைப்பு பெரிசு."

"ஆமா..... ரெண்டங்குலம்."

"இது போடலாம். ஆனா மரை தேஞ்சிருக்கு. இது போட்டுப் பாருங்க." எடுத்து அவனிடம் கொடுக்க நிமிர்ந்தாள். வாசல் விளிம்பில் பார்த்தசாரதி நின்றான். திண்ணைக்கு அருகே போய் திரை விலக்கிப் பார்த்தான். "கும்புடறேன்" என்று இருட்டு மூலை நோக்கிக் குரல் கொடுத்தான். அங்கே ஒரு துணிக் குவியல் அசையாது இருந்தது. "தண்ணி வருது ஆண்டவனே! வந்து உடனே சொல்லியிருக்கணும். மறந்து போச்சு ஆண்டவனே!" மறுபடி கை கூப்பினான்.

திரையிலிருந்து வெளியே வந்தான், சிரித்தான்.

"சொல்ல மறந்துட்டது. என்ன தேடறீங்க?"

"மரையப் புடுங்கிட்டாங்களாம். மூடணுமாம்."

"பிடுங்கினவங்களையே மூடச் சொல்றதுதான..."

"மரை தொலைஞ்சு போச்சு. தண்ணி நஷ்டமாவுதே!"

"அந்தப் புத்தி புடுங்கறபோது இல்லையா?"

"நீ வரும்போது ஒரு வார்த்தை சொல்லிட்டு வந்துருக்கலாம் பார்த்தசாரதி."

"என்ன வார்த்தை?"

"தண்ணி வருதுன்னு?"

"சொல்லியிருந்தா..."

"பித்தளை திருகு பைப்பு கொடுத்திருப்பேனில்ல..."

டெய்லர் பேச்சுக்கு கலாவதி உதறி எழுந்தாள்.

"நீங்களா... ஒரு கூடை மண்ணு வாரு ஆள் வரலை. பித்தளைக் குழாய் கொடுத்துருவீங்களாக்கும். அட

ஒண்டியா நின்னு வேலை செய்யற ஆளுக்கு டீ வாங்கிக் தரலாமில்ல... பேச்சுத் துணைக்கு நிக்கலா மில்ல. குத்தம் சொல்ல மட்டும் முன்ன வந்துட்டீங்க. யாரு உங்களை பைப்பு தொடச் சொன்னது?"

"ஐயோ.... நான் குத்தம் சொல்லலைம்மா.... எனக்கு முடியாத உடம்பு. மண்ணு வாரத் தெம்பில்லை. துணி புடிக்கிற கை அங்க வந்து எதுக்கு இடைஞ்சலான்னு தான் வரலை. கூப்பிட்டிருந்தா டீ தண்ணி போட்டு கொண்டாந்திருப்பேன்."

"கூப்பிடணுமா.... கூப்பிட்டா போய் தண்ணி திறந்தீங்க.... போங்க.... நீங்களே போய் அடைச்சுக்கங்க."

"அப்படிச் சொல்லாத தாயி." டெய்லர் இரஞ்சினான்.

"எதுக்கு கோவப்பட்டுக்கிட்டு.... எல்லாருக்கும் உதவியா செய்துட்டு இத்தினி பேசுவானேன். மரை குடுங்க."

"நூலு போட்டு சுத்தணும்."

"நூலு குடுங்க கொஞ்சம்."

"சுத்தமா தண்ணி அடைக்கணும்னா மேல ரப்பர் போட்டு...."

"வேணாம். காலைல விடிஞ்சதும் ஆபீஸருங் களைக் கூட்டிட்டு வந்து காட்டி முறையா திருகுக் குழா போட்டுக்கலாம். இப்ப மூடிடறது நல்லது."

"நான் வரணுமா?"

நிமிர்ந்து முகம் பார்த்தான்.

"வேணாங்க. இருட்டுல எதுக்கு? போய் படுங்க குளிச்சிட்டீங்களா?"

"நீங்க குளிக்கலை?"

"இல்லை. மாடு குளிப்பாட்டினேன். எல்லா வேலையும் முடிச்சிட்டு குளிக்கலாம்னு இருந்தேன். அதுவும் நல்லதாப் போச்சு. இப்ப சேத்துல போய் நிக்கணும்."

"ஸ்பானர் இந்தாங்க. போட முடியலைன்னா ஆள் அனுப்புங்க. அப்பாவ எழுப்பி அனுப்பறேன்."

"வேணாம். ஏற்கெனவே அவர் முடியாத தள்ளாடித் தள்ளாடி செய்தாரு. பாவம். தூங்கட்டும்."

"மரகதம் அக்காகூட பாவம். இன்னிக்கு நிறைய வேலை. கழுத்து ஒடிய மண்ணு தூக்குச்சே. தூங்கிக்கிட்டிருக்கும்."

"இல்லை."

"இல்லையா..." நிமிர்ந்தாள். அவனை ஊடுருவிப் பார்த்தாள்.

அவன் தயங்கினான், மரகதம் பேசியது அனைத்தும் மனசுள் ஓடியது.

"அக்கா தூங்கலையா?"

"இல்ல. மாடு குளிப்பாட்டுது"

"அவங்க வீட்ல மாடு இருக்கா."

"இல்லை. எங்க வீட்டு மாடுதான்."

ஓஹோ.... ரொம்பப் பிரியமானவங்க. ரொம்ப உதவி."

"ஆமாங்க."

"ஸ்பானர் வாங்கிட்டு வந்துருங்க, டெய்லர் வேலை முடிஞ்சதும். பால்காரரைக் கஷ்டப்படுத்த வேணாம். அவருக்கு ஊர்ப்பட்ட வேலை இருக்கும்."

"சரிம்மா."

"அக்காக்கிட்ட, நானும் தூங்கலைன்னு சொல்லுங்க."

பார்த்தசாரதி பேசாது நகர்ந்தான்.

அவளுக்குள் சின்னதாய் ஒரு கோபம் முட்டியது. காரணம் புரியாது ஒரு துக்கம் வந்தது. கதவை சடாரென்று சார்த்தினாள். இருமல் சத்தம் திண்ணையில் கேட்டது.

திரையைத் தள்ளி உள்ளே பார்த்தாள்.

குவளையை அசைத்துக் காட்டியது.

"தண்ணியா.... கிணத்துத் தண்ணி பரவாயில்லையா.... ஊர் முழுக்க தண்ணி கொடுத்துட்டேன்னு கும்புட்டுட்டு போறாரே... அவரு கொண்டாந்த தண்ணி தரவா..." கதவு விட்டு வெளியே வந்து திண்ணையில் ஏறினாள்.

"செம காக்கா புடிக்கிறார் உன்னை.... நீ பெரிய ஆளாம். உன்னால தண்ணியாம்... உன் கதை கேட்டாரு இன்னிக்கு. ஆஹா ஓஹோன்னு பேச்சு, அவரு கதை. தெரியுமா உனக்கு? இரு, தண்ணி எடுத்தாறேன்," குவளையைச் சட்டென்று தூக்க, கனத்தது. கை இழுத்தது.

"என்ன அப்படியே இருக்கே தண்ணி? என்ன வேணும்? மஞ்ச வாசனை வருது. என்ன வேணும்?" குனிந்து துணி விலக்கினாள்.

உள்ளே குத்துக்கல். மரத்தடியில் பார்த்த குத்துக்கல் தென்பட்டது. அவசர அவசரமாய் விலக்கினாள். கண் ஓட்டியது.... கிழவன் எழுந்து உட்கார்ந்தான்.

"என்னாப்பா.... கண் கட்டற..... என்ன வேணும்...." கிழவன் முகத்தில் எண்ணெய் வழிந்தது. புடவைத்

தலைப்பு எடுத்து கிழவன் முகம் துடைத்தாள். முதுகு நிமிர்த்தி சுவருக்கும், முதுகுக்கும் இடையே தலையணை வைத்தாள்.

"காபி போட்டுத் தரட்டா.... ஒரு வாய் குடிக்கிறியா." கிழவன் உதடுகளை நீவிக் கொண்டான்.

"இரு வரேன்..." இறங்கி வீட்டுக்குள் ஓடினாள்.

பார்த்தசாரதி வர, கூட்டம் வழிவிட்டது. சேறு அதிகமாய் இருந்தது.

"இப்படி புடுங்கி வுட்டீங்களே....' முன்னே குழாய் அருகே போய் நின்றான். குனிந்து காலில் மண் நிமிண்டினான். எடுத்து சேறு துடைத்தான். மரையை அமுத்தி நீர் எதிர்ப்பு எதிரே நீட்டி உள்ளே வைத்துத் திருகினான். நீர் கட்டுப்பட்டது. திருகித் திருகி அழுத்த, மெல்லிய குழாய் போல் வழிந்தது. "இன்னும் யாரு புடிக்கறதுக்கு இருக்கா?"

"ஒரு பத்து பேரு இருக்காங்க.... பால்காரரே."

"புடிச்சுக்குங்க. முடிஞ்சதும் திருகி டைட்டா மூடிடுங்க."

"இத்தினி பேர் இதுக்குள்ளதான் துழாவுனாங்க. உன் கால்ல அது தட்டுப்படுது பாரேன்."

"எங்க தேடினாங்க.... எல்லாம் சண்டைதான் போட்டாங்க."

"சண்டை எதுக்கு? இனிமே நல்லா தண்ணி வரும் ஊருக்கு."

"நல்லா வருமா?"

"வரும். நல்ல ஆழமா நோண்டி சரியா போட்டுருக்கு...."

"உனக்கு புண்ணியம் பார்த்தசாரதி."

"உன்னாலதான் இது வந்துருக்குப்பா."

"அதெல்லாம் இல்லீங்க பெரியவர் அருள், கடவுள் மகிமை."

"விடிஞ்சதும் ஊர் கூடி சம்பந்தப்பட்டவங்களுக்கு ஊரு மாலை மரியாதை செய்யணும்,"

"ஆமா...."

"நமக்குள்ள எதுக்கு மாலை மரியாதையெல்லாம். நானும் இந்தத் தண்ணிதான குடிக்கப் போறேன். முடிஞ்சதும் டைட்டா மூடிடுங்க. ஆபீஸருங்க வந்து பார்த்து சரின்னதும் குழா இறக்கிப் போட்டுறலாம்."

"ஷாக் அடிச்சுது பார்த்தசாரதி."

"யாருக்கு?"

"டெய்லருக்கு..."

"எங்க. பைப்புலயா?"

"இல்ல. அந்த மரத்தடியில்" கை காட்டினார்கள்.

பார்த்தசாரதி ஸ்பானரை டெய்லரிடம் நீட்டிவிட்டு மரத்தருகே போனான். கல்லருகே உட்கார்ந்து மழமழப்பான கல்லைத் தொட்டான்.

"அதான்.... அதான், தொடாத..."

அவன் கைபட்டதும் கல் மெல்ல நெளிந்தது உணர்ந்தான்.

"அம்மா!" என்று கூப்பிட்டான்.

12

ஊரின் மேற்கில் நெடுஞ்சாலை இருந்தது. கிழக்கே ஐயர் வீடு இருந்தது. ஐயர் வீட்டுக்குப் பிறகு கொஞ்சம்

தூரம் வயல்வெளி, பிறகு பொட்டல் நிலம். மேற்கி லிருந்து இறங்கி ஐம்பது கஜம் கிழக்கே நடந்தால் இடது புறமாய் மூன்று தெருக்கள், தெற்கு வடக்காய் போகும். முதல் தெரு பார்த்தசாரதியும், மரகதமும் இருந்த தெரு. நடுத் தெருவில் பைப்புக்காரர் இருந்தார். அதற்கடுத்த தெரு கொஞ்சம் ஏழ்மையானவர்கள். கட்டிட தொழி லாளிகள், நாட் கூலிகள் இருந்தார்கள். கல் சுவர் எழுப்பி மேலே ஓலைக் கூரை போடப்பட்டிருக்கும் வீடுகள்தான் அங்கு அதிகம். நாலாவது தெரு இல்லை. தெரு மாதிரி இரண்டு பக்கமும் வேலிக்காத்தான் இருக்கும். ஒரே ஒரு வீடு ஐயர் வீடு. அது விரைவில் தெருவாகி விடும். முதலில் அங்கே வீடு கட்டிய தன் பெயரே அதற்கு வைத்து விடலாம் என்று ஐயருக்கு நப்பாசை இருந்தது.

கொஞ்சம் ஊர்விட்டு விலகி இருந்தாலும் பின்னால் இப்படி ஒரு சிறப்பு இருக்க வாய்ப்பிருக்கிறது என்பதால் ஐயர் கஷ்டங்களுக்கு நடுவே பல்லை கடித்துக் கொண்டு இருந்தார்.

அவருடையதும் கூரை வீடுதான். கல் சுவர் மேலே கூரை. முன் பக்க சுவர் மட்டும்தான் பூசியிருக்கும். மற்ற மூன்று பக்கமும் செங்கல் தெரியும். பெரிய திண்ணைகள். பின்பக்கம் நந்தவனம். இடதும் வலதும் பயன் தரும் செடிகள். திருமாலிருஞ்சோலை என்று வீட்டிற்கு ஐயர் பெயர் வைத்திருந்தார். சைவரானாலும் பெருமாள் பக்தர். ஐயருக்குப் பன்னிரண்டு வயதிலேயே பணக்கார னாகும் கனவுகள் இருந்தன. 'இது படித்தால் காசு வரும், இந்த பூஜை செய்தால் செல்வம் பெருகும்' என்று எல்லாம் செய்தும் வாழ்க்கை வளம் பெறவில்லை. திருட்டுக் கேஸில் மாட்டி வேலை போனதும் நாலாயிரம் ரூபாய்க்கு இடம் வாங்கி, பத்தாயிரம் ரூபாயில் வீடெழுப்பி, தனக்கென்று ஒருவளை

தயாரித்துக் கொண்டதோடு சரி. வேலை போன பிறகு கம்பெனி கொடுத்த காசு மெல்ல கரைந்து, வாழ்க்கை இருட்டான போது கிழவரை எதேச்சையாகப் பார்த்து, வெயில் வேதனைக்கு அந்தத் திண்ணையில் உட்கார, கிழவர் நெஞ்சு தொட, ஐயர் காலில் விழ, ஊர் வியந்து கிழவரைக் கொண்டாடி மறந்தும் போயிற்று.

ஐயரும் மறந்து போனார். கிழவர் நெஞ்சு தடவின பதினைந்தாம் நாள் மூலைக்கடை பஸ் ஸ்டாப் அருகே ஒரு ஜெனரல் ஸ்டோரில் வேலை கிடைத்தது. ரொம்ப சுமாரான கடை. முதலாளி ஒரு நாகப்பட்டினத்து முஸ்லிம். அவன் கனவுகள் மத்திய கிழக்குப் பாலை வனத்தில் இருந்தன. 'நீ பார்த்துக்க' என்று விட்டுவிட்டு போய் விட்டான். ஆறு மாசம் பொறுத்து 'கடை விற்கிறேன். காசு வேண்டும்" என்று வந்தான் ஐயர், மனைவியின் நாலு பவுன் தாலிச் சங்கிலியை விற்றார். கடையைத் தன் பெயருக்கு மாற்றிக் கொண்டார்.

பொருட்கள் வாங்கப் பணமில்லை. உளுந்து கடன் வாங்கி வடை தட்டச் சொல்லி கடையில் வைத்தார். ஊதுபத்தி 'விற்று காசு தருகிறேன்' என்று வாங்கினார் விபூதிப் பொட்டலம், மோர் மிளகாய், வடாம் வற்றல் என்று போர்டு எழுதினார். பூணூல், குங்குமம், பன்னீர், சந்தனம், குனேகா சென்ட் என்று பரவினார்.

அந்த முஸ்லிம் விட்டுப் போன பழைய டேப்ரிக்கார்டரை சரிபண்ணி, கடைக்கு விளம்பரம், தன் காதுக்குக் குளிர்ச்சி என்று திருப்புகழ், தேவாரம் ஆதித்ய ஹிருதய ஸ்தோத்திரம் என்று பாடல்கள் ஒலி பரப்பினார். "இதெல்லாம் எங்கக் கிடைக்குது ஐயரே!" என்று யாரே கேட்டான்.

மறுநாளே மயிலாப்பூர் போய் காஸெட்டுகள் வாங்கி, வண்ணமாய் அடுக்கி, தரித்திரம் தீர, வியாதி

நீங்க, பேய் பிசாசு விலக, திருமணம் நடக்க என்று போர்டு எழுதி எதிரே ஒவ்வொரு விதமான ஸ்தோத்திரம் குறிப்பிட்டார்.

ஊரில் பல பேருக்கு தரித்திர வியாதி, காமப் பேய், கர்வப் பிசாசு இருந்தது. திருமணம் கனவாய் இருந்தது. நின்று கேட்டார்கள். காஸெட் வாங்கினார்கள். பலன் பெற்றவர்கள் பலன் பெற்றதாய் நம்பினார்கள்.

"ஐயரே, விபூதி வேணும், இது எப்படி நெற்றியில் வுடறது.... உன்னைய மாதிரி பட்டை பட்டையா, இல்லை மாவா பூசணுமா?"

"குழைத்துப் பூசு தம்பி. வெட்கப்படாத பூசு. முதல்ல கேலி பண்ணுவாங்க. அப்புறம் நீ ஏண்டா பூசலைம்பாங்க. கடவுளே! எனக்கு வழி காட்டுன்னு பூசு." அவரெதிரே குழைத்துப் பூசிப் போவான்.

"ஐயரே! மனசே சரியில்லை." கடையில் எவனோ குந்தி புலம்புவான்.

"ஏம்ப்பா?"

"நிறைய தப்பு பண்ணிட்டேன்."

"போனாப் போறது. எப்ப கண்ணால ஜலம் விட்டு இதுக்கு வருத்தப்பட்டாயோ, அப்பவே ஒழிஞ்சு போச்சு உன் பாவமெல்லாம்."

"எனக்கு விபூதி எதுனா மந்திரிச்சி கொடு."

"விபூதி மந்திரிச்சா?"

"ஒரு பையனுக்குக் கொடுத்தியாமே..... அவன் நல்லா இருக்கானாமே...."

"எனக்குத் தெரியாதுப்பா அதெல்லாம்."

"நான் இனிமே தப்பே பண்ணமாட்டேன். ஐயரே! எங்கா ஆத்தா சத்தியமா கெட்ட வழி போகமாட்டேன்.

எனக்கு விபூதி கொடு ஐயரே.... மாட்டேன்னு சொல்லி டாதே." வெடித்துக் கதறுபவனைப் பார்க்க மனசு வேதனையில் பரிதவிக்கும்.

"என்ன தெரியும் எனக்கு..... என்ன மந்திரம் தெரியும்? நானும் உன்னை மாதிரி நாய் பிறவிதானே...." மனசுள் எண்ணம் ஓடும். மாட்டேன் என்றால் இவன் மறுபடி தவறுக்குப் போகலாம். துக்கத்தில் குடிக்கத் துவங்கலாம்.

விபூதியை உள்ளங்கையில் வைத்து மூடினார். நான் என்ன சித்தனா.... சாமியாரா.... என்ன அயோக்கியத்தனம் இது தெரியாதுன்னு சொல்லிடு. வேணாம் சொன்னால் உடைந்து விடுவான். நம்பிக்கை தருவது தவறல்ல, சரி.... எப்படிச் செய்வாய்... என்ன மந்திரம் தெரியும்.... மந்திரம் எதுக்கு.... நல்ல மனசு போறாதா....

நல்ல மனசா..... உனக்கா.... நீயும் காசாசை பிடித்தவன்தானே.... அந்தக் கிழவன் தொட்டதும் கொஞ்சம் தெளிந்தாய். அவ்வளவுதான்.

"ஆமாம். கிழவரைத் தொட்டதும்.... அட..... கிழவரை நினைத்து விபூதி கொடுத்தால் என்ன..."

ஐயர் மனம் குவித்தார். 'திண்ணைக் கிழவரே.... நான் ஐயர் பேசுகிறேன். எனக்கு எதுவும் தெரியவில்லை. இங்கு ஒரு ஜென்மம் அழுது புலம்புகிறது. தப்பு பண்ணி விட்டு அரற்றுகிறது. பார்க்க பாவமாய் இருக்கிறது. எனக்கு எதுவும் தெரியவில்லை. நீ ஏதாவது பண்ணு. இது உன் காலடி மண். உன் மனக்கோட்டை அழுக்கு என்று நினைத்து அவனிடம் பூசுகிறேன். திண்ணைக் கிழவரே இவனுக்கு அருள் செய். இவனை சமனப் படுத்து.'

கூனிக் குறுகி உட்கார்ந்திருக்கும் திண்ணைக் கிழவர் காலடி மண் மானசீகமாய் எடுத்து மனசால்

விபூதியாக்கி கை விரித்துப் பார்த்தார். விபூதி கொஞ்சம் கறுப்பாய் இருந்தது. ஈரம் பட்டுக் கறுப்பாயிற்றோ.... 'ஏம்பா.... இங்க வா... கண்ணை மூடு. பகவானே. சர்வேச்வரா....' அப்படியே அவன் நெற்றியில் பூசினார். உடம்பெல்லாம் துடைத்தார். 'போ...போ' என்று துரத்தினார்.

அவன் முகம் மலரப் போனான்.

அவன் துக்கத்தின் உச்ச நேரமும். அவனுக்குக் கிடைத்த சமாதானத்து நேரமும் ஒன்றாய் இருக்க, மனம் தெளிந்தான். புதிதானான்.

"அந்த ஐயரு லேசுபாசான ஆள் இல்லை. ஊதுபத்தி வியாபாரி இல்லை. அவரு வேற மாதிரி ஆள். மந்திரமெல்லாம் தெரிஞ்சிருக்கு. நீ சும்மா போ. கடையாண்ட நில்லு போதும். மனசு கஷ்டமெல்லாம் தெளிஞ்சு திரும்புவ."

வருவார்கள். அயிகிரி நந்தினி பாட்டு கேட்பார்கள். கடையிலிருந்து வரும் வாசனை உணர்வார்கள். இரண்டு கட்டு ஊதுபத்தி, கற்பூரம் வாங்குவார்கள். மீனாட்சி யம்மன் தாலாட்டில் சொக்கிப் போவார்கள். "நாற்றிசை விளங்க ஏற்றிய விளக்கே தாயே.... தாலேலோ.... போற்றிய பேர்க்கு புகழ் தரும் நிலவே, தாயே தாலேலோ" பாட்டு வாசனை, சுத்தமான சூழ்நிலை, ஐயரின் இதமான பேச்சு.... கடை விருத்தியடைந்தது.

"ஐயரே, நீ என் தங்கச்சி கல்யாணத்துக்கு வரணும்."

"என்னிக்கு?"

"அடுத்த புதன்."

"அடட, நான் மேல்மருவத்தூர் போறேனே...."

"அப்ப நீயே வேற தேதி சொல்லு. நோட்டீஸ் அடிக்கணும்."

"ஏம்பா?"

"நீ வரணும் எங்க வூட்டுக்கு."

"அட.... என்ன இது!"

"நீ வந்து நல்லா இருன்னு சொல்லணும், என் தங்கச்சிய."

"சரி... புதன்கிழமையே வரேன்."

திருட்டு கேஸ் ஐயருக்கு திசை மாறிற்று. மாற அந்தத் திண்ணைக் கிழவர் காரணம் என்று தோன்றிற்று.

கொஞ்சம் காசு, நிறைய மதிப்பு, இது சுபமான இடம் அதிக காசு.... குறைந்த மதிப்பு.... அசுபமான நிலை...

"நாலு காசு வச்சுருக்காம்பா... எப்படி?"

"பொம்பளை வச்சு வியாபாரம். அதான்."

"அட, அதான் அவன் கொடுத்த காபி குமட்டுது."

நாய் விற்ற காசு குரைக்குமா? குரைக்காது. அந்தக் காசு குலுங்கினால் குரைப்பது போல் காதில் விழும். மனசு குரைப்பதாய் நினைத்துக் கொள்ளும். புத்திக்கு நல்லது-கெட்டது என்று பிரிவு உண்டு. விருப்பு - வெறுப்பு என்று பேதைமை உண்டு. ஒன்றை விரும்பினால் அதற்கு எதிரானது மீது வெறுப்பு வருகிறது. விரும்பியது நல்லதென்றும், வெறுப்பதைக் கெட்டதென்றும் நினைக்கத் தோன்றுகிறது. மதுவின் மீது உனக்கு விருப்பு இருப்பின் பால் மீது வெறுப்பு வருகிறது. பால் மீது விருப்பம் இருப்பின் மதுமீது வெறுப்பு வருகிறது. மது அருந்துபவன் பால் குடிப்பவனை எதிரியாகவும், பால்

குடிப்பவன் மது அருந்துபவனை நீசனாகனவும் நினைக்கிறார்கள். உண்மையில் நல்லது கெட்டது எதுவுமில்லை. இருக்கும் இடத்துக்குத் தகுந்த மாதிரி கத்துகிறார்கள். இந்த இடமே. இந்த பூமியே என்னுடையதில்லை என்கிற நிலை வர, இங்கே விருப்பு - வெறுப்பு இல்லை வேண்டுவது வேண்டாதது இல்லை.

ஐயருக்கு நாலுவித ஜனங்களையும் பார்க்க, இந்தப் பேதைமை புரிந்து போயிற்று. வாழ்க்கையில் விழுந்த அடி யோசிக்க வைத்தது. இப்போது உள்ள சூழ்நிலை தெளிவு கொடுத்தது. அவர் பூமியின் விளிம்புக்கு வந்து பூமியை வேடிக்கை பார்த்தார். வேடிக்கை பார்க்க பழகிக் கொண்டார். ஊர் அவரை 'விவேகி' என்றது.

விவேகிக்கும் காமம் உண்டு. கொஞ்சம் அதிக மாகவே உண்டு. காரணம், விவேகி தன்னுள் உணர்ச்சி மயமாய் இருப்பவன். பிறர் துக்கம் கண்டு பரிதவித்து தெளிபவன். எல்லா உணர்ச்சிமயமான நேரத்திலும் இறையுணர்வோடு இருப்பவன். எனவே அவன் காமம் கரை மீறாதது. கயமை இல்லாதது, காசுக்கு போகாதது.

பாலசுப்ரமண்ய ஐயரின் மனைவி சரஸ்வதி, புருஷன் பட்ட கஷ்டம் தெரிந்தவள். அவன் புதிதாய் மாறுவதும் உணர்ந்தவள்.

"என்ன, தூங்கலையா..." இரவு உணவு முடித்து அருகே அமர்ந்து கேட்பாள். பாலசுப்ரமண்ய ஐயர் கடையில் அன்று எவனோ சொன்ன துக்கக் கதையை அவளுக்குச் சொல்வார். "பாரு சரஸ்வதி! ஊர்ல எத்தனை பேருக்கு எத்தனை விதமான கஷ்டம். ஈஸ்வரா...." நெட்டுயிர்ப்பாள்.

"இதெல்லாம் கேட்கறப்போ நாம பட்ட கஷ்டம் ஒண்ணுமேயில்லை."

"ஆனா, வேலை போனபோது என்னமா தவிச்சுப் போனேள்."

"கெட்ட நேரம். ஏதோ நீயாக் கொண்டு அஞ்சு ரூபா, பத்து ரூபாய்ல குடித்தனம் பண்ணின. வேற பொம்மனாட்டியா இருந்தா இந்நேரம் ஓடிப்போ யிருப்பா."

"கஷ்டத்துக்கு ஓடிப்போறவ பொம்மனாட்டியா? என்னவோ ஒரு கடை கிடைச்சு, அதுல நாலு காசும் வருது நமக்கு. ஆனா பாவம், கார்த்தால ஏழு மணிக்குக் கடைல உட்கார்ந்தா ராத்திரி எட்டு, எட்டரை ஆயிடறது கடை அடைக்க. ரொம்ப பாவம்.'

"நீயும்தான் பாவம். கொட்டு கொட்டுன்னு ஒரு பொட்டல் காட்டுல, குடிசை வாசல்ல உட்கார்ந்திருக்க. உனக்கு ஒரு உதவிகூட பண்ண முடியலை என்னால."

"போறுமே.... என்ன உதவி எனக்கு பண்ணணும் - கால் பிடிச்சு விடறேன் தூங்குங்கோ,."

"ஹாஸ்டல்ல விட்ட குழந்தை எப்படித் தூங்க றானோ...." ஐயர் கவலைப்படுவார்.

"அவனுக்கென்ன. ராமகிருஷ்ணா மிஷன் ஹாஸ்டல் கெட்டியா கோதுமைக் கஞ்சி, ஊறுகாய், நல்லா கிண்ணுன்னு ஆயிடுவான்."

"பாவம்.... வாய்க்கு ருசியா சாப்பிடற வயது."

"இன்னும் ஒரு வருஷம்... பி.காம்., முடிச்சுட்டு வரட்டும். வகையா சமைச்சுப் போடறேன்."

"வர சண்டே குழந்தையைப் பார்க்க போலாமா?"

"போலாம். தூங்குங்கோ."

"தூக்கம் வரலை."

ரவிக்கையை உருவிப் போட்டுவிட்டு "ஏன் தூக்கம் வரலை...." சரஸ்வதி கொஞ்சுவாள். அவள் முதுகு முழுவதும் தடவி ஐயர் முகம் பார்ப்பார்.

"என்ன பார்வை...."

"நீ கொடுப்பினை சரஸ்வதி."

"நீயும்தான்." பன்மை ஒருமையாகும். மனசு ஒரு முகம்பட்டு உடம்பு ஒருமுகப்படத் தவிக்கும். நாகமும் சாரையுமாய் பின்னிக் கொள்ளும். பாலசுப்ரமண்ய ஐயருக்குப் பின்னிக் கொள்ளும் நேரமும் இறையுணர்வு வரும். எத்தனை கோடி இன்பம் வைத்தாய் இறைவா என்று பாட்டு வரும். நாற்பத்தெட்டு வயசுக்கு இத்தனை சந்தோஷமாய் இருபத்தெட்டு வயசாய் இருந்த அனுபவம் ஏற்படுகிறதே என்கிற நினைவு வரும். இது கிடைக்காது எத்தனை பேர் வேதனைப்படுகிறார்கள் என்று வியப்பு வரும்.

"இப்பவும் என்ன யோசனை..." மல்லாந்து கிடந்து அவர் நெஞ்சு தடவி மனைவி கேட்டாள்.

"இது காமமா.... காதலா சரஸ்வதி?"

"எனக்கு ரெண்டுமில்லை."

"பின்ன... என் கூட?"

"இது கடமை. பெண்டாட்டி கடமை. தூக்கம் வரலைன்னு தவிக்கறேளே..."

"அடி என் அம்மா.... என் செல்ல ராசாத்தி.... கடமை செய்கிற மனைவி மீது காதல் பொங்கும். காதல் பொங்கி இறுக்கிக் கொண்ட புருஷன் மீது மனைவிக்கு காமம் தூக்கும்.

"காமம் வேறு, காதல் வேறா.." காதல் உணர்வு, காமம் அதை வெளிப்படுத்தும் விதம்.

புருஷனும், மனைவியும் நிறைவில் அடித்துப் போட்டது. போல் தூங்கினார்கள்.

எங்கோ தவலை இடிபடும் சப்தம் கேட்டது. குரல்கள் அலைந்தன.

சரஸ்வதி எழுந்து கதவு திறந்தாள். விடிந்திருந்தது. மூணாவது தெருவுக்குப் போய் விவரம் கேட்டாள். தண்ணீர் வருவது தெரிந்தது. உள்ளே ஓடிப்போய் புருஷனை எழுப்பினாள்.

ஆளுக்கு இரண்டு தவலை தூக்கி, தூக்கக் கலக்கத்துடன் ஓடி வந்தார்கள்.

பார்த்தசாரதி மரையை இறுக்கி மூடினான். சொட்டு ஜலம் கூட வராது அடைத்தான்.

"ஐயா.... நாங்க தண்ணி புடிக்கவேயில்லை...." காலி தவலைகளுடன் தம்பதிகளைப் பார்த்தான்.

"ஏங்க, இத்தினி பேர் புடிச்சாங்களே."

"தூங்கிட்டம், தெரியவேயில்லை." சரஸ்வதி வெகுளியாய் சொன்னாள்.

அவள் புருஷனுடன் கலந்து தூங்கினாள் என்பதை முகம் காட்டிற்று. அருகே நின்ற ஐயர் மீது பெண் வாசனை வீசிற்று. பார்த்தசாரதி புன்னகை செய்தான்.

"மாரியாத்தாளுக்கு காப்பு கட்டின மாதிரி ஊரே திரண்டு தண்ணி தூக்கியிருக்கு... எப்படித் தூங்கினீங்க ரெண்டு பேரும்?"

"ரொம்ப நேரம் பேசிட்டிருந்தோம். அப்படியே அசந்து தூங்கிட்டோம்."

"பேசி பேசி தூங்கிட்டீங்களாக்கும்...."

"அம்மா கொஞ்சம் தள்ளி நில்லுங்க...." மரை திருப்பினான். தண்ணீர் கொட்டியது.

"தாங்க்யூ வெரி மச் உங்க பேர் என்ன? பார்த்திருக்கேன், பேர் தெரியாது."

"பார்த்தசாரதி, பால் வியாபாரம்"

"எம் பேர் பாலசுப்ரமண்ய ஐயர். இங்க ஐயர் ஐயர்னு கூப்பிடுவா எல்லாரும்.... இவ பேர் சரஸ்வதி." அவர் மலர்ந்து கை கொடுத்தார் அவர் மனைவி கரம் கூப்பி வணங்கினாள்.

வெத்து மார்பும், பூணூலும், தூக்கி மடித்த வேட்டியும், கலைந்த தலை மனைவியும், அவள் மூக்குச் சுடரும், இறங்கின கண்ணும், பார்வதி பரமசிவனாய் பார்த்தசாரதிக்குத் தோன்றிற்று.

தலைகுனிந்து சிரசுக்கு மேல் கரம் தூக்கி ஸ்பானரோடு வணங்கினான்.

அசட்டுச் சிவப்பில் அகல உடம்பு அளவான மீசை.... உப்பிய கன்னம்.... சிவந்த கண்கள்.... மடிந்த கர்வ உதடு... கொஞ்சம் வசதியான தொந்தி.... வளைந்த கால்கள்.... கும்பிட்ட கையில் ஸ்பானர்.

இவன் இந்திரன் - தேவர்களின் தலைவன். போர் வீரன், பல பெண்களின் காதல் நாயகன், வெற்றி அல்லது வீர மரணம் என்று நினைக்கிறவன்..... அரசன் நியாயாதிபதி.

ஐயருக்கு தோன்றிற்று. அவனை மிகவும் பிடித்துப் போயிற்று.

"சர்வாபீஷ்டசித்திரஸ்து" என்றார். அவன் மனசில் அந்தக் கல்லை நகர்த்தலாமா, கூடாதா என்கிற கேள்விதான் இருந்தது.

13

எதிரும் புதிருமாய் கொள்வது போல வாழ்க்கை ஓட்டத்தில் லட்சக்கணக்கான ஆட்களை ஒரு மனிதன் சந்திக்க நேர்வதுண்டு. அதில் சில ஆயிரம் பேர்களின் பெயரும், தொழிலும் சில - நூறு பேர்களின் குணாதிசயமும் வாழ்வு முறையும் அறியக்கூடும். ஆனால், இத்தனை ஜனங்களுடே தன்னோடு இணையாய் நடக்கக்கூடிய ஜீவனை, தோழனை கண்டுபிடித்துக் கொள்வது மிக்கக் கடினமான காரியம்.

அதுவும் பார்த்த மாத்திரத்தில், பெயர் கேட்ட மாத்திரத்தில் இது நம் சிநேகிதம் என்று உணர்வு வர, அவ்வுணர்வு புத்தியில் தைத்து இன்னும் ஆழ ஊடுருவி பார்த்தசாரதி, மரகதத்தை முதன்முதலில் பார்த்ததும் இப்படி ஒரு எண்ணம் உண்டாயிற்று. அப்போது மரகதம் முருங்கை மரத்திற்கு நீர் வார்த்துக் கொண்டிருந்தாள். அந்த மனிதரைப் பார்த்து அந்த சினேகிதத்தை உறுதி செய்வது வெகு சிலருக்கே அமைகிறது.

"எத்தினி தண்ணி ஊத்தினாலும் மரம் சோகையா இருக்குது" என்று தனக்கே உரத்துப் பேசிக் கொண்டிருந்தாள்.

"கொஞ்சம் கிளைய தறிச்சிவுட்டுருங்க, படபடன்னு கிளம்பிடும்.. தறிக்கிறபோது ரெண்டு வார்த்தை திட்டுங்க."

"திட்டறதா... யாரை?"

"முருங்கை மரத்தை."

"முருங்கை மரத்தையா?" சிரித்தாள்.

"என்னான்னு திட்டறது?"

"அரிவா கொண்டா. நான் திட்டி வெட்டறேன்."

"என்னாண்ட அரிவா இல்லையே."

உள்ள போய் அரிவாள் எடுத்து வந்து சுவர் ஏறி குதித்து அரிவாளை உயர்த்திப் பிடித்து அதட்டினான்.

"நாள் தவறாத தண்ணி ஊத்தறாங்க இல்லை. உனக்கென்னா கேடு? ஊத்தின தண்ணிக்கு நன்றி காட்ட வேணாம், திமிருதானே. உன்னிய வெட்டினாதான் சரி வருவ...." பளிச்சென்று இடமும் வலமும் இரண்டு கிளைகளைத் தறித்தான்.

மரகதம் வாய்விட்டுச் சிரித்தாள்.

"இதப்பாரே. முருங்கை மரத்தோட சண்டை போடுது." மறுபடி சிரித்தாள். எல்லா கிளைகளும் வெட்டிய பிறகு தண்ணீர் ஊற்றச் சொன்னான்.

"நீ பேசறது அதுக்குப் புரியுமா?"

"புரியும்... எல்லாம் உசிருதானே?"

"வெட்டினியே, நோவாதா?"

"நோவும்.... கொஞ்சம் போறும். மருந்து போட்டுற லாம்." பசுஞ்சாணி கிளை நுனிகளில் அப்பினான்.

"அப்ப நல்லா காச்சுருமா?"

"காச்சுரும்."

"காச்சி குலுங்கினா அப்பவும் பேசுவியா?"

"பேசலாமே. என் ராசாத்தி.... எங்கம்மா.... நல்லா சாப்புடுன்னு உரம் போடலாம். தடவிக் கொடுக்கலாம்." தடவினான்.

இதுதான் மரகதத்தை அசைத்தது. அவனை விழி விரியப் பார்த்தாள்.

"எல்லா மனுஷாளுக்கும் தோணுமா மரத்தோட, செடியோட பேச.... இது ஒரு உசிருன்னு எல்லோருக்கும்

தோணுமா? சில ஜென்மத்துக்குத்தான் புரியும். உசிரை உசிருன்னு நினைச்சு துக்கப்பட்டதை புரிஞ்சுக்க...

அவனும் அவளை உணர்ந்தான். அந்தக் குரலில் உள்ள குழைவும், நடுக்கமும் அவனைத் தைக்க. ஊடுருவப் பார்த்தான். நட்பு அங்கே தொட்டுக் கொண்டு நின்றது இது என் சிநேகிதம் என்று புரிந்தது.

மறுபடி இதே கிராமத்தில் அவன் சிநேகம் உணர்ந்தான். ஐயர் கை உயர்த்தி தன் மனைவி அருகே இருக்க. 'சர்வாபீஷ்ட சித்திரஸ்து' என்று வாழ்த்திய வுடன் அன்று உணர்ந்தாள். நெஞ்சடியில் உள்ள சந்தேகங்களை இவரிடம் சொல்லலாம் என்று தெளிந் தான். வணங்கினான்.

நல்ல நட்பு, பேசாது முகம் பார்த்து உணர்வு தெரிந்து கொள்ளும்.

" என்ன பார்த்தசாரதி, ஏதாவது பிரச்சினையா?"

"ஆமாங்க."

"தண்ணி குழால ஏதாவது ப்ராபளமா?"

"இல்லீங்க...."

"என்ன சொல்லு.... தயங்காதே."

"முதல்ல தண்ணி பிடிங்க. அப்புறம் பேசலாம்." ஐயர் மனைவியால் இரண்டு தவலை ஒன்றாய் தூக்க முடியவில்லை. வலுவில்லை. பார்த்தசாரதி குழாய் மூடி ஸ்பானர் இடுப்பில் செருகினான்.

"வுடுங்கய்யா ஒரு தவலை, எடுத்து உங்க இடுப்புல வையுங்க ஐயரே, அந்தத் தவலை கொடுங்க இப்படி....." பார்த்தசாரதி இரண்டு நீர் தவலைகளையும் பக்கெட் போல தூக்கி நடக்க, அவன் வேகத்துக்கு ஈடு தர முடியாமல் புருஷனும் மனைவியும் தண்ணீர் நிறைந்த

தவலைகளுடன் பின்னே ஓடினார்கள் திண்ணையில் தவலைகள் இறக்கப்பட்டன.

வாசல் கதவு திறந்ததும் ஐயர், பார்த்தசாரதியை உள்ளே அழைத்தார். "இங்கேயே உட்கார்ந்துக்கலாமே"

"வேணாம். உள்ள வாங்க"

"கொஞ்சம் இருங்களேன்." ஐயரின் மனைவி மெத்தைகளை சுருட்டினாள். புருஷனும் மனைவியும் சந்தோஷமாய் இருந்திருந்தார்கள் என்பதை தரையில் கிடந்த வாடிய மல்லிகைப் பூக்கள் சொல்லின...

பார்த்தசாரதி உள்ளே நுழைய கூச்சமாய் இருந்தது.

"இங்கேயே இருக்கலாமே."

"உள்ளே வாங்க பார்த்தசாரதி."

"ஒரு நிமிஷம்ப்பா." சரஸ்வதி வேகமாய் தரை கூட்டினாள். இரண்டு தடுக்கு போட்டாள். ஸ்டவ் மூட்டி பசும் பாலை காய்ச்சத் துவங்கினாள். காபி டிகாக்ஷன்! ஃபில்டரை தட்டினாள்.

"சொல்லுங்க பார்த்தசாரதி...."

"நம்ம ஊர்ல பைப்புக்காரர் தெரியுமோ?"

"தெரியும்,"

"அந்த கிழவரு மேல உங்களுக்கு ரொம்ப மரியாதை. ஆனா, என்னவோ திடும்னு அவரை தனியா வுட்டுட்டீங்க. போர்டு போட்டு மாலை போட்டு எல்லாம் செய்த பிறகு..."

"தப்பு பார்த்தசாரதி. நான் போர்டு போடலை. மாலை போட்டேன். அவருக்கு இது புடிக்கலை. கழட்டி தூரப் போட்டுட்டாரு. இந்த கூட்டம் அவருக்கு சரி

வரலை 'போடா சும்பன்களா'ன்னு எல்லாம் கலைச் சுட்டாரு. தப்பான ஆளோட இரண்டு பேரு கை வைச்சதால எல்லாம் கெட்டுருச்சு. எனக்கும் அவரை எக்ஸிபிஷனா பண்றது மனசுக்கு ஒப்பலை. ஒதுங் கிட்டேன்."

"அவரைத் தொடக்கூடாதுங்க. அது தவறுதான். ஏன் ஐயரு இவங்களோட சேர்ந்து இப்படிச் செய்ய றாருன்னு கேள்வி வந்தது. ஆனா, கிழவர் பத்தி எதுவும் தெரியலை. சும்மா இருந்துட்டேன்."

"சொல்லு...."

"என்னிய கிழவரு ஏதோ செய்துட்டாருங்க"

"ஏதோனா..."

"ஏதோ நல்லது."

"அப்படிச் சொல்லு. என்ன செய்தாரு?"

"தொட்டு என்னவோ செய்தாமாதிரி ஒரு எண்ணம். புரியலை."

"எனக்கும் நடந்தது பார்த்தசாரதி. அவரு முதுகு தடவி எல்லாம் சரியாயிடும்னாரு. அவரு பக்கத்திலேயே தூங்கினேன்."

"என்னிய தள்ளி வுட்டாறுங்க... மயக்கம் வராப்புல ஏதோ தூக்கி உள்ள வச்சுட்டாரு. எனக்கு விவரமா எதுவும் சொல்லத் தெரியலை. ஆனா, என்னையே எதுக்கோ உபயோகப்படுத்தியிருக்காருன்னு தோணுது. இந்த பைப்புக்குக்கூட."

"சொன்னாங்க பார்த்தசாரதி, இரண்டு நாள்ல முடிச்சதாமே இது..."

"ஒரே நாளுங்க. ஏதோ தடம் காமிச்சு இப்படிப் போன மாதிரி. பாதி வேலை செய்யறப்பவே முழு

வேலையும் சுளுவா முடிஞ்சுது நம்ம ஊரு மாறப் போவுதுங்க ஐயா. வேற விதமா வளரப் போவுது.

"புரியலை."

"எனக்கும் ஒரு கல்லு தெம்பட்டுதுங்க. வெறும் கல்லா தெரியலை. நீங்க வந்து பார்க்கணும் அதை என்னா செய்யறதுன்னு சொல்லணும்."

"எனக்கு என்னப்பா தெரியும்?"

"நீங்க வந்து பார்த்தீங்கன்னா உங்களுக்கும் எதுனா தெரியும்னு தோணுதுங்க."

"எங்க?"

"பெட்டி கிட்ட.

"உடனே அப்பவே காமிச்சுருக்கலாமே."

"அம்மா கூட இருந்தாங்க. நான் எல்லார் கிட்டயும் சொல்ல விரும்பலை."

"கரெக்ட், ஒண்ணு செய்வோம்.... நாம் காபி குடிச்சுட்டு போய் பார்ப்போம். போய் பார்த்தா..."

"நடக்கறபடி நடக்கட்டுங்க...."

"ஐயர் ஏதும் திட்டம் சொல்வதற்கு முன் வழி மறித்தது போல் பேசினான்.

ஐயர் நிமிர்ந்து பார்த்தார்.

கரெக்ட். நடக்கறபடி நடக்கட்டும்.

சரஸ்வதி காபி கலந்து புருஷனுக்கும் பார்த்த சாரதிக்கும் டம்பளர்களை தட்டில் வைத்து நீட்டினாள்.

"ஏன் இன்னும் கல்யாணம் பண்ணிக்கலை?" திடீரென்று கேட்டாள்.

யாரையோ கேட்கிற என்கிற மாதிரி ஒரு சில விநாடிகள் தாமதித்த பார்த்தசாரதி, திடுக்கிட்டு நிமிர்ந்தான்.

"செய்துடணுங்க."

"வயசாயிடுச்சு போலிருக்கே."

"என்ன வயசு? சின்னப் பையன்தான். உருவம் கொஞ்சம் பெரிசாருக்கு." ஐயர் பேசினார்.

"இல்லீங்க, இருபத்தேழு வயசு முடிஞ்சிருக்கும்."

"பாவம், கூட பொறந்த தங்கைகள் இருந்துருக்கும்."

'இப்படியில்லீங்க. நா எங்கப்பாவுக்கு ஒரே புள்ளை. எங்கப்பாரு இப்பதான் நாலு வருஷம் முன்னாடி போனாரு. இரண்டு மூணு இடம் பார்த்தாங்க. எங்க ஜாதி பொண்ணுங்களுக்கு நான் மாடு வச்சு பிழைக்கறது புடிக்கலை. எனக்கு கை கட்டி ஆபீஸ் வேலை செய்ய மனசு வரலை..."

"எதுக்கு ஆபீஸ் உத்தியோகம்? நார்றப் பொழப் புன்னா அது... என்னிக்கு சுயம்மா கடைன்னு வெச் சேனோ அன்னிலேர்ந்து நிம்மதியா இருக்கேன். நான் அனுபவஸ்தன் சொல்றேன். மறந்துகூட ஆபீஸ் வேலைக்குப் போகாதே."

"என்னைப் பார்த்தா கொஞ்சம் காட்டான் மாதிரி இருக்கும். அதும் ஒரு பயம். அப்படியே தள்ளிப் போயிடுச்சு."

"அமையும் நிச்சயம், உசந்த பொண்ணா அமையும். வலது கை காட்டு."

"அடடா.... எனக்கொண்ணும் ஏக்கம் இல்லீங்க...." பார்த்தசாரதி சிரித்தான்.

"உனக்கு ஏக்கம்னு சொன்னேனா.... வலது கை காட்டு.... எப்ப விவாஹப் ப்ராப்திங்னு பார்த்துடலாம்."

"மனுச வாழ்க்கை உள்ளங்கைல தெரியுங்களா... சமாதானத்துக்கு ஏதும் சொல்லலாம்."

"தெரியும்பா.... இயற்கை பலவிதமான சூட்சுமம் நமக்கு கொடுத்துருக்கு. நமக்கு பார்க்கக் தெரியாது. பார்த்தது சொல்லத் தெரியாது. அப்படியே பார்த்தது சொல்ல நினைச்சாலும் வாயடைச்சுரும்."

வெளியே வெளிச்சம் மெல்ல பரவி, வாசல் பந்தலின் கீழ் நீள நீளமாய் நிழல்கள் விழுந்தன. காக்கைகள் இரைக்கு வேகமாய் கத்தின.

பார்த்தசாரதி வலது உள்ளங்கை விரித்தான். வீட்டின் நிழல் ஐயருக்கு ரேகை காட்டவில்லை. வலது விரல்களைத் தொட்டு வெளிச்சத்துக்குத் திருப்பினார். அப்போது ரேகை ஏதும் காணப்படவில்லை.

உள்ளங்கையை இழுத்து முகத்துக்கு நேரே வைத்து உற்றுப் பார்த்தார். பார்த்தசாரதியின் உள்ளங்கையில் மெல்லியதாய் ஒரு மஞ்சள் வெளிச்சம் வந்தது. வெளிச்சத்துக்கு முன் பக்கம் கறுப்பாய் லிங்க ரூபமாய் ஒரு கல் தெரிந்தது. கல்லின் நடுவே உதடுகள் தோன்றின. மெல்ல உதடுகள் பிரித்து 'வா' என்று கட்டளையிட்டது.

ஐயரின் கண்கள் நிலைகுத்தின. முகம் வெளிறியது. மறுபடி கையை அருகே இழுத்தார். கல் உதடு பிரிந்து பேசியது, 'வா!'

நிமிர்ந்து பார்த்தசாரதியைப் பார்த்தார். முழங்கைக்கு பிறகு இருட்டாய் இருந்தது. கண்கள் சொருவின. அழுத்தி அழுத்தி இமைகள் நெரித்து மறுபடி பார்க்க,

கல் மறுபடி கூப்பிட்டது

'வா.'

மெல்ல வெளிச்சம் மறைய, கல்லும் மறைந்தது. ரேகைகள் தோன்றின. ஆனால், எந்த ரேகைக்கும் அர்த்தம் தெரியாதது போல் இருந்தது.

ஐயர் மறுபடி நிமிர்ந்தார்.

பார்த்தசாரதி அவரையே பார்த்துக் கொண்டிருந்தான்.

"என்னங்க?"

ஐயர் பதில் பேசாது ரேகைகளையே பார்த்துக் கொண்டிருந்தார்.

"கேட்கறாரே, பதில் சொல்லுங்கோ. வாயடைச்சு உட்கார்ந்திருக்கேள்."

ஒரு ஆளை ரேகை பார்க்கிறேன் என்று சொல்லி கை பார்த்து பேசாதிருப்பது அநாகரீகம் என்று சரஸ்வதிக்குப் பட்டது.

ஐயர் அந்த கைகளை கண்ணில் ஒற்றிக் கொண்டார்.

"என்னங்க?"

"நீ கடவுளோட குழந்தையப்பா. உனக்கு நான் ஏதும் சொல்ல முடியாது. வா, போலாம்."

"இவருக்கு ரேகையும் தெரியாது. ஒண்ணும் தெரியாது சும்மா ஏதாவது புருடா அடிப்பார். உங்ககிட்டே பயம். எழுந்துட்டார். அப்படித்தானே." சரஸ்வதி கேலி செய்தாள்.

"ஆமாம். அப்படித்தான்."

ஐயர் தரை பார்த்துப் பேசினார். வாசலுக்கு நகர்ந்தார், முதன்முதலாய் தன் கேலிக்கு சீறாத புருஷனைக் கண்டு சரஸ்வதிக்கு வியப்பாய் இருந்தது.

"ஒரு நா சாப்பிட வாங்க." பார்த்தசாரதியை அழைத்தாள்.

"நான் வரலாமா.... ஐயமாரு...."

"அதெல்லாம் ஒண்ணுமில்லை. எங்களுக்கு நல்ல மனுஷாதான் முக்கியம், நான் நன்னா சமைப்பேன்."

"வரேம்மா.' பொதுவாய் சொல்லி, நெஞ்செதிரே கை குவித்தான்."

ஐயரும் பால்காரரும் நடந்தார்கள்.

"என்னங்க.... ஏதோ பார்த்தீங்க.... என்னவோ சொல்றீங்க."

"என்னவோ நடக்கப் போறது பார்த்தசாரதி, இந்த ஊர்ல."

"உங்களுக்குப் பட்டுச்சா...."

"ஆமாம்."

"இப்பமா..."

"இப்ப உன் கை பார்த்தபோது."

"நடக்கட்டுங்க. நாம பேசாத சாட்சியா நிப்பம்."

"நிற்போம்."

மேலேறினார்கள். சேறு தாண்டி புதர் அருகே போனார்கள்.

"அந்தக் கல்லுதாங்க." பார்த்தசாரதி சற்றுத் தொலைவிலிருந்து கை காட்டினான்.

ஐயர் போய் செடிகளை விலக்கினார். புல் மெத்தையில் குத்திட்டு உட்கார்ந்தார்.

முழு உயரத்திற்கு கல் தென்பட்டது. உள்ளங் கையில் தென்பட்ட அதே கல் காணப்பட்டது. ஆனால், உதடுகள் இல்லை. அந்தக் கல்லைப் பார்த்ததும் அது பெண் கல் என்று தெரிந்தது. அசாத்தியமான ஒரு

மழமழப்பு கல்லில் இருந்தது. ஆற்றுத் தண்ணீர் பட்டுப் பட்டு பதமான கல் மாதிரி இருந்தது. உச்சி மிகச் சரியான வளைவோடு இருந்தது.

ஐயர் அருகே மெல்ல சம்மணமிட்டு உட்கார்ந்தார்.

'அம்மா' என்று கூப்பிட்டார். கல் அசையாதிருந்தது. காற்று வேகமாய் அடித்து செடிகளைக் கலைத்தது. வேல மரத்தை வேகமாய் உலுப்பியது.

மெயின் ரோட்டில் பெரிய மடியை உடைய வெள்ளாடு நடந்து போய்க் கொண்டிருந்தது. வேகமாய் திரும்பி எகிறி எகிறிக் குதித்தது. மறுபடி காற்று வீசி சகலமும் சிலிர்த்தது.

"அம்மா சொல்லு.... என்ன பண்ணணும். சொல்லு..... கட்டளை சொல்லு.... ஐயரின் கணுக்காலுக்கு நாலு விரல் இடைவெளியில் கல் இருக்க, ஆடு புழுதி கிளம்ப, மண் சரிவில் சரிந்து இறங்கி கல்லை வந்து முட்டியது. கல் ஈர மண்ணிலிருந்து கிளம்பி அப்படியே ஐயர் மடியில் சாய, ஐயர் தாவிப் பிடித்துக் கொண்டார். அணைத்து நெஞ்சோடு தூக்கினார் பூமியில் அரை முழம் புதைந்திருந்தது. கல்லின் கனத்தை அவரால் தாங்க முடியவில்லை. பார்த்தசாரதி ஓடிவந்து கைகொடுத்தான்.

இருவர் கைகளுக்கும் நடுவே கல்லிருந்தது.

"அம்மா, என்ன பண்ணணும். சொல்லு!" ஐயர் மறுபடி கேட்டார். அவர் பக்கம் பூமியில் புதைந்த சேறு இடம் இருந்து வர முடியவில்லை. பார்த்தசாரதி அப்படியே அவரிடமிருந்து வாங்கினான் தன் நெஞ்சோடு குழந்தையைக் கண்டதும் அணைத்துக் கொள்வது போல் தாங்கிக் கொண்டான். அவன் கவனம் கல் மீதே இருந்தது.

சரிந்து காலை முட்டிய பெண்ஆடு, மறுபடி கால் உயர்த்தி துள்ளியது. கிராமத்துக்குப் போகும் வழியை நோக்கி நின்றது.

"போ, பார்த்தசாரதி ஆடு பின்னாலேயே போ."

ஐயர் வீடு தாண்டி, வயல் தாண்டி பெரும் பரப்பாய் இருக்கிற பொட்டல் வெளியில் ஆடு போய்க் கொண்டிருந்தது. கல் தூக்கி பார்த்தசாரதி நடந்தான். பின்னால் ஐயர் நடந்தார்.

பூமி மேடான இடத்தில் ஆடு நின்றது. அவர்கள் இருவரும் அருகே நின்றபோதும் பயமின்றி நின்றது.

கல் நழுவி குத்திட்டு பூமியில் நிற்க, பார்த்தசாரதி உச்சியில் கை வைத்து பிடித்துக் கொண்டான்.

ஆடு வேகமாய் இடம் விட்டு ஓடியது.

"என்ன பண்றது இப்போ?"

"மொள்ள கையெடு, நின்னா பார்ப்பம்!" கையெடுத்ததும் கல் நின்றபடி இருந்தது.

"விட்டுட்டு வா."

"என்னங்க பண்றது..."

"குளிச்சு சாப்பிட்டு வா. கிழவர்கிட்ட போவம்." ஐயர் அந்த இடம்விட்டு வேகமாய் போனார்.

குளித்துவிட்டு தலை துவட்டியபடி வாசலில் பார்த்தசாரதி நின்றான்.

சிறிய கூட்டம் தெருமுனையில் கூடியிருப்பது தெரிந்தது. டெய்லர், கருங்கல் மேஸ்திரி, நைட் டூட்டி வாட்ச்மேன், பலகார வண்டிக்காரர், முட்டை வியாபாரி, சீட்டுக் கம்பெனி நாயக்கர், எவர்சில்வர் ஆள் என்று பல பேரும் இருப்பது தெரிந்தது.

'என்ன' என்று கேள்வியோடு தெருவில் இறங்க, ஐம்பதடி தூரத்தில் இருந்தவர்கள் அவனைப் பார்த்து விட்டு கூட்டமாய் நகர்ந்து வந்தார்கள்.

நகரத்தின் எல்லையில் உள்ள அந்தக் கிராமத்தின் ஆட்கள் அநேகமாய் வியாபாரிகள் அல்லது அதிகப் படிப்பு இல்லாத வேலை செய்கிறவர்கள். அவர்களது வியாபாரம் அல்லது தொழில் நிரந்தரமில்லாதது. எப்போது லாபம் வரும், எப்போது நஷ்டம் வரும் என்று சொல்ல முடியாதது. இன்று வார விடுமுறை, இன்று பண்டிகை என்று ஓய்வெடுக்க முடியாது. இன்று போயே ஆக வேண்டும். வேலைக்கு என்கிற கட்டாயமு மில்லாதது.

அநேகமாய் அவர்கள் சொந்தப் பெயரைவிட, அவர்கள் தொழில் பெயரோடுதான் பிறருக்கு அறிமுகமானவர்கள்.

14

கருங்கல் மேஸ்திரி மதில் சுவர் கட்டுகிறவர். மதில் சுவர் மட்டுமே கட்டுகிறவர். அந்த வேலைதான் தெரியும். நைட் டூட்டி வாட்ச்மேன் எங்கெல்லாம் இரவுக் காவலுக்கு ஆள் வேணுமோ அங்கு மட்டும் போகிறவர். அதாவது பகல் டூட்டி இருக்கவே இருக்காது. இரண்டு நைட் சேர்ந்தாற் போல் டூட்டி வந்தால் பகலில் அங்கேயே தங்கியிருப்பது தவிர அநேகமாய் அவன் கிராமத்தில் பகல் பொழுதில் மட்டும்தான் இருப்பான். முட்டை வியாபாரி விடியலில் போய் விடுகிறவர். எவர்சில்வர் எட்டு மணிக்குக் கிளம்பி இரவு தாமதமாய் வருகிறவர். இவர்கள் ஒரு சேர நிற்பது கடினம்.

ஊருக்குத் தண்ணீர் கொண்டு வந்து கொடுத்த பார்த்தசாரதிக்கும் பைப்புக்காரருக்கும் நன்றி

சொல்லியே ஆக வேண்டும் என்று நினைத்தார்கள். என்றுமில்லாத விசேஷமான ஊர்வலமாய் அவனை நோக்கி வந்தார்கள்.

"பார்த்து ஒரு வார்த்தை சொல்லிவிட்டுப் போகணும் தொழிலுக்கு."

"என்னங்க...." பார்த்தசாரதி திகைத்தான்.

"உன்னைய பார்க்கத்தான் பார்த்தசாரதி."

"இத்தினி கஷ்டப்பட்டு ராவோட ராவா நம்ம ஊருக்குத் தண்ணி கொண்டாந்தேல்ல... ஒரு நன்றி சொல்லிட்டுப் போலாமுன்னுதான்...."

"யாரும் கேட்கலை. இது செய்யுன்னு சொல்லலை. எங்களைக்கூட தொந்தரவு செய்யல. நீங்களே நின்னு.... வேலை முடிச்சு ஊரு பூரா குளிரக் குளிர நனைச்சீங்களே. அந்த சந்தோஷம். சந்தோஷமட்டுமில்லை; ஒரு உறுத்தல். நாம ஒரு துரும்புக்கூட தூக்கிப் போடாம குடம் குடமா தண்ணி புடிச்சமேன்னு ஒரு வெட்கம்."

"வெட்கப்பட என்னாங்க இருக்கு? எனக்கும் தண்ணி வேணும். அது மட்டுமில்லீங்க.... அந்தக் குழாய் இழுத்து நம்ம ஊடு நடுப்புற போட்டுறலாம்னு ஒரு யோசனை.... உங்களையும் கேட்டுத் தெரிஞ்சுக்கணும்..."

"அங்கினியே இருந்தா ரோட்ல போற வரவன் திறந்துட்டுப் போயிடுவான். பிறகு நமக்கு இல்லாத போயிடும்."

"நமக்குன்னு எழுதி வச்ச தண்ணியா.... மத்தவனும் வந்து எடுப்பான்தான்."

"ஒண்ணு ரெண்டு கொடம் எடுத்துக்கட்டும்.... மூணு சக்கர வண்டி போட்டுக்கிட்டு வந்து தவலை தவலையா ஏத்தற பிஸினஸ் வந்துரும். இப்பமே ஆளுங்க வந்து பார்க்கறாங்க பார்த்தசாரதி.."

"இது பத்தி எனக்கு ஒண்ணும் தெரியாதுங்களே. கவர்மெண்ட் தண்ணி, நமக்கு மட்டும்தான்னு இருக்க முடியுமா? அதிகாரிகளைக் கேட்கணும்...."

"அது கிடக்கட்டும் பார்த்தசாரதி.... வர்ற ஞாயித்துக்கிழமை ஒரு மாலை மரியாதை செய்துடணும், உனக்கும் பைப்புக்காரருக்கும்."

"ஆளுக்குக் கொஞ்சம் போட்டு சால்வைத் துணி, பெரும் மாலை எல்லாம் வாங்கியாந்து...."

"வேணாங்க..."

"ஏம்ப்பா, கூச்சப்படாதே."

"கூச்சத்துக்குச் சொல்லலைங்க. இது செய்தது நானில்லை, பெரியவரு. அவருக்கு செய்யணும்."

"பைப்புக்காரரா... அவரு நடக்கறதுக்கே கஷ்டப் படறவரு. அவரு செய்துட முடியுமா.... அத்தினி தூரம் நோண்டிப் போட்டதே நீங்கதான்."

"பார்த்தசாரதி ஒரு அடக்கத்துடன் பேசறமாதிரி."

"இல்லீங்க. நான் சொல்றது திண்ணைக் கிழவரை. அவரு சக்தியுள்ள மனுஷரு."

"அதான்... ஆஹா ஓஹோன்னு ஒண்ணுமில்லாத போச்சே."

"ஆஹா ஓஹோன்றது அவருக்குப் புடிக்காதுங்க. இப்படியே ஊர்ஜனம் போய் அவரை ஒருவாட்டி கும்பிட்டு வந்துருங்க போதும்."

"அட, போய்யா. அந்தக் கிழவன் பதிலுக்குக்கூட கும்பிட மாட்டான். அவனைப் போய்..."

"அது கொஞ்சம் பைத்தியம்பா. கும்பிடறது, பேசறது ஏதும் புரியாது."

"இல்லைங்க.... அவரு பைத்தியமில்லை."

"நான் பார்த்திருக்கிறேன், அந்த ஆளு துணியில்லாத ஓடறத."

"அது ஒரு மாதிரி சித்த புருஷருங்க."

"கிழவனா.... குளிச்சு பார்த்ததேயில்லை. ஒரு பூஜை புண்ணியம் செய்ததில்லை."

"செய்யறது.... எல்லாம் மனசுக்குள்ளங்க. அவரைத் தப்பா பேச வேணாம்."

"எனக்கு ஒரு மாதிரியா இருக்கும், அவரைப் பார்க்கச் சொல்ல. ஆனா, பார்த்தசாரதி சொல்ற மாதிரி பெரிய ஆளா தெரியலை."

"பெரிய ஆளுங்க. இந்த ஊர்லயே ரொம்பப் பெரிய ஆளு அவருதான். வாங்க, இப்படியே போய் அவரைக் கும்பிட்டு வந்துருவம்."

"நான் வரலை."

"அந்தக் கிழவன் பேய் பிசாசு சம்பந்தமுள்ளவன்னு நாயக்கரு சொல்வாரு... கண்ணு கட்டற ஆளாம்."

"அப்பவும் எப்படிப் போறது.... நாம குடித்தனக்காரங்க.... எதுனா கட்டிட்டார்ன்னா?"

"அடட.... தப்பு நீங்க பேசறது அவரு எதும் கட்டறவரு இல்லை. யாருக்கும் தப்பு பண்றவரு இல்லை அவரு. பூ மாதிரி ஆளு. அது, நம்ம மாதிரி ஆளுங்களுக்கு அந்த நிலைமை வர்றது கஷ்டம்."

"பார்த்தசாரதி சொல்றதுக்கு போயிட்டு வரலாமேய்யா..."

"வேணாங்க, நான் வரலை."

"எனக்குப் பயம் பேய் பிசாசு ஆள்னா."

"நாங்க ஒரு கூட்டம் போட்டு உனக்கு மரியாதை பண்ணி ஊருக்குள்ள ஒரு கட்டுமானம் கொண்டு வரலாம்னு நினைச்சோம். நீ கிழவரு பேரு சொல்ற!"

"அந்தக் கிழவரு ஊரையே கட்டுவாரு.... நம்ம ஊரு அவரால் பெரிசா மாறப் போவுது..."

"ஏம்பா.... பார்த்தசாரதி இத்தினி சொல்லுதே போய்த்தான் பார்ப்பமே."

"என்ன சமாசாரம், இத்தினி பேர் கூடியிருக் கீங்க..." ஐயர் குளித்த முகமும் விபூதிப் பட்டையுமாய் உள்ளே வந்தார்.

"இவரைக் கேட்டுக்கலாம்ப்பா... போலாமா வேணாமான்னு."

"எங்க போறது?'

"கிழவராண்ட கூட்டிப் போலாம்னு பார்த்தேன்."

ஐயர் வியப்புடன் பார்த்தசாரதியை நோக்கினார்

"ஏன் பார்த்தசாரதி, இவங்களை அங்க கூப்பிடற..."

"நானும் அதான் சொல்றேன். அது சரியில்லை.... பில்லி சூன்யமான ஆளு... அங்க போக வேணாமுன்னு."

"அட..... அது இல்லீங்க... இத்தின ஆள் போகணுமான்னு சொல்றேன்."

"போய் கும்பிட்டு வரலாம் ஐயரே..." பார்த்தசாரதி தாழ்ந்த குரலில் பேசினான்.

"அந்தக் கிழவன் பதிலுக்குக் கும்பிட மாட்டான்."

"அது முக்கியமா. உன் வேலை கும்புடறது. ஊருக்கு நல்லது நடந்ததுக்கு அவரு காரணம். கோயிலுக்குப் போறோம். சாமி கும்பிடறோம்.... பதிலுக்கு சாமி நம்மளை கும்பிடுதா?"

"அந்த ஆளு சாமியா?"

"சாமி மாதிரி."

"நான் வரலை."

"நானும் வரலை."

"என்னப்பா ஆள் ஆளுக்கு போறதா... வேண்டாமா?"

"பார்த்தசாரதிக்காக ஒரு தபா போயிட்டு வந்துடலாம். ஐயரும் பெரிசா சொன்னாரே..."

"எதுனா பில்லி சூனியம் வச்சிருச்சுன்னா...."

"இத்தினி பேர் இருக்கச்சொல்ல உனக்கு மட்டும் வச்சுட முடியுமா...?"

"நாம பகல்லதான போறம். அதெல்லாம் செய்ய முடியாது. ராவுலதான் முடியும்."

"அப்ப போகலாம்."

"போலாம், வாங்கப்பா."

பார்த்தசாரதி முன்னால் நடக்க, சகலரும் அவனைத் தொடர்ந்தார்கள். வீட்டுப் படிகளிலிருந்து பெண்களும் இறங்கினார்கள்.

ஐயர் கடைசி ஆளாய் நகர்ந்தார்.

வீட்டு வாசலில் உட்கார்ந்து ரவிக்கைக்கு பட்டன் தைத்துக் கொண்டிருந்த கலாவதி எழுந்து உள்ளே ஓடினாள்; அப்பாவிடம் தெரிவித்தாள்.

சற்றுமுன் எழுந்திருந்த பைப்புக்காரர் வாசலுக்குத் துண்டு போர்த்தி வர, கூட்டம் திண்ணையைச் சுற்றி நின்றுகொண்டது. பயந்து பேசியவர்கள் பின்வரிசையில் நின்றார்கள்.

கிழவர் கழுத்து வரை போர்த்திய துணியோடு வெட்டவெளியைப் பார்த்துக் கொண்டிருக்க....

"ஐயா கும்பிடறேங்க..." பார்த்தசாரதி உடம்பு வளைத்து வணங்கினாள்.

"என்ன பார்த்தசாரதி?" பைப்புக்காரர் வியப்புடன் கேட்டார்.

"பெரியவரு பார்த்து தண்ணி வந்ததுக்கு கும்பிட்டுப் போக ஊர்ஜனம் வந்திருக்கு....'

"கும்பிடட்டும்."

"பதிலுக்குக் கும்பிடமாட்டாரா?"

"அதுக்குத் தெரியாது." பைப்புக்காரர் பதில் சொன்னார்.

"அப்ப நாம ஏன் கும்பிடணும்?"

"வேணாம். யார் உங்களைக் கும்பிடக் கூப்புட்டாங்க."

"மரியாதைக்கு பதில் மரியாதை வேணாமா?"

"இது அதெல்லாம் தாண்டின ஆளு...."

"சும்மா ஊத்தறாங்கப்பா.... பைத்தியக்காரக் கிழவனை சாமி ஆக்கறாங்க.... எனக்குப் பிடிக்கலை."

"போ.... போய்க்கிட்டே இரு. நான் கூப்பிட்டேனா உன்னை?"

"கோவப்படாதீங்க. ஐயா! ஒரு விஷயம் ஊர் ஜனத்துக்கு சொல்றேன். இது பைத்தியம் இல்லை, நாமதான் பைத்தியம்.... இது பக்கத்துல பேசுங்க.... உக்கார்ந்து பாருங்க புரியும். எல்லாம் புரியும்."

"என்ன பேசறது?"

"உன் துக்கம் சொல் இதுகிட்ட.... இது கேட்டுக்கும் உன் துக்கத்தை சரிபண்ணும்."

"மறுபடி போர்டு போட்டு சம்பாதிக்கணுமா.... ஷோக்கா இருக்குதுப்பா உங்க திட்டம்."

"ஒரு போர்டும் கிடையாது. நான் துக்கப்பட்டவன். பேசினேன். புரிஞ்சுது. என் அனுபவத்தால் துக்கப்பட்ட வங்ககிட்ட பேசறேன். நம்பிக்கை இருந்தா கேளுங்க, இல்லாட்டி போங்க."

"கிழவரு திருநீறு பூசமாட்டாரா?"

"நீ நம்பணுங்கறத்துக்கு அவர் ஷோக்கு பண்ணிக் கிற ஆள் இல்லை. அவரு எப்பவும் இப்படித்தான்."

"பார்த்தசாரதியும் பைப்புக்காரரும் வேலை செய்யறப்ப பேசி முடிவு பண்ணிட்டாங்க போலருக்கு... மறுபடி கிழவர வச்சு சம்பாதிக்கணும், பைப்புக் காரருக்கு."

"யார்டா அவன்...." பைப்புக்காரர் கூவினார்.

"சரிய்யா வுடுங்க. கும்பிட்டு தொழில் பார்க்கப் போலாம்."

கூட்டம் கும்பிட்டது.

"அப்ப வரோம் பார்த்தசாரதி."

"முடை நாத்தம் நாறுது.... இந்தக் கிழவனைப் போய் பெரிய சித்தரு.... அது இதுன்றாங்களே."

"அது உன் வாயிலேர்ந்து வருது. கொஞ்சம் நிதானமா பேசு..." பைப்புக்காரர் சத்தம் போட, சொன்னவன் சரக்கென்று கூட்டம் விட்டு வெளியேறினான்.

"அட ஏம்ப்பா கடிச்சு குதறிக்கிட்டு.... பார்த்தசாரதி சொன்னாரு. வந்தோம், கும்புட்டோம்., ஆச்சு. இனிமே போய் அவங்க அவங்க ஜோலியப் பார்க்கலாம். அப்ப வரட்டுமா பைப்புக்காரரே."

பைப்புக்காரர் முகம் திருப்பிக் கொண்டார்.

"இந்த ஆளும் ஏன்யா ராங்கிக் காட்டறான் கிழவனுக்குத்தான் பைத்தியம். இவனுக்கென்ன...."

"தண்ணி பைப்பு போட்டாங்கல்ல.... கொஞ்சம் நாள் தினாவட்டாதான். இருப்பாரு."

"போட்டது பார்த்தசாரதிதான். அந்த ஆள் தன்மையா இல்லையா...."

"சரி, போங்க, போங்க."

"யோவ். எனக்கு ஒண்ணு தோணுது?"

"என்னா?'

"இந்த பார்த்தசாரதி, பைப்புக்காரன், ஐயரு மூணு பேரும் ஒரு ஜாயிண்ட் போட்டிருக்காங்க."

"எதுக்கு?"

"மறுபடி ஊர்ல சாமி, கோவிலு, பூதம்னு வேலை காட்டப் போறானுங்க...."

"ஏதோ செய்துகிட்டுப் போகட்டும்.... பைப்புப் போட்ட மரியாதைக்கு நன்றி சொல்லிட்டம்."

"மாலை மரியாதை செய்யலாம்னு..."

"அவன்தான், நான் போடலை... எல்லாம் கிழவர் தான்னுட்டானே."

"கிழவருக்கு மாலை போடணுமா?"

"வேணாம்..."

"அப்ப கழட்டிக்க."

"வரேம்ப்பா "

"வரேங்க...

கூட்டம் நகர்ந்தது. "உனக்கு எதுனா அறிவு இருக்கா பார்த்தசாரதி? ஏன் ஊரை என் வீட்டு வாசல்

முன்னாடி கொண்டார.... இதுங்க கேடு கெட்ட ஜனங்க.... நாக்குல முள்ளு குத்திக்கிட்டு பேசற கூட்டம். அவன் காலை நக்கினாக்கூட நமக்குத்தான் ரத்தம் வரும்...”

“கிழவரு சக்தி தெரியணுங்க.”

“இல்லைப்பா... அவனுக்கு ஒரு சக்தியும் இல்லை. அவன் பைத்தியம். அரை கிறுக்கு... அவனை வுட்டுரு... அவன் ஜோலிக்கு வராத.... யாரையும் கூட்டிக்கிட்டு வந்து நிக்காத... போட்ட பைப்புக்குத் தானா புண்ணியம் வரும். நாம யாரையும் தடுத்து கூட்டம் சேர்க்க வேணாம்.”

“அது இல்லைங்க நான் சொல்றது....”

“சொல்லாத பார்த்தசாரதி.... சும்மா இரு.” பைப்புக்காரர் வேகமாய் உள்ளே போனார்.

பார்த்தசாரதி திண்ணையில் உட்கார்ந்தான். ஐயர் அவனருகே நின்றுகொண்டிருந்தார்.

திண்ணையில் உள்ள துணிமூட்டை அசைந்தது. தலை எட்டிப் பார்த்தது. கால் நீட்டியது.... குதிகாலைத் தரையில் வைத்து கால் கட்டை விரலில் ஒரு குவளைத் தண்ணீர் எடுத்து மெல்ல அபிஷேகம் செய்வது போல ஊற்றியது. தண்ணீர் திண்ணையில் வழிந்து, விளிம்புக்குப் போய் சரிந்தது. ஒரு சொட்டுகூட கீழே விழவில்லை.

15

திண்ணை விளிம்பில் ஏதும் ஓட்டை இருந்து ஊற்றப்பட்ட தண்ணீர் உள்ளே போகிறதோ.... ஐயருக்கு சந்தேகம் வந்தது.

ஆள்காட்டி விரலால் திண்ணை விளிம்பில் நின்ற தண்ணீரைத் தொட, அது எங்கேயோ ஓட்டமாய்

ஓடுகிற உணர்வு விரலுக்குத் தெரிந்தது. கிழவனின் கட்டை விரலால் ஊற்றப்பட்ட குவளை நீர் தரையில் வழிந்து வேறெங்கோ போகிறது என்று பட்டது பதற்றமாயிற்று.

'சுவாமி! என்ன செய்யறேள்?"

சூரல் உடைந்து கத்தினார். "ஐயோ...."

"ஐயோ..... இத்தனை நேரம் கூட்டம் நின்னுதே , இது பார்க்காத போயிடுத்தே. டேய், எங்க அந்த ஆளுங்க?" கூவினார். இடதும் வலதும் அலைந்தார். ஓடிப்போய் கூட்டி வருவதற்குள் கிழவன் வேறு ஏதும் சித்து காட்டினால்....

"டேய், எங்க அந்த ஆளுங்கெல்லாம்?" மறுபடி அலைந்து, நீர் வழிதலை மறுபடி தொட்டுப் பார்த்து துடித்துத் தவித்தார்.

"பாருங்கடா, டேய் பாருங்கடா. அற்புதம் பண்றதப் பாருங்கடா. இது யார்ன்னு தெரியாதயே வாய்க்கு வந்தத பேசறேளே.... சுவாமி சித்த முன்னாடி இப்படி ஒண்ணு செய்திருக்கப்படாதா.... ஊர் உறைஞ்சு போயிருக்குமே.... முடை நாத்தம்னுட்டுப் போறாளே.."

சட்டென்று உள்ளே பொறி தட்டியது.

வேண்டாம் என்றுதான் செய்யவில்லையோ.... புரிகிறவனுக்கு மட்டும் புரிந்தால் போதும் என்கிற நினைப்பில் பேசாது இருந்ததோ... உங்க இரண்டு பேருக்குத்தான் தெரிய வேண்டும் என்கிற சங்கல்பமோ.... பைப்புக்கார கிழவனுக்குக்கூட தெரியக்கூடாதோ.... ஏன் இந்த இடம் விட்டு ஓட முடியவில்லை. ஏன் தெருவில் ஈ காக்கைக் கூட இல்லை.... ஐந்து நிமிடம் முன்பு பதினேழு பதினெட்டுப் பேர் கூடியிருந்தார்கள்.

"சுவாமி, என்ன செய்யறேள்?" என்ன கேட்பது என்று தெரியாது கேட்டார்.

கிழவன் எங்கோ வெறித்துக் கொண்டிருந்தான்.

ஊர் கூட்டாதே என்று சொல்கிறதா.... உனக்கு மட்டும்தான் என்று வித்தை காட்டுகிறதா...

நல்லது.... புரிகிறது.... அப்படியே ஆகட்டும். சரி, மேற் கொண்டு என்ன, எதற்கு வந்தோம். இங்கே பார்த்த சாரதியை 'குளித்து சாப்பிட்டு விட்டு வா' என்று சொன்னோம்.

பார்த்தசாரதி குளித்துவிட்டான் போலிருக் கிறது. முகம் சுத்தமாய் இருக்கிறது அவனுக்கு. சாப்பிட் டானா தெரியவில்லை. பார்த்தசாரதி முகத்தில் களைப்பே இல்லை. எனக்கு இருக்கிறது. நாலு தோசை சாப்பிட்ட களைப்பு. நாலு தவலை ஜலம் தூக்கிய களைப்பு.

என்ன செய்வது இப்போது?

உட்காரலாம். திண்ணையில் உட்கார்ந்து என்ன தோன்றுகிறதோ அதைச் செய்யலாம். கிழவனிடம் கேள்வி கேட்கலாம்.

"பார்த்தசாரதி உட்கார்" தண்ணீர் கோடாய் போன இடத்தின் இருபுறமும் இருவரும் எதிரும் புதிருமாய் உட்கார்ந்தார்கள். கிழம் சுவரில் சாய்ந்து உட்கார்ந்து கொண்டிருந்தது.

'சுவாமி, கல்லு நட்டு வச்சுருக்கோம். அது என்னன்னு தெரியலை. ஆடு வழிகாட்டித்து. கொண்டு போய் ஒரு மேட்டுல வச்சுட்டோம் என்ன செய்யணும் இப்ப?"

யாரோ தெருவோடு சைக்கிளில் போனார்கள்.

பளீரென்று சிகப்புத்திரை ஐயர் கண் முன்னே அகன்றது. பெரிய பெண் முகம் தோன்றியது. யாரோ கற்பூரம் காட்டினார்கள். யாரோ இருவர் சாமரம் வீசினார்கள். வெங்கலக் கொடியும் குடையும் தோன்றின.

"கோவில் கட்டச் சொல்றேளா.. சந்நிதியா செய்யச் சொல்றேளா.."

கிழம் பேசாது இருந்தது.

"எனக்குப் புரியலை சுவாமிகளே.... நான் மண்டூகம். நிட்க்ஷரகுட்க்ஷி நிர்மூடன். எனக்குப் புரியும்படி சொல்துங்க."

மஞ்சள் வேட்டியணிந்த ஆணின் மடியில் கல் இருந்தது. வெற்று மார்பும் ஒற்றை வேட்டியுமாய் அந்த கருங்கல் பிளாஸ்டிப் பொம்மைபோல ஒரு ஆண் மடியில் வைத்துக்கொண்டிருந்தான். பார்த்தசாரதி முகம்போல இருந்தது. இப்போது உள்ள முகத்தைவிட இன்னும் அமைதியாய் இருந்தது.

"பார்த்தசாரதி மடியிலேயே வச்சுக்கணுமா கீழ வைக்கக் கூடாதா அந்தக் கல்லை."

கிழம் பேசாது இருந்தது.

"புரியலை பார்த்தசாரதி, இந்த ஆள் பண்றது ஒண்ணும் புரியலை"

"ஐயர் பேசாத உட்காருங்க அவரு தெளிவா சொல்லட்டும். அவரு சொல்றது நமக்கும் புரியணும்னா பேசாத உட்காருங்க."

அரை மணி நேரம் அமைதியாய் உட்கார்ந்திருந்தார்கள். ஐயருக்கு தடிதடியாய் நாலு தோசை சாம்பாரிலும் மிளகாய்ப் பொடியிலும் தோய்த்துத் தின்றது கண்ணை சுழற்றியது. காலைத் தூக்கம் போனது. களைப்பாய் இருந்தது

திண்ணைத் தூணில் முதுகு சாய்த்து முகம் தொங்கப் போட்டு உட்கார்ந்திருந்தார். கண்கள் இழுத்தன. விலக்க முயற்சி செய்ய, வேகமாய் தூக்கம் வந்தது. தலை ஆடிற்று.

பார்த்தசாரதி அவரையே பார்த்துக்கொண்டு உட்கார்ந்திருந்தான்.

ஆடின தலை சட்டென்று நின்றது. ஐயர் தூக்கத்தில் கை கூப்பினார். வாய் ஏதோ முணுமுணுத்தது.

முப்பது விநாடிகள் இருக்கும். சட்டென்று தலை சரிந்து சாய்ந்தவர், கையூன்றி சமாளித்து எழுந்து கொண்டார்.

வாய் பிளந்து 'ஐயோ' என்றார்.

பார்த்தசாரதி திகைத்தான்.

'என்னங்க... என்னங்க ஆச்சு?"

"தயார் பண்ணிக்கச் சொல்றாரு கிழவரு."

"எதுக்கு?"

"தெரியலை பார்த்தசாரதி.... ரொம்ப உசரம் ஏறணும்ங்கறாரு."

"இந்தப் பக்கம் மலையே இல்லையே. எங்க உசரம் ஏறது?"

"மலை மேல இல்லை பார்த்தசாரதி, உடம்பும் மனசும் ரொம்ப உசரம் போகணும்ங்கறாரு."

"கனவா?"

"இல்லை, நேரடியா பேசறாரு...."

"ஐயர், நாம ரெண்டு பேரும் ரொம்ப மிரண்டு போய்க் கிடக்கிறோமோ."

"ஒரு விநாடி அப்படியும் ஒரு அச்சம் வந்தது எனக்கு. ஆனா ஒன்று புரியுது. இது நம்ம அபிப்பிராயம், நம்ம விருப்பம் இல்லை. உன்னையும் என்னையும் வச்சு கிழவரு ஆடப்போறாரு...."

"என்ன ஆட முடியும்.... ஆடறதுன்னா என்ன?'

"தப்பா ஏதுமில்லை பார்த்தசாரதி."

"என்ன வந்தது மனசுக்குள்ளாற.... தெளிவா சொல்லுங்க?"

"ஒரு வார்த்தைதான் பேச்சா கேட்டுச்சு."

"என்ன பேச்சு?"

"எல்லா அம்மாவும் அழுவுதே, கண்ணு தொடைக்க வேணாமா?"

"எல்லா அம்மாவுமா.... அப்படின்னா?"

"தெரியலை."

"என்னங்க இது, ரொம்ப கஷ்டப்படறீங்களே...."

"தெளிவில்லாத பேசறேனேங்கறயா? பயமா இருக்கு பார்த்தசாரதி. எனக்கு இதுக்கெல்லாம் யோக்கியதை இருக்கா தெரியலை."

"எதுக்கு யோக்கியதை?"

"உனக்குக் கத்துக் கொடுக்கச் சொல்றாரு பெரியவரு. அப்பா விடுப்பா. நான் வீட்டுக்குப் போய் தூங்கறேன். நீ சாப்பிட்டியா? சாப்பிட்டு உன் வேலையை முடிச்சிட்டு சாயந்திரமா வா.... இனிமே ஊர் கூட்டாத பார்த்தசாரதி. நான், நீ, கிழவரு.... அவ்வளவுதான். யாரும் கிட்ட வந்து இவர தொந்தரவு பண்ண வேணாம். நாமே படபடன்னு இருக்கோம். ஊர்ஜனம் எப்படி இதையெல்லாம் நிதானமா யோசிக்கும்.... நீ போய் சாயந்திரம் வா."

ஐயர் இறங்கி யாரோ துரத்துவதுபோல வேகமாய் போனார்.

பார்த்தசாரதி அவர் போவதை வியப்புடன் பார்த்தான். கிழவரை நோக்கித் திரும்பினான்.

கிழம் எங்கேயோ வெறித்தபடி இருந்தது.

ஆளை மயக்கி மனசால் மனசுள் பேசுகிற வித்தை எப்படி வந்தது உனக்கு? இந்த வாழ்க்கையில் கண்டு பிடித்த விஷயமா.... இல்லை போன ஜென்மத்து மிச்சமா? இது செப்பிடு வித்தையா..... இறையருளா? சரி, எல்லாரையும் விட்டுவிட்டு என்னையும் ஐயரையும் இப்படி அலைக்கழிப்பானே.... பாவம் ஐயர், என்னை விட்டு வேற மாதிரி ஒரு பய வேகத்தோடு ஓடுகிறார். வயசாளி. குடும்பஸ்தன். பயம் வரத்தான் செய்யும். இப்படி என்னை பயமுறுத்த முடியாது. எனக்கு எதுவுமில்லை. உன் சொரூபம். என்னை மிரட்டாது. உன் மனசும், பேச்சும் என்னை அலற விடாது.

நான் எல்லாவற்றுக்கும் தயார். எப்பவும் தயார். எனக்குள்ளே நீ என்ன வேணா போடு. அது வெளிச்சப் பந்தோ, நெருப்போ எதுவானாலும் சரி. எனக்கு நீ கடவுளைக் காட்டினாலும் சரி, குழந்தையைக் காட்டி னாலும் சரி, நான் பயப்படமாட்டேன். பதறமாட்டேன். என்னைய என்ன வேணா பண்ணு... எத்தினி வேணாலும் அடி. தாங்குவேன். எனக்கு ஒண்ணு புரிஞ்சு போச்சு. இங்க இருக்கறது, நீட்டறது எல்லாம் நானல்ல. என்னால் அல்ல.... அது யாரோ செய்யற வேலை. யாரோ போடற தீர்மானம். செய்துட்ட பிறகு நான் இப்படி பண்ணிட்டே னேன்னு ஒன்று உண்டா? நான் இல்லை. நான்னு ஒண்ணுமே இல்லை. என்னதுன்னு எதுவுமேயில்லை. என் என்று எதுவுமில்லை. எல்லாம் நீ..... நீ.... நீ! எனக்கு என்னையே மறந்து போச்சு. நீயே எல்லாம்..... நீயே நான், நீயே எல்லாம்....

எழுந்தபோது லேசாய் இருந்தான். தன்னை மறந்தான். தான் நடக்கிறோம் என்பது மறந்தான். தன்னால் தான் நடக்கவில்லை என்பது உணர்ந்தான். உடம்பு எவர் முழுவதும் வேறு வசமோ பட்டது. மனசு முழுவதும் யார் இடமோ தரப்பட்டது. புத்தி முழுவதும். அசையாது நின்றது.

அவன் நடையில் கனமில்லை. காற்றில் நடப்பது போல் இருந்தது. அவன் கண்ணில் வழியில்லை. அவனால் அவர் தாண்டியும் அவர் உள்ளேயும் நடக்க முடியும் போல் இருந்தது. ஒப்புக்கொடுத்தலை ஒப்புக்கொடுத்து தன்னை இழத்தலை பார்த்தசாரதி முப்பது நிமிட நேரம் முற்றிலுமாய் அனுபவித்தான். கிழவன் அவன் நடையை ஊன்றி கவனித்திருக்க, அவன் காலின் கீழ் சுவடுகள் படவேயில்லை. உடம்பு சுமை மண்ணில் தடமாய் விழவேயில்லை.

கிழவனிடமிருந்து பெரிய சிரிப்பு கிளம்பிற்று.

விநோதமான குரலில் அடிக்குரல்வளையிலிருந்து பீரிட்ட சிரிப்பு மிருகக் கூச்சல் மாதிரி கேட்டது.

பார்த்தசாரதி சட்டென்று தரையில் இறங்கினான். உடம்பு சுமை உணர்ந்தான். நெஞ்சுக்கூடு உணர்ந்தான். மண்டைக்குள் என்னவாயிற்று என்றே பிற கேள்வி பரபரத்தது.

திரும்பி கிழவனைப் பார்த்தான். ஆக இப்படி ஒரு விஷயம் இருக்குதா.... நான் இருக்கச் சொல்லலயே. நான் கரைந்து போக முடியுமா? நான் இல்லை என்று முழுசா நினைக்க உடம்பு கனம் இல்லாது போகுமா? புத்தி நிக்குமா? நன்றி ஐயா, நன்றி. மண்ணும் காற்றும் வெப்பமும் தெருவும் பிடிபட்டன. முதுகின் ஓரம் மெல்ல அடித்தது. வாயினுள் எச்சில் திரள்வது தெரிந்தது.

மெல்ல வீட்டுக்குத் திரும்பி வந்தான். படியேறி உள்ளே போனான்.

"சாப்பிடலையாடா?'

"சாப்பிடறேன்."

"தட்டு வைக்கட்டுமா?"

"வெச்சுடு."

"என்ன, என்னவோ போல் இருக்கோ"

"கிழவனண்ட கூட்டிட்டுப் போனியா ஊர் ஜனத்தை."

"ஆமாம்."

"ஏன் உனக்கு இந்த வேலை? ஏதோ உன்னால் முடிஞ்சத செய்த. வுட்டுரு."

"உனக்கு அவரைப் பத்தித் தெரியுமா?"

"உங்கய்யா சொல்வாரு."

'எங்கய்யாவா.... என்னன்னு?"

"பாலயோகின்னுவாரு. ஒரு தடவை துணியில்லாம ஓடிச்சி. அப்பா உடனே தன் வேட்டி அவுத்து மேலே போட்டு வூட்டுக்குக் கூட்டி வந்தாரு. வூட்டுக்கு வந்து வேட்டிய கொடுன்னு கேட்டாங்களாம். ஒரு துண்டு கோவணமா கிழிச்சி இதுபோதும் உனக்குன்ற மாதிரி தந்துட்டாங்களாம்."

"அப்பவே சித்து எல்லாம் செய்யுமா?"

"சித்தா... எனக்குத் தெரியலை. எங்கேயோ பார்த்துப் பேசும், திரும்பப் பாடும். அய்யா சொல்வாரு. அதை தாங்க முடியாது. அத்தனை வெப்பம் அதுன்னு வாங்க."

தட்டில் இட்லிகள் வைத்து சட்னி ஊற்றினாள்.

அன்று இட்லி வெள்ளை வெளேரென்று இருந்தது. சிவந்த சட்னி சுற்றி ஓடியது. இது எனக்கா,

என்று மனசு கேள்வி கேட்டது. இது எனக்கா.. இது பசியாற்றுமா? இது பசியாற்றணுமா? இது உண்டால் தான் இது உணவாகி உள்ளே கரைந்து இதன் சத்து என்னுள் புகுந்து இது நானாய் வெளிப்பட வேண்டுமா? அப்போது நான் என்பது என் உணவா? இந்த இட்லியா? இந்தக் காரமா? இந்த உப்பா? புளிப்பு மாவா? என் உள்ளே போகிறதே.. அதே நானாய் வெளி வருவேனா? என்ன குணம் உணவாகிறதோ அந்த குணம் உடம்பாகிறது. அந்த உடம்பு நான் எனப்படுகிறது.

இந்த நான் புளிப்பு இல்லை. நான் உவர்ப்பு இல்லை. நான் இட்லி இல்லை. இது நான் இல்லை.

விண்டு விண்டு உள்ளே தள்ளியது. ஒட்டமாய் போயிற்று. காற்று குடல் முழுவதும் பரவியது. பசியே இல்லாமல் உண்பதாய்த் தெரிந்தது. உணர்வில்லாது நாக்கு உணவு வாங்கியது. இன்னும் அது ஒதுக்க, பற்கள் அரைக்க உள்ளே போயிற்று.

நானே இல்லாமல் நான் இருக்க முடியும் என்று பார்த்தசாரதிக்கு தெரிந்தது.

16

ஆணுக்கு நான் சொல்லித் தரணும். எப்படி. எப்படிச் சொல்லி தரது? என்ன தெரியும் எனக்கு..... பகவானே. இது என்ன சோதனை.

ஐயர் மனைவியிடம் புலம்பிக் கொண்டிருந்தார். ஐயரின் மனைவி சரஸ்வதி எதுவும் புரியாது நின்றாள்.

"நான்பாட்டுக்கு விபூதி சந்தனம் வித்துண்டு இருந்தேன். கல்லு கிடக்கு வந்து பாருங்கன்னான். போனது தப்பா போச்சு.... என்னால முடியுமா, தெரியலையே...."

"முடியலைன்னா முடியாதுன்னு சொல்லிடுங்க ளேன்."

"எப்படி.... மனுஷாளா வந்து சொன்னது."

"திண்ணைல கொஞ்ச நேரம் உட்கார்ந்தேன். கிழவர் சொல்றார். அவனுக்கு எல்லாம் கத்துக்கொடு. கூட நின்னு உதவி பண்ணு. மொள்ள மொள்ள அவனை உசர ஏத்து... நீயும் போங்கறார்."

"எனக்கு இதெல்லாம் நம்பிக்கை இல்லை."

"எதெல்லாம்?"

"சுவாமி, பூதம் இதெல்லாம் ஏதுமில்லை."

"விழுந்து விழுந்து நமஸ்காரம் பண்றே. விளக்கு ஏத்தறே."

"ஏத்தலைன்னா நாலு பேர் குறையா சொல்வா.... ஏன், நீங்களேகூட கத்துவேள். ஏதோ மத்த ஆட்களுக் காக பண்றதேயொழிய, எனக்குள்ள ஏதும் ஒட்டலை."

"இல்லைன்றயா?"

"தெரியாது."

"எது மேலும் நம்பிக்கை இல்லையா?"

"நான் அப்படிச் சொல்லலை."

"கொஞ்சம் உட்காரேன். நின்னபடி பேசறியே."

"எதிர் திண்ணையில் சரஸ்வதி உட்கார்ந்தாள்."

"உனக்கு பயம் உண்டா, இல்லையா?"

"எது பத்தி?"

"வாழ்க்கைப் பத்தி!"

"இல்லை."

"ஏன்?"

"பயந்தா என்ன நடக்கும்.... எது மாறும்.... எப்ப பயம் வருது. வேணும்..... வேண்டாங்கறபோது வருது? வேணும்.... வேண்டாம்னு எப்படிச் சொல்ல முடியும். எல்லாம்தான் வேணும்."

"கெட்டது கூடவா..."

"ஆமாம்."

"புரியலையே சரஸ்வதி."

"திருட்டுப் பட்டம் வாங்கி, காசு கஷ்டம் வந்து நாயா அலைஞ்சோம். நகையெல்லாம் வித்தோம். ரெண்டு வருஷம் தலை தூக்க முடியலை. இன்னிக்கு அதே நல்லதாயிடலையா? பிக்கல், புடுங்கல் இல்லாத ஒரு கடை, நம்ம இடம், நம்ம வேலை, நாலு பேருக்கு உதவின்னு வளரலையா.... அந்த கம்பெனியிலே இருந்தா அப்படியே நோய்பட்ட பெருச்சாளி மாதிரி சுத்திச் சுத்தி வரவேண்டியதுதான். இப்ப மறுபடி கூப்பிட்டா போவமா?"

"மாட்டேன்."

"ஏன்.... இது சௌகரியம். சுகம் புரிஞ்சு போச்சு. ஆனா, இது பத்தி எத்தனை பயம் இருந்தது. எல்லாப் பயமும் டெம்பரரி."

"மரண பயம்கூடவா?"

"ஆமா. வர வரைக்கும். வந்த பிறகு எது பயம்? எது தெரியாதோ அது பயம். இருட்டு பயம். ஏன்? எதிர்க்க இருக்கறது தெரியலை, அதான் பயம். கண்ணு பழகிடுத்துன்னா உடம்பு இருட்டுக்கு ரெடியாயிடும். அப்புறம் தட்டுத் தடுமாறி நடக்க ஆரம்பித்துவிடும்."

"நல்லது வேணும்..... கேட்கப்படாதா கேட்கறது ப்ரேயர் இல்லையா?"

"நல்லது செய்தா நல்லது நடக்கறது.... இதுக்கு ப்ரேயர் எதுக்கு?"

"அதெப்படி?"

"அப்படித்தான். பந்து திரும்பி வர்றதுக்குக் கொஞ்ச நேரம் ஆகும். அதுவரைக்கும் பொறுமை யில்லை. பிச்சைக்காரனுக்கு பத்து பைசா போட்டுட்டு எனக்குலாட்ரி சீட்ல ரெண்டு லட்சம் வருமான்னு வியாபாரம் பேசறோம். வியாபாரமா நினைக்கறோம்."

"புரியலையேடி சரஸ்வதி.... என்ன செய்யணும்?'

"நாம் செய்யறதுக்கு என்ன இருக்கு. இது சும்மா இருக்க வேண்டியதுதான். ஏதோ கட்டளை மாதிரி கிடைச்சுருக்கு. முழுசா ஈடுபத்திக்கலாம். இல்லையா? முடியாது சுவாமின்னு நகரலாம். இரண்டும் ஒண்ணுதான், ஈடுபட்டதுக்கப்புறம் கத்தக்கூடாது. ஈடுபடாத, அடடா வுட்டுடட்டமேன்னு புலம்பக்கூடாது. எதிர்க்கரையையே பார்த்துக்கிட்டு இருக்கக் கூடாது."

"அதாவது...."

"செய்யுங்கோளேன்...

"எனக்குத் தெரியாதே."

"கத்துப்போம். இருட்ல நடக்க பழகிப்போம்."

"அப்படி இல்லை சரஸ்வதி.... இது விபூதி வியா பாரம் இல்லை.... மொள்ள மொள்ள கத்துக்கறதுக்கு, மிஸ்டிக்கலா ஏதோ நடக்குது.... உனக்குப் புரியலை."

"எல்லாருக்கும் மிஸ்டிக்கலா எல்லாம் நடக்கறது. உடம்புக்குள் இருதயம் துடிக்கறது. நாம எழுந்து நடக்கறது, சாப்பிடறது, ஜீரணம் ஆறது. நாம உசிரோட, புத்தியோட இருக்கறது..... எல்லாம் மிஸ்டிக்கல்தான். தெரிஞ்சது விஞ்ஞானம். தெரியாதது மிஸ்டிக்கல்.

முழுசா என்ன தெரியும் நமக்கு. மெயின்ரோட் க்ராஸ் பண்றது மிஸ்டிக்கல் இல்லையா? கடைக்குக் காலைல போயிட்டு வழில ஏதும் மோதாத, வேறெதும் நேராத வீட்டுக்கு முழுசா ராவுல திரும்பி வந்து சேர்றது மிஸ்டிக்கல் இல்லையா? மொத்த வாழ்க்கையும் விநோதம்தான்."

"என்னை அலட்டறேன்னு குத்தம் சொல்றயா?'

"ஆமாம்."

"ட்ரை பண்ணலாமா?"

"பண்ணுங்கோ."

"தப்பாச்சுன்னா?"

"திருத்தி மறுபடி பண்ணுங்கோ, ரெண்டு வயசுல சாப்பிட கத்துண்டேள். இப்பவும் ரெண்டு வயசு மாதிரியா சாப்பிடறேள்? எப்படிச் சாப்பிடறதுன்னு ஒரு வரைமுறை தெரிஞ்சிருக்கு இல்லையா.... எப்படி?"

"பழக்கம்..."

"அவ்வளவுதான். பழகப் பழக, தப்பு பண்ணப் பண்ண புரியும். தப்புக்கு பயப்படுவானேன். கத்துக்க ணும்னு நினைப்பு இருந்தா போறாதா..."

"கடையக் கவனிக்க முடியாது."

"போறது, என்ன இப்போ?"

"வருமானம், சாப்பாடு..."

"முத நாள் கடை திறந்தபோது என்ன வருமானம் வரும்னு நினைச்சேள்?"

"ஏதோ கொஞ்சம்."

"என்ன வந்தது?"

"நிறைய,"

"அப்படி இங்கேயும் நடக்கலாம்."

பாலு ஐயர் பேசாது தரை பார்த்துக் கொண்டிருந்தார்.

"என்ன யோசனை?"

"சமாதானமாகலை."

"அப்ப முடியாதுன்னு விட்டுடலாம்."

"அப்படியும் தோணலை."

"உலகத்துல எல்லா மனுஷாளுக்கும் உள்ள வேதனை இதுதான்... தன்னையும் நம்பறதில்லை... தனக்கு மேல இருக்கிற சக்தியையும் நம்பறதில்லை."

"என் பயம்... என் குழப்பம் உனக்குத் தெரியலை பார்த்தசாரதிக்கு என்ன கத்துக்கொடுப்பேன்? என்ன தெரியும் எனக்கு... நான் சந்தியாவந்தனம்கூட ஒழுங்கா செய்யாதவன்.... செய்யத் தெரியாதவன்."

"கட்டளையா... மனசுக்குள்ள வைத்ததுதானே இது?"

"ஆமாம்...."

"அப்ப அவர்கிட்டேயே பேசுங்களேன்.... இங்க உட்கார்ந்து எனக்கு ஒண்ணும் தெரியாதுன்னு கண்ணை மூடி சொல்லுங்கோ."

"மனசு ஒரு நிலைப்படும்னு தோணலை. என்னவோ படபடப்பாயிடுத்து."

"முயற்சி பண்ணலாமே."

மனைவி உள்ளே போக, பாலு ஐயர் நிலைகுத்தி உட்கார்ந்திருந்தார்.

மெல்ல தனக்குள்ள நடந்தது என்ன என்று யோசித்தார்.

"அவனுக்கு சொல்லிக் கொடு. அவனை மெல்ல மேலேற்று. நீ போ."

"என்ன தெரியும் எனக்கு.... எதைச் சொல்லித் தருவது.... உனக்குத் தெரிந்தது என்பதில்.... ஏதோ தொக்கி நிற்கிறதே. எனக்குத் தெரிந்தது எது?"

கால்கள் சம்மணமிட்டு ஆழமாய் மூச்சு வாங்கி இழுத்து மனதை ஒருநிலைப்படுத்தி யோசிக்க முயன்றார். முதுகு நிமிர, தலை மெல்ல மேலும் கீழும் பக்க வாட்டில் அசைந்தது. முதுகுத்தண்டில் நேர்க்கோடு ஓடி நின்றது. பிருஷ்டத்தில் தரை அழுந்தாமல் சரிவாக சற்று நெளிந்து உட்கார, ஆசனம் நேராயிற்று.

குழப்பம் விலகினாற்போல இருந்தது.

கல் கொண்டு வந்து நட்டோம். கல் பெண்ணாய் இருந்தது. பெண்குழந்தை போலிருந்தது, அப்படியானால் இது சக்தி கோவிலா.... சாக்த வழிபாடா.... சாக்த வழிபாடு எப்படி என்ன விதம்? வெறுமே போற்றி சொல்லிக் கொடுத்தால் போதுமா? மூக்கும், கண்ணும் காதும் வெளியில் கவசமாய் செய்து போட்டு மேலே ஒரு ஓலைக்கூரை எழுப்பி அம்மன் கோவில் என்று பெயரிட்டு, முன்னே சூலம் நிறுத்தி எலுமிச்சை குத்தி பலிபீடம் வைத்து, அன்னம் நிவேதனம் செய்து... இந்த ஊர்ல இப்படி ஒரு கோவில் இருக்கே... அப்புறம் இது எதற்கு?

எது சக்தி வழிபாடு? எது சாக்தம்? பெண்ணை வழிபடுதல்... பெண் என்கிற அம்சத்தை வழிபடுதல்....

பெண்ணை பூஜித்தல் ஏன்? எதற்கு?

மூளை வறண்டு வெளியாய் இருந்தது.

யோசிக்க முடியவில்லை.

போவோம். இப்படி நடந்து போவோம்.

இப்போது செய்ததுபோல தனக்குள்ளேயே வரும் யோசனைகளை அடுக்கிக்கொண்டு போவோம்.

இது தனி யோசனையா அல்லது வேறு எவராவது யோசிக்கிறார்களா...

"சரி. எல்லா யோசனைகளும் வரட்டும். எல்லா எண்ணங்களும் வரட்டும். வரும் எண்ணங்களை அப்படியே பார்க்கலாம். ஏன் இந்த யோசனை வருகிறது என்று தடுக்காமல் பார்ப்போம்... பேசாது பார்த்திருப் போம்."

"ஏன் சக்தி வழிபாடு?"

"ஏன் பெண் பூஜை... எதனால்?"

பெண் பிரியமுள்ள வஸ்து... யாருக்கு? ஆணுக்கு. இது நிஜமா.... ஆம். இது நிஜம். ஏன் பெண்ணைப் பிடிக்கிறது? ஆணுக்குக் காமம். காமம்தானா.. கலவிக்குத்தான் பெண்ணா? இல்லை ஒரு பாதுகாப்பு.... யாருக்கு? ஆணுக்கு? ஆண் அல்லவா பெண்ணுக்கு பாதுகாப்பு. அது வெளியே. வெளி உலகத்தில். உள்ளே, உள் மனசில் பெண் ஆளுமைதான் அவனை அமைதி யாக்குகிறது. நிஜமா இது?

நிஜம். சரஸ்வதி மாதிரி நிஜம். அவள் இல்லாது போயிருந்தால் திருட்டு கேஸ் நடந்தபோது உடைந்து போயிருப்பேன். அவள் கொடுத்த உற்சாகத்தில் வெளியே வந்ததுதான். ஏதோ ஒரு கடைக்கு காவ லானேன்.... காவல் காத்த கடையை வாங்கினேன். சரஸ்வதி பாரத்தை எளிதாக்கினாள். எனக்காக ஆலோசனை செய்தாள்..... இப்பவும் செய்கிறாள்.

நான் சரஸ்வதிக்கு பாதுகாப்பா.... சரஸ்வதி எனக்குப் பாதுகாப்பு.

"கடைக்குப் போகணுமே, மணி ஆறாயிடுத்து. மெல்ல எழுந்திருங்கோ."

சரஸ்வதி மெல்ல எழுப்ப, உலகம் இனிமையாய் தோன்றுகிறது.

சரஸ்வதியோடு. சண்டை போடுகிறேனே.... ஏன்?

அது அகங்காரம் 'எல்லாம் எனக்குத் தெரியும், சும்மா கிட' என்கிற ஆணவம்.

சரஸ்வதி சும்மா இருந்துவிடுகிறாள்.

பிறகு....

சரஸ்வதி மறுபடி பேசுகிறாள். மறுபடி கஷ்டப் படுகிறபோது அவள் மறுபடி பேசுகிறாள்.... அப்போது புரிகிறது.

ஆக கத்தியது?

வீண், பொய், ஆடம்பரம். திமிர், ஆணாதிக்கம்....

பெண்ணுக்குப் பின்னால் போவது பேதைமை இல்லையா?

பெண் மாயப் பிசாசு இல்லையா?

ஆமாம், மாயப் பிசாசு. மதிக்காதபோது பிசாசாகிறாள் மறுக்கிறபோது கோபம் காட்டுகிறாள். மறுக்காமல் மதிக்கிறபோது, பெண் பெண்ணாய் இருக்கிறாள்.

பெண், ஆணை ஏமாற்றுவதே இல்லையா? இல்லை. ஆண் ஏமாற்றுவான் என்கிற பயத்தில் பெண் ஏமாற்றுகிறாள்.

பயம் அகற்ற, பாசம் பொழிகிறாள்.

பெண் பயம் எது?

ஐயர் வயல்களுடே அந்த மேடு நோக்கிப் போனார். யோசிப்பு அயர்ச்சி கொடுத்தது.

பெண்ணின் பயம் எது? கல்லை நோக்கி கேள்வி கேட்டார். காற்று சீறியடித்தது.

17

பெண் பயம் கொள்வது அவமானத்திற்கு. நாலு பேர் முன்பு தலைகுனிவு ஏற்படுவதற்கு. பிறர் தூஷணையாய் பேசிவிடுவார்களோ என்பதற்கு. தன் பலஹீனத்தைத் தூக்கித் தன்னைத் தலைகுனியச் செய்கிறார்களே என்பதற்கு. தன்னை யாரும் தாழ்ச்சியாய் நினைத்துவிடக்கூடாது என்பதற்குப் பெண் பயப்படுகிறாள்.

'கற்பு என்பது அழிக்கப்படுகிறபோது எதிர்க்க முடியவில்லையே' என்று பயப்படுகிறாள். எல்லாரும் அதை விளம்பரப்படுத்துவார்களே என்று பயப் படுகிறாள். சீறுதல் விட்டு சுருங்கி சுருண்டு போகிறாள். மதிக்கிறவனுக்கு அதே கற்பைத் திருட்டுத்தனமாய்கூட விட்டுக் கொடுக்கத் தயாராய் இருக்கிறாள். பெண் சமூகம் பிராணி. ஆணைவிட அதிக சமூக ஒட்டுதல் உள்ள ஜீவன்.

ஓடிப் போய் பஸ்ஸில் அவளாலும் ஏற முடியும். 'விழுந்து விட்டால்' என்கிற பயம் உடனே வருகிறது. 'நாலு பேர் சிரிப்பார்களே' என்கிற கவலையே அதைச் செய்யாது 'அடுத்த பஸ் வரட்டும்' என்று காத்திருக்க வைக்கிறது. 'சீக்கிரம் வரணுமே' என்ற வேண்டுதலைத் தருகிறது.

புருஷ உறவும் இப்படித்தான். ஒருவனைப் பிடித்திருக்கிறது என்று அவளால் அழகாய் வெளிப் படுத்த முடியும். ஏற்க மறுத்தால்.... மாட்டேனென்று போய்விட்டால்.... 'சீ உன்னை யார் லவ் பண்ணுவா' என்று அவன் புறக்கணித்துவிட்டால்.... 'ஊரில் எல்லோரிடமும் போய் அலையுது என்று பேசி விட்டால். அந்த பஸ் வரட்டும், வேறு புருஷன் வரட்டும். வரணுமே பகவானே' வேண்டுதல் வந்து விடுகிறது.

அவமானம்தான் பயம். கேலியும் ஏச்சும்தான் பயம்.

பயப்படாதே என்பதே சக்தி பூஜை. சாக்த வழிபாடு. உன்னை உனக்குத் தெரியாது தாயே. உன்னால் உருவு அடைந்தவன் நான். உன்னுள் வளர்ந்தவன் நான். உன் நெஞ்சில் உணவு உண்டு, உன் மடியில் தினம் தூங்கி, உன் கூட்டில் சுகப்பட்டு, உன்னால் உரம் பெற்றவன் நான். எனது எல்லா வலிமையும் வெற்றியும் உன்னால் உண்டானவை, நீ கொடுத்தவை. உன்னை அவமானப் படுத்த நான் யார்? நீ உணவு இல்லை என்று ஒதுக்கி யிருப்பின் நான் எப்படி வெற்றியடைந்திருக்க முடியும்.... உன்னால் பிச்சையிடப்பட்டவன், உன்னை அவமானப் படுத்த முடியுமோ? உன்னிடம் இருந்து வாழ்ந்தவன், உன்னை இகழ்ச்சியாகப் பேசுவேனோ.. இல்லை அம்மா.... நான் உன்னுடையவன். உன்னைப் போற்று பவன் உன் உதவி மறக்காதவன்.

என்னிடம் பயமெதற்கு. அம்மா எல்லா பெண்ணும் அம்மாதான். எல்லா பெண்ணும் எனக்கு தாய் ரூபம்தான். எல்லா பெண்ணும் ஆணுக்கு உதவிதான்.

தன் பழைய நிலை அறிந்தவன் தான் வளர்ந்த விதம் அறிந்தவன். தன் வெற்றிக்குக் காரணம் எது, எவர் என்று யோசித்தவன் சாக்தனாகிறான். சக்தி வழிபாடு செய்கிறான்.

நான் வெறும் கல். என்னை வெளியே எறிந்தது நீ. எறிந்ததால் உண்டானது சக்தி. வெறும் கல் தாக்குமா? எறிந்தபோதுதானே தாக்கும். தாக்கி உடைக்கும். தாக்குகிற கல்லுக்குத்தானே மதிப்பு! தரையில் இருக்கிற கல் எதற்கு உபயோகம்?

நான் வெறும் கத்தி. வீசப்பட்ட கத்திதானே வீரம். உறையிலிருப்பதில் என்ன லாபம்? கத்தி சிவம், வீச்சு சக்தி, சக்தி இல்லையேல் சிவம் இல்லை. சக்தி இல்லாத சிவத்துக்கு மதிப்பில்லை. அது உயிர்ப்பில்லை. அங்கு விளைதல் இல்லை. அங்கு தொழில் இல்லை. சிவம் ஜடம். அதாவது கத்தி சிவம். வீச்சு சக்தி. சண்டை சக்தி ரூபம்,

ஆண் சிவம், பெண் சக்தி. பெண் இல்லையேல் ஆண் இல்லை. வெறும் சக்தி விளைவு தருவதில்லை. சிவத்தை இயக்கிய சக்தி விளைவாகிறது.

பாலு ஐயருக்கு மெல்ல உள்ளே சூரியன் உதய மாயிற்று. எனவே சக்தி வழிபட சக்தியை முழுவதுமாய் ஏற்க, பணிவு காட்டி தன்னுள் வைக்க முழுமையாகிறான் இயக்கமாகிறான்.

சாக்தன் என்பவன் சிவம். அவன் வழிபாடு சக்தி.

பார்த்தசாரதியை சக்தி வழிபாடு செய்யச் சொல்ல வேண்டும்.

எப்படி.... என்ன விதம் அதுதான் ஊரில் ஒரு கோயில் இருக்கிறதே. பார்த்தசாரதி எதற்கு இன்னொரு ஆள். ஏன் இன்னொரு கோயில்

என்ன புதிய முறை... சாக்த வழிபாடு எப்படிச் செய்வது? இங்கே. சாக்த வழிபாடு எப்படிச் செய்ய வேண்டும்?

பெண்ணை வழிபடுதல் என்றால்- பெண் மாதிரி ஒரு உருவம் வைத்து வழிபடுதலா.... இல்லை பெண்ணையே வழிபடுதல்.... பெண்களை வழிபடுதல் - பெண்ணைச் சிலையாக்காமல் எல்லாப் பெண்களையும் மதித்தல் - பெண்ணை அவள் சகல ரூபங்களோடும் ஏற்றுக்கொள்ளுதல் - அவளின் கோபதாபத்தோடு புரிந்துகொள்ளுதல் அவள் உடற்கூற்றை ஏற்றுக் கொள்ளுதல் - அவள் பலம், பலவீனம் பிரிவு காட்டாது இரண்டுமே சரியென்று தன்னுள் மதித்தல் - வெறும் ரத்தப் பெருக்கு என்று தாழ்ச்சி காட்டாது, இது இயற்கையின் லீலை என்று உயர்த்தி வைத்தல் - சித்து விளையாட்டு என்று ஞானம் கொள்ளுதல்.

வயிறும், யோனியும், முலைகளும் ஞானம் தரும் உபாயம் என்று போற்றுதல், உன் விருப்பம் என்ன.... உன் ஆசை எது.... உன்னைப் போற்றுதல் எப்படி என்று அவளிடமே யாசித்தல்-அவளுக்கு கீழ்ப்படிந்து நடத்தல் - 'நீ ஆளுமை செய்' என்று அவளிடம் தன்னை ஒப்பு வித்தல். 'எனக்கு உண்டானவள் நீ'யென்று சொல்லாது, உனக்கு உண்டானவன் நானென்று ஏற்றல் 'என்னை இயக்கு, என்று கட்டளைக்குக் காத்திருத்தல்.

இது சரியா.... நான் யோசிப்பது சரியா.... இது நல்ல முறையா... ஏன் சாக்தம் இல்லை இப்போது. ஏன் அழிந்து போயிற்று இந்த முறை.

கிடா வெட்டலும், தீ மிதித்தலும், அலகு குத்தி நிற்றலும், என சக்தி வழிபாடு ஆண் ஆட்டமாய் போயிற்று. பெண்ணுக்கு அங்கே என்ன உயர்வு? பெண்ணை ஏன் மறந்து போய், ஆண் தன்னை முன்னிலைப்படுத்திக் கொண்டான். சக்தி வழிபாட்டில் பெண்ணல்லவோ முக்கியம். பெண் அல்லவோ மூத்தவள், உடல் வளர்ச்சியில், மன முதிர்ச்சியில் பெண்ணல்லவோ மூத்தவள்.

நான் யோசிப்பது சரியா? ஏன் சாக்த வழிபாடு காணாது போயிற்று? ஆண் வழிபட வெட்கப்பட்டு விட்டானா.... இல்லை பெண் அந்நியமாகிவிட்டாளா? இந்த பூமி பெண்ணை வழிபட்ட பூமிதானே.... காம கோட்டம் என்று பெண்ணுக்குத் தனியே வழிபாடு நடத்திய ஊர்தானே-

இந்த பூமியில் யுத்தம் வந்து அந்நியர் உள்ளே நுழைந்து போரில் ஆண்கள் சாக, பெண்கள் அதிகமாகி, யுத்த பூமியில் அந்நியர் ஆளுமையில் பெண் அடக்கப் பட, அவளைக் கவர்ந்து சென்றுவிட, அது அவமானாகி 'நீ இருப்பின் எவனாவது கடத்த வருவான். நீ இல்லாது போ என்று விரட்டப்பட்டு, கொல்லப்பட்டு, சுடுகாட்டு சாம்பலே, தன்னை மறந்து சிவனே பெரிதாயிற்றா? சரணடைந்த தத்துவமே பெரியதாயிற்றா? எது நடந்தாலும் 'அவன் செயல்' என்று சும்மா இருத்தலில் பெண் மதிப்பற்று போனாளா-

இயக்கமே குறைந்து, இது விதி, என் தலை யெழுத்து, மன்றாடு... அவன் உன்னை மீட்பான் என்கிற தத்துவம் வளர்ந்துவிட்டதா? அந்நியனிடம் சர ணடைந்து, கடவுளிடம் சரணடைவது எளிதான விஷயமாய் போயிற்றா?

நான் தவறோ.... யோசிப்பது தவறோ.... சாக்தம் குறைந்ததற்குக் காரணம் அந்நிய மதத்தினர் ஆட்சியே. இன்று மறுபடி சாக்தம் செய்தால் என்ன? சக்தி வழிபாடு நடத்தினால் என்ன? பெண்ணை மீண்டும் முதலாய் நிறுத்தினால் என்ன? பூசித்தால் என்ன?

உன்னால் உன்னுள் உன்னோடு என்று மதித்தால் என்ன?

கிடாய் வெட்டுவது பூஜையில்லை. போர் வெறி. தீ மிதித்தல் வழிபாடு இல்லை. தனக்குத்தானே விதித்துக்

கொள்ளும் தண்டனை. அலகுக் குத்தல் சரியில்லை.... தன் வேதனையில் தன்னைத் தாழ்த்திக் கொள்ளும் ஆசை.

பெண்ணைப் பூஜித்து, பெண்ணைக் கௌரவப் படுத்தி, பெண்ணால் பெரியவனாகி, பெண்ணை அங்கீகரித்து, பெண்ணோடு பிணைந்து வாழ்தலை மறுபடி செய்தால் என்ன?

சாக்தம் அதுதானே என்னுள் பாதி பெண் தானே? என் இயக்கம் நீ என்பதுதானே. என்னைத் தூண்டி விடு என்று சொல்வதுதானே. எனக்குத் துணை நில் என்பதுதானே?

மறுபடி சாக்தம் வருமா? வரவழைக்க முடியுமா? பெண்ணை இந்த சமூகம் மதிக்கும் வண்ணம் ஒரு அமைப்பு நடத்த இயலுமா?

பார்த்தசாரதிக்கு இது புரியுமா?

புரிந்தாலும் பொறுமையாய் செய்ய இயலுமா?

பார்த்தசாரதி இருக்கட்டும். என்னால் இயலுமா? நான் தெரியாமல் யோசிக்கிறேனா? அம்மா, எனக்குத் தெளிவு வருகிறதா? என் நினைவுகள் சரியா?

சரி.. இப்படி ஒரு வழிபாட்டைப் பெண் ஏற்றுக் கொள்வாளா? காலங்காலமாய் அடிமையாகிக் கிடந்த வம்சம், அது மேடையேறி விழுந்து வணங்கினால் வாங்கிக் கொள்ளுமா?

வணங்க என்னால் முடியும்.

வணக்கம் தாங்க அவளால் முடியுமா?

புரட்டிப் போடுகிறேனோ.... இயற்கைக்கு மாறாய் யோசிக்கிறேனா... அவள் என்னுள் பாதிதானே! ஏன் உயர்த்துகிறேன்? என்னைவிட உயர்வு என்று ஏன் யோசிக்கிறேன்? ஏன் அவளைப் பூஜை செய்ய நினைக்கிறேன்?

சமமாக்க தலைக்குமேல் உயர்த்தித் தூக்க வேண்டும். அது சேற்றிலிருக்கிறது. இழுத்துக் கரையேற்ற வேண்டும். அது அதல பாதாளத்தில் இருக்கிறது. முதலில் மேலே தூக்க வேண்டும்.

எனக்குப் புரிகிறது. கொஞ்சம் உயர்த்தி நிறுத்தி னால்தான் அது என் உயரத்திற்கு வரும். என் மீது நம்பிக்கை கொள்ளும். பீடம் போட்டு உட்கார வைத் தால்தான் எனக்குச் சமமாய் நடை போடத் துவங்கும்.

நான் சரியா? என் யோசிப்பு சரியா?

உள்ளே முழு சூரியன் பாலு ஐயருக்கு தோன்றியது.

என்னால் முடியுமா? என்னால் முடிந்ததைத்தானே இன்னொருவருக்கு உபதேசிக்க முடியும்.

இது... இந்தக் கல் என்ன பாடுபடுகிறது. என்னை நானே அவமானப்படுத்திக் கொள்ள வைக்கிறது. இது அவமானமா... பெண்ணை வணங்குதல் ஆணுக்கு இழுக்கா - இந்தக் கல் - இதை வணங்குகிறேன்.... இதை விட நான் உசத்தி இல்லையா? கல்லை வணங்குகிறவன் பெண்ணை வணங்கக் கூடாதா? கல்லைப் பெண்ணாய் வணங்க முடிகிறது. பெண்ணை கல்லாய் பார்க்க முடியாதா? பெண்ணை ஏன் போகமாய் நினைக்க வேண்டும் சரி, இது கல். பெண் கல். அதாவது சரஸ்வதி. சரி, இதை என் மனைவி சரஸ்வதி என்று நினைத்துக் கொள்கிறேன். சரஸ்வதி உனக்கு நமஸ்காரம் என்று கை கூப்ப முடியுமா? விழுந்து வணங்க முடியுமா? பார்க்கலாம்.

வணங்கு..... மனைவியை விழுந்து வணங்கு... இந்தக் கல் என் மனைவி சரஸ்வதி. இது அம்மன் கோவில் கல்லெனில் சரஸ்வதி அம்மன் இல்லையா அம்மன் சாயல் இல்லையா.. சாயல் என்ன. இதுவே சரஸ்வதி இல்லையா. வணங்கு. அம்மன் கோயில் கல்லை பெண்

என்று வணங்கு. மகள் என்று வணங்கு. தாய் என்று சொல்லி தெருவில் போகிற பெண்ணை வணங்கு.

எது தடுக்கிறது உனக்கு?

எழுந்திரு, வணங்கு.

அம்மா என்று ஒரு முறை, அருமை மனைவி என்று மறுமுறை, அன்பு மகள் என்று ஒரு முறை வணங்கு. ஊரில் உள்ள எல்லாப் பெண்களும் நீ என்று வணங்கு. இல்லை யோசிப்போம். இந்த இடம் விட்டு வேறு இடம் போய் யோசிப்போம். ஒரே இடத்தில் உட்கார ஒரே சிந்தனை வருகிறது. உள்ளே புரண்டு யோசிக்க மறுக்கிறது. அவிழ்த்துக் கட்டு. குலைத்துக் கட்டு. கலைத்துக் கட்டு.

எண்ணங்கள் உற்றுப் பார்ப்பதே தியானம். எந்தத் தடையுமின்றி அதன் போக்கில் அதனை அறிவதே தியானம். ஏதோ ஒரு புள்ளியில் நில்லாது. ஒன்றையே யோசிக்காது புரட்டிப் புரட்டிப் போடு. உட்கார்ந்து நடந்து எல்லா நிலையிலும் மாறி மாறி யோசனைகளைக் கவனி. எண்ணங்களை அதன் போக்கில் வளர விடு. தானாய் பிரிந்து கிளை விட்டு பூத்துக் குலுங்குவதைக் கவனி. இலையும், பூவும், முள்ளும், கிளையும், காயும் கனியுமாய் வளர்வதைப் பார். மொத்த தாவரத்தையும் சுவீகரி. ஏதேனும் ஒன்றை மட்டும் உனக்குப் பிடித்தது என்று தொடாதே. எல்லாம் எடு. எல்லாம் தொடு.

எழுந்திரு பாலு. நடந்தபடி யோசி. புள்ளியிலிருந்து விலகு.

எழுந்து நடக்க, எல்லாம் மறந்து போயிற்று. யோசித்ததெல்லாம் காணாமல் போயிற்று. உள்ளே புத்தியில் வெறுமை படர்ந்தது. மனசு மறுபடி இருட்டாயிற்று. தன்னுடம்பு மறந்து திசை தெரியாது போயிற்று. எல்லா சப்தமும் அந்நியமாய், தனக்கு

சம்பந்தமற்றதாய், தன்னோடு சேராததாய் தோன்றியது. தான் மட்டுமே இருப்பது புரிந்தது. அது உடம்பல்ல. புத்தியல்ல மனசல்ல. புத்தியின் தந்திரமல்ல. மனசின் ஆர்வமல்ல. கணக்கு போடுகிற வேதனையில்லை. உணர்ச்சியின் ஆட்டமில்லை. உள்ளே ஏதோ லேசாயிற்று. அதுதான் 'நான்' என்று புரிந்தது.

வயல்வெளி தாண்டினார். எத்தனை நேரம், எந்த வழி என்கறி பிரக்ஞையில்லாது போனார்.

வெறும் மண்வெளி வராண்டா ஏறி தாண்டினார்.

மழைநீர் தேங்கி சூரியன் சில நேரம் காட்சியளிக்கும் இடம். வறண்ட பாலையாய் இருந்தது. மணல் துகள்கள் காலை அறுத்தன நடக்க, நடக்க முடிவே இல்லா இடம் என்று தெரிந்தது. சிறிய குளம் நடுவே தெரிந்தது. நேரே நடக்க, வழியை மறித்தது, ஒரு மேட்டுச் சரிவில் அந்தக் குளம் மறைந்தது. மெல்ல மேடு ஏறினார். அந்தப் பக்கம் ஆடுகள் மேய்ந்து கொண்டிருந்தன. வெகு தூரம் ஆள் நடமாட்டமேயில்லாமல் வெட்டவெளியாய் இருந்தது. மேலே சூரியன் தகித்தது. வியர்வை பொங்கியது. குளத்தோரம் பெரிய புற்கள். முழங்கால் உயரப் புற்கள் இருந்தன. புற்கள் தாண்டி சரளைக் கற்கள் சரிவாய் குளம் சுற்றிக் கிடந்தன. சரளைக் கற்கள் ஓரம் நடந்தார். ஒரு இடத்தில் புல் அமிழ்ந்து மடங்கியிருந்தது. நின்றார்.... மெல்ல நடந்து அருகே போனார். பதினாலு வயசுப் பெண் ஆடு மேய்க்கிற பெண் மல்லாந்து படுத்திருந்தது. புற்கள் அவளை மறைத்திருந்தன. அவள் இடது கை அடிவயிற்றில் படர்ந்திருந்தன. கண்கள் மூடி ஏதோ சுகத்தில் கிடந்தாள்.

பாலு ஐயருக்குப் புரிந்து போயிற்று.

அம்மா என்று கூப்பிட்டார்.

அந்தப் பெண் திடுமென்று எழுந்தது. அவசரமாய் பாவாடையைக் கீழே இறக்கியது.

பாலு ஐயர் வாய் பிளந்தார். அவள் நெஞ்சக் கூட்டுக்குள்ளே சின்ன அகல் விளக்கு ஒளி தெரிந்தது சுடர் ஆடிற்று. இதுதானா என்னுள்ளும் இருப்பதுதான் இவளா? இடைச்சியும் நானும் ஒன்றா? இந்தச் சுடர்தான் மேய்க்கிறதா? இவள்தான் மேய்ப்பவளா?

'அம்மா' - கை கூப்பினார்.

சுடரே சுடர் போன்ற வடிவே. இவ்வுலகத்தின் வாசலான யோனியே. உன்னை வணங்குகிறேன்.

புல் தரையில் நீள உடம்பு கிடத்தி கைகள் தரையில் பதித்து நெற்றி நிலம்பட வணங்கினார்.

அந்தப் பெண் பயந்து அலறியது.

18

அவள் அலறல் கேட்டு ஆடுகள் சிதறி ஓடின.

பாலு ஐயர் மனசு உலகத்திற்குத் திரும்பியது.

"என்னாடி...." எங்கோ வெகு தொலைவிலிருந்து பெண் குரல் கேட்டது. குளத்தின் எதிர்ப்பக்கம் புல்லறுத்த பெண்பிள்ளை அரிவாளும் கையுமாய் எழுந்து நின்றாள்.

அந்த ஆட்டுக்காரப் பெண் ஐயரையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

மெல்ல நடந்து அவளைத் தாண்டி பாலு ஐயர் குளத்தின் கரையோரம் கூழாங்கற்கள் நகர நடந்தார். குளம் சுற்றி அந்தப் புல்லறுக்கும் பெண் நோக்கி நடந்தார்.

"என்னன்னு கேட்கறேன்ல...' மறுபடி குரல் காற்றில் வந்தது.

பதிலுக்கு அந்த இடைச் சிறுமி ஏதோ கூறினாள். காற்று எதிர்ப்பக்கம் அவள் கூவியது விழவில்லை.

'யாரது எங்க பெண்ணை சத்தாய்க்கறது?"

புல்லறுத்தவள் வேகமாய் இவரை நோக்கிச் சுற்றி வர, எந்த பதட்டமும் இல்லாமல் ஐயர் அவளை நோக்கி நடந்தார்.

நெஞ்சில் பொய்யிருப்பின் முகத்திலே இருள் இருக்கும். முகத்திலே இருள் இருப்பின் எதிர் ஆள் குரல் உயரும். என்னுள் என்ன இருக்கிறது என்று என் முகம் சொல்லட்டும் முகம் பார்த்து புரியாது போனால்? மூர்க்கம் கொண்டு தாக்கினால்? வருவது வரட்டும். தாங்கினாலும் பெண் தெய்வம், தாக்கினாலும் பெண் தெய்வம்.

வணங்க முடிவெடுத்த பிறகு தயக்கம் ஏன்? எதுவாயினும் கவலை ஏன்?

அந்த இடைப் பெண் உட்கார்ந்து அழத் துவங்கி விட்டாள் போலிருக்கிறது.

'அடியே.... என்னாடி... ஏன் அழுவற' 'புல் வெட்டுபவள் ஓடி வந்தாள். முப்பது கஜ தூரத்தில் அவளின் வயசு தெரிந்தது. நாற்பது நாற்பத்தைந்து இருக்கும். இருபது கஜ தூரத்தில் அவள் வறுமை தெரிந்தது. உதட்டோரம் வெற்றிலை புகையிலை ஒதுக்கல் தெரிந்தது. பத்து கஜ தூரத்தில் அவள் அரிவாளைப் பிடித்திருந்த உறுதி தெரிந்தது.

"ஆரு.... ஆரு நீ?"

ஐயர் பேசாது நின்றார்.

"என்ன பண்ணே என் பொண்ணை?"

அமைதியாய் அவள் கண்களைப் பார்த்தார்.

"வெள்ளை வேட்டி சட்டை போட்டிருக்க.... ஆட்டுக்காரப் பொண்ணை ரேங்கிட்டு வரியே..... ஆரு நீ? அடியே வாடி இங்க." அவள் பெண் மீது ஒரு பார்வையும் அவர் மீது ஒரு பார்வையுமாய் பரபரத்தாள்.

"அடங்கு அடங்கு.... அடங்கி என்னைப் பார்." அவருள் ஒரு குரல் பேசிற்று.

"என்னா பண்ணே எங்க பொண்ணை?"

"என்ன சொல்ல.... வணங்கினேன்" என்றார்.

சாக்த உபாசனை என்றா.... எப்படி உபாசனையைச் சொல்ல இயலும்?

"நெஞ்சு மயிரு நரைத்துப் போச்சு. பச்சப்புள்ளைய பயங்காட்டிட்டு வரியே. என்ன செய்த அவளை.... அடியே இங்க வாடி..... இதோ பார். இந்தாளை மடக்கிட்டேன். ஆடு மேய்க்கறவங்கன்னா என்னா இளப்பமா? நேத்திக்கு என்னடான்னா ஒருத்தன் வாரியான்னான். கண்ணடிக் கிறான். இன்னிக்குக் காலைல மீன் புடிக்கிற பசங்க விரலு காட்றானுங்க. நீ என்னா பண்ணே...." மறுபடியும் பார்வை அலை பாய்ந்தது.

"இதே.... இதுவே...."

"கேள்விக்கு பதிலாய், கை கூப்பினார்.

அவள் திடுக்கிட்டாள். முகத்து ரௌத்திரம் குறையாது பார்த்தாள். "கை கூப்பிட்டா வுட்டுரு வாங்களா.... டேய் மாரியப்பா...."

பாலு, உனக்கு விழுந்து வணங்க வெட்கம், பாலு உன்னில் வணக்கம் இல்லை. இவளும் அவள்தானே.... இதுவும் பெண்தானே... எது வரினும் உன்னைச் சொல். உன்னை வெட்கமின்றி சொல். உன்னை வெளிப் படுத்து. நீ யார் என்று கேட்கிறாள். இதுவே நான் என்று

சொல். நீ யார்? பெயரா?.... உத்தியோகமா ஊரா.... வீட்டு நம்பரா? வீதியா.... இன்னாரால் இன்னாருக்குப் பிறந்தேன் என்கிற பரம்பரையா? எது... இடைச்சியின் தெஞ்சுள் கண்ட வெளி எது?

எதற்கு இவளிடம் பயம். எது அந்நியம் இவள் குரலா இவள் கோபமா? கை அரிவாளா, இவள் உன்னை நேசிக்கவில்லை என்று தயங்குகிறாயா? இவள் கோபத்தில் நேசமில்லை என்கிறாயா? இவள் கோபத்தை நேசி. கூவலை நேசி. உன்னை நேசிப்பவரைத் தான் நேசிப்பாயா. இது ஒரு பெரிய காரியமா? இதை நாய்கூடச் செய்யுமே. உன்னைப் பகைத்தவனையும் நீ நேசி.

பிரியமாய் இருக்கும் பெண்களிடம் பிரியமாய் இருப்பது போகம். எல்லாப் பெண்களையும் பிரியமாய் கொள்வது யோகம். நீ போகியா? யோகியா? போகிக்கு மனைவி போதும். யோகிக்கு உலகமே வேண்டும்.

அப்படியானால் யோகம் பேராசையா.... ஆமாம், யோகம் பேராசை, ஆசையை அறுத்து ஆளுக்குக் கொஞ்சம் கொடுத்து, வாங்காது அத்தனையும் அவிழ்த்துக் கொட்டி விடுதல்... எடுத்துக்கொள் என்று இறைத்தல்.

சங்கரர், சாலையில் போகும் புலையனை ஒதுங்கு என்கிறார். எதை ஒதுங்கச் சொல்கிறாய் சங்கரா? தேகத்தையா... தேகம் நானல்ல, ஆத்மத்தையா? ஆத்மம் எல்லா இடமும் இருக்கிறது. எங்கே ஒதுங்குவது?

சமுத்திரம் அலையாய் புரள, ஆயிரக்கணக்கில் குமிழிகள் உடைய, மறுபடி சமுத்திரம். குமிழியைக் குமிழ் என்கிறாயா... சமுத்திரம் என்கிறாயா... நீயும் குமிழி இவளும் குமிழி உடைய ஒரே சமுத்திரம்.... நீ குமிழிக்கு.

இரும்பினால் பூண் போட்டு காப்பாற்றிவிட முடியுமா.... இவள் அரிவாளோ உன் அகந்தையோ உங்களைக் காப்பாற்றுமா?

நீ ஏன் பேதலிக்கிறாய்? உன்னிடம் அன்பு இல்லை. அன்பும் ஒரு முகப்பட்ட கவனிப்பும் இணை பிரியாதவை நீ அன்பு செலுத்தா இடத்தில் ஒருமுகப்பட முடியாது. ஒருமுகப்பட முடியாத இடத்தில் சஞ்சலம் உண்டாகிறது. சந்தேகம் தோன்றுகிறது.

உன்னால் ஏன் அன்பு செலுத்த முடியவில்லை? உன் அகந்தை தடுக்கிறது. உன் அகந்தை எது? உன்னை நான் என்று கொண்டிருப்பது நான் பாலு ஐயர் என்று பெயரிட்டுக் கொள்வது. நீ பாலுவா.. நீ ஐயரா.... நீ வெறும் பெயரா.... ஜாதியா.... பெயர் எதற்கு? உன் உடலுக்கா? மனசுக்கா நீ என்பது உடலா? மனசா? சற்று முன் வெளியாகி நின்ற உணர்வுக்கு என்ன பெயர்? யார் அது? இல்லையெனில், எது நீ?

கவனி.... உன்னைக் கவனி..... உன் எண்ணங்களைக் கவனி. எது பேதம் உண்டாக்குகிறது என்று கவனி. அங்கு வணங்கியவன் இங்கு ஏன் விழிக்கிறாய். என்ன பேதம்? ஏன் இது? தூக்கத்தில் கால் புரண்டது போல், வணங்கி விட்டாயா? அது தூக்கமா? இது விழிப்பா? இல்லை அது விழிப்பு. இது தூக்கமா? சிறிது நேரம் தெளிவாகி மறுபடி கலக்கமா?

எல்லோரிடமும் அன்பு என்று பொய் சொல்கிறாய். வார்த்தையாய் நிற்கிறாய். உன்னுடையது அன்பில்லை. அலட்டல், ஆரவாரம். அடங்கிவிட்டேன் என்கிற ஆரவாரம் அடங்கியதுபோல் ஒரு அலட்டல். வேஷம். அரிவாள் பார்த்ததும் வேஷம் கலைகிறது அவள் கோபம் பார்த்ததும் உள்ளே ஆடுகிறது.

நீ பாலு ஐயர், ஐயர் வெறும் பாலு. உடம்பை நான் என்கிற ஆசாமி. புளுகன், புத்திமான். தந்திரசாலி அயிரை விற்று விரால் வாங்குபவன். வியாபாரி. உன் உடம்புக் குமிழிக்கு இரும்புப் பூண் போட்டு பூட்டு. எப்பவும் இருப்பேன் என்று நினை. என் பெயர் நிற்பதற்கு கோயில் பூஜை. அடேய், நீ போனாலும் உன் கோயில் நிற்கும் என்கிறாயா? இது பாலு ஐயர் கோயில், அவர் பேர் கொண்ட வீதி. அவர் வைத்த கல்வெட்டு என்கிறாயா?

அற்புதம். அபாரம், அடடா! எத்தனை நம்பிக்கை. போடு. இரும்புப் பூண் போடு. குமிழிக்கு பெயர் சொல்ல குமிழியாய் கோயில் வை.

அழியும்ப்பா. எல்லாம் அழியும். அழிந்திருக்கிறது. நீ நின்ற நிலத்தில் எத்தனை எத்தனையோ நடந்து போயிருக்கிறது. எங்கே அவை? எத்தனை கோயில் கரைந்தது? எத்தனை கோபுரங்கள் அழிந்தன. தடம் தெரியாது போயின. நானிருப்பேன், என் பெயர் இருக்கும் என்று கட்டியவவை காணாமற் போயின. வம்சமே பூண்டற்றுப் போயிற்று. சோழன் எங்கே? பாண்டியன் யார்? சேரன் எங்கே போனான்? சந்திராதித்தார் உள்ளவரை அனுபவிக்கக் கொடுத்த ஆடு மாடு எங்கே.... நிலம் எது? சந்திரனும் ஆதித்தனும் இருக்கிறார்கள். சோழர் எங்கே? கட்டு. கோயில் கட்டு. கோயில் கட்டி கல் நட்டு பெயர் பொறி, செத்துப் போ. கல் இருக்கும் என்று மூச்சு அடங்க நட்ட ராசாவும் காணோம், நட்ட கல்லையும் காணோம். புழுதிதான் மிச்சம்.

உடைந்த குமிழிக்கும் உடையாத குமிழிக்கும் என்ன சம்பந்தம்? நீ செத்ததும் அந்தக் கோயில் உனக்கென்ன உறவு?

'அடேய் மாரியப்பா' புல்லறுக்கிறவள் மறுபடி கூவினாள்

"அடேய்... அடேய்.... அடேய்." அவர் தன்னுள் தன்னை நோக்கிக் கூவினார். தன் எண்ணங்கள் அடங்கி வெறுமை உணர்ந்தார். உள்ளே எதுவுமில்லை. எதுவுமில்லாதது எதுவோ அது எல்லாமாய் இருந்தது. அவர் மறுபடி அமிழ்ந்தார்.

அந்த இடைப் பெண் அருகே ஓடி வந்தாள்

"இந்த ஆளு.... இந்த ஆளு.... நானு புல்லுல படுத்திருக்கச் சொல்ல...." அவள் குரலோடு அவருக்கு சம்பந்தமேயில்லாது போயிற்று.

புல்லறுத்தவள் தவறாய்ப் புரிந்துகொண்டாள்.

'அடி செருப்பால... அரிவாள் தூக்கினாள் அவருக்கு அது தெரியவில்லை. அதுவே இது. இதுவே அது. எதுவுமில்லாதது எதிரே என்னுள்ளே எங்கேயும் எல்லாமாய் நின்றது. பூமிக்கும் அவருக்கும் சம்பந்த மின்றி பிடிப்பு அறுந்தது. கூப்பிய கரத்தோடு உடம்பு சரிந்தது. அவள் பயந்து பின்வாங்கினாள். ஆள் உடம்பு முன்னே நகருவது கண்டு தொங்கின அருவாளை முன்னே வீசி பயமுறுத்தினாள். அவர் உடம்பு பயமற்று அரிவாள் வீச்சுக்கு இடையே விழுந்தது. நச்சென்று வெட்டு இடது தோளில் அறுத்து அதைத் தாண்டி தாக்கிற்று.

"அம்மா...." அவர் அவள் காலில் விழுந்தார். நிலம் பட வணங்கினார். எழுந்தபோது எல்லாம் இன்பமாய் இருந்தது. அவளுள்ளும் சுடர் தெரிந்தது. "அம்மா.. அம்மா.." சுடர் பார்த்து அழுதார். தொழுதார். எல்லாமும் மறைந்து போயிற்று எழுந்து அவளைத் தாண்டி சரளைக் கல் இடற நடந்தார். இடது கை

தோளில் சதை வரிந்து ரத்தம் ஒழுகி சட்டை நனைந்தது. இடுப்பு வேட்டி வரை பரவிற்று. ரத்தம் வழிய நடந்து போனார்.

"இப்படித்தான் என்னையும் கும்புட்டாரு."

"கும்புட்டாரா.... பாவி மகளே.... சரியா சொல்லித் தொலைக்கிறதுக்கு என்ன." புல்லறுத்தவள் பதறினாள்.

"பாவி மகளே.... ஐயோ.... ஐயோ.... ஐயோ. நான் என்னா பண்ணுவேன். ஐயா..." உதிரப் பெருக்கு உடலைத் துவள வைத்தது. வெளிச்சம் இருந்தது. பெரிய சரளைக் கல் அவர் கால் பட்டு நகர, உருள வைத்தது. விழுந்தார். வெளிச்சம் இருந்தது.

'அடேய் மாரியப்பா!' புல்லறுத்தவள் கூவ, யாரோ ஓடிவந்தார்கள். பூமியதிர ஓடிவந்தார்கள். காதுக்குள் ரீங்காரம் கேட்டது. ரீங்காரம் சங்கொலியாயிற்று. வெளிச்சத்தில் வர்ணங்கள் வந்தன. வர்ணங்கள் வெளிச்சமாய் இருந்தன.

"அட, நம்ம பால ஐயரு!" யாரோ தூக்கினார்கள்.

"நான்தான் வெட்டிப்புட்டேன்டா."

"தேவிடியா முண்டே..." அவன் வேட்டி கிழித்தான். குளத்தில் நனைத்தான். கட்டுப் போட்டான். தோளில் தூக்கிக்கொண்டு சாலைக்கு ஓடினான். புல்லறுத்தவள் பின்னால் ஓடினாள். அரிவாளை வீசியெறிந்தாள்.

"ஐயோ! தெரியாத போயிட்டேனே...' துள்ளுகிற தலையைத் தாங்கிக்கொண்டாள். அவர் கண்கள் திறந்தன. முகம் புன்னகை செய்தது. அது அவர் பார்வையில்லை. வெறும் கண் பார்வையில்லை. உள்ளே இருந்து பார்த்த பார்வை. அவள் பயந்து நின்றாள். அதைப் பார்க்காத இடைப் பெண் தொடர்ந்து ஓடிற்று.

"என்ன மாரியப்பா...." புல் வண்டிக்காரர்கள் கேட்டார்கள்.

"எங்காத்தா ஐயரை வெட்டிருச்சு."

"ஐயோ ஏன்?"

"தெரியலியே"

"டேய், சொம்புத் தண்ணி எடுத்தா பெரிய வெட்டுப்பா. தண்ணிய மூஞ்சில அடி...."

ஐயர் கண் விழித்தார்.

"என்னங்க ஐயரே...."

"பிரமம் சூட்சுமம்."

"என்னாது."

"பிதாமகம்."

"அப்படின்னா?'

"எல்லாம் கடந்த ஒன்று."

"புரியலையே."

"என்னுள் இல்லை."

அவை அவருக்குள் தைத்த மகா வாக்கியங்கள். திண்ணையில் இருந்த கிழவன் தலையாட்டினான். தன் இடது தோள் ஊதினான்.

19

"பாலு ஐயர் கையை யாரோ வெட்டிப் போட்டாங்களாம். துண்டா எகிறி விழுந்துடுச்சாம்." பார்த்தசாரதி உறைந்து போனான். துண்டை தோளில் போட்டுக் கொண்டு தெருமுனைக்கு வந்தான். எதிர்ப் பட்ட ஆளிடம் சைக்கிள் வாங்கி நெடுஞ்சாலையில் ஏறினான் வடக்கு நோக்கி மிதித்தான். அந்தப் பக்கம் தான் ஆரம்ப சுகாதார நிலையம் இருந்தது. வாசலில் கூட்டம் இருந்தது.

"என்னய்யா ஆச்சு...." கூட்டத்தைப் பார்த்துக் கொண்டிருந்த முண்டாசைக் கேட்டான். "தெரிய லீங்களே.... என்னமோ கூட்டம் இருக்குது." பார்த்தசாரதி தவித்தான். சைக்கிளுக்கு லாக் இல்லை என்பது தெரிந்தது. விட்டு விட்டுப் போக பயமாய் இருந்தது.

படிகளில் ஏறி, "யாருங்க வெட்டப்பட்டது?"

"தெரியலீங்க. வயசானவரு."

"பூணூல் போட்டிருந்தாரா? ஐயரா?"

"தலைதான் தெரிஞ்சுது. கூட வந்தவங்க உள்ளாற இருக்காங்க. கும்பலா வந்தது பார்த்து கதவு சாத்திட் டாங்க."

யாரோ இருவர் வாசலில் தள்ளி விளையாட, சைக்கிள் தடாரென்று விழுந்தது.

"ச்சே? இரவல் சைக்கிளை நம்பி வந்திருக்கக் கூடாது. என்னை - ஒன் கால்களை நம்பி வந்திருக்க வேண்டும். பதற்றத்தில் என்னமோ செய்துவிட்டோம். உள்ளே போக முடியாது. வெளியே நிற்க முடியாது. அவஸ்தைப்படுகிறோம். கதவு மூடியிருக்கிறது. உள்ளே விடமாட்டார்களே? என்ன செய்வது.... என்ன செய்வது?

மறுபடி சைக்கிள் இடத்துக்கு வந்தான். எங்கேயாவது கடையில் விடலாமா?

"யாரப்பா வெட்டிட்டாங்க?'

"யாரோ கிழவன்?"

"எங்கித்து கிழவன்?"

"ஏரி எதிர ஒரு கிராமம் இருக்குல்ல. அங்கித்துக் கிழவன்."

"அடட.... திண்ணைல உட்கார்ந்திருப்பாரே அவரா?"

"என்னங்க.... அவரை யாரு வெட்டுவாங்க? இது வேற யாரோ."

உள்ளே மின்னலடித்தது.

"உள்ளே போய் என்ன செய்யப் போகிறேன்."

"ஐயரை நான் எப்படிக் காப்பாற்றப் போகிறேன். அவர் துண்டுபட்ட கையை நான் எப்படி ஒட்ட வைக்கப் போகிறேன். கிழவரை வணங்கு. மனசு குவித்து அவரிடம் கேள் பெரிய இவனாட்டம் ஒரு சைக்கிள் வாங்கி வந்து அவஸ்தைப்படுகிறாயே? நேரே திண்ணைக்குப் போயிருக்க வேண்டியதுதானே, முட்டாள்."

"உள்ளே இருப்பது பாலு ஐயரா...."

ஏன், பாலு ஐயரா இருந்தாத்தான் கிழவரைக் கும்பிடுவாயா.... காப்பாற்று என்பாயா? உள்ளே இருப்பவன் செத்துப் போகட்டும் என்று சொல்வாயா? தெரிந்தவன் என்று இனம் பிரித்து பதற்றம் வருமா?

இதோ இந்த முண்டாசு ஆளுக்கு பாலு ஐயர் தெரியாது. ஏன் நிற்கிறான்?

நீயும் நில்? மனசு குவித்து கிழவரைக் கேள். இவர் நோய் தீரட்டும் என்று வேண்டிக்கொள்.

ஒரு வேளை உள்ளே பாலு ஐயர் இருந்து. அவருக்கு உடனடியாய் வேறு ஆஸ்பத்திரி ஊழியம் தேவைப்பட்டால்.... அதுவும் நடக்கும். கிழவரைக் கும்பிடு நம்பிக்கை வை. நீயே எல்லாம் கிழித்து தோரணம் கட்டுகிறவனல்ல.

உள்ளே சண்டை மாதிரி குரல் கேட்டது.

சற்று நேரம் கேட்டு விட்டு கண் மூடினான். 'அப்பா என்று கிழவரைக் கூப்பிட்டான். உள்ள யாரு? நம்ம பாலு ஐயரா.... வேறு யாராய் இருந்தாலும் நல்லது பண்ணிருப்பா. எதுவானாலும் சரிபண்ணிடுங்கப்பா... திண்ணையும் கிழவரும் மனக்கண்ணில் தோன்றினார்கள்.

உள்ளே இனம் தெரியாத அமைதி படர்ந்தது சரியாகிவிட்டது என்று தோன்றியது.

"என்னங்க.... தவிக்கிறீங்களே.... உங்களுக்கு வேண்டிய ஆளா?" அருகில் உள்ள முண்டாசு கேட்டது.

"நான் தவிக்கிறேனா. உனக்கு எப்படிதெரிந்தது?"

"நான் வண்டி பார்த்துக்கறேன். நீங்க உள்ள போய் கேட்டுட்டு வாங்க. இந்த வீட்டுப் பின்பக்கமும் அடுத்த வீட்டுப் பின்பக்கமும் ஒண்ணா முடியும் சுவரு தடுப்புகூட இல்லை. அப்படி போய் கேளுங்க?"

"கொஞ்சம் பார்த்துக்குங்க." கும்பிட்டுவிட்டு அடுத்த வீட்டுக்குள் நுழைந்து உள்ளே போனான். பின் கட்டில் இரண்டு எருமைகள் இருந்தன. வெறும் பூவரசன் வேலி எல்லை பிரிந்திருந்தது. செடி விலக்கி சுகாதார நிலையம் பின்பக்கம் போனான். கதவு திறந்திருந்தது.

"இது போலீஸ் கேஸ். ஆனா, காயம் காணமே. இது உன் ப்ளட்டா? வேற எவளையாவது வெட்டிட்டு நீ ஓடி வந்துட்டியா?"

கட்டு பிரித்து துண்டு ரத்தக் கறையுடன் கட்டிலில் கிடந்தது. சட்டை அவிழ்த்துப் போடப்பட்டிருந்தது. மெல்லிசா ஒரு கிழவன். "இதுல இப்படி ப்ளட் வராதே?"

"இவருதுதாங்க. நாங்க வெட்டு பார்த்தமே. ஆழமா இருந்துதுங்க."

இவருதுதான்னா.... இப்ப எங்க காணம்? எப்ப பார்த்தீங்க?''

''தெருமுனைல....''

''ஐயா, நீங்க யாரு?'

''பாலு ஐயர், பாலசுப்ரமணியம்.''

''விபூதி கடைக்காரருங்க.'' ஒரு நர்ஸ் பெண்மணி அடையாளம் சொன்னாள்.

''என்ன செய்தீங்க, இப்படி வரமாதிரி?''

''தெரியலை. மயங்கி விழுந்துட்டேன்.''

''ஏன்?''

''ஏதோ நினைவு.''

''என்ன நினைவு?''

''வெளி. வெட்டவெளி.... என் நிலை எனக்கில்லை.''

''எப்பவுமா.... இப்பதானா?'

''இப்பதான்,... சித்த முன்ன.''

''அவரு மந்தரமெல்லாம் ஓதுவாருங்க.'' நர்ஸ் பெண்மணி மறுபடி சொன்னாள். யாரும் காதில் போட்டுக் கொள்ளவில்லை.

''ஏது இவ்வளோ ரத்தம்?''

''தெரியலை.''

''ஏதோ கோல்மால் நடக்குது இந்தாப்பா கம்பவுண்டர். போலீஸுக்கு ஆள் அனுப்பு.''

''என்னன்னு சொல்றதுங்க?''

''உடுத்தின உடுப்பு முழுக்க ரத்தக் கறையோட ஒரு ஆளு இங்க வந்திருக்காருன்னு சொல்லு.''

"அப்ப நான் போக முடியாதா?"

"போலீஸோட போகலாம்."

"எதுக்கு?'

"இது என்ன ஏதுன்னு கண்டுபிடிக்க வேண்டாமா?"

"சரி...." கட்டிலில் எழுந்து உட்கார்ந்து கொண்டார்.

நிமிர்ந்தார்.

பார்த்தசாரதி அவர் எதிரே தெரிந்தான். மெல்லச் சிரித்தார். மிக பலவீனமாய் இருக்கிறார் என்று தெரிந்தது.

"யாரு இவரை இங்க கூட்டியாந்தது?"

போலீஸ் என்று பேசப்பட்டதும், பல முகங்கள் வெளிறின. இப்போது நேரடி கேள்வி வந்ததும் மௌனமாய் இருந்தன.

"நான்தாங்க." பார்த்தசாரதி அருகே நின்றான்.

"அங்கென்ன செய்யற நீ...."

"ஒண்ணுமில்லீங்க..... ஐயரு வூட்டாண்ட யார்கிட்ட சொல்லி அனுப்பறதுன்னு பார்த்துட்டிருந்தேன்."

உதவி செய்த கூட்டம் வியப்போடு பார்த்தது. நிம்மதியாயிற்று. 'வுட்டுருங்க. அவங்க கிராமம். அவன் என்ன வேணா சொல்லட்டும். வுட்டுரு.' சைகையில் பரிமாறிக் கொண்டது,

"ஏம்ப்பா இவ்வளவு ரத்தம்?"

"தனியா வாங்க..... சொல்றேன்."

டாக்டர் தனியே வந்தார்.

"அவரு வேலை தெரிஞ்சவருங்க."

"வேலைன்னா...."

"சித்து வேலை."

"சித்து வேலைன்னா...."

"அவரு எதுனா இப்படிச் செய்வாரு."

"அப்ப இங்க ஏன்யா கொண்டாந்த?'

"நானும் பயந்துட்டேங்க. வெட்டுக்காயம்னு நினைச்சுட்டேன்."

"அப்ப இது இரத்தம் இல்லேன்றியா... நாறுதே...."

"இருக்கலாம். இல்லாதயும் போகலாம்..."

டாக்டர் திரும்பி ஐயரை முறைத்தார்.

"நான் நம்பமாட்டேன். எங்கயோ அடிதடி. இந்தாளு வெட்டினாரா? வெட்டுப்பட்டாரான்னு தெரியலை. போலீஸ் விசாரிச்சுக்கட்டும். நீ இங்கேயே இரு. எங்கயும் போயிடாதே."

"காத்தாட வெளிய உட்காரட்டுங்களா?"

"அப்படியே போயிடலாம்னு பாக்கறயா?'

"போகமாட்டேங்க."

"பின் பக்கம் உட்கார்.... கம்பவுண்டர் கூட இரு."

"நான் இருக்கேனுங்க." புடவை கட்டிய தாதி முன் வந்தாள். அவள் முகத்தில் வியப்பு இருந்தது.

மெல்ல ஐயரை இறக்கி பின்பக்கப் படியருகே கொண்டு வந்து உட்கார வைத்தார்கள்.

"என்னங்க ஆச்சு?"

"வெளிச்சமா போச்சு பார்த்தசாரதி."

"கிழவரு எதுனா செய்தாருங்களா?"

"இல்லை. கிழவரே இல்லை. கல்லு..... கல்லு பெரிய விஷயம். என்னை உள்ளே தள்ளிடுச்சு."

"ரத்தம் எப்படிங்க?"

"என்னுது."

"காயம் இல்லையே."

"இருந்திருக்கணும். கைல அரிவாள் விழுந்தது. மயங்கி விழுந்துட்டேன். யாரோ ஊதினாப்பல இருந்தது. அப்புறம் எதுவும் இல்லை."

"டாக்டர் போலீஸ், அது இதுன்றாரு."

"இருந்து பார்த்துட்டுப் போலாம்."

"உள்ள போட்டாங்கன்னா?"

"இருந்துட்டு வரேன்."

"முகம் ரொம்ப தெளிவாயிடுச்சுங்க."

"வெளி, பார்த்தசாரதி.... வெட்டவெளி.'

" என்ன சொல்லப் போறீங்க?'

ஐயர் பேசாதிருந்தார்.

"இது போக்கிரி உலகம்ங்க. எதுனா பேசும். எதுவும் சொல்லாதீங்க. எனக்குத் தெரியலை. நான் சாதாரணமா இருக்கேன்னு சொல்லிடுங்க. வெளி - வெளிச்சம் ஏதும் பேச வேணாம்."

"ஏன்?"

"கேலியாயிடும்."

'ஆமா."

"நக்கலா பேசுவாங்க."

"ஆமா. காக்கை. கூட்டுல குயில் முட்டை போடும். குயில் முட்டையை காக்கை அடை காக்கும். குஞ்சு பொரிக்கும். சிறகு முளைக்கிற வரைக்கும் குயில் குரல் காட்டாது. பறக்கத் தெரிஞ்சதும் கூன்னு கத்திட்டு பறந்து போயிடும். அதுக்கு முன்ன குரல் காட்டவே காட்டாது."

"காக்கா கொத்தி கொன்னுரும்."

"குரல் காட்டக் கூடாதுன்றியா?"

"நிச்சயமா"

"ஆனா, உடம்பு ஆடிப்போச்சு பார்த்தசாரதி. செத்துப் போன மாதிரி ஆயிடுத்து."

"நான் நின்னு கூட்டிட்டுப் போறேன்."

"போலீஸ் ஸ்டேஷன்லகூட என் கூடவே இருப்பியா?'

"எல்லா இடத்துலயும் இனிமே உங்க கூடத் தான்,"

இரண்டு சைக்கிள்களில் போலீஸ்காரர்கள் வந்திறங்கினார்கள்.

"யாருப்பா... வழி வுடு. என்ன கூட்டம் இங்கே.... அதட்டினார்கள்.

"அட, இவரா.... மூலைக் கடை ஐயரு.... தெரியுமே..... என்ன வம்பு பண்ணினீங்க."

"எதுவும் இல்லைங்க."

"அப்ப ஏன் இங்க.... யாரு வெட்டினது?"

"யாரும் வெட்டலை."

"எங்க காயம்?"

"எங்கயும் இல்லை."

"ரத்தம் மட்டும் உடம்பு பூரா ஆயிருக்கு."

"ஆமா, ரத்தம். என்னங்க ஐயரே, என்ன விஷயம்?"

"தெரியலைங்க. ஏரி நடுவுல மயங்கி விழுந்துட்டேங்க. இங்க எடுத்தாந்துட்டாங்க."

"வேற யாரையாவது வெட்டிட்டீங்களா? அல்லது குறுக்க விழுந்து தடுத்தீங்களா?

"இல்லை."

"வெட்டினவங்க எங்க? வெட்டுப்பட்டது யார்?"

"தெரியலைங்க."

"யார் இவரை இட்டாந்தது?"

"நான்தாங்க." குரல் பின்னால் கேட்டது. அது பார்த்தசாரதி இல்லை. மாரியப்பன்.

"நான் புல்லு அறுத்துட்டிருந்தேங்க. ஏரி நடுவுல வுழுந்து கிடந்தாருங்க. தூக்கினா துணியெல்லாம் ரத்தம். கைல வெட்டுக் காயம். என் துண்டு கிழிச்சு கட்டுப் போட்டு இங்க கொண்டாந்தேன். இங்க துணி பிரிச்சா காயம் இல்லை"

"அதெப்படி?"

"தெரியலை."

பாலு ஐயர் மெல்ல பார்த்தசாரதி தோளில் மயங்கி சரிந்தார்.

20

இன்னும் நூறு கேள்வி கேட்டார்கள். ஒரே கேள்வியை நூறு விதமாய் கேட்டார்கள். அலுத்து அயர்ந்து போகிற வரை கேட்டார்கள். கேட்டவர்களே அயர்ந்து போனார்கள்.

"வெறும் ரத்த வேட்டியை வச்சுக்கிட்டு என்னங்க பண்றது? என்ன கேஸு எழுதறது? இந்த ஐயரை எங்களுக்குத் தெரியும். எதுனா புகார் வந்தா மடக்கிடலாம். இந்தாப்பா பார்த்தசாரதி! நீ, ஐயரு ரெண்டு பேரும் இந்த ஊர்விட்டுப் போகக்கூடாது. இரண்டு நாளைக்கு ஒரு வாட்டி ஸ்டேஷன் வந்துட்டுப் போகணும். எங்கினா சொல்லாத போனே..."

வெற்று மிரட்டலை வீசிவிட்டு போலீஸ் வெளியேறிற்று.

'ஏங்க, இது எதுனா மாயமா.... மந்திரமா எனக்குச் சொல்லுங்களேன் நான் சுயமரியாதை ஆளு. எனக்கு இதுல நம்பிக்கை இல்லை. இருந்தாலும் தெரிஞ்சுக்கணும்னு ஆசை...." டாக்டர் கேட்டார்.

பேசாதிருந்தார்கள்.

"சரி.... போங்க.... ஊர்ல உங்களை வுழுந்து கும்பிடு வாங்க. நீங்க ரெண்டு பேரும் துட்டு கலெக்ட் பண்ணி பெரிசா வூடு கட்டிக்கிட்டு, காரு, வசதியோட இருப்பீங்க. என்னை மாதிரி கஷ்டப்படற டாக்டர் கடைசிவரை கஷ்டப்பட்டுக்கிட்டுதான் இருக்கணும்."

சைக்கிள் ரிக்ஷாவில் ஏறும்போது அந்த வெள்ளைப் புடவை தாதி உதவி செய்தாள்.

"எனக்கு என்னன்னு தெரியலை ஆனா, காயமே இல்லாத இத்தினி ரத்தம் என் சர்வீஸ்ல பார்த்ததேயில்லை. என்கிட்ட ரொம்ப நாள் முன்னாடியே சொன்னாங்க. உங்ககிட்டேர்ந்து திருநீறு வாங்கச் சொல்லி.... கடைல இருப்பீங்களா, வந்து வாங்கிக்கிட்டா...."

"வூடு முழுக்க பிரச்சினை சாமி... உன் கையால அத்தினி கஷ்டமும் ஒழியவேணும்." கை கூப்பினாள்.

பதில் சொல்ல முடியவில்லை. இந்த தேசத்து மக்களை ஏமாற்றவது எளிது. பரபரப்பே இல்லாத வாழ்க்கை. சின்ன பரபரப்புகூட காட்டுத்தீயாய் பரவி பெரிய அற்புதமாய் போய்விடுகிறது. கனவுகளில் வாழும் ஜனங்கள் சாதாரண கஷ்டம்கூட ஏற்பட மறுக்கிறார்கள். வெயில் மழையக்கூட சபிக்கிறார்கள். உணவு, உடை, உறைவிடம் தாண்டி பல சுகங்கள் கொடு என்பதே பிரார்த்தனை எந்தத் தகுதியும் வளர்த்துக் கொள்ளாமல் எல்லோரும் உயரத்துக்கு வர ஆசைப்படுகிறார்கள். அதிர்ஷ்டம் இருந்தால் வந்துரும் என்கிறார்கள்.

'இந்த விபூதி சரியாக்கும்' என்றால், நம்புகிறார்கள். எனக்கு காசு வேண்டாம். அம்பாளுக்குப் பூ, பாவடை சாத்தணும். பத்து ரூபா கொடு என்றால் தயக்கமின்றி தருவார்கள். ஜனங்கள் வெகுளிகள். அம்பாளுக்குப் பத்து ரூபா கொடுத்தா ஆயிரம் ரூபா வராதா என்ற ஆசை.

மெல்ல சைக்கிள் எடுத்து அவர் ரிக்ஷாவை பார்த்தசாரதி பின்தொடர்ந்தான். கிராமத்துச் சரிவில் வண்டி இறக்கியது குழாயில் ஜலம் பொத்துக் கொண்டுவர, பெண்கள் கூட்டம் அங்கேயே துணி தோய்த்து, சின்னக் குழந்தைகளைக் குளிப்பாட்டி, பெரிய குட்டையை உற்பத்தி செய்து கொண்டிருந்தது.

இது தவறு என்று சொல்லித் தர வேண்டுமா.... தனக்கே தெரியாதா?

'ஆமா, என் வீட்டு வாசல்லியா குழா போட்டுருக்கு? ஊர் கோடில போட்டு வச்சுருக்குது. எத்தினி நடை தண்ணி தூக்கிட்டுப் போய் துணி தோய்க்கிறது.... அதான் இங்கியே தோச்சு இப்படியே காயப்போட்டு இதுங்களையும் குளிப்பாட்டி துணி காஞ்ச வரைக்கும் போறும்னு எடுத்துப் போறேன். என்னா தப்பு?'

எதிர்வாதம் பேசுவார்கள் வெயில் சுள்ளென்று காஞ்சா மணல் இழுத்துக்கும். தேங்காது. தந்திரமாய் சமாதானம் சொல்வார்கள்.

உள்ளே வைத்தது என்ன தீர்வு என்று இடம் தெரியாது ஏங்கியது. எதுவும் மாற்ற முடியுமா? எல்லா தேசத்து மக்களும் இப்படித்தானா? வறுமையில் செல்வம் என்பது பொய்யா.... இல்லை.... அப்போதும் இதே மனப்பான்மைதான் இருக்குமா.... இது மனித இயல்பா...

ஐயர் வீட்டு வாசலில் வண்டி நிற்க, சரஸ்வதி பதறி ஓடி வந்தாள்.

"என்ன... என்ன ஆச்சு?'

"ஒண்ணுமில்லை. கொஞ்சம் சுத்தல். வேட்டி எங்கே..... இது பார்த்தசாரதி துண்டுதானே...."

பார்த்தசாரதி இறங்கினான்.

"ஒண்ணுமில்லை. நான் அப்புறம் சொல்றேம்மா. கொஞ்சம் சாரை படுக்க வையுங்க...." ஐயர் உள்ளே கட்டிலில் போய்ப் படுத்தார்.

பார்த்தசாரதி வாசலில் நின்றான்.

"உள்ளே வாங்கோ."

தயங்கி உள்ளே நுழைந்தான்.

ஐயர் கட்டிலில் படுத்து வெளி வெறித்துக் கொண்டிருந்தார்.

"என்ன ஆச்சு?" உள்ளே போய் அவர் அருகே அமர்ந்தான்

"அவளைக் கூப்பிடு."

"அம்மா..." பார்த்தசாரதி குரல் கொடுக்க, சரஸ்வதி அருகே வந்தாள்.

"உட்கார்." தலைமாட்டில் கை காட்டினார். சரஸ்வதி அருகே உட்கார்ந்து அவர் தலை தடவினாள். அவர் மறுபடியும் வெட்டவெளியைப் பார்த்தார்.

"ஏன், எப்பவும் ஏதோ பிரமை புடிச்சாப்புல இருக்கேள்?"

கண்மூடி தலையாட்டினார்.

பார்த்தசாரதி அவர் நெஞ்சுக்கூட்டில் கை வைத்தான். உடம்பில் அதிக உஷ்ணம் இருந்தது. நெஞ்சுக்கூடு இரைப்பது தெரிந்தது.

"என்னங்க ஆச்சு?"

"பார்த்தசாரதி, இது நமக்குத் தாங்காதுப்பா. நம்மால முடியாது. இது நடக்கு வேண்டாம்."

"எதுங்க?"

"இந்த சாமி, பூதம் எல்லாம்..."

"ஏங்க...."

"பயமாயிருக்கு பார்த்தசாரதி!"

"எதுக்குப் பயங்க?"

"செத்துருவேனோன்னு பயம்."

"வாஸ்தவம். நாமா வரவழைச்சுப்பானேன். எத்தனை நாள் தள்ளிப்போட முடியுமோ அதுதானே மனுஷா எய்ம்...."

"ஆனா..... ஆனா ஏதோ ஒரு நாள்."

"வேணாம் பார்த்தசாரதி. என்னால முடியலை. சாவைவிட மோசமா இருக்கு. பைத்தியம் பிடிச்சிரும் போல இருக்கு. எனக்கு வாழணும். இவளோட வாழணும். என்னை விட்டா இவளுக்கு வேற யார் இருக்கா? நான் சாக விரும்பலை. எனக்கு இந்த வேதனை தாங்கலை. என்னால் இது முடியாது.... எனக்கு இது வேண்டாம்...."

கிட்டத்தட்ட ஐயர் புலம்பினார். பார்த்தசாரதி கவலையுடன் தலை கவிழ்ந்தான். இதற்கு மருந்து மௌனம்தான். நிவர்த்தி செய்ய எவராலும் இயலாத விஷயம் இது. பேசிப் புரிய வைக்க முடியாத விஷயம்.

துறவு என்று போனவனுக்கு முதலில் வரும் துன்பம் கடந்து போன நினைவுகள்தான். அந்த சுகத்தை அசை போடுகிறபோது துக்கம் பெரிதாகும். அதை விடவா இது பெரிது என்று ஒப்பீடு வரும்.

நாம் துறவா யோசித்தோம். இல்லை, துறவு என்பது என்ன.... அகந்தையைத் துறப்பதே. இவர் தன்னைத் துறக்க முடியாமல் தான்தான் மனைவிக்கு ஆதாரம் என்று தவிக்கிறார்.

ஏதோ தெளிந்தது போல் சிறிது நேரம் தோன்றியிருக்கிறது. மறுபடி சேறு இழுத்து விட்டது. உள்ளே சற்று நேரம் அமிழ்ந்த மனம் வெளியே வந்துவிட்டது. தனக்கு ஏதோ நடந்தபோது கபடமின்றி இருந்தவர், என்ன நடந்தது என்று யோசிக்க தான் என்கிற நினைவு வந்துவிட்டது. கூடவே பயமும் தொற்றிக் கொண்டது.

பார்த்தசாரதி வெளியே வந்தான்.

அவர் தெளியட்டும் என்று நினைத்து வீட்டுக்கு நடந்தான்.

பாலு ஐயர் கண் மூடி உட்கார்ந்திருந்தார். மறுபடி உள்ளே ஒரு ஆற்றோட்டம் உணர்ந்தார். இத்தனை நேரம் கொதித்த மனசு ஜில்லிப்பை மீண்டும் உணர்ந்து. தன் பயம் பற்றி தனக்கே சிரிப்பு வந்தது.

"என்ன நடந்தது...." சிறிது நேரம் உள்ளே ஒரு முடிச்சு அவிழ்ந்து இதுவரை இறுக்கின, முடிந்திருந்த, உலக விஷயங்கள் தளர்ந்தது. உலகமே தன்னுள் புகுந்து விட்டது. பிரேமை மாயமாய் போய்விட்டது. அந்த பயம்

தான் உலுக்கிவிட்டது வெட்டப்பட்டதும், வெட்டிய இடம் மறுபடி கூடியதும், எப்படி? சின்னக் குண்டூசி குத்தல்கூட தாங்க முடியாதே. அரிவாள் வெட்டு எப்படி? அது நானில்லை. யாரோ தடவித் தடவி சரிசெய்தார்கள் யார்? கிழவனா? அந்த ஆள்தான் காயத்தைச் சுகப்படுத்தி விட்டானா?"

யாரிடம் சொல்வது? யாரிடம் கேட்பது? பார்த்த சாரதியிடம்கூட சொல்ல முடியுமா? அவன் கேட்க வில்லை. கேட்டாலும் பகிர்ந்துகொள்ள முடியுமா?

என்ன நடக்கப் போகிறது இனி?

என்ன வேண்டுமானாலும் நடக்கும்.

நான் என்னை அறிதலே என் வேலை. என் மூலம் நடப்பது என் இச்சையற்றே நடக்கும். அதற்காகக் காரிய முனைப்பு இல்லாது இருக்கக் கூடாது. உலகக் காரியங் கள் எல்லாவற்றிலும் புரண்டு அதன் விளைவுகளை என்னுள் என்ன விதம் என்று யோசிக்க வேண்டும்.

மறுபடியும் அந்த நிலை வந்தால் வரட்டும். அதையும் கவனிக்க வேண்டும்.

"என்னப்பா நடந்தது?" சரஸ்வதி மெல்ல அவர் தோள் தொட்டாள்.

"கொஞ்சம் வித்தியாசமா மனசு இருந்தது சரஸ்வதி. என் பேர், என் நிலை எனக்குக் காணாமா போயிடுத்து."

"அப்படின்னா ஏதாவது மயக்கமா?"

"இல்லை..... உணர்வு இருந்தது. உள்ள திரும்பி டுத்து..."

"ஏதாவது பேய் அடிச்ச மாதிரியா?"

"பேய்தான். உள்ள இருக்கற பேய் வெளிய போயிடுத்து."

"என்னை விட்டுட்டுப் போயிடாதீங்கப்பா."

"இல்லை சரஸ்வதி.... இங்க வந்த பிறகு எங்கயும் எதை விட்டும் போக முடியாது."

"சந்நியாசி மாதிரி...."

"சந்நியாசம் மனசு விஷயம். உடுப்பு இல்லை."

"குடும்பத்துல ஈடுபடமாட்டேளா?"

"படலாமே.... உலகம் முழுக்க ஈடுபடணும்னு நினைக்கிறபோது நீ தள்ளுபடியா. நீயும் உலகம் தானே?"

"எனக்கு வேணும்பா நீங்க."

"எடுத்துக்கோ...."

"இருபது வயசுல தேவையானதைவிட, இப்ப தேவையாயிருக்குப்பா. வந்த பத்தாம் மாசம் குழந்தை பொறந்துடுத்து. பசங்களை சீராட்டத்தான் பொழுது இருந்துதே தவிர, உங்களை, என்னை மட்டும் யோசிக்க முடியலை."

"இப்ப..."

"ரொம்ப சந்தோஷமா... விட்டேத்தியா.... எப்பவும் உங்க நினைப்பா...."

"என்ன வேணும் சரஸ்வதி?"

"உங்களுக்கு உடம்புக்கு ஒண்ணுமில்லையே....

"இல்லை.. வா.... கிட்ட வந்து உட்கார். என்ன வேணும் சொல்லு?"

"அலுப்பா இருக்கா நான் ரொம்பப் புடுங்க றேனா?'

"இல்லை சரஸ்வதி.....

"இன்னிக்கு என்னவோ சந்தோஷம் புரள்றது. உடனே உங்க நினைப்பு..... உங்களோட இருக்கணும்னு. கொழுப்பெடுத்து ஆடறதா படறதா?"

"இது என்ன கேள்வி.... சரீரம்தானே உன்னதும். அந்த அவஸ்தை இல்லாத எப்படிப் போகும்?"

"உடம்பு அவஸ்தை இல்லைப்பா இது. மனசு அவஸ்தை. சந்தோஷம் தாங்காது படற அவஸ்தை."

"யார் தடுத்தா உன் சந்தோஷத்தை...."

"தப்பா நினைச்சுப்பேளோன்னு ஒரு தயக்கம்."

"எனக்கு எதுவும் தப்பில்லை சரஸ்வதி. என்கிட்ட தயக்கமே வேண்டாம்."

"என்னை விட்டுப் போகமாட்டேளே."

"சாவுதான் பிரிக்கும். சாகாதவன் பூமியைவிட்டு எங்கும் போக முடியாது. பூமி இருக்கற வரைக்கும் உறவு போகாது."

"எம்மேல ஆசை உண்டா?"

"எல்லார் மேலயும் ஆசைதான்"

"உங்களுக்கு நான் உதவிதானே தேவைதானே?"

"உன்னை, உன் தேவையைக் கவனி. ஏன் எதுக்குன்னு கேளு."

"தேவை இருக்கு. ஆனா, இத்தனை வருஷத்துக் கப்புறமும் வெட்கத்தை விட முடியலை. சட்டுன்னு கேட்கத் தெரியலை."

பாலு ஐயர் யோசித்தார்.

அம்மா, பசிக்குது சோறு போடு என்று கேட்ட குழந்தைக்குத்தான் உணவா.... பேசத் தெரியாது கத்திய குழந்தைக்கும் உணவு உண்டில்லையா...

"சரஸ்வதி.... இங்க உட்கார். இன்னமும் கிட்ட வா."

அவள் மடியில் தலை வைத்தார். வயிற்றில் முகம் பதித்தார். வலது கையால் முகம் வருடினார். பிடரி தடவினார். சற்று தலை உயர்த்தி அவள் நெஞ்சில் முகம் பதித்தார்.

இது எனக்கு வேண்டாம். இவளுக்குத் தருவோம். இதில் நானில்லை..... என்னுள் இது சலனமில்லை..... உண்டாகிறது பார்.... உன்னுள் சலனப்படுகிறதா கவனி.

தன்னைக் கேட்டார். தன் மனதை உற்றுப் பார்த்தார். கைகள் அவளை இறுக்கி இருக்க, மனசு அவரைப் பார்த்துக் கொண்டிருந்தது. அவர் தன் எண்ணங்களைப் பார்த்துக் கொண்டிருந்தார் உள்ளே மீண்டும் வெளிச்சம் பரவியது.

21

இந்த முறை வெளிச்சம் வெகு நிதானமாய் மலர்ந்தது. ஏற்கெனவே பழக்கப்பட்டதால் அது என்ன செய்யும் என்பது தெரிந்தது. வெளிச்சம் பரவியதும் காணாமல் போனாரே பாலு ஐயர், அம்மாதிரி இம் முறை நடக்கவில்லை. வெளிச்சம் மிகுந்து வரும்போதே அவருடைய இருப்பும் தெரிந்தது. உள்ளே ஒரு உணர்வும், வெளியே ஒருணர்வுமாய் பாலு ஐயர் இரண்டாய் பிரிந்தார். உள்ளிருக்கிற உணர்வு அவரை, அவர் உடம்பைக் கவனித்துக் கொண்டிருந்தது. உடம்போ உள்ளேயிருக்கிற வெளிச்சத்தை வியந்து கொண்டிருந்தது. ஒரு வியப்பான கவனிப்பும், ஒரு விருப்ப மான ஆதாரமும் இரண்டு வெவ்வேறு விஷயங்கள் அவரிடம் ஒன்றாய்த் தோன்றின. அதற்கப்பால் இவை யிரண்டையும் ஏககாலத்தில் அவரால் கவனிக்கவும்

முடிந்தது. தன்னை கவனித்துக் கொண்டது போல் பாலு ஐயர் தன்னைச் சுற்றியுள்ள உலகத்தையும் அவ்உணர்வு களின் வழியே கவனித்தார். காக்கை, குருவிகளின் சத்தங்கள் எல்லாம்கூட அர்த்தமாயிற்று. சுவர் பல்லி வாழ்க, வாழ்க என்று கூவிற்று. ஈக்கள் பசி, பசி என்று சுற்றின. ஒரு எறும்பு அலுப்போடு நின்றுவிட்டு, இது வழியா அல்லது வேறா என்று தவித்தது. இருதய துடிப்பும், ரத்த ஓட்டமும். காதுக்குள் ஒரு இடைவிடாத ரீங்காரமும் அவருக்குத் தெரிந்தது.

மெல்ல விழி உயர்த்தி சரஸ்வதியை நோக்கினார். அவள் உடம்பிலிருந்து இளம்பச்சை ஒளி பரவிக் கொண்டிருந்தது. அவள் உருவமில்லாது அவளை உணர முடிந்தது. பல ஜென்மங்களாய் தன்னைப் பின் தொடர்பவள் என்பது புரிந்தது. ஒரு பாழ் மண்டபத்தில் இடையன் இடைச்சியாய் அவளோடும் ஆடுகளோடும் ஒண்டியிருந்தது ஞாபகம் வந்தது. அவள் பசு என்பது புரிந்தது. அவள் உடம்பு பசுவின் அமைப்பைக் கொண்டது என்பது புரிந்தது.

"ஏன், என்னமோ மாதிரி பார்க்கிறேள்?" சரஸ்வதி கேட்டாள்.

"உன்னைப் புரியுது சரஸ்வதி!" பாலு ஐயர் பதில் சொன்னார். இரண்டு கைகளாலும் அவள் கன்னத்தை ஏந்தினார். சரஸ்வதி உதறி விலகினாள்.

"என்னப்பா, உங்க கை விறுவிறுன்னு என்னவோ பண்றது என்னை!" சற்று பின் சாய்ந்தாள்.

"பண்ணும். பயப்படாத சரஸ்வதி. கிட்ட வா. நீ எதுன்னு காமிக்கிறேன் வா." அவள் தயங்கி முன்னே தலை நீட்ட, அவர் தனது வலது உள்ளங்கையை அவள் தலை மீது வைத்தார். உள்ளே சரஸ்வதிக்கும் தீ பற்றிக்

கொண்ட பிரமை பரவிற்று. எல்லா நினைப்பும் மறந்து இருட்டு வந்தது. வெம்மை காது அறுக்க, நெளிந்தாள். இருட்டில் ஒரு சுடர் தோன்றிற்று. சுடர் பெரிதாயிற்று. முகத்திற்கு அருகே வந்தது. அதுவும் சுடுமோ என்று பயந்தாள். ஐயோ என்று அலறினாள். விலகினாள். விலகிய உடன் எல்லாம் விடுபட்டது. பூமிக்கு வந்தன.

"என்னப்பா பண்ணிட்டேள் என்னை!" விலகி எழுந்து நின்றாள். உடம்பு வெடவெடத்தது.

"என்னை ஆட்கொண்டது உன்னைத் தீண்டிற்று."

"ஏதோ சாமி வந்தாப்போல ஆயிட்டுதே."

"சுவாமி இல்லை. நீ உனக்குத் தெரிந்தாய். அவ்வளவே."

"யார் கத்துக் குடுத்தா?"

"யாருமில்லை."

"தடுக்கி தரையில் விழுந்தாப்போல தானா தெரிஞ்சுது."

"உங்களுக்கு ஒண்ணும் ஆகிடாதேப்பா."

"இதற்கு மேலாக எதுவுமில்லை."

"என்னை விட்டுப் போயிடமாட்டேளே?"

"போவதென்பதே இனி இல்லை. நான் இருக்கிற இடம் தெரிந்து போன பிறகு வருவதாவது போவதாவது, விழிப்பா-தூக்கமா இதுதான் கேள்வி. உறங்குவது போலும் சாக்காடு."

"என்னன்னமோ பேசறேளே

"எல்லாம் தெரிந்து இப்போதுதான் பேசுகிறேன்."

"இங்கேயே இருந்து நான் வேண்டாம்னு ஒதுக்கிடுவேளா...."

"உன்னை எதுக்கு ஒதுக்கணும்? இங்கே எதையும் ஒதுக்க வேண்டாம். எல்லாம் உபயோகம்தான். எது எப்போது என்பதுதான் கேள்வி."

"நான் கேட்கிறதும்...." சரஸ்வதி தயங்கினாள்.

"வா.... சரஸ்வதி!" அவர் கைகளை அகல விரித்தார்.

"எனக்கு பயமாயிருக்கேப்பா...."

"தேவை உள்ளவர்களுக்குத்தான் பயம் உண்டு. ஆசைப்பட்டபோதுதான் ஆளுமை வருகிறது. ஆளுமை வந்தால் எதிர்ப்பும் வரும். எதிர்ப்புக்குத் தக்கபடி ஏற்றமும் இறக்கமும் நடக்கும். என்னுடையது அன்பு. இது பசுவின் மடியிலிருந்து தானாய் சுரக்கும் பால். அதைக் கன்றும் குடிக்கலாம். பாம்பும் குடிக்கலாம். நீ கன்றாய் இரு சரஸ்வதி!"

"நீங்க பசு. நான் கன்றா.... புரியலையே."

"உலகம் முழுவதும் ஒரே உறவுதான் சரஸ்வதி. தாய், சேய் பாதுகாப்பவள் தாய், பாதுகாக்கப்படுகிறவன் சேய். புருஷன் ஒரு முறை, தாய் மனைவி ஒரு முறை. தாய், அப்பாவும் பிள்ளையும் நண்பர்களும் இந்த ஒரு உறவின் பல ரூபங்கள். வா சரஸ்வதி."

சரஸ்வதி அவர் அருகே வந்து அவரது வலது தொடையில் உட்கார்ந்தாள். மேல் புடவை உருவிப் போட்டு ரவிக்கை பட்டன்களை தளர்த்தினாள். அவர் தோளில் முகம் புதைத்துக் கொண்டாள். அவரது வலது கை அவள் இடுப்பில் இருந்து முதுகெல்லாம் பரவிற்று. இடுப்பு மடிப்பைப் பிடித்து விட்டது. அவள் வலது நாசிக் காற்று அவர் இடது நாசிக்கு போயிற்று. இடது நாசியில் அவர் இழுக்க, காற்று வலது நாசியின் வழியே

வெளியே வர, அவள் தன் இடது நாசியின் வழியாய் அதைச் சுவாசித்தாள். அந்த மூச்சுக்காற்று அவளுக்கு லேசாய் மயக்கத்தைக் கொடுத்தது. புலன்களைத் துரிதப் படுத்தியது.

பேச முடியாத ஒரு சுகம் நெஞ்சுக் குழியில் நிறைந்தது. ஒரு அவஸ்தையில் அவள் விலாவை வளைத்தாள். அவர் இடது கையால் அவள் நெஞ்சுக் கூடு தொட அந்த அவஸ்தையில் முடிச்சு பிரிந்து உடம்பெல்லாம் பரவிற்று. சடாரென்று இரண்டு பக்க இடுப்பையும் தாக்கிற்று. இடுப்பு தசையிலிருந்து திரும்பி தொப்புளுக்கு கீழே வந்து அமர்ந்தது. பம்பரமாய் சுழன்றது. அந்த சுழற்சி சந்தோஷம் தந்தது. இடுப்புப் புடவை இறுக்கம் இம்சையாய் போயிற்று. தன்னுள் கிளர்ந்த சதோஷத்தால் தன் புருஷனை சந்தோஷப்படுத்தத் தோன்றிற்று. அவன் நல்லவன் என்கிற நினைப்பு வந்தது.

குனிந்து புருஷன் கன்னத்தில் முத்தமிட்டாள். இறுக்கத் தழுவிக் கொண்டாள். அவர் முகத்தைத் தன் முகத்தால் உரசினாள்.

"என்னப்பா, என்ன வேணும் உனக்கு?" பேச்சு குழறலாய் வந்தது. நெஞ்சு விம்மிற்று. அவளின் சகல அவஸ்தைகளையும் மிக நெருக்கமாயும், அதே சமயம் அந்நியமாயும் பாலு ஐயரால் பார்க்க முடிந்தது. "போப்பா. என்னை ரொம்ப படுத்தற." அவள் முகத்தில் உள்ள துக்கம் இன்னும் வியப்பு வளர்த்து, சந்தோஷம் முற்றி துக்கம் வந்துவிட்டதோ? இந்தத் துக்கம் தாண்டி அழுகை வருமோ?

'அழு.... அழுவது சந்தோஷம் என்றால் அழு. அதில் மனம் கரைந்து லேசானால் செய். நன்றியாய் -- பிரார்த்தனையாய் எத்தனை கோடி இன்பம் வைத்தாய் என்கிற பிரமிப்பாய் இதைவிட ஏதும் உள்ளதோ

என்கிற கேள்வியாய் இவையெல்லாம் அனுபவிக்க இதுவரை என்னை வளர்த்த இறையே என்று அழு. அழுகையைகூட ஆனந்தமாக்கு. ஆனந்தத்தை அழுகையாக்கு. இப்போது புரிகிறதா எல்லாம் ஒன்று. நீ, நான் என்கிற உணர்வு ஒன்றே. பார்க்கிற கண்ணாடிக்கேற்ப உருவம் மாறுகிறது. கண்ணாடியின் கோணம்தான் உன் முகத்தை விகாரப்படுத்துகிறது.

அழுகிற முகமும், ஆனந்தித்திருக்கிற முகமும் ஒன்றே. நானும் நீயும் ஒன்றே. ஒளி ரூபமே. ஒளிக்குள் ஒளி புக என்ன தடை.... ஒளியை ஒளி பகைப்பது எங்ஙனம்? நெருப்பை நெருப்பால் தீண்டினேன். நீ தழலாய் கொதிக்கிறாய். தழலை தழல் தீண்டட்டும். தழுவிக் கொள்ளட்டும். இது நெருப்பின் சங்கமம். சுடரின் சேர்க்கை. சரஸ்வதி உடம்பெங்கும் கணச் சூடு பரவ எழுந்து நின்றாள். எல்லாம் விலக்கினாள். வெள்ளை உடம்பின் தொப்புள் கொடியில் இருந்து மெல்லிய ரோமம் நெஞ்சு வரை பரவியிருந்தது. இது பசு. உடனே காமம் கொள்ளாது. கொண்டால் கொள்ளாமல் போகாது. பசு நெய்யின் மணம் மூக்கு நிறைத்தது. திமிருடன் நின்றவளின் வயிற்றில் முத்தமிட்டார். அவள் முகம் தூக்கி மேலே பார்த்தாள். தன் இரண்டு கைகளாலும் தன் பிடரியை நகத்தால் அழுத்திக் கொண்டாள். அக்குள் வாசனை போதை ஏற்றிற்று.

இது அம்மா, தாய், பூமி, விளைநிலம்... இவளே இங்கு முதன்மையானவள். இவள் போன்ற ஒரு பெண் வயிற்றிலே நான் பிறந்தேன். இதே திமிரில் அந்தப் பெண் நெளிய, நான் அணுவாய் உட்புகுந்தேன். அமைதியாய் தூங்கினேன். ஆழ்ந்து உறங்கினேன். பிண்டமாய் உருவானேன். கொஞ்சம் அசைந்தேன், கால் உதைத்தேன். கை நீட்டி கொடி பற்றினேன். எந்த பயமுமின்றி இருந்தேன்.

நான் என்கிற உணர்வு தவிர, என் இருப்பு தவிர வேறேதும் எனக்கு பிரச்சினை இல்லை. அதுவே மீண்டும் எனக்கு வேண்டும். அந்த அமைதியே என்னுள் நிறைய வேண்டும். தன் சூழ்நிலை மறந்து தான் மட்டும் தன்னுள் ஊன்றி, பிறகு தானும் மறைந்து ஏகமாய் இருக்க ஒரு வித்தை. அம்மா என்கிற அணைப்பு கிடைக்க, அது ஒரு சாதனை தவம் வேள்வி இனி இதுவே நித்திய பூஜை.

மறுபடி உன்னுள் புக அம்மா எனக்கு இடம் கொடு. அந்த ஆனந்தம் எப்போதும் என்னுள் இருக்கட்டும். இந்த விளைவால் என்னுள் அன்பு பிறக்கட்டும். இந்த விளைவே உலகம் என்பது புரியட்டும். இந்த விளைவை எவராலும் அசைக்க முடியாது என்பது தெளிவாகட்டும். இது இல்லையேல் உலகமில்லை. இது பிரபஞ்சம் அறியும் வித்தை. இந்த நேரத்து சுகத்தை நெஞ்சில் தேக்கி விரைவாக்க எல்லா நேரமும் சுகம். எல்லா உயிரும் இதம். உலகத்தின் வாசலான யோனியே! சுடர் வடிவே! உன்னை வணங்குகிறேன். நின்றவள் எதிரே கைகூப்பினார். கண்மூடி யோனி வடிவை நெஞ்சில் நிறுத்தினார்.

விழிகள் விரிந்து அவள் உடம்பு முழுவதும் பார்த்தார். எழுந்து நின்றார். அவள் தலையைக் கோதி விட்டார். பிடரியை தடவினார் உடம்பு முழுவதும் விரல்களால் வருடினார். சரஸ்வதி இடம் பொருள் ஏவல் தெரியாமல் கிறங்கினாள் உடம்பு பாரம் தாங்காமல் இடுப்பை இடதாய் வளைத்து வலது தொடையில் உடம்பு பாரம் போட்டு இடது உள்ளங்கையை பூவாய் விரித்து வலது கையை முற்றிலும் தளரவிட்டு கொஞ்சுகின்ற புருஷனை ஆதாரத்துடன்

பார்த்தாள். இதுவே சக்தி. இதுவே உமை. இதுவே பெண்ணினம். பாலு தன் மனசு மொத்தமும் குவித்து அவள் காலடியில் போட்டார். நீள நெடுங்கிடையாய் வணங்கினார். எழுந்து காலடியில் அமர்ந்து அவள் முழங்கால்களைத் தடவி சிரசில் வைத்துக் கொண்டார். 'உனக்கென்ன வேண்டும், கேள், தருகிறேன்' என்பதாய் அவளைப் பார்த்தார். உட்கார்ந்தவரின் மடியில் அவள் துவண்டு சரிந்தாள்.

"வா" என்று உரிமையில் அதட்டினாள். "தா" என்பதாய் தழுவிக் கொண்டாள் இது தனக்கில்லை என்பதாய் தன்னை யாருக்கோ வழங்குவதாய் அவர் அவளுடன் இணைந்தார். எண்ணெய்க் கிணறுகளில் நெருப்பு விழுந்த க்ளோரபாம் உடம்பெங்கும் தீ பரவியது. சகல அகந்தைகளும் வெடித்துச் சிதறின. சேமித்து வைத்திருந்த கர்வமெல்லாம் சிதறி அழிந்தது. உருகி•வழிந்தது. உள்ளே ஒரு பரிபூரணம் தோன்றிற்று. முழு நிறைவோடு செய்த யாகத்தின் விளைவால் சந்தோஷம் நிரந்தரமாயிற்று.

22

அயர்ச்சி உடம்பில்தான் இருந்தது. மனசில் இல்லை. மனசு 'புதிதாய் மொத்தமாய்' முழுசாய் விழித்துக் கொண்டு விட்டது. சரஸ்வதி பின்பக்கம் போய் கை, கால் கழுவிக் கொண்டு வந்த பிறகு மெல்ல எழுந்த பாலு ஐயரும் பின்பக்கம் போனார். இடுப்பு வேட்டியோடு நின்றவாக்கில் நாலு சொம்பு தண்ணீர் தலையில் விட்டுக் கொண்டார் கொடியில் இருந்த உலர்ந்த துண்டால், தலை துவட்டி, உடம்பு துடைத்து இடுப்பில் அணிந்த வேட்டியைப் பிழிந்து உலர்த்தி, காயப்போட்டு கொல்லையில் நின்றபடி

வயல்வெளியை பார்த்தார். நாலு மணி வெயில் மிருதுவாய் உடம்பு தாக்க, ஊருக்குள்ளே குளிர்ந்த கடற்காற்று வரத் துவங்கியிருந்தது. முதுகில், இடுப்பில் லேசான பிடிப்பு வலியிருந்தது.

கிணற்றுக்குப் பக்கத்தில் துணிகள் துவைக்கும் மேடையில் சம்மணமிட்டு உட்கார்ந்து கொண்டார். உடம்பின் வலிவு அகன்றது போல ஏதோ ஒரு வன்முறை உணர்வு விலகிப் போயிருந்தது. புத்தியிலிருந்த ஊசி பிடுங்கிப் போட்டது போல் ஒரு நிம்மதி படர்ந்திருந்தது. புத்தியிலிருந்த வலி குறைய புத்தி ஒரு குழந்தைபோல் எல்லா பொருட்கள் மீதும் படர்ந்தது. பார்த்தனவெல்லாம் பார்த்த விதத்தில் மனசுள் பதிந்தன. மனசுள் பதிந்து நகர்ந்தன. உடம்பு சற்றே துவள, பின் கையூன்றி வயல்வெளியைப் பார்த்துக் கொண்டிருந்தார். வயல் கண்களை விட்டு அகலவில்லை. அதே சமயம் வயல் பற்றி எந்த எண்ணமுமில்லை. வெறுமே வயல் மட்டுமே நின்றது. எவையும் எவர்க்கும் சொந்தமில்லை என்பது தெரிந்தது. சிரிப்பு வந்தது.

இதுதான்.. இந்த நிலைதான் உன்னதம், அதி உன்னதம் ஒன்றுமில்லை என்கிற இடம்தான் உண்மை யான இடம். எதுவும் என்னுடையதில்லை எது செய் தாலும் எனக்கதில் தொடர்பில்லை. வெறுமே உட் கார்ந்து வெறித்துக் கொண்டிருக்கிறபோது வானம் சூரியச் சரிவில் சிவந்தது.

"காபி தரட்டுமா...." சரஸ்வதி கேட்டாள்

தலையாட்டினார்.

கொண்டு வந்த டம்ளரை அருகே வைக்க, மெல்ல எடுத்து வாயில் கவிழ்த்துக் கொண்டார் வேட்டி

அவிழ்ந்திருந்தது. எடுத்து இடுப்பில் சுற்றிக் கொண்டு துண்டு மேலே போட்டு வாசலுக்கு வந்தார். தெரு முனையில் மாடுகள் ஊர் திரும்பும் உத்தேசத்துடன், அதே சமயம் யாரும் ஊருக்குள் விரட்டவில்லையே என்கிற சந்தேகத்துடன் நின்றன. வெறுமே இடதும், வலதும் பறந்தன. மண்ணை முகர்ந்தன. இடைப் பையன் வயல் வெளியிலிருந்து மேலேறினான். 'ஹூய்' என்று குரல் கொடுக்க, தலையாட்டி உடனடி தசை நகர்ந்தது. ஊர் நோக்கி முன்னேறின.

பாலு ஐயரக்கு ஆச்சரியமாய் இருந்தது. மாடுகளுக்கு ஊர் தெரியாதா.... தொழுவம் தெரியாதா.... ஹூய் என்று இடைப் பையன் குரலுக்கு ஏன் காத்திருக்கின்றன. போகிற பாதை சரியா. தவறா என்கிற குழப்பமா? இல்லை. இப்போது போவதா, வேண்டாமா என்று தெரியவில்லை. குரல் கொடுத்ததும் 'சரி, இப்போது போகலாம்' என்று உடனே அவசரமாய் போகின்றன.

ஜனங்களும் இதே மாதிரிதான். எங்கே போக வேண்டும் என்று எல்லோருக்கும் தெரியும் எப்போது என்றுதான் தெரியவில்லை. குரல் கொடுத்ததும் கிளம்பி விடுகிறார்கள். நாலு மாடுகள் கிளம்பினதும் சந்தில் ஹூய் சத்தம். மீதி மாடுகளும் நடைபோடத் துவங்குகின்றன. மந்தை நகருகிறது. சத்தம் கேட்கும். மற்றவை நகர்வது புரியாமல் இருக்கிற மாட்டை இடைப் பையன் கை வைத்துத் தள்ளுகிறான். இன்னமும் சந்தேகம் என்று மிரளும்போது 'போ' என்று மூங்கிலால் அடிக்கிறான். ஜனங்களும் மாடுகள்தான். ஹூய் என்று யாரோ குரல் கொடுக்கக் காத்திருக்கிறார்கள்.

'ஹூய்' என்று யார் குரல் கொடுப்பது?'

யார் மாடுகள் ஓட்டுவது?

எவரேனும் ஓட்டினால் நன்றாக இருக்கும். இல்லையெனில், மாடுகள் முச்சந்தியில் என்ன செய்வது என்று அறியாமலே நிற்கும். மாடுகள் போய்விட்டனவா என்று எட்டிப் பார்த்தார்.

பைப்புக்காரக் கிழவரின் மகள் தன் வீடு நோக்கி வந்து கொண்டிருப்பது தெரிந்தது.

"வணக்கம்மா."

"எம் பேரு கலாவதி. பைப்புக்காரர் பொண்ணு."

வீட்டுக்குள்ளிருந்து சரஸ்வதி, பெண் குரல் கேட்டு வெளியே வந்தாள்.

"தெரியும்மா, பார்த்திருக்கேன். என்ன.... அதிசயமா இந்தப் பக்கம் வந்திருக்கே?"

"பால்காரு வந்தாருங்களா?"

"பார்த்தசாரதியா?"

'ஆமா' என்று தலையாட்டுவதற்குள் முகத்தில் ஒரு செம்மை பரவிவிட்டுப் போயிற்று.

"உள்ள வாம்மா!" சரஸ்வதி குரலில் என்று மில்லாத வாஞ்சை இருந்தது.

'இல்லீங்க.... போகணும்.... பால்காரரு....

"மத்தியானம் இங்கதான் இருந்தான். வீட்டுக்குப் போய் வேலை முடிச்சுட்டு வரேன்னு போனான் எதுக்கும்மா?"

"எங்கப்பா கூப்புட்டு அனுப்பினாரு. பைப்புப் போட்டதுக்கு ஊர்ல காசு வசூல் பண்ணலாமா.... ஒரு வருஷத்துக்கு வூட்டுக்கு நூறு ரூபா.... நூத்தி நாப்பது வூடு இருக்குது, வசூல் பண்ணி....."

"வேணாம்மா...."

"நமக்கு இல்லீங்க, ஊர் நல்லதுக்கு, கோயிலுக்கு. மத்தபடி கேட்டா ஊர்ல தரமாட்டாங்க. இது பொதுக் காசுன்னு கேட்டு...."

"தந்துருவாங்களா.... எனக்குத் தண்ணி வேணாம்னு சொல்லிடும்!" சரஸ்வதி இடைமறித்தாள்.

"உள்ள வா.... வெளியே நின்னே பேசறியே." முன்னே நகர்ந்து அவள் கைப்பற்றி உள்ளே அழைத்துக் கொண்டு போனாள். சில்லென்று சரஸ்வதியின் உள்ளங்கை பட்டதும் உடம்பில் ஒரு இனம்புரியாத கூச்சம் ஏற்பட்டது கலாவதிக்கு.

வீட்டிற்குள் நுழைந்து கலாவதி சுற்றிப் பார்த்தாள். ஏதோ கீரைக் குழம்பு வாசனை வீசிற்று. புருஷனும், மனைவியும் மாலைப் பொழுதில் குளித்திருப்பார்கள் போல இருக்கிறது. இரண்டு பேர் முகம் துடைத்து விட்டாற் போல் பொலிவாய் விளங்கிற்று. ஹாலிலேயே பூஜை மாடம் தெரிந்தது. மர நாற்காலியும், மடக்கு இருஸப நாற்காலியும் இருந்தன. சரஸ்வதி இரண்டுக்கும் நடுவே பாய் பிரித்துப் போட்டாள்.

"உட்கார் கலாவதி."

"நான் போகணுங்க."

"போகலாம். விளக்கு வைக்கற சமயத்துல வந்திருக்கே. வெத்திலை பாக்கு வாங்கிட்டு போ. கொஞ்சம் உட்கார்."

"இப்பத்தான் மொத தடவை வரேன். போன வருஷம்தான் கட்னீங்கல்ல."

"அதுக்கு முந்தின வருஷம்."

"நல்லாருக்கு வூடு."

"வாயேன் சுத்திப் பாரேன்."

"உங்க வீடுகள்ல சமையலறைதான் எனக்கு ஆச்சரியம்!" கலாவதி எட்டிப் பார்த்துப் பேசினாள்.

"உள்ள வா."

"வேணாங்க."

"அட, வா.... என்ன ஆச்சரியம்?"

"சமையல் நடந்ததே தெரியாது. அத்தினி சுத்தம். ஒரு பருக்கை சோறுகூட இருக்காது."

"நீயும் வச்சுக்கணும்னா வச்சுக்கலாம்."

சமையலறைக்கு நேரே படுக்கையறை இருந்தது. எட்டிப் பார்த்தாள். கொடியில் நிறைய துணிகள் தொங்கின. தரையில் ரவிக்கை கிடந்தது. கட்டிலுக்குக் கீழே குவியலாய் புடவையும், பாவாடையும் இருந்தன. மாலையில் ஒரு முறை மாமி உடுப்பு மாற்றுவாளோ....

இல்லை, குளியலே காலையில் இல்லாது மாலையில்தானா? இருக்காது. மாமி காலையில் குளிப்பாள், ஏன் இப்படி மாலையில் புடவைச் சுருள்?

"ஒரு வாய் காபி குடிக்கிறியா?" சரஸ்வதி வாஞ்சையுடன் கேட்டாள். "உட்காரேன், நின்னுண்டே இருக்கியே." விரித்த பாயைச் சுட்டிக்காட்டினாள்.

பொண்ணு நன்னாருக்கு பார்க்கிறதுக்கு. துடைச்சி வச்ச வெங்கல சிலை மாதிரி பளபளப்பா! பிடிச்சி இறுக்கிக்கிற அழகா, தொட்டுப் பேசணுங்கிற ஆவலா, கண்ணுக்கு ரம்மியமா இருக்கு.

மூத்த புள்ளைக்கு இப்படி ஒருத்தி கிடைச்சா நன்னா இருக்கும். எவனுக்குக் கொடுத்து வச்சிருக்கோ, இந்தப் பொண்ணு நெஞ்சில போட்டு சீராட, எங்க குடித்தனம் பண்ணணும்னு இது தலையில் எழுதி யிருக்கோ, பகவானே! எங்க போனாலும் நன்னா

யிருக்கட்டும்.... கொஞ்சி கொஞ்சி சீராட்டுகிற புருஷனா இவளுக்கும் கிடைக்கட்டும். காமம் சுகமான விஷயம். தன்னுடைய காமம் தணிக்கப்பட..., தன் சுகம் தயக்க மில்லாது பூவாய் மலர, பிறருக்கும் அதில் லயிக்க வேண்டும் என்ற ஆசை எல்லோருக்கும் வரும். மனிதனுடைய இயல்பு இது.

வாலிபர்களையும், யுவதிகளையும் கிழவர்கள் கிழவிகளுக்கு அதிகம் பிடிப்பதற்கு அவர்கள் இளமை நேரத்து வளமை காரணம். வளமையான இளமை இல்லாதவர்கள், வயதான பிறகு இளைஞர்களை கரித்துக் கொட்டுவது வழக்கம். வளமை என்பது காசு மட்டுமல்ல, மன திருப்தி. சுகமான அனுபவங்கள். செயலாற்றும் விடுதலை.

இருபது வயசில் சரஸ்வதி முதல் குழந்தைக்கு தாய்ப் பாலை நிறுத்திவிட்டு செல்லத் தம்பி, சின்னத் தம்பி என்று மூத்தவனை கொஞ்ச ஆரம்பித்து விட்டாள். மூத்தவனுக்கு தம்பி வேண்டுமென்று சூசகமாய் சொல்ல ஆரம்பித்து விட்டாள். இரண்டாவது குழந்தை கொஞ்சம் போகட்டுமே என்று புருஷன் பொருளா தாரம் பற்றி பேசியதும், கருகமணி கணக்கு கற்றுக் கொண்டாள்.

அவள் புருஷன் அந்த கணக்கிற்குக் கட்டுப் பட்டான். கட்டு மீறியபோது கவலைப்பட்டான். தனக்குத் தெரிந்து தான் உண்டாக வேண்டுமென்று ஆசைப்பட்டு குழந்தைகள் பெற்றவள் சரசு? இந்த சந்தோஷமும், சாமர்த்தியமும் அவளைக் கர்வப்படுத் தின. இந்த கர்வம் அவளுக்கு பல ஸ்நேகிதங்களைக் கொடுத்தது. சிநேகிதமாக இருக்க வேண்டும் என்கிற ஆசையைக் கொடுத்தது.

"உங்களுக்குப் பசங்க....." கலாவதி இழுத்தபடி கேட்டாள். தன் குழந்தைகளைப் பற்றி சரஸ்வதியும் பெருமையோடு பறையறிவித்தாள். கஷ்டப்பட்டது பற்றியும் கர்வத்தோடு சொன்னாள்.

"இடுப்புத் துணியோட தெருவில் நின்னேம்மா. அவமானம், திருட்டுப் பட்டம். செத்துப்போயிடலாம்னு தோணிடுச்சு போயேன். விடாப்பிடியா நின்னார். நாம நல்லாயிருக்கறதுக்குத்தான் இத்தனை கஷ்டம் வந்திருக்குதுன்னார். நான் திருடலை, என் மனசுக்குத் தெரியும். நீ என்னை நம்பினா போறும்னார். அன்னிக்கு எனக்கு நம்பிக்கை வந்திடுச்சு, நன்னாயிருப்போம்னு. இன்றைய வரைக்கும் பகவான் கிருபையில் நன்னாயிருக்கோம். இந்த க்ஷணம் வரைக்கும் எந்த குறையுமில்லாம இருக்கோம். காரு, பங்களா, வேண்டாம் காசு, பணம் வேண்டாம். நல்ல புருஷன் கிடைச்சா பொம்மனாட்டிக்குப் போதும். தளம் போடக்கூட மேல காசில்லை, கூரை வீடுதான். ஒரு ஹால், ஒரு ரூம், ஒரு கிச்சன்தான். ஆனா, நான்தான் இங்க ராணி. எனக்கு கட்டுப்பட்ட குழந்தைகள் என்னை மதிக்கிற புருஷன், போதுமே! வேறென்ன வேணும்.... சொல்."

மாமி அதிகம் பேசுகிறாளோ என்று கலாவதிக்குப் பட்டது. அதிகம் பேசுகிறவள் என்று முகம் சொல்லிற்று. காபியை ஆற்றி எதிரே வைத்துவிட்டு அருகே உட்கார்ந்து கொண்டாள். ஆவல் பொங்க அவளைப் பார்த்தாள்.

"கல்யாணத்திற்குப் பார்க்கிறாளா கலாவதி?"

"ஆமாம்மா!"

"காபி எடுத்துக்கோ. சமையலெல்லாம் பண்ணுவியோன்னோ..... விரலைப் பார்த்தாலே தெரியறதே, நிறைய பாத்திரம் விழும் போலிருக்கு பத்துக்கு."

கலாவதி சிரித்தாள்.

"அம்மாவுக்கு உடம்புக்கு முடியல மாமி. நான்தான் செய்தாகணும் எல்லாம்."

"செய்... நிறைய வேலை செய். வேலை செய்யச் செய்ய உடம்பு முறுக்கேற்றின மாதிரியாகிடும். சொந்தத்தில் மாப்பிள்ளை பார்க்கிறேளா?"

"இல்லீங்க. வெளியதான் தேடணும்."

"அடிக்கடி வாயேன் கலாவதி! எனக்கும் பேசற துக்கு ஆளே இல்ல இங்க. உங்க வீட்டுல அனுப்பு வாளோன்னோ. இவரை விட்டு பேசச் சொல்லட்டுமா?"

"எங்க வீட்டுல எதுவும் சொல்லமாட்டாங்க மாமி. சிட்டிக்குப் போனா சொல்லிட்டுப் போகணும். அவ் வளவுதான்.... கீரைக் குழம்பு கொதிச்சிடுச்சி போலிருக்கே. வாசம் தூக்கலா இருக்கே."

"ஆமா. மறந்தே போச்சு." சரஸ்வதி ஓட, கலாவதியும் பின்னால் ஓடினாள். அடிப்பிடிக்க ஆரம்பித்த குழம்பை இறக்கி வைத்துக் கிளற, இருவரும் சமையல் பற்றியும் பேசினார்கள். 'பெண்ணும், பெண் ணும் எவ்வளவு சுலபமாய் ஒட்டிக் கொள்கிறார்கள்' என்று ஆச்சரியமாய் இருந்தது பாலு ஐயருக்கு. சந்தோஷப்பட்டவர்கள், இன்னும் சந்தோஷப்பட ஆசைப்படுகிறார்கள். மற்றவர்களைசந்தோஷப்பட வைக்க விரும்புகிறார்கள். திண்ணையில் அமர்ந்திருந்த பாலு ஐயர் தலை நிமிர, பார்த்தசாரதி விரைவாக வருவது தெரிந்தது.

"ஐயா! தண்ணிக்குக் காசு கேட்கணுங்கிறாரு. பைப்புக்காரரு. நியாயங்களா? அது கவர்மெண்ட் வேலை நாம செய்யலாங்களா.... கேட்டா ஊருக்கு நல்லதுக்குத்தானேன்னு சொல்றாரு... பைப்புக்காரரு

வீட்டு வாசல்ல கூட்டம் நடக்குது. ஆளாளுக்குப் பேசறாங்க. நீ சொல்லு துட்டு தர்றேன்றான் ஒருத்தன். மாசம் பத்து ரூபாயா புடிச்சுக்கன்றான் ஒருத்தன்..... ஊருக்கு காசு வாங்கி மடியில கட்டிக்கிட்டா ஏகப்பட்ட பொல்லாப்பு வருங்க. நான் காசு வேணான்னு சொன்னேன். பைப்புக்காரரு இனிமே நான் பஞ்சாயத்து இல்லேங்கறாரு. அவரு பொண்ணு அனுப்பிச்சாங்களே, வரலைங்களா?"

"வந்ததே. உள்ள உட்கார்ந்து பேசிக்கிட்ருக்கு."

"பேசிக்கிட்டிருக்கா. அங்க குய்யோ, முறையோன்னு சத்தம். உடனே உங்களைக் கூட்டிக்கிட்டு வரச் சொன்னேன். என்னா பண்ணுது இங்கே." பார்த்தசாரதி கொஞ்சம் பதட்டப்பட்டான்.

அவன் குரல் கேட்டு அந்தப் பெண் திண்ணைக்கு வந்தாள். "தேவையில்லாத பேச்சு, இஷ்டத்துக்கு வாக்குவாதம்.... எல்லாம் பேசி அடங்கட்டும்னுதான் இங்கயே உட்கார்ந்திட்டேன்."

"நீங்க உட்கார்ந்திட்டீங்கன்னாக்க சகலமும் நின்னு போயிடுமா?"

"பேசிப் பேசி தாடை கழன்று தானா திரும்பிடு வாங்கன்னு தெரியும்."

"இப்போ இன்னொரு ஆள் வந்திட்டோமே. கூட்டிக்கிட்டுப் போக.... என்ன செய்வீங்க?"

"நீங்க இங்க வருவீங்கன்னும் தெரியும்."

"என்னா சொல்ற நீ?"

"ஊர் எப்படியோ அடிச்சுக்கட்டும். நீங்களும், ஐயரும் இதுல கலந்துக்காதீங்க."

"ஏன்?"

"இது உங்க வேலையில்ல."

"எங்க வேலை எதுன்னு நீ சொல்லணுமா?"

"இது நான் சொல்லலை."

"யார் சொன்னது?"

"திண்ணையில் இருக்கிற பெரியவரு. அவரு சொல்லியனுப்பிச்சாரு. அவங்க ரெண்டு பேரையும் எங்கனாலும் போகச் சொல்லுன்னாரு. ராத்திரிக்கு ஊருல தங்கவேணாம்னாரு." பாலு ஐயரும், பார்த்த சாரதியும் அதிர்ந்தார்கள்.

"வேறென்ன சொன்னாரம்மா?" பாலு ஐயர் மெதுவாகக் கேட்டார்.

"கிழவர் பேசமாட்டாரே, எப்படி உன் கிட்டக்க...." பார்த்தசாரதி சந்தேகத்துடன் கேட்டான்.

"அது மனசில படம் காட்டும்.... புரிஞ்சிக்க வேண்டியதுதான்." கலாவதி சாதாரணமாய் சொன்னாள்.

இந்தப் பெண்ணை எப்படி நம்புவது என்று சந்தேகப்பட்டான். இடைப் பையன் விரட்டின மாடுகள் இரண்டு வந்த வழியே மேய்ச்சல் நிலம் நோக்கி ஓடின.

"சரஸ்வதி சட்டைய எடு. நான் வெளியில போயிட்டு வர்றேன்..." பாலு ஐயர் கிளம்பினார்.

23

"எங்கியோ அடிதடின்னு போனீங்களே, என்னய்யா ஆச்சு?" அந்த பெரிய ஏரியின் அருகாமையிலிருந்த ஊர்ப் போலீஸ் ஸ்டேஷனில் இன்ஸ்பெக்டர் சற்று வெறுமையான குரலில் கேட்டார்

இவருக்கு என்ன பதில் சொல்வது என்கிற யோசனையோடு, ஆரம்ப சுகாதார மனைக்கு வந்து

விசாரணை நடத்திய போலீஸ்காரர்கள் ஒருவரை யொருவர் பார்த்துக் கொண்டார்கள் இந்த இன்ஸ் பெக்டர் ஒரு கடுப்பான ஆள். தன்னைப் பற்றி.... தன் உத்தியோகம் பற்றி அதிகமான கற்பனை உள்ளவர். போன போலீஸ் ஸ்டேஷனில் தன் செல்வாக்கு எப்படியிருந்தது எவ்விதமாக அது தனக்குப் பயன் பட்டது என்பதை யார் கிடைத்தாலும் கதையாகப் பேசுவதில் ஆசையுள்ளவர்.

"அசோக் நகரு மாதிரி ஒரு ஏரியா தமிழ்நாட்டில் எங்கயும் கெடையாது. எல்லாரும் மிடில் க்ளாஸ் பணக்காரன். ஒரு ஓரமா சேரி இருக்குது. ஆனா, பெரிய தொந்தரவு எதும் இல்ல. நெறைய மீட்டிங் நடக்கும். நா சொல்றது அரசியல் மீட்டிங் இல்ல, இந்த கிளப்பு, இந்த தானம், அந்த தானம் எதுனா மீட்டிங் நடக்கும். தலைமைக்குக் கூப்பிடுவாங்க. போயிப் பேசிட்டு வருவேன். ஒரு தடவ வாரியார் மீட்டிங்குக்கு கூட கூப்பிட்டாங்க. போனேன். 'சைவ சமயமும் காவல் துறையும்' இந்த டைட்டில்ல பேசினேன் வாரியார் ரொம்ப சந்தோஷமாயிட்டாரு. இந்த ஸ்படிக மாலை அவரு போட்டதுதான்." முகத்தில் பெருமை பொங்க சட்டை பட்டன் திறந்து ஸ்படிக மாலையை எல்லா போலீஸ்காரர்களுக்கும் காண்பித்திருக்கிறார்.

'ஸ்படிக மாலை ரொம்ப விலையா சார்' ஒரு போலீஸ்காரன் கேட்க, "தூத்தேறி, நாய்க்கிப் பொறந்த வனே, வெலைக்கி வாங்கிட முடியுமாடா இதெல்லாம்? ஏண்டா, எல்லா போலீஸ்காரனும் முட்டாளாவே இருக்கீங்க." கோபித்துக் கொண்டார். அவர் கோபம் போலீஸ்காரர்களுக்குப் புரியவில்லை. சரியான கோயான் என்று நினைத்து கொண்டார்கள்.

"அசோக் நகர்ல ஏகத்துக்கு மாமூலு. பெரிய மனுஷாள் இருக்கற ஏரியாவா, மேலெடத்துக்கு எழுதிப் போட்டானுங்க. விட்ட ஒதையில இந்த ஊருக்கு வந்து விழுந்து நம்ம தாலிய அறுக்கறான். ஆமா ஸ்படிக மாலை என்ன வெல இருக்கும்?" ஆவலோடு பேசிக் கொண் டார்கள். 'நூறு நூற்றைம்பது இருக்கும்' என்று பதில் கிடைத்ததும். "நான் வாரம் ஒண்ணு வாங்கி மாட்டிக் கிறவன். இதப்போயி பெருசா காட்டறான்." அலுத்துக் கொண்டார்கள்.... சரியான கோயான் என்று பட்டம் வைத்தார்கள்.

"கோயான் கேள்வி கேக்கறான்... என்னய்யா பதில் சொல்றது?" சுகாதார நிலையத்தில் பாலு ஐயரை விசாரித்த ஒரு போலீஸ்காரர் மற்றவரைக் கேட்டார்..... எழுந்து அவருக்கு அருகே போய் வெட்டுப்பட்டு ரத்தம் சிந்தியும் காயம் காணாமல் போன விவரம் சொன்னார்கள். எது கேட்டாலும் அந்த ஐயர் மலங்க மலங்க விழிப்பதைச் சொன்னார்கள். தினம் ஸ்டேஷ னுக்கு வரக் கட்டளையிட்டதையும் விவரித்தார்கள். 'பார்த்தசாரதி என்கிற பால்காரன் அவரைக் கூட்டிக் கொண்டு போனான்' என்று தகவல் சொன்னார்கள்.

"ஸ்பாட்டுக்குப் போயி பார்த்தீங்களா?" இன்ஸ் பெக்டர் கேள்வி கேட்டார்.

"எந்த ஸ்பாட்டுக்கு சார்?"

"போடா.... முட்டாக்.... பெண் உறுப்பின் பெயரோடு அந்த இன்ஸ்பெக்டர் ஏசினார். எழுந்து நின்றார். "அந்த ஐயரு எவனையாவது வெட்டிப் பொதைச்சிட்டு வந்திருக்கலாம்ல."

"அப்படியாயிருந்தா..... நமக்குத் தெரிஞ்சிருக்கும் சார். எவனாவது தகவல் தந்திருப்பான்."

"போடா முட்டாக்...." மறுபடியும் அதே வார்த்தை வந்தது. இன்ஸ்பெக்டர் வாசலில் உள்ள ஜீப்பில் ஏறினார். போலீஸ்காரர்களை ஏறச் சொன்னார்.

சம்பவம் நடந்த பழைய ஏரியைத் தேடி ஜீப் போயிற்று. அந்த இன்ஸ்பெக்டரின் பெயர் மெய்கண்டான். அவர் தந்தை மயிலாடுதுறைக்கு அருகேயிருந்த நாலு கோவில்களுக்கு ஓதுவாராக இருந்தார். மெய்கண்டான் பிறந்த பத்து நாளுக்குப் பிறகு உடம்பு முழுவதும் குழந்தைக்கு திருநீறு தடவி, மருந்து இவை. மருந்துமெல்லாம் இவை இவை என்று பதிகம் பாடி, தன்னுடைய நாற்பத்து ஐந்தாவது வயசில் துறவு பூண்டார். திருவாவடுதுறை ஆதீனத்தில் குடும்பத்தை விட்டு சிவனடியாராகச் சேர்ந்து கொண்டார். மெய்கண்டான் தாய்மாமன் பராமரிப்பில் வளர்ந்தான். வளர்ந்த பிறகு தாயின் சோகம் உணர்ந்தான். தன் தகப்பன் தன்னைப் புறக்கணித்ததாக வேதனைப் பட்டான். சமயத்தை வெறுத்தான்..... தமிழைக் காதலித்தான். அவனுக்காக அப்பா, அம்மாவையும், நிறைய தமிழ் புத்தகங்களையும் விட்டுப் போயிருந்தார்.

அந்தப் புத்தகங்களை யாரும் சொல்லாமல் தானே படித்து தமிழறிவு வளர்த்துக்கொண்டான். மெய்கண்டானின் பள்ளிக் காலத்து அரசியல் அமைப்பும் இதற்கு அதிகம் உதவின.

இன்ஸ்பெக்டர் வேலைக்கான நேர்முகத் தேர்வில் 'அரசு பற்றி ஒரு குறள் சொல்லு' என்று கேட்டார்கள். மெய்கண்டான் பத்து குறளும் சொன்னான். தமிழ் அவனுக்கு வேலை கொடுத்தது.

அதே தமிழ்தான் மெய்கண்டானை அசோக் நகரிலிருந்து ஏரிக்கரை ஊருக்கு மாற்றியது. அரசுக் கவிஞர் கவிதைப் புத்தகத்தில் ஒற்றுப்பிழையைச் சுட்டிக்

காட்டி, அங்கு ஒற்று மிகும், மிகாது என்ற சண்டை வந்து தவறாகத் தமிழ் கவிதை எழுதுவதைச் சட்டிக் காட்டி, "குட்டுதற்கு பிள்ளைப் பாண்டியன் இங்கில்லை. குரும்பி அளவாய் காதைக் குடைந்து தோண்டி, வெட்டி நமட்டறுப்பதற்கு வில்லி இல்லை" என்று இடித் துரைத்து கை தட்டல் வாங்கி 'இந்த இன்ஸ்பெக்டருக்கு தெனாவெட்ட பார்த்தியா?" என்று அரசுக்கவிஞனைக் கோபப்பட வைத்தது. அந்த கோபம் கோள்மூட்டப்பட வைத்து, அதன் விளைவாய் ஏரிக்கரை போலீஸ் ஸ்டேஷனுக்கு ஏத்திவிடப்பட்டான். இலக்கிய கூட்டமோ இன்னபிற சமூக சிந்தனையோ இல்லாத ஊருக்குத் தள்ளப்பட்டார். தள்ளப்பட்டதற்கு கோபப் பட்டார்.

இந்த ஊரில் படிக்க நேரம் கிடைத்தது. பகிர்ந்து கொள்ள ஆள் கிடைக்கவில்லை. பகிர்ந்துகொள்ள முடியாத, முயற்சி செய்யாத காவல் ஊழியர்களைப் பார்க்கும் போது, காவல் ஊழியர்களுடன் பேசும்போது அவருக்கு 'முட்டாக்....' என்கிற பட்டப் பெயர் கிடைத்தது. வாலில்லாத நரிகள் வாழும் ஊரில் வாலுள்ள நரி பைத்தியம்தான். விசித்திரம்தான்.

சென்னைக்குக் குடிநீர் தரும் ஏரிக்கு வலப்பக்கம் இருந்தது இந்த வறண்ட ஏரி, முழங்கால் வரைக்கும் புற்கள் முளைத்திருந்தன. இறங்கி புல்லில் நடப்பது சுகமாக இருந்தது.

'ஏரிக்கரைப் பூங்காற்றே நீ போன வழி தென் கிழக்கோ.' என்று பாட்டு வந்தது. தென்கிழக்கில்தான். அசோக் நகர் இருந்தது. கோயான் பாடறான் பார் என்று போலீஸ்காரர்கள் கண்களால் பேசிக் கொண்டார்கள். அதே கிழவி அங்கே புல்லறுத்துக் கொண்டிருந்தாள். அவள் பிள்ளை மாரி இன்னொரு பக்கம் புற்களைக்

கட்டிக் கொண்டிருந்தான். இன்ஸ்பெக்டரைப் பார்த்ததும் இரண்டு பேரும் மிரண்டார்கள். இன்ஸ்பெக்டருக்கு இங்கே ஒரு வீடு, கட்டி, நாலு மாடுகள் வைத்து புல்லறுத்துப் பிழைக்கிற ஆசை உள்ளே தோன்றிற்று. புல்லறுக்கிறவர்கள் மீது காதல் பிறந்தது.

"பாலு ஐயரை யார் வெட்டினது? எங்க வெட்டின? ஏன் வெட்டின?" கிழவியைக் கேள்வி கேட்க, நடந்ததெல்லாம் வெளியிட்டாள். ஆறங்குல நீள காயத்துக்கு ஈரத்துணியால் கட்டுப்போட்டது பற்றி மாரி விவரிந்தான். அவர் உடம்பில் கீறல்கூட நாங்கள் பார்க்கவில்லை என்று போலீஸார் சத்தியம் செய்தார்கள்.

"என்னய்யா இது, கண்கட்டு வித்தையா?" மெய்கண்டான் வியந்தார்!

"இருக்கும் சாமி, அந்த வூர்ல ஒரு கிழவர் இருக்காரு. அவரு கண்ணு கட்டறதா பல பேர் சொல்லக் கேள்வி."

"கண்ணு கட்டறதுன்னா?"

"நாம நாயின்னு நெனைச்சா நாய் மாதிரியும், குதிரைன்னு நெனச்சா குதிரை மாதிரியும், மாடுன்னு நெனச்சா மாடு பாதியும் கிழவர் கட்டறராம்." இன்ஸ்பெக்டர் போலீஸ்காரர்களைப் பார்த்தார். தாங்களும் இப்படிக் கேள்விப்பட்டிருப்பதாகவும், இதுபற்றிப் புகார் எதுவும் இல்லையென்றும் சொன்னார்கள்.

"எங்கத்தி கிராமம் அது?" மெய்கண்டான் கேட்டார். கை காட்டினார்கள். அறுவடை முடிந்து வயல்களுடே தென்னையும், பிற மரங்களும் சூழ்ந்து ஒரு தாவரத்தீவாய் அந்தக் கிராமம் தெரிந்தது அம்மாவையும், பிள்ளையையும் தனக்குத் தெரியாது ஊர் விட்டுப்

போகக்கூடாது என்று எச்சரித்துவிட்டு இன்ஸ்பெக்டர் கிராமம் நோக்கி வண்டியை விட சொன்னார்.

எதற்காக இது குறித்து அலைகிறோம் என்கிற கேள்வி அவருக்கு வந்தாலும், ஏதோ அங்கு இருக்கிறது என்ற உள்ளுணர்வு சொல்லிற்று. மெய்கண்டான் உள்ளுணர்வுக்கு மதிப்பு கொடுப்பவர். அதனால் அவருக்குப் பல சமயம் சிக்கலும், சிக்கலிலிருந்து விடுதலையும் கிடைத்திருக்கிறது. இந்த முறை ஒரு சிக்கலை நோக்கிப் போகிறோம் என்பதும் அவருக்குத் தெரிந்தது போலீஸ் ஸ்டேஷனில் உட்கார்ந்தபடி வெளியே வெயிலைச் சந்திக்க மனசு ஆசைப்பட்டது.

பைப்புக்காரர் வீட்டு வாசலில் டெய்லர் அளவு கடந்த ஆத்திரத்தோடு பேசினான். "குடிக்கிற தண்ணிக்குக் கூட வசூல் பண்ணணும்றான். இந்தக் கிழவன் நல்லா இருப்பானா? மானத்திலிருந்து அமிர்தமா கொண்டாந்திட்டான். நா அப்பமே சொன்னேன், இவனுங்க வேல செய்துட்டு பின்னால வேல காமிப்பாங்கன்னு.... காட்டிட்டாம் பார்."

"டெய்லர்? நீ துட்டு தர வேணாம். ஒனக்கு தண்ணீர் ஃப்ரீ. நீயும் ஒம் பெண்டாட்டியும் தேய்ச்சு, தேய்ச்சுக் குளிங்க, அழுக்குப் போவட்டும்." பைப்புக்காரர் கோபத்துடன் கூச்சலிட்டார்.

"நீ அழுக்குய்யா. அதான் தண்ணிக்குத் துட்டு கேக்கற."

"டெய்லரு சும்மா இரு. அவங்க துட்டு கேக்கறது ஊருக்குத்தான். பேசி ஒரு முடிவுக்கு வருவோம்" கருங்கல் வேலை செய்பவர் பேச்சு மறித்தார்.

"குடும்பத்துக்கு நாலு ரூபான்றது சரி வராது. வூட்டுக்கு பத்து ரூபா. ஒரு வூட்ல எத்தினி குடித்தனம்

இருந்தாலும் சரி. வருஷத்துக்கு வூட்டுக்கு பத்து ரூபா பஞ்சாயத்துக்கு குடுத்திருவோம்." பேக்கரிக்காரர் உரக்கச் சொன்னார்.

"எனக்குத் தேவையில்லை. எடத்த காலி பண்ணுங்க,. நாளைக்கு தண்ணி நின்னு போச்சு, என்னய கேக்காதீங்க." பைப்புக்காரர் துண்டு உதறி எழுந்தார்.

"நிறுத்திடுவேன்றியா?"

"ஏன், நிறுத்திட்டா செருப்பால அடிப்பியா? கொண்டாந்ததுக்கு மாலை போட, நிறுத்திட்டா செருப்பால அடிப்பியா?"

"உனக்கு மாலைதான் வேணும், நாலு முழம் கதம்பம் வாங்கிட்டு வாய்யா."

"டெய்லர். நா செத்த பெறகுகூட உங்கையால எனக்கு மாலை வேணாம். போறுமா?"

"என்னங்க அசிங்கமா பேசிக்கிட்டு. உருப்படியாப் பேசுங்க."

"நாலு முழம் பூ ஆர்டர் பண்றான். கேட்டுக்கிட்டு தானய்யா இருக்கீங்க. ஊர்ல ஒரு ஆம்பளையாவது மண் வெட்டி பிடிக்க வந்தீங்களா? ஒரு பொம்பளக் கழுதையாவது மண்ணு தூக்குச்சா பகல் முழுக்க திண்ணையில் கால் பரப்பி ராத்திரி கதை பேசுதாளுக."

'யேய். நாக்க அடக்கிப் பேசு."

"என்னடா பண்ணுவ?"

"கொரவளைய மெறிச்சிருவேன். இருந்த ஓட்டையில பைப்பு சொருவின. வெட்டி முறிச்சா மாதிரி பேசறியே."

"அப்படி சொருவத்தாண்டா ஆம்பளையக் கூப்பிட்டேன். ஊர்ல இருக்கற ஆம்பளைங்கல்லாம் நக்கிட்டு கெடந்தீங்க."

"பைப்புக்காரர் பேசி முடிக்கும் முன் பளீரென்று ஒரு அறை விழுந்தது.

எல்லா ஊரிலும், எல்லா மொழியிலும் வசவுகள் உடலுறவு சம்பந்தமாகவும், புணர்ச்சி சம்பந்தமாகவும் இருக்கின்றன. உடலுறவு மனித ஆங்காரத்தின் விஷய மாகப் போயிற்று. மன ஆங்காரத்தை வெளிப்படுத்த உடல் ஆங்காரத்தின் விஷயம் முக்கியமாயிற்று. ஒருவனைக் கடன்காரன் என்றோ, கொலைகாரன் என்றோ, திருடன் என்றோ, பொய்யன் என்றோ சொல்வதால் ஏற்படும் கோபத்தைவிட, அவனை இயலாதவன் என்று சுட்டிக் காட்டுகிறபோது கோபம் ரௌத்திரமாக மாறுகிறது. புணர்ச்சி முக்கியமாக இருந்தது. அதே சமயத்தில் இழிவாகவும் கருதப் பட்டது. முக்கியமானதை இழிவுபடுத்த மூர்க்கம் பிறந்தது. ஜனங்கள் புணர்ச்சி கலந்த வசவைப் பொறுத்துக்கொள்ள முடியாதவர்களாய்ப் போனார் கள். உலகத்தின் மிகப் பெரிய பலவீனம் காமம். காமத்தின் வெளிப்பாடாக புணர்ச்சி. ஆணும் பெண்ணும் விரும்பி ஈடுபடுகின்ற கலவியை, ஈடுபடும்போது ஆசையுடனும், பேசும்போது அலட்சியத்துடனும் இரண்டு விதமாய் அணுகினார்கள். இந்த எதிர்மறையான விளைவால் ஈடுபடுவதில் நொய்மையும், பேசுவதில் ஆத்திரமும் கொண்டார்கள். வாழ்க்கையில் ஏற்பட்ட இந்த மிகப் பெரிய முரண்பாடு மற்ற எல்லா நடவடிக்கைகளிலும் கடுமையான பாதிப்பை ஏற்படுத்தியது.

பெண்களின் துணிகளைத் தைப்பவனை நபும் சகன் என்று ஒரு புராணம் சொல்ல, அதை அங்கு பைப்புக்காரர் உபயோகப்படுத்த, பேச்சு, அடிதடி சண்டையாயிற்று. டெய்லருக்குத் துணையாக சிலரும், பைப்புக்காரருக்குத் துணையாக சிலரும் மத்தியஸ்த

மாகப் பலரும் நிறைவாய் ஈடுபட, ஒரு சின்னக் கலவரம் அங்கே மூண்டது. கருங்கல் மேஸ்திரியை யாரோ கீழே தள்ளி விட்டார்கள். அலறி எழுந்த மேஸ்திரி, விலகிக் கிடந்த செருப்பை எடுத்து, எவன் மீதாவது படட்டும் என்று வீசினார். செருப்பு திண்ணையிலிருந்த கிழவர் மீது பட்டது. கிழவர் நிமிர்ந்து மேஸ்திரியை உறுத்துப் பார்த்தார். பலம் கொண்ட மூன்று மல்யுத்த வீரர்களின் கோபமான குத்து கிளம்பி, கருங்கல் மேஸ்திரியின் நடு நெஞ்சைத் தாக்கியது. மேஸ்திரி ஒரு ஆள் உயரம் எகிறி, ஒரு வீட்டுக் கதவில் மோதி விழுந்தான். மூர்ச்சை யானான்.

மெய்கண்டான். அந்தத் தெரு திரும்பும்போது மேஸ்திரி பறந்ததைக் கண்ணால் பார்த்தார் போலீஸ் ஜீப்பைப் பார்த்த ஜனங்கள் நாலாபுறமும் சிதறினார்கள். சிதறிய சில பேரை போலீஸ்காரர்கள் அடித்துப் போட்டார்கள். லுங்கி கிழிந்து. அவிழ்ந்து கத்திக் கொண்டிருக்கும் டெய்லரை தலைமுடி பிடித்திழுத்து ஒரு சுவர் எதிரே குந்த வைத்தார்கள்.

பார்த்தசாரதியும், பாலு ஐயரும் மயிலைக்குப் போகும் பஸ்ஸில் அருகருகே அமைதியாய் உட்கார்ந்து கொண்டு போக, கிராமத்தில் பைப்புக்காரர் உட்பட பதினேழு பேர் கைதுசெய்யப்பட்டார்கள். கலாவதி இடிந்து போய் கிழவருக்குப் பக்கத்தில் உட்கார்ந்து அழுது கொண்டிருந்தாள்.

மந்தையிலிருந்து பிரிந்த இரண்டு மாடுகளை இடைச் சிறுவன் கவலையோடு தேடிக் கொண்டு போனான்.

24

யாருக்கு பயந்து ஓடுகிறோம். என்றுதான் தெரியவில்லை. ஓடு என்று கட்டளை வந்தது. ஓடிக்

கொண்டிருக்கிறோம் என்று மட்டும் தெரிந்தது. எங்கே என்பதும் புரியவில்லை.

"எங்க போகணும்?" கண்டக்டர் கேட்டபோது, 'டெர்மினஸ்' என்று பாலு ஐயர் மத்யமாய் ஒரு பதில் கொடுத்தார்.

"நீ ஏறினதுதான் பஸ் டெர்மினஸ். எங்க போகணும்?"

எதிர்த்த டெர்னிமஸ் எங்கே போகிறது என்று தெரியாமல், தனக்குத் தெரியாது என்பது அவனுக்குத் தெரியப்படுத்தாமல் மறுபடி மத்யமாய் பேசினார்.

"மயிலாப்பூர்....

"சொல்லித் தொலையேன் அதை.... எல்லாம் தெரிஞ்ச மாதிரி டெர்மினஸ்.... டெர்மினஸ்ங்கறயே."

பத்து ரூபாய் வாங்கிக் கொண்டு மீதி சில்லறை கொடுத்தான்.

பார்வையில், பேச்சில், சில்லறைக் காசு கொடுப்பதில், எல்லாம் அந்த கண்டக்டர் ஒரு அலட்சியம் காட்டினான். எண்ணிப் பார்த்துவிட்டு பாலு ஐயர் பையில் போட்டுக் கொண்டார்.

கண்டக்டர் வசவுக்கு முகம் சுளிப்பாரோ, முணுமுணுப்பாரோ.... இல்லே.... அவனை காச்சு மூச்சுன்னு கத்தவச்சுட்டோம் பாரு என்று நமுட்டு சிரிப்பு சிரிப்பாரோ என்று எதிர்பார்த்து பார்த்தசாரதி சற்று குனிந்து அவர் முகம் நோக்கினான்

அது சாதாரணமாய் இருந்தது.

கண்டக்டரும் பதிலுக்கு ஒரு முணுமுணுப்பு எதிர்பார்த்திருப்பான் போலிருக்கிறது. முன் பக்கம் போய் டிக்கெட் கொடுக்கும்போது அவரையே இரண்டு

மூன்று முறை கூர்ந்து கவனித்தான். தள்ளிப்போய் எல்லாரும் இங்கிலீஷ் பேசிடறானுங்க, யாருக்கும் புரியாத மாதிரி என்று தனியே ஒரு அலுப்பு தெரிவித்தான்.

ஐயர் அதற்கும் அசையவில்லை. வெறுமே பஸ் போகும் திசையைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

"எங்க மயிலாப்பூர் போறோம்?" மெல்ல பார்த்த சாரதி கேட்டான்.

"எங்கியாவது போகணுமே..."

"நடுவுல எங்கினா இறங்கிடுவீங்களா?"

"தோணினா அதுவும் செய்யலாம்."

"என்னவோ ஒரு மாதிரி விட்டேத்தியா பேசறீங்களே."

"நான் விடுன்னு சொல்லியா விட்டுடுத்து. நான் ஓட்டுன்னு சொல்லியா ஓட்டித்து.... என்னவோ நடக்கிறது."

"புரியலையே."

"நான் எதையும் விட ஆசைப்படலை பார்த்த சாரதி குருவி சேர்க்கற மாதிரி நானும் காசு, துணிமணி, பாத்திரம் பண்டம் சேர்த்துண்டிருந்தவன்தான்... எல்லாம் சிதறின காசு மாதிரி ஏரிக்கரைல கொட்டிப் போச்சி. கொட்டினது பொறுக்குறதுக்குள்ளே பூமில மறைஞ்சு போச்சு.

மறைஞ்சதுதான் அதிசயமாய் நிற்கிறதே தவிர, கொட்டினது தெரியவேயில்லை. என் காசு போச்சேன்னு தோணவேயில்லை. யாரு கொடுத்தாங்களோ அவங்களே எடுத்துண்டுட்டாங்கற மாதிரிதான் தோண்றது. நான் ஒட்டுன்னு தோள்பட்டையைப்

பார்த்துச் சொல்லலை. வெட்டுப்பட்டது தானா ஓட்டிடுச்சு"

"அதனால?"

"நான் இல்லை"

"நான் இல்லைன்னா...."

"எனக்குள்ள யாரும் இல்லை, காணோம்."

"எப்படிங்க அது?"

"நான் முயற்சி செய்யலை. முயற்சி செய்யக்கூட ஆசைப்படலை. யாரோ இரக்கப்பட்டு செய்திருக்காங்க. இல்லை, ஏதாவது ஒரு காரியத்துக்கு என்னை உபயோகப்படுத்திருக்காங்க. உபயோகப்படும்ன்னு உணர்த்தியிருக்காங்க."

"கிழவரு ஏதோ செய்துட்டாருங்களா, உங்க கையை?'

"இருக்கலாம்."

"எனக்கும் இப்படி என்னமோ நடந்தது. ஆனா, உங்களது மாதிரி இல்லை. என்னவோ நெருப்பைத் தூக்கி உள்ள போட்ட மாதிரி... உள்ள இருக்கிறது எல்லாம் பொசுங்கின மாதிரி."

"ம்ம்."

"நம்புவீங்களா?"

"அதுபத்தி உனக்கென்ன கவலை. உனக்குள்ள இருக்கறத கொட்டித் தீர்த்துடு."

"கல்லு பேசிச்சுங்க. குழந்தை மாதிரி, பெண் குழந்தை மாதிரி பேசிச்சு."

"ம்ம்."

"எனக்கு ஏன் இதெல்லாம் நடக்குதுன்னு தெரியலை. ஆனா, நெருப்பு விழுந்த நாள்லேர்ந்து

என்னவோ ஒரு அமைதி, தூக்கம், பசி எதுவும் முக்கியமில்லாத ஏதோ மாதிரி ஒரு வேகம். அந்த வேகத்துலதான் பூமி வெட்டி குழா போட்டு...."

"ம்ம்."

"உங்களையும் கிழவரு தொட்டு எதுனா செய்துட்டாரான்னு கேக்கறேன்."

"தெரியலையேப்பா..... நாலு பேர்கிட்ட கேட்டுத் தெரிஞ்சுக்கவும், நான் விரும்பலை."

"ஏன்?"

"இது போக்கிரி உலகம். அடடா, அப்படியான்னு விவரமா கேட்டுட்டு எழுந்து போய் வெத்தலை துப்பற மாதிரி வாய் மறைச்சுண்டு சிரிக்கும். சரியான முட்டாள்னு கேலி பேசும். பேசாது இருந்துடறது நல்லது. காக்கை கூட்டுல குயில் இருக்கிற மாதிரி."

"அது என்னங்க.... காக்கா கூட்டுல குயிலா..?"

"குயில் முட்டை போட்டுட்டு போயிடும். காக்கா அதை அடைகாத்து குஞ்சு பொரிக்கும். காக்கா மாதிரியே குயிலும் இருக்கும். அடையாளம் தெரியாது. குயில் குஞ்சும் காட்டிக்காது இறக்கை முளைச்சு பறக்க முடியும்னு தெரிஞ்சவுடனே கூன்னு ஒரு குரல் கொடுத்துட்டுப் பறந்துடும். இறக்கை முளைக்கறதக்கு முன்ன குரல் கொடுத்ததுன்னா காக்கா கொத்திக் கொன்னுடும்."

"பேசாதேன்றீங்களா?"

"பேசி என்ன புண்ணியம் பார்த்தசாரதி... நமக்குள்ள நடக்கிற அற்புதத்தை நாம யார்கிட்ட சொல்லி என்ன விளக்கம் கேட்க முடியும்?"

"பார்த்தசாரதி மௌனமானான். ஆனால், மனசு பேசியது. மனசு அவன்கூட மெல்ல அரற்றிற்று.

'இப்படி ஒரு நல்லது நடக்க நான் நல்லவன் இல்லையே என் கூட கல்லும் முள்ளும் பேசற அளவுக்கு என் மனசோ உடம்போ சுத்தம் இல்லையே. வெறும் மாட்டுக்காரன். பொம்பளை கூப்பிட்டா போறவன். பொம்பளை கூப்பிட மாட்டாளான்னு ஏங்கறவன். எனக்குப் போய் வெளிச்சமும். உடம்பு முழுக்க ஒரு வலியும் கண்ணு பாக்கறாப்பல வெவ்வேறு காட்சியும்... இவ்வளவு நல்ல விஷயங்கள் எனக்கு நடக்குமா? ஒரு வேளை இது நல்லதில்லையோ.... எல்லார் மாதிரியும் இல்லாம ஏதோ ஒரு கிறுக்கா மாறிடப் போறனோ... மாறிட்டா என்ன பண்ண முடியும்? எது வச்சு தடுக்க முடியும்? பாலு ஐயரு சரின்னுட்டிருக்கிற மாதிரி என்னால ஏன் இருக்க முடியலை. பேசி என்ன புண்ணியம்னு ஏன் பேசாம இருக்க முடியலை. உள்ள என்னவோ பதறுது. எது எது எப்படின்னு கேள்வி லட்ச லட்சமா வருது. பயம் வருது. எதுனா ஆயிடப் போற னேன்னு ஒரு உளைச்சல் வருது. ஐயர் முங்கிக் குளிச்ச மாதிரி ஆயிட்டாரு. நான் சேத்துல கால் வச்ச மாதிரி தவிக்கிறேன். ஒரு வேளை ஐயர் போல நடுவாந்தரத் துக்குப் போகாத பயந்து போய் ஓரமா சேத்துலயே நிக்கறேனோ. காஞ்ச தலையிலயும் இல்லாத, கழுத்தளவு தண்ணீர்லயும் இல்லாத, சொதப்பலா நிக்கறேனோ

ஏன் அப்படி.... என்ன என் கேள்வி?

எனக்கேன் இப்படி ஆவுதுன்னா... அதுவா..... இல்லை இப்படி ஆகவேணாம்னா....

ரிசர்வ் பாங்க் வழியே கடற்கரைச் சாலையில் பஸ் காற்று கிழித்தபடி போய்க் கொண்டிருந்தது. ஐயர் திரும்பி கடல் பக்கம்கூட பார்க்கவில்லை. நேரே வண்டி போகும் திசையையே பார்த்துக் கொண்டிருந்தார். பார்வை மட்டும் எதிரே இருப்பது போல் பட்டாலும்

உற்று கவனிக்க, அவர் வேறு என்னாவோ ஒரு தொடர்பு கொண்டிருப்பது போல பட்டது.

வானொலி நிலையத்திற்கு எதிரே பஸ் நின்றது. பஸ் நிற்குமிடத்தில் டீக்கடைகளும், சிகரெட் கடைகளும் இருந்தன. கூட்டம் இப்போது அதிகம் இருந்தது. கண்டக்டர் வியர்வை வழிய டிக்கெட் கிழித்துக் கொண்டிருந்தான்.

விசில் தர, வண்டி கிளம்ப, யாரோ பக்கத் தகடு மீது அடித்தார்கள், வண்டி நிறுத்து, வண்டி நிறுத்து' என்று கூவினார்கள்.

"யார்ரா அது?" கண்டக்டர் அதட்டினார்.

"வெயிட்.... எங்கம்மா ஓடி வருது. வெயிட்!" என்று கூவினார்கள். கூவின குரல் குழறலாய், குடிபோதைக் குரலாய் இருந்தது.

மறுபடி கண்டக்டர் விசில் தர, வண்டி நகர, தடதட என்று தகரத்தில் தட்டல் விழுந்தது.

யாரோ முன்னே போய் வண்டி நிறுத்தியிருக்க வேண்டும்.

"நகர்ந்தே.... கொன்னுடுவேன். எங்கம்மா வரவரைக்கும் வண்டி நகரப்படாது." டிரைவர் ஏதோ சொல்ல, மறுபடி தடேரென்று ஒரு அடி பஸ்ஸில், விழுந்தது. "போயிடுவியா நீ. நான் சொல்லாத போயிடுவியா?"

"டேய்... யார்ரா அது சோமாறி!" கண்டக்டர் எட்டிப் பார்த்து கத்தினான். சட்டென்று அவனை சட்டையோடு ஜன்னல் வழியே இழுத்துக் கொண்டார்கள். "வண்டி நகர்ந்தா செத்த மவனே.... பேசாத எங்கம்மா வரவரைக்கும் இங்கேயே இரு.... யம்மா. நீ மொள்ள வா."

பார்த்தசாரதி எக்கிப் பார்க்க, யாரோ ஒரு இருபது வயது இளைஞன் அரை நிக்கரும், வெறும் மாருமாய்

கண்டக்டர் சட்டையைப் பிடித்துக் கொண்டிருந்தான். உறுதியான பிடி. எசகு பிசகான பிடி. வண்டி நகர்ந்தால் கண்டக்டர் ஜன்னல் வழியே வெளியே விழ வேண்டும்.

"வுடுறா..... வுடுறா!" கண்டக்டர் திமிர, ஐயர் எழுந்தார். இங்கதான் இறங்க வேண்டும். இறங்கு பார்த்தசாரதி.

அவசரமாய் எழுந்து ஜனங்களை விலக்கி கீழே இறங்கினார். பார்த்தசாரதி பின்தொடர்ந்தான். படியில் இறங்கி பஸ் விட்டு நகர, கிழவி ஓடி வந்து முன்பக்கம் ஏற ரைட் ரைட் என்று அந்த இளைஞன் குரல் கொடுக்க, கிழவி சிரிப்புடன் வண்டிக்குள் நிற்கும் ஜனங்களுக்கு நடுவே உட்கார்ந்து கொண்டாள்.

அந்த இளைஞன் கிழவியை ஏற்றிவிட்ட களிப்புடன் நடனமாடினான்.

"வா.... போய் பீச்சில் உட்காருவோம்."

"மயிலாப்பூர் போகலீங்களா?"

"இது மயிலாப்பூர்தான்."

"யாரையும் தேடறீங்களா?"

"தெரியலை பார்த்தசாரதி."

"சட்டுனு இறங்கிட்டீங்க."

"தோணித்து. இறங்கிட்டேன்."

காமராஜர் சிலைக்கு அருகே இறங்கி கடற்கரைக்குப் போனார்கள். கடற்கரையில் அந்தப் பகுதியில் ஆளரவமற்று இருந்தது. வலது பக்கம் மீனவர் குடியிருப்புகளிடமிருந்து கூச்சல் வந்து கொண்டிருந்தது.

"யாரோ பேசப் போறாங்க பார்த்தசாரதி"

"மீட்டிங்கா?"

இடது பக்கம் தொலைவில் குழல் விளக்குகளின் வரிசையில் மாலை வெயில் மங்கலாகத் தெரிந்தது. "மீட்டிங் இல்லை. நம்மகிட்டே யாரோ வந்து பேசப் போறாங்க."

"எதுங்க.... என்ன பேச."

"நமக்கு கேள்வி இருக்கு இல்லையா?"

"எது பத்தீங்க?"

"எல்லாத்தப் பத்தியும்."

"ஆமாங்க."

"அது பத்தி பேசுவாங்கன்னு நினைக்கிறேன்."

"உள்ளே தோணுச்சா?"

"ஆமாம்."

"எனக்குத் தோணலீங்களே."

"நீ பேசிண்டிருந்தே."

"இல்லீங்களே, கம்முன்னுதானே."

"என் கூட இல்லை. உனக்குள்ள என்ன ஏதுன்னு ஏகமா கேள்வி கேட்டுட்டிருந்தே. அதனாலே கவனிக்காம வுட்டுருப்பே"

"உங்களுக்கும் ஏதும் கேட்டுடுச்சா."

"தோணித்து."

"எப்படிங்க?"

"அந்தக் குடிகாரப் பையன் அம்மா அம்மான்ன தும், இறங்கிடு. இங்கதான்னு உள்ளே தோணித்து."

"அவன் அந்த கிழவிய சொல்லலீங்களா?"

"இருக்கலாம். எனக்கு ஏதோ ஒரு அம்மா தோணுச்சு."

"இதெல்லாம் சரிங்களா?"

"எது பார்த்தசாரதி?"

"தோணினபடி நடக்கறது."

"கேளு."

"யார்கிட்டே....

"யார் சரியா பொறுப்பா பதில் சொல்வாங்களோ அவங்ககிட்ட."

"யாரும் தெரியலீங்களே...."

"அப்ப உன்கிட்டயே கேளு."

"தோணினபடியெல்லாம் நடக்கறது சரீங்களா?"

ஐயர் பதில் பேசாது கடல் அலைகள் அருகே போனார். சம்மணமிட்டு உட்கார்ந்து கொண்டார். பார்த்தசாரதி குழம்பியவனாக அவர் அருகே உட்கார்ந்து கொண்டான்.

தொலைவில் யாரோ தள்ளாடியபடி வந்தார்கள். ஏதோ பாட்டு பாடிக்கொண்டு வந்தார்கள். சாயம் போன ஒரு கரும் பச்சைத்துணி உடம்பெல்லாம் போர்த்தி, போர்த்தின துணியையே தலைக்கு முக்காடு இட்டு, மணல் பார்த்தபடி பாடிக்கொண்டு வந்தார்கள். குள்ளமாய் ஐந்தடி உருவமாய் அந்த உருவம் தடுமாறியபடி வந்தது.

இவர்கள் அருகே வந்து உற்றுப் பார்த்தது.

"இங்க இருக்கியா" என்று கூச்சலிட்டது.

ஐயர் விக்கித்தார். எழ முயற்சித்தார். 'உட்கார்' என்று அருகே உட்கார்ந்து கொண்டது. தலையைப் பின்னுக்கு தூக்கியது. முக்காடு நழுவியது பார்த்தசாரதி மிரண்டான்.

தலை வழுக்கை, பளபளத்த வழுக்கை. காதுகள் வீங்கியிருந்தன. மூக்குச் சப்பையாகி இருந்தது. உதடுகள் பருத்து வெடிப்புடன் காணப்பட்டன. கன்னத்தில் பளபளப்பு இருந்தது. கடும் தொழுநோய் அந்த முகத்தில் தெரிந்தது.

பார்த்தசாரதி முகம் மாற, அந்த உருவம் சிரித்து, இன்னும் தலை சரித்து துணியைப் பின்னுக்குத் தள்ளியது. உட்கார்ந்திருப்பது பெண் என்பது புரிந்தது. பார்த்தசாரதி கலவரமானான்.

'எனக்கு ஏதும் தெரிய வேணாம்' என்று ஓட மனசு துடித்தது. ஓட முடியவில்லை.

25

வன்முறைக்கோ, வறுமைக்கோ பார்த்தசாரதி பயந்ததில்லை. மரணம் நெருக்கமாய் வரும் பொழுது அதைக் கண்டு அஞ்சியதில்லை. பார்த்தசாரதி நோய் கண்டு அஞ்சுவான். நோய் வந்து வைத்தியம் செய்வதை விட, நோய் வராது தடுக்கும் முறைகள் பற்றி விசாரிப்பான். வெந்தயம் குளிர்ச்சி, பசலைக்கீரை பூச்சிக் கொல்லி, முருங்கை இரும்புச் சத்து, உண்ட பிறகு ஓய்வெடு, தூங்காதே. இரவில் தயிர் தவிர்த்து விடிந்ததும் பால் அருந்து. உச்சி வெயிலுக்கு மோர் நல்லது என்று யோசிக்கிற கொஞ்சம் கவனமான ஆள்..... மனுஷனுக்கு மரணம் நோயால் வரக்கூடாது என்று நினைக்கிறவன்.

வீட்டு வாசலில் நின்று பேசுகிறவன் மூக்கு சிந்தினால், 'மண்ணு தள்ளுய்யா அதுல' என்று அதட்டுவான் பீடி பிடிக்கிற ஆள் அருகில் நின்று பேச மறுத்து விடுவான். ஒரு முறை உணவு அஜீரணமாகித் தவித்தபோது வெறும் நீராகாரம் மட்டும் இரண்டு நாள் குடித்து மருந்தின்றி குணப்படுத்திக் கொண்டான்.

அவன் இவ்வளவு அருகே கைக்கெட்டும் தூரத்தில் பழுத்த தொழுநோயாளியைப் பார்த்ததில்லை. மூச்சுக் காற்று மேலே படும் அளவுக்கு நெருக்கமாய் உட்கார்ந்த தில்லை. பச்சை நிறத் துணியைப் பின்னுக்குத் தள்ளியதும் முடி உதிர்ந்துபோன தலை தெரிந்தது. தலையிலிருந்து நீக்கப்பட்ட துணி தோளிலிருந்து சரிய, அது பெண் என்பது புரிந்தது. பேச்சு குறைவாய் இருப்பினும். பிறர் பேசுவது உற்று கேட்பது புரிந்தது.

பாலு ஐயருக்கு என்ன வித அதிர்ச்சி என்று புரியவில்லை. ஆனால், பின்னால் நகருகிற அதிர்ச்சி யில்லை என்பது புரிந்தது. உற்று அந்தப் பெண்மணியைப் பார்த்து வாய் பொத்தி அசையாது உட்கார்ந்து கொண்டிருந்தார். ஏதோ புரிந்துகொண்டது போல் பாலு ஐயர் கரம் கூப்பினார். 'அம்மா' என்று கூப்பிட்டார்.

"அது சொல்லிச்சு, குழந்தைங்க வரும்னு. மேலெல்லாம் பூ போட்டிருக்குது. பார்த்தியா..." முகம் தூக்கிக் காட்டியது.

பூவா அது.... புண்களைப் பூவென்று சொல்ல முடியுமா? மெல்லிய கொப்புளங்களை, சில இடங்களில் அடை அடையாய் இருந்த தடிப்புகளை மலருக்கு ஒப்பிட முடியுமா...

"பார்த்தேம்மா."

"அடையாளம் தெரிஞ்சுதா...."

"எனக்கென்ன தெரியும். தாயே! எனக்கு உள்ளே குரல் கேட்டது. இறங்கி இங்கே வந்துட்டேன்.

"அது பெரிசு.... பெரிய ஆளு. வந்து எழுப்புச்சு. வா வெளிய வா. குழைந்தங்க வருது, போய் பார்த்துட்டு வான்னுச்சு."

"சந்தோஷம் தாயே!"

"இவன் ஓடிப்போறேன்னானா...."

"இல்லை தாயே!"

"போறேன்னான்.."

"வேணாம் பார்த்தசாரதி, மனசுலகூட நினைக்காதே. அம்மா கண்டுபிடிச்சுடும்."

அந்த அம்மா சிரித்தது. "கண்ணுக்கு முன்னாடி இருக்கறதே கண்டுபிடிக்கறது என்ன.... இல்லாத பொருளா இருந்தா தேடணும் இருக்குதே.... ஏன் தேடறது?"

"ஆமா.... தாயே."

"எல்லாம் சரியாயிடும்."

"ஆகலைம்மா, இரண்டா அலையறேன். அது கூட்டிட்டுப் போறதுன்னு நம்பறேன். அதே சமயம் எங்கே போறம். தெரியலையேன்னு புலம்பறேன்."

"எங்கே போயிட முடியும்? யாரும் எங்கயும் போயிட முடியாது. எல்லாரும் இங்கதான். இங்கேயேதான் சுத்தி சுத்திதான். அலை ஓடியாரும். விழுந்து சாவும். மறுபடி அலைஞ்சு உள்ள போய் ஓடியாரும். சாவும்...."

"இங்க என்ன செய்யணும்மா?"

"மனுஷாளுக்கு என்ன செய்ய முடியுமோ, அதெல்லாம் செய். முழுசா செய்."

"முழுசா செய்யறதுன்னா என்ன தாயே...."

"மொத்தமா இறங்கிடு. சுத்தமா கழுவிடு. கொஞ்சம் கொஞ்சமா கழுவாதே. அழுக்கு போற மாதிரி கழுவு."

"அழுக்குப் போற மாதிரி கழுவ முடியுமா தாயே... மறுபடி அழுக்காறதே."

"கழுவறபோது அழுக்கு ஒட்டிக்குது. சுத்தமா இருக்கணும்னு கழுவு. அழுக்கு தேச்சுட்டு கழுவு கழுவினேன்னா எப்படி?"

பாலு ஐயர் யோசித்தார்.

'எங்கிட்ட பார். பூ மட்டும்தான் இருக்கு. அழுக்கு இல்லை."

"அழுக்கு போக குளிச்சிட்டா...."

"சுத்தம், எல்லாம் சுத்தம்."

"எது அழுக்கு தாயே?"

"இது."

பாலு ஐயர் நெஞ்சைக் கையினால் குத்திற்று, குத்திய கைவிரல்கள் மடங்கி இருந்தன. பார்த்த பார்த்தசாரதி வேதனையில் நெளிந்தான்.

"புரியலைம்மா, புரியலை.... எது நல்லது, கெட்டதுன்னு புரியலை. எது அழுக்கு. எது சுத்தம்னு புரியலை."

"முழுசா இல்லாதது அசுத்தம். முழுசு சுத்தம்."

"எதும்மா முழுசு."

"என்கூடப் பேசறது, முழுசா பேசு. சாப்பிடறது முழுசா செய். காத்து வாங்கினா முழுசா வாங்கு."

"நான் முழுசா பேசறேம்மா."

"இல்லை, இதுல என்ன லாபம். எப்படி கேட்டா சுளுவா புரியும்னு யோசிக்கிறே... நீ இருக்கறதே லாபம்

தான். அப்புறம் கேள்வில லாபம் நஷ்டம் உண்டா? முழுசா பாரு என்னை...."

"பார்த்துட்டேன் தாயே."

"நான் யாரு?"

"அம்மா..."

"இல்லை. நான் யாரு?"

"தெரியலையே. இப்பத்தானே பார்த்தம்?"

"நான் யாரு?"

"அம்மாவா?"

"நீ....."

"தெரியலையே.."

"நான் யாரு?"

பாலு ஐயர் தயங்கினார். அமைதியாய் அவளைப் பார்த்தார். அந்த கண்கள் உறுத்து அவரையே பார்த்துக் கொண்டிருந்தன. ஆடாது அசையாது விழிகள் அவரையே பார்த்துக் கொண்டிருந்தன. உள்ளே மின்னல் வெட்டியது.

"நீ என்று பதில் சொல்."

"நீ...." பதில் சொன்னார்.

"அம்மாவா?"

"ஆமாம் தாயே."

"தொடு!" கை நீட்டியது.

பாலு ஐயர் எம்பிக் கைப்பிடித்து நெஞ்சில் வைத்துக் கொண்டார். அருகே நகர்ந்து அந்தப் பெண்மணியைத் தழுவிக் கொண்டார். அதுவும் இறுக்கிக் கொண்டார். அதுவும் இறுக்கிக் கொண்டது. தலையில் முத்தமிட்டது. நொய்ந்த விரல்களால் முகம் முழுவதும் தடவியது.

"என்னடா இதெல்லாம்!" மறுபடி தூக்கி காட்டியது.

"பூ... தாயே.... பூ." தடவிக் கொடுத்தார்.

"அவ்வளவுதாண்டா!"

"அம்மா....அம்மா!" அழுகை பிய்த்துக் கொண்டு ஐயரிடமிருந்து கிளம்பியது. உதடு கோணி அழுதவரின் தோளில் கை போட்டு தன் பக்கம் அது இறுக்கிக் கொண்டது. இழுத்து கடல் பார்க்க உட்கார வைத்தது. ஐயர் இடம்பெயர்ந்து அந்தப் பெண்மணியின் வலது பக்கம் போனார் இருவரும் பார்த்தசாரதிக்கு முதுகு காட்டி கடல் பார்த்து உட்கார்ந்திருந்தார்கள். அது கடலையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தது. பாலு ஐயர் மெல்ல அடங்கினார். அதன் முதுகில் கை போட்டு அமர்ந்திருந்தார்.

"வாடா போலாம்!" கடலுக்கு அருகே போயிற்று. அவரையும் கையோடு இழுத்துக் கொண்டு நடந்தது.

"வாங்கு. முழுசா வாங்கு."

அலை எம்பிப் புரண்டு மேலேறி கால் நனைக்க, அதை, முதன்முதலாய் தன்னைத் தொடும் பொருளாய் உணர்ந்தார். முழங்கால் வரையில் விழுந்த குளிர் நீரை, அதன் குளுமையை, சுழற்சியை, இழுப்பை சுகமாய் வாங்கினார். கடல்நீரோடு தன்னைக் கரைத்தார். மனசு முழுவதும் நீராயிற்று. நீர் வடிய மனசு முழுவதும் ஈர மண்ணாயிற்று. மறுபடி அலை தாக்க, மீண்டும் மனசுள் நீர் சுற்றிக்கொண்டது. மறுபடியும் ஈர மண்ணாய் மனுசு மாறிற்று.

அந்தப் பெண்மணியை விட்டு விட்டு கடல் நோக்கி முன்னேறினார். எந்த அச்சமுமின்றி கடல் என்பது

மறந்து கடலே தானாய் நகர்ந்தார். சடேரென்று அலை அடித்து சாய்த்தது. புரட்டி மணல் தள்ளியது. மேலே தழுவிக் கொண்டு ஓடியது. அது நகர்வதற்குள் மீண்டும் ஒரு அலை அடித்து முற்றிலும் அவரை நனைத்தது. ஐயர் நீரடியில் விழி திறந்து கிடந்தார்.

வெயில் ஜாலம் காட்டியது. அலை நகர, தலை தூக்கினார். கைகள் உதறி குதித்தார். ஓடி நீரில் விழுந்தார், தலை தூக்கி வந்து கரையில் விட்டது. பார்த்தசாரதி பயத்துடன் எழுந்து நின்றான். அலை ஐயரை இழுத்துக் கொண்டு போயிற்று. மறுபடி உயரத் தூக்கியது. நாலு விதமாய் புரட்டிக் கரையில் தள்ளியது. ஐயர் கட்டை போல கிடந்தார். மறுபடி அலை மூடிற்று. வேட்டி சட்டை நனைந்து ஐயர் பிணம் போல் கரையில் ஒதுங்கினார். கடலுக்கும், அவருக்கும் ஒரு தொடர்பு வந்துவிட்டது. கடல் பயம் ஒழிந்து போயிற்று. மறுபடி அலை தூக்கி அவரை கரையில் ஒதுக்கிற்று.

ஐயர் சம்மணமிட்டு உட்கார்ந்து கொண்டார். கடல் அவரைச் சூழ்ந்து கொண்டது. கைகளை மட்டும் தூக்கிவிட்டது. அவரை வருடிக் கொண்டு போயிற்று. ஐயர் அலையை வருடினார்.

கிழவி சிரித்தாள்.

அவருக்கு அருகே போய் இடது கால் தூக்கி அவர் முதுகில் வைத்து எத்தினாள். ஐயர் குப்புற விழுந்தார். அலை அவரை மூடிற்று. மறுபடி மறுபடி அலைகள் வந்து ஐயரைக் காணவிடாமல் மறைத்தன.

உள்ளே தரையிலும் இல்லாது தண்ணீருடன் மேலும் வராது ஐயர் தன் உடம்பு மறந்து லேசாகிக் கிடக்க, நீர் இழுவைக்கு உள்ளே போனார். மூச்சு திணறியது. வெளியே விட இயலாமல் போயிற்று.

அப்படியே அழுத்தி மூச்சு நிறுத்த, டக்கென்று மூச்சு உள்ளே கட்டிக் கொண்டது. இறுகின டப்பா மாதிரி ஆயிற்று. உடம்பு டப்பா படுவேகமாய் சுழன்றது. நாடி தெரிந்தது. லப் டப் அதிகரித்தது.

உடம்புக்குள் உள்ள கொடிகள் அனைத்தும் தெரிந்தன. நாபிக் கதவுகள் தெரிந்தன. நவச் சாளரங்களும் அடைபட்டு நின்றன. இரண்டு பொட்டிலும் திருகாணி போட்டு இழுத்து நிற்பது புரித்தது. விரல் நுனிகள் பிரிந்தன. ஐயருக்கு அவர் மேல் உள்ள பிடிப்பு சுழன்றது. பிருஷ்டகனம் மறைந்து லேசாயிற்று. கடல் தூக்கி அவரை மணலில் வீசியது. பார்த்தசாரதி பயத்தோடு தவித்தான். வெளியே வந்து அவர் விழுந்ததும் பதறிப் போய் அவருக்கு அருகே ஓடினான்.

"உம்..." கிழவி அதட்ட, அப்படியே நின்றான். ஐயர் எழுந்து அவர்களை நோக்கி வந்தார். கிழவியை அணைத்துக் கொண்டார். மெல்லப் பிரிந்து கடற் கரையில் தடேரென்று விழுந்தார். கண் மூடினார். கிழவி ஐயர் நெஞ்சுக்கூட்டில் கை வைத்து தட்டியது. மூச்சு மெல்ல அடைப்பு திறந்து வெளியேறிற்று.

சற்று தயங்கி நுரையீரல் மறுபடி மூச்சு உள்ளிழுத்தது. உடம்பு கனமாயிற்று. விரல் நுனிகள் சுருங்கிக் கொண்டன. மார்பு எம்பி எம்பி தணிந்தது.

'தூக்கி நிக்க வை."

பார்த்தசாரதி ஐயரைத் தூக்கி நிறுத்தினான். ஐயர் தள்ளாடினார். மெல்ல கரையேறி கொண்டு வந்து உட்கார வைத்தான்.

"என்னடா இது.... கிழவி மறுபடி நெஞ்சு குத்தினாள்.

"சுத்தம்..."

"அவ்வளவுதாண்டா.."

ஐயர் உடம்பு இப்போது குளிரில் நடுங்கியது.

யாரோ ஓடிவந்தார்கள். கொஞ்சம் பரட்டைத் தலையாய் மீனவன் மாதிரி ஒரு ஆள் அருகே ஓடிவந்தான்.

"என்ன நீ... தடுக்குன்னு ஓடிவந்துட்ட, எங்கெல்லாம் தேடறது உன்னை?" ஓடிவந்து கிழவியின் தோள் பிடித்தான்.

"போடா நாயே."

"ஆமா.... நான் நாய்தான். எங்க ஓடிட்ட இப்படி..."

"என்னைய தூக்கிட்டுப் போடா நாயே."

அவன் முரட்டு ஆள். பெரிய புஜங்கள் கொண்டவன். அலாக்காய் கிழவியைத் தூக்கினான். இரண்டு கைகளிலும் ஏந்திக் கொண்டு குப்பம் நோக்கி நடந்தான். மெல்ல பார்த்தசாரதி தோள் பிடித்து பாலு ஐயர் முன்னால் போகிற கிழவியைப் பார்த்தார். அந்த திசை நோக்கி கை நீட்டினார்.

பார்த்தசாரதி அவரைத் தாங்கியபடி மெல்ல அவர்கள் பின்னே நடந்தான்.

26

"இந்தம்மா, இங்கன ஒரு டீச்சர் ட்ரெயினிங் பள்ளிக்கூடம் இருக்குதே, அங்கதான் இருந்தது. கல்யாணம் கட்டி புருஷன் வுட்டுப் போயிட்டாப்பல. யாரோ துட்டு கட்டி இங்கன படிக்க வச்சாங்க. இந்தம்மா ஹாஸ்டல்ல தங்கி படிச்சு இங்கனியே வேலை பார்த்து

இளமையிலேயே சாமி பூஜை எல்லாம் செஞ்சு.... வேற என்ன செய்யும், வயசுப் பொம்பளை புருஷன் இல்லைன்னா, காலங் காத்தால வெளிச்சத்துக்கு முந்தி கடல் பக்கம் வருமாம். மூச்சு புடிச்சு உட்காருமாம்.

"ஒரு நாள் அலைல யாரோ கிடந்தது. பார்த்து பயந்துடுச்சு. தொட்டுப் பார்த்து, உயிர் இருக்கறது தெரிஞ்சு கரைல இழுத்துப் போட்டுது. நெஞ்சுல கைய வெச்சு தண்ணிய வெளிய தள்ளிச்சு. பட்டுன்னு அந்தாள் எழுந்து உட்கார்ந்து என் கூட படுத்துக்க வரியாடின்னு கேட்டானாம்.

பாவி, உன்னைக் காப்பாத்திருக்கேன், என்னைப் பார்த்து இப்படிக் கேட்கறியேன்னாங்களாம்.

ஒழிஞ்சுபோற உடம்புதான, மத்தவங்களுக்கு உதவினா என்ன, மூச்சுவிட்டு மூச்சுப் பிடிச்சி எத்தினி நாள் உசிரோட இருப்பே.... அப்புறம் சாவுதானேன்னு கேட்டானாம்.

'அதுக்கோசரம் போற வரவனுக்கெல்லாம் கொடுத்துட முடியுமா.... தராதரம் இல்வலையா'ன்னு கேட்டுச்சாம்.

என்ன தராதரம் வேணும். கடல்ல நடக்கவா... காத்தை நிறுத்தவா.... மணல்ல வில்லு பண்ணி வளைக்கவான்னானாம்.

போடா உதவாக்கரைன்னு அந்த அம்மா திரும்பிடுச்சு. பத்தடி போய் பின்னால வரானான்னு திரும்பிப் பார்த்திருக்காங்க."

அந்த மீனவன் பேச்சு நிறுத்தினான். பார்த்த சாரதியும், ஐயரும் அவனைக் குத்திட்டுப் பார்த்து நின்றார்கள். கிழவி ஒரு ஓரம் சாய்ந்து இடைவிடாது மூக்கைத் தேய்த்துக் கொண்டிருந்தாள். அவள் பார்வை

அந்த குடிசை தாண்டி வேறெங்கோ தொலைதூரம் நிலைத்திருந்தது, "இந்தம்மா திரும்பிப் பார்க்கச்சுல்ல அந்தாள் கடல்ல நடந்து போறானாம். கடல்ல முழங்கால் தண்ணில இல்லை. அலைமேல தண்ணீர்ல சாதாரணமா நடந்து போறானாம்.

அம்மா ஆடிப்போச்சு. தடதடன்னு அந்தாளைப் பார்த்து ஓடிச்சு. அவன் அப்படியே நடந்து அலைக்கு நடுவுல போயிட்டான். தினம் காலைல வந்து தேடித் தேடி அழுதுருக்குது.

பெரிய மனுசனைத் தப்பா பேசிட்டமே, தவறா புரிஞ்சுகிட்டமேன்னு ஒரு பதைப்புல அழுதுருக்கு. ஆறு மாசம் கழிச்சு ஒரு நாள் அதே மாதிரி காலைல பட காண்ட யாரோ பாடிக்கிட்டிருக்காங்க. அம்மா அவர் கிட்ட போய் யாருன்னு கேட்டாங்க. அந்தாளு கட லோட போனவன்னு பதில் சொன்னாரு. அம்மாவுக்கு புரிஞ்சு போச்சு.

புரிஞ்சு கால்ல வுழுந்து 'யாரு நீங்கன்னு தெரியாத பேசிட்டேன். தப்பு மன்னிச்சுக்கங்க. அழுகப் போற உடம்புதானே..... யாரு சந்தோஷத்துக்கும் தரலாம்னு தெரிஞ்சு போச்சுன்'னாங்க.

அழுகப் போறதை, அழுகிப்போனதுக்குத் தருவியான்னானாம். புரியலையேன்னாங்க அம்மா. படகு மறைப்புலேர்ந்து நிலா வெளிச்சத்துக்கு கை நீட்டினான். விரலே இல்லையாம். பயந்து கத்திடுச்சாம் அம்மா. அந்த ஆள் எழுந்து நின்னு மணலை ஒரு பிடி எடுத்து, தரைல விட்டானாம். தடி மாதிரி நிக்குதாம் மணலு. அப்படியே எடுத்து மேல தட்டினானாம். மூங்கிப்பத்தை மாதிரி பட்டு எகிறிச்சாம் மணலு.

ஐயோ, நீங்க யாருன்னாங்களாம் அம்மா

பேரு சொன்னா நம்புவியா, ஊரு சொன்னா நம்புவியா? பேசாத படுடின்னு அதட்டுச்சாம்.

ஐயா! இது தவறுன்னுதான் நான் படிச்சிருக்கேன். எல்லாம் தெரிஞ்சவங்க இதுக்கு ஆசைப்படலாமான்னு கேட்டுச்சாம் அம்மா. அப்ப அது தொப்புள் மாதிரி அடைபட்டுருக்கான்னு கேட்டுதாம் கடல்சாமி.

எனக்கு நல்லது கெட்டது தெரியலை. எனக்கு எது நல்லதோ அது செய்யும்னு அம்மா கும்பிட்டுச்சாம். கும்புட்ட பொம்பளைய இறுக்கி முடிச்சுட்டானாம். அம்மா துக்கம் தாளாத அழுதுதாம். கட்டின புருஷன் கூட தொடாத வுட்டுப்போனான். யாருன்னு தெரியாத கடல் மணல்ல கலைஞ்சுட்டேனேன்னு அழுதுதாம்.

அழுத மூஞ்சிய நிமிர்த்தி 'த்தூ'ன்னு துப்பி, இது உனக்கு நல்லதுடி போன்னு தள்ளி வுட்டானாம்.

எங்க போறது இனிமேன்னு அம்மா கத்துச்சாம்.

எங்க வேணா போக முடியும். நீ நினைச்ச இடத்துல நிக்க முடியும். போன்னு நெத்தி புடிச்சு தள்ளி வுட்டானாம். அம்மா மூணு நாள் மயக்கமா கிடந்துச்சு, போலீஸ் பார்த்து ஹாஸ்பிடல்ல சேர்த்தாங்க. உலகம் முழுக்க சுத்திட்டேன்னு மூணாம் நாள் எழுந்து உட்கார்ந்துச்சு. எல்லா லோகமும் பாத்துட்டேன்னு சொல்லுச்சு. ஹாஸ்டல்ல கவலைப்பட்டாங்க. வைத்தியம் பண்ணாங்க.

டாக்டரு கை புடிச்சாரு.... பொண்டாட்டிய அடிச்சுட்டு என்னை ஏண்டா தொடறேன்னாங்களாம் அம்மா. அந்த டாக்டர் பயந்து நின்னுட்டான். அவன் சரித்திரமே புட்டு வச்சுடுச்சு. இத்தினிக்கும் அதான் முத தடவை அவனைப் பார்த்தது.

எப்படிச் சொல்றேன்னு கேட்டாங்க, கூட வேலை செய்யறவங்க. உள்ள ஓடுதுன்னாங்களாம் அம்மா.

சன்னதம் வரபோது மூக்கு ரொம்ப அரிக்கும். கையால பிச்சு எடுக்குமாம் மூக்கை. ரத்தம் ஒழுகுமாம். பயந்து போய் வெளியே போன்னுட்டாங்களாம். அப்புறம் ஹாஸ்பிடல்லியே ஓரமா இருக்கட்டும்னாங்களாம். நொந்துபோன பொண்ணுங்களுக்கு நல்லது சொல்லு மாம். ஒருத்திய நாளைக்கு ஊருக்குப் போகாதடின்னு வாங்களாம். ஒருத்திய உடனே போடின்னுவாங்களாம். இருபதாச்சு பெரியவளாகலைன்னு ஒரு பொண்ணு அழுதுச்சாம். கத்தரிக்கோல் எடுத்து முடிய பாதியா வெட்டி எறிஞ்சுட்டுதாம். வினைனுச்சாம். மறுநாளே அது சமைஞ்சிருச்சு. இதெல்லாம் பார்த்து பயந்து போய், வேணாம் தாயே. இந்த இடம்வுட்டு போயிடுன் னுட்டாங்களாம். ராத்திரியானா நிறைய பேசுமாம். தனியா அழுமாம். அவங்க வராங்க, இவுங்க வராங் கன்னுமாம்.

கழுத்த புடிச்சு தள்ளிட்டாங்க இங்க கடற் கரையில சுத்திக்கிட்டிருந்துச்சு. நம்ம ஜாதி பசங்க தண்ணி போட்டு சத்தாய்ச்சானுங்க. புடிச்சு இழுத் தானுங்க. நின்னா வாங்கடான்னுச்சு. எல்லாம் பொட்டப் புள்ளையா நின்னுட்டாங்க. வெறுப்புல அடிக்க கை ஓங்கினானுங்க. ஓங்கின கை இறக்க முடியலை. தபதபன்னு ஆறேழு நாய்ங்க இங்கனே சுத்திக்கிட்டு இருக்கற நாய்ங்கதான். எகிறி அவனுங்க கோவணத்துணி வரைக்கும் கடிச்சிடுச்சு, அம்மா அம்மான்னு அலறிட் டானுங்க.

ச்சூ... போன்னு அம்மா அதட்டினதும் எல்லாம் சரியாயிடுச்சு. ஓடிவந்து குப்பத்துலதான் சொன்னா னுங்க. அன்னிலேர்ந்து குப்பத்துலதான் இருக்குது. எங்கப்பாருதான் கொண்டாந்து வீட்ல வச்சு சோறு போட்டாரு. அப்பாரு குடுத்தா சாப்பிடும். நான் ஊட்டினா சாப்பிடும். வேறு யார் குடுத்தாலும்

சாப்பிடாது. அதுவும் நாய்ங்களுக்கு போட்ட மிச்சம் தான் சாப்புடும்.

ஏன் ஆத்தா நாய்க்கு போடறேன்னு கேட்டேன். உலகத்துல எல்லாம் அறிஞ்ச ஜீவன் நாய்தான். அதுக்கு மனுஷாளையும் தெரியும், மனுஷாளா இல்லாதவங் களையும் தெரியும்னு சொல்லிடுச்சு.

முன்னெல்லாம் வெளியே போய் நாய்ங்களோட பேசும். கட்டிக்கிட்டு உட்காரும். இப்ப போறதில்லை... ரொம்ப நாளைக்கப்புறம் இன்னிக்கு வெளிய வந்துச்சு."

"சிடிலேர்ந்து யாரும் வரல்லாய?"

"வருவாங்க. ஒரு போலீஸ் ஐ.ஜி. வருவாரு. தரைல உட்கார்ந்து கால் புடிச்சு வுடுவாரு. அவரு தலைய தடவிவுடும். சில சமயம் அடிக்கும். சில சமயம் வராத போடான்னுடும்."

"அப்புறம்?"

"பாட்டுப் பாடறவர் ஒருத்தர் வருவாரு. பெரிய கார்ல வந்து ஆர்மோனியப் பெட்டி வச்சு பாடுவாரு. பேசாத கேட்கும். அவரை ஒரு நாள் முழுக்க பாட வச்சுது. தொண்ட கட்டிப் போறவரைக்கும் பாட வச்சுது. அது போங்கற வரைக்கும் போகக்கூடாது. போக முடியாது."

"அம்மா பேசுமா?" பார்த்தசாரதி கேட்டான்.

"பேசிப் பாரு."

"அடிச்சுடுமா?"

"வாங்கிக்க.. நல்லது அது."

"உன்னிய அடிச்சிருக்கா?"

"நான் எதுனா தப்பு பண்ணா அடிச்சிரும்."

"என்ன தப்பு?"

"பாடறவர்கிட்ட ஒரு நாள் ஆயிரம் ரூபா கேட்டேன். கொடுத்தாரு. அன்னிக்கு செம அடி. துட்ட தூக்கி நாய்க்கு போட்டுருச்சு. நாய் கவ்விக்கிட்டு ஓடிடுச்சு. ஒரே துக்கம். மறுநாள் எனக்கு ஐ. ஜி. எனக்கு சட்டை வேட்டி, சமையல் பாத்திரம் எல்லாம் கொண்டாந்தார். நான் இதுக்குத்தான் துட்டு கேட்டேன்."

"உனக்கு கல்யாணம் ஆச்சா?"

"இரண்டு பசங்க இருக்குது..."

"இதான் இடமா நீ இருக்கறதும்..."

"ஆமா...."

"இது ஒரு ரூம்தானா?"

"ஆமா...."

"அம்மா எங்க இருக்குது?"

"இங்கனதான்."

"அப்ப நீ படுக்கறது?"

"இங்ஙனதான்."

"இங்கியேவா குடித்தனம் பண்ற?"

"ஆமா, குழந்தை பெத்ததும் இங்கதான்.... ஆஸ்பத்திரிக்கெல்லாம் அம்மா போக வேணாம் னுடுச்சு...."

"அதுக்கெல்லாம் ஒண்ணும் சொல்லாதா?"

"போய் பொண்டாட்டிக்கிட்ட படுன்னு அதுவே சொல்லும்."

"தப்பில்லையா?"

"அம்மா தப்பில்லைன்னுதே."

"அது உடம்பு இப்படி இருக்குதே, வைத்தியம் பண்ணக் கூடாது?"

"அது நூறு பேருக்கு வைத்தியம் பண்ணும்..."

பார்த்தசாரதி கேள்விகள் தொலைந்து போக, கிழவியையே பார்த்துக் கொண்டிருந்தான்.... இன்னமும் உள்ளே நம்பிக்கை வரவில்லை. உடல் நோய் பற்றிய வேதனை உள்ளிருந்து அகலவில்லை.

ஐயர் பேசாது அம்மாவையே பார்த்துக் கொண்டிருந்தார்.... அது தொலைவில் தன் நேத்திரங்களை வைத்துக் கொண்டிருந்தது.

ஐயர் மெல்ல நிமிர்ந்தார்.... தொண்டை தொண்டை செருமி கேட்டார்.

"அம்மா, அன்பு என்பது என்ன?"

கிழவி பேசாதிருந்தாள்.

"அம்மா, தெரியலை கேட்கறேன். எனக்குப் புரியற மாதிரி சொல். அன்பு என்பது என்ன? அது எங்கே?"

"நீ இருக்கறதுக்கு எதிர்க்கரை."

"எதிர்க்கரையா.... எப்படிப் போறது?"

"எதிர்க்கரைக்கு ஆத்துல முங்கியும் போகலாம்.... மேல பறந்தும் போகலாம்"

"புரியலைம்மா?"

"உங்க ஊரு கிழவன் பறந்து எதிர்க்கரைக்குப் போயிட்டான். சொட்டுகூட நனையலை. அது யோகம். யோக சித்தி...."

"முங்கிப் போறதுன்னா?"

"காமம் காமம் தாண்டினா அன்பு."

"அப்போ...."

"காமத்துல முங்கிக் குளி. நீச்சல் அடி... உந்தி உந்தி உடம்பால போ. கரையேறு. அது வழி...."

"அது தப்புன்றாங்களே."

"அன்பு இல்லாதவன் சொன்ன பேச்சு."

"கெடுதல்ன்றாங்களே."

"நீஞ்சத் தெரியாதவன் வார்த்தை..."

"பெரிய மனுஷாள்ளாம் சொல்றாங்களே."

"பெரிய மனுஷன் சொல்லமாட்டான்."

"அப்ப சொன்னவங்க சின்னவங்களா.... புல னடக்கம் பொய்யா..."

"அடங்கினது சீறி எழும். அட்டகாசம் பண்ணும்."

"அடங்காதது நல்லதா?"

"யானை இழுத்தா நீயும் இழுப்பியா?"

"செத்துத் தொலைஞ்சிடுவேனே..."

"அதான நடக்கும்..."

'அங்குசம் மாட்டலாமில்லை." பார்த்தசாரதி கேட்டான்.

திரும்பி கிழவி பார்த்தாள்.

"எது அங்குசம்?"

"புத்தி."

"அது புல்லு. வெறும் முள்ளுச் செடி. உன் ஆனை ஒரு வாய்க்கு காணாது."

"அப்ப அங்குசம் எது தாயே?"

"கண்டுபிடி."

'நீ சொல்லும்மா?"

"மூச்சு."

"மூச்சா?"

"மூச்சடக்கினா உள்ளிருக்கறதும் அடங்கும். பிராணன் அடங்குச்சுன்னா நாடி அடங்கும். நாடி நிறுத்தினா காமம் அடங்கும். இதுவே ஹட யோகம்."

"பிராணாயாமம் செய்யச் சொல்றிய?"

"செய்து பார்... விட்டா மறுபடி ஆனை ஆடும்... உதறித் தள்ளும்..."

"அப்ப என்ன வழி?"

"மதம் பிடிச்ச யானையை ஓட விடு. ஓடி அடங்கும். தானா நிக்கும். அப்ப பேசு."

'அது எல்லாரையும் மிதிச்சு, தள்ளி, பெரிய கஷ்டம் தருமே."

"யானை யானையை மிதிக்க முடியாது. சரஸ்வதிய உன்னால மிதிக்க முடியுமா?"

"யாரு?"

"சரஸ்வதி.... உன் சரஸ்வதிய..."

ஐயர் விழித்து அயர்ந்தார்.

"அதுக்கு எல்லாம் தெரியுங்க. பாடறவரு பரம்பரையே சொல்லுச்சுங்க."

மீனவன் அவர் வியக்க பதில் சொன்னான்.

பார்த்தசாரதி எழுந்தான். அவனுக்கு இந்தப் பேச்சு பிடிக்கவில்லை, வாசலுக்கு வந்தான். குப்பத்து

ஓரம் படுத்திருந்த நாய் ஒன்று எழுந்து அவனை முகர்ந்து உர்ரென்றது. 'ச்சூ' என்று அதட்டினான் பின்னால் நகர்ந்து குரைத்தது. நாலைந்து நாய்கள் ஓடி வந்தன. அவனை நோக்கிக் குரைத்தன. பார்த்தசாரதி நகர, ஒன்று மேலே தாவிற்று.

27

தொழுவத்தில் கட்டப்படும் முன்பு அதீத முரட்டுத்தனம் காட்டும் பசுக்களின் அருகே போய் பார்த்தசாரதி தலைக்கயிறு பிடித்து இறுக்கி நிறுத்தி, முதுகு அடித்துத் தடவி, கழுத்து நீவிவிட்டு அதிகம் துள்ளிவிடாமல் சுவரோடு அழுத்தி நிற்கச் செய்து விடுவான். அதட்டிய குரலும் உறுதியான பிடியும் மாடுகளை அடங்கச் செய்துவிடும். தலை திருப்பி கொம்புகளால் தாக்க முயற்சி செய்கிறபோது இரண்டடி நகர்ந்து மறுபடியும் கடுமையாய் அதட்டு வான், மாடு பயம் கொள்ளும்.

ஆனால், நாய்களை எப்படி மிரட்டுவது என்பது தெரியவில்லை. நாய்களை மிரட்ட ஒரே வழி கல் எடுப்பது அல்லது கல் எடுப்பது போல் பாவணை செய்வது, இவ்வளவு அருகே அந்த நாய் பல் காட்டி உறுமி நிற்கும்போது குனிய முடியுமா என்பது தெரியவில்லை. குனிய, அடுத்து அதன் பாய்ச்சலுக்கு இலக்காகலாம். பார்த்தசாரதி இரண்டடி பின்னடைந்து நாய்க்கும் அவனுக்கும் உள்ள இடைவெளி அதிகப் படுத்தினான். நாய் முன்னே நகர்ந்து இடைவெளியைக் குறைத்தது.

சட்டென்று ஒரு எத்து எத்திவிடலாமா என்று காலை நகர்த்தியபோது, எனக்குத் தெரியும் என்கிற

மாதிரி வெறியோடு குரைத்தது. மற்ற நாய்களும் சேர்ந்து கொண்டன. சற்று தள்ளி இருந்த குடிசைகளின் வாசலில் உள்ளவர்கள் திரும்பிப் பார்த்தார்கள். சிரித்தார்கள்.

"அம்மா சொல்றதுக்கு முன்னாடி எழுந்துட்டியா.... நாய்ங்க விடாது. உள்ள போயிரு" ஒரு கிழவன் குரல் கொடுக்க, உள்ளே மறுப்பு தோன்றியது. போக மாட்டேன் என்கிற பிடிவாதம் வளர்ந்தது. நாய்களை வைத்து மிரட்டுவது மிகப் பெரிய வன்மறை என்று நினைப்பு வந்தது. இந்த ஆறேழு நாய்களை நான் விரட்ட முடியாதா? அதற்கு உண்டான வலு, திடம் எனக்கு இல்லையா என்று தன்மீதே கோபம் வந்தது. தலைக்குப் பின்னே கூரை இடித்தது. திரும்பி கூரையைப் பார்த்தான். ஒரு மூங்கிலை அசைக்க நாய் பாய்ந்து வேட்டியைக் கௌவியது. அவசரமாய் அதை விலக்கி மூங்கிலை முழுவேகத்துடன் இழுத்தான். உளுத்துப் போன மூங்கிலை இறுக்க, பிடிக்குள் நொறுங்கியது இரண்டடி குச்சியாய் நின்றது.

தாக்குதல் தெரிந்துவிட்ட நாய்கள் வினாடி நேரத்தில் மிக நெருக்கமாய் நின்று பலங்கொண்ட மட்டும் குரைத்தன. வேட்டி இழுபட்டது. மூங்கில் குச்சியால் அதை அடித்தான். மற்றொன்று வலது பக்கம் தாக்க, அதையும் அடித்தான். குச்சி உடைந்தது. இன்னொரு நாய் நெஞ்சுமீது எகிறி விழுந்தது. தாக்கப்படுகிறோம் என்ற ஆத்திரமும் ஆவேசமும் தலைக்கேற, கோபத்தில் பார்த்தசாரதி தவித்தான் கடித்தால் ஊசி போட்டுக் கொள்ள வேண்டும் என்கிற பயம் அதிகக் கலவரம் கொடுத்தது. ஐயர் உதவிக்கு வராதது ஆத்திரமூட்டியது.

"உள்ள போயிரு.... உள்ள போயிரு:!" மற்ற குடிசைகளில் இருந்தவர்கள் அங்கிருந்தபடியே கூவினார்கள். தோல்வியை ஒப்புக்கொள்ள மனம் வரவில்லை. உள்ளே போகக்கூடாது என்கிற வன்மம் அதிகம் வளர்ந்தது. அதே சமயம் வெளியே போகவும் முடியாது என்பதும் தெரிந்தது. சரி, இப்படியே நின்னுட்டா... இங்கேயே உட்கார்ந்துட்டா....

பார்த்தசாரதி குடிசைக்கு வெளியே உள்ள மண் திண்ணையில் உட்கார்ந்தான். நாய்களும் காலடியில் அமர்ந்தன. அவனையே பார்த்துக் கொண்டிருந்தன. இதுவும் தோல்விதான். மாடு விரட்ட முடிந்தவனால் நாய் விரட்ட முடியவில்லை என்பது தோல்விதான். பார்த்தசாரதி வெட்கமும் கோபமுமாய் நாய்களைப் பார்த்தான்.

எத்தனை தெரிந்து என்ன... எவ்வளவு ஞானம் கடற்கரையில் கிடைத்து என்ன பயன்? கிழவி வன்முறை காட்டுகிறாள். நாய்களை ஏவிவிட்டு மடக்குகிறாள். எல்லா ஞானமும் அன்புக்கு எதிரானதுதான். முரட்டுத் தனம்தான். ஏன்.... ஏன்.... இது... ஞானம் இயல்பில்லை. அது அமானுஷ்யம். மனிதனின் இயல்பான குணமில்லை. அதனால்தான் அன்பு இல்லை. கருணையில்லை. 'உனக்குப் பிடிக்கவில்லையா, போ' என்கிற விடுதலை தர மனசில்லை. மடக்கி மடக்கி துரத்தி ஒரு மூலையில் கட்டுகிற வெறி. கடவுள் தன்மைகூட கருணைக்கு எதிரானது. காட்டுத்தனமானது. அன்பு செய்பவள் இந்த வேலை செய்வாளா? அடக்குமுறை உபயோகிப்பாளா? மனசும் உடம்பும் பரபரத்தன. உள்ளே துக்கம் ஜல தாரையாய் வழிந்தது.

"பார்த்தசாரதி உள்ளே வா!" ஐயர் குரல் குடிசையிலிருந்து கேட்டது.

"எதுக்குங்க..." பார்த்தசாரதி கோபத்துடன் கேட்டான்.

தொலைவில் உள்ள மீனவர்கள் அவனைப் பார்த்து சிரித்தார்கள். ஒரு மீனவப் பெண்குழந்தை ஓடி வந்து நாய்களுக்கு இடையே புகுந்து அவனருகே உட்கார்ந்து கொண்டது. மறுபடி சிரித்தார்கள்.

"த்தே.... இங்க வா!" அந்தக் குழந்தையை தாயார் மாதிரி உள்ளவள் அதட்ட, எழுந்து நாய்களுக்கு ஊடே போயிற்று.

மறுபடி மீனவர்கள் சிரித்தார்கள். ஒரு பெண் குழந்தை உள்ள ஓடி, வெளியே வரும். ஆனால், இந்த நாய்கள் வியூகத்தை உன்னால் உடைக்க முடியாது என்பதாய் சிரித்தார்கள்.

'பார்த்தசாரதி உள்ள வாப்பா...' ஐயர் குரல் கெஞ்சியது.

"உன்னால் போக முடியாது பார்த்தசாரதி.... போகவும் வேணாம்.... வா"

பார்த்தசாரதி துக்கத்துடன் எழுந்து நின்றான். குனிந்து குடிசைக்குள் புகுந்தான். நின்றான். நாய்கள் அவனைத் தாண்டி குடிசைக்குள் வந்தன. அந்தக் கிழவிக்கு அருகே போய் வாலாட்டின. முகர்ந்தன. முதுகு உரசிச் சுற்றி வந்தன. வெளியேறின.

"உட்காரு பார்த்தசாரதி!" அவன் விரல்கள் பிடித்து மெல்ல அழுத்தினார்.

"உட்காரு." மறுபடி அழைத்தார்.

சட்டென்று பார்த்தசாரதி உட்கார்ந்தான். கிழவி நிமிர்ந்து பார்த்தாள்.

கிழவி திரும்பி அவனைப் பார்த்து 'போ' என்றது.

"என்ன?"

"போ."

"ஏன் போகணும்? அதான் மடக்கிக் கொண்டாந்துட்டியே.... போக மாட்டேன்."

"இஷ்டமா இருந்தா இரு."

"இஷ்டமாதான் இருக்கேன்...."

"உன் இஷ்டத்துலயா.... இல்லை நாய் இஷ்டத்துல இருக்கறியா?'

"தெரியலை!" பார்த்தசாரதிக்கு தோல்வி துக்கம் அழுகையைக் கொடுத்தது. நீர் கோத்த கண்களை மறைக்க ஆழமாய் மூக்கு உறிஞ்சினான்.

கிழவி அவனைக் கனிவுடன் பார்த்து,

"அதாண்டா கண்ணு.... அதான்."

"என்ன அதான்?"

"மனுஷாள் நாய் இஷ்டத்துக்குத்தான் இருக்கறாங்க, நாய் மடக்கறபோதுதான் உட்கார்ந்துக்கறாங்க. உள்ள ஓடியாறாங்க."

"என்ன சொல்றம்மா!" ஐயர் பணிவுடன் கேட்டார்.

"அவன் இஷ்டத்துக்கு உட்கார்ந்ததா சொல்றான். அப்படியா நடந்தது. நாய்ங்க மடக்கறது தாங்காம உட்கார்ந்துட்டான். மனுஷாளை மடக்கற நாய் நிறைய பொறாமை, ஆத்திரம், வன்மம், திருட்டு புத்தி, கொலை வெறி அவனை திசை திருப்புது. அவனை அவனா இருக்க முடியாத அதுங்க இஷ்டத்துக்கு அவனை மடக்கிப் போடுது.

"உள்ள வரதுன்னு ஏதோ சொன்னியே..."' ஐயர் கேட்டார்.

"இதுங்க மடக்கறபோது அழுகை வரலையா? அவமானம் வரலையா? பயம் வரலையா? அது சிலரை உள்ள அனுப்பும். மனசுக்குள்ள என்ன இத்தினி கேவலமா போயிட்டமேன்னு துக்கம் தரும். மனசுக் குள்ள போயிட்டா நாய்ங்க தள்ளி நின்னுடும். வெளியே போயிடும்."

"மனசுக்குள்ள போறதுன்னா என்னம்மா?"

"என்ன இது.... ஏன் இப்படின்னு திகைச்சு இப்ப நிக்கலையா? அதான்."

"திசைச்சு நிக்கறது பெரிசா.... தெளிவா நிக்க வேணாமா?"

"திகைச்சவனுக்குத்தான் தெளிவு. எல்லாம் தெரியும். இவனை மாதிரி நினைச்சா நாய்ங்க சுத்தி குரைக்கும். மேல விழுந்து புடுங்கும். அப்புறம் பயத்துல வரது துக்கம்தான் அழுகைதான்."

"பிரமிச்சா வேலை செய்ய முடியாதுன்றாங்களே."

"புரியாதவன் பேச்சு.... நீ கூட்டற வேலையும், கோலம் போடற வேலையும் பெரிசா நினைச்சா பிரமிப்பு வராது. இதுவா வேலை.... உன் கூட்டலும், கோலமும் எத்தினி நாளைக்கு? ஒரு காத்துல கலைஞ்சுடாதா... உன் இஷ்டத்துக்கு புள்ளி வச்சு, கோடு இழுத்து கோலம் போட்டுட்டு, நான் கோலம் போட்டேன், நான் கோலம் போட்டேன்'னு கூவறதா? அது அறியாத, குழந்தைகூட செய்யுமே.... அறிஞ்சவன் வேலை வேறு."

"என்ன வேலைம்மா?"

"அன்பாய் இருத்தல்."

"அன்பு வேலையா தாயே....?"

"ஆமா, அன்பு வேலை செய்து பாரு. அத்தினியும் சரியா இருக்கும். மத்ததெல்லாம் பேச்சுதான். நீ போ."

மறுபடி பார்த்தசாரதி பார்த்து பேசினது.

பார்த்தசாரதி தலைகுனிந்து உட்கார்ந்திருந்தான். ஏன் இவள் மீது கோபப்பட்டேன் என்று யோசித்தான்.

கற்றுக் கொள்ளுதல் பிடிக்கவில்லையோ என்று நினைத்தான். இன்னமும் கோபம் அடங்காமல் தவித்தான்.

"என்னா அன்பு.... கொலை பண்றவங்க. கூடத்தான் அன்பு காரணம்னு சொல்றாங்க. யார் மேலயோ அன்பு வச்சு யாரையோ கொல்றான்.. இந்த ஊர் ராஜா இன்னொரு ஊர் ராஜாவை, இன்னொரு ஊர் குடி படையைக் கொல்றதுக்கு என்ன காரணம்? அவன் ஊர் ஜனங்க மேலே அன்பு." பார்த்தசாரதி குமுறிப் பேசி னான். 'உனக்கு நான் பேசணும். அதான் பேசறேன்' என்பதுபோல் பேசினான்.

கிழவி சிரித்தது.

"உம்புள்ளை, உன் குடித்தனம்னு செய்யறது அன்பா? உனக்கு அடங்கினவங்கன்னு நினைக்கறது அன்பா? அதுக்கு மனுஷாள் எதுக்கு? நாலு நாய் வளர்த்துட்டுப் போயேன். உனக்கு அடங்கி நிக்கும். எத்தினி அடிச்சாலும் சுத்திச் சுத்தி வரும். திரும்பிக் கடிக்காத வரும். ஏன் நாய் வளர்க்கறாங்க. தான் சொன்னபடியெல்லாம் கேட்கும்னுதான்... அது அன்பா?"

"நீ ஏன் நாய் வளர்க்கற?"

"எனக்கு நீயும் நாயும் ஒண்ணு?"

"நாயும் மனுஷா ரூபம்னு சொல்றியா தாயே?"

கிழவி சிரித்தது.

"இவனை மடக்கிச்சே பெரிய வெள்ளை.... அதுக்கு ரொம்ப அன்பு. அரச குணம். அடுத்தது சாப்பிடாத தான் சாப்பிடாது. மூணு தலைமுறை பார்த்துடுச்சு. கூப்பிட்டுப் பேசு. அதும் பேசும்."

ஐயர் தலை திரும்பினார். பெரிய வெள்ளை எழுந்து அவர் அருகே வந்து உட்கார்ந்து கொண்டது.

"அவன்தானே.... அவன்தானே..." பார்த்தசாரதி நோக்கி கைகாட்டியது. "அவன்தான் வெளிய ஓடினான்."

பெரிய வெள்ளை தலை தூக்கி பார்த்தசாரதியைப் பார்த்து வாலாட்டி தலையைப் படுக்க வைத்துக் கொண்டது. 'நான் உன்னை விரட்டவில்லையப்பா' என்பது போல் அமைதியாய் இருந்தது.

பார்த்தசாரதி உள்ளே இருந்த சண்டை மறந்து விட்டு அதைக் கனிவுடன் பார்த்தான். 'வா' என்று கை காட்டினான். பெரிய வெள்ளை எழுந்து அவன் அருகே வந்தது. அவன் முதுகில் உரசியது. முகர்ந்தது.

"என்னடா...' அதன் தலையை இறுக்கிக் கொஞ்சினான்.

சின்னதாய் முனகிற்று. மன்னிப்பு கேட்பதாய் முகத்தை நெஞ்சில் தேய்த்தது.

பார்த்தசாரதி முதுகு தடவினான். பெரிய வெள்ளை அவன் காலருகே நெருக்கமாய் ஒட்டியது போல் படுத்துக் கொண்டது.

"இதை ஏன் அப்ப செய்யலை."

"அம்மா...." பார்த்தசாரதி தலை நிமிர்ந்தான்.

"அப்ப செய்யலையே.... ஏன்? நான் போகணும். வழி விடுன்னு ஏன் பேசலை.... கொம்பு உருவினா வழி வுட்டுடுமா? ஒதுங்கிடுமா? துரத்தி துரத்தி வரும்."

"இதுவா?"

"எதுவும்.. எது அடிச்சு விரட்டினாலும் அப்போதைகுத்தான். மறுபடியும் கத்தும். எப்ப ஏமாறும்னு பார்த்து குதறும். நீ ரத்தம் வரப் பண்ணினா உனக்கும் ரத்தம் வழியும்.... அன்பு செய். அன்பு வேலையாய் இரு."

"இன்னான் இனியன் இல்லாதயா?"

"யாரு இனியரு? யாரு இன்னாரு? எல்லாம் உசிரு. உசிரோட சண்டை ஏன்? உசிரு தொடு."

"என் உசிரு எங்கம்மா இருக்கு."

"உன் பானைக்குள்ள..."

"தெரியலை.."

"உன் பானைக்குள் உன் உசிரு!"

"நான் செத்துப் போறபோதுதான் என் உடம்புப் பானை உடையறது தெரியுமா?"

"உசிரோட இருக்கறபோதே செத்துப் போ."

"அம்மா...."

"மனசு செத்துப் போவட்டும். அப்பவும் உசிரு பத்தி யோசிச்சா யாரோட சண்டை... உள்ள இருக்கறதுதான் நான்னு புரிஞ்சு போச்சுன்னா யாரோட கோவம்?"

"எப்படின்னு தெரியலைம்மா."

"தொடு. உள்ளே உன்னைத் தொடு. எப்பவும் உள்ளே இருக்கறதை யோசி.... இடைவிடாத யோசி, உள்ளேயே இரு."

"முடியலை தாயே?" ஐயர் கை கூப்பினார். "அப்பப்ப மண்ணுக்கும். மசிருக்கும் ஆடறேனே." மெல்ல விசும்பினார்.

"ஆடு."

"அம்மா?"

"ஆடிட்டு உள்ள போயி.... அவுத்துக் கட்டு. தளர்த்திக் கட்டு. குறைச்சுக்கட்டு...."

"அம்மா?"

"ஒரே கட்டா கட்டினா தப்பிச்சுக்கும். உதறிட்டு ஓடும். அது போக்குல விடு.... அது போக்குல உடறபோதே அது பின்னாலேயே இரு. கவனி.... அது எல்லாம் வுட்டுட்டு மறுபடி உள்ள வரும்."

"உள்ளே என்ன?" பார்த்தசாரதி யோசித்தான்.

இது உள்ளே என்ன? பெரிய வெள்ளையைப் பார்த்தான். உடம்பு தாண்டி அந்த நாயை உணர முற்பட்டான். பெரிய வெள்ளை உடம்பு சிலிர்த்தது. தலை தூக்கியது. அவன் மடிமீது தலையசைத்தது.

"அதுவே.... அதுவே." கிழவி கூவிற்று.

பார்த்தசாரதி கிழவியின் கூட்டை உற்றுப் பார்த்தான். அழுக்குப் பச்சைப் புடவை தாண்டி, உருவம் தாண்டி அவளை நோக்கினான்.

அர்ஜுனன் முட்டாள். உணர்ச்சிவசப்பட்டவன். ஆயினும் அவன் உணர்ச்சி தூய்மையானது. முழுமையானது. அவனுக்கு விஸ்வரூபம் கிடைத்தது. பார்த்தசாரதி கண்ணுக்குள் பூச்சிகள் பறந்தன.

28

உற்று உள்ளே பார்த்ததும் இழுபட்டுக் கொண்டு போவதுபோல் உணர்ந்தான். உடம்பு முழுவதும் ஒரு இருட்டில் இழுத்துக்கொண்டு போகப்பட்டது. கொஞ்சம் சிரமப்பட்டு அதை விலக்கியபோதுதான் தரையில் உட்கார்ந்திருப்பது தெரிந்தது. நிமிர, மறுபடி இருட்டு இழுத்தது.

உடம்பு அல்லது வேறு ஏதோ ஒன்று கிழவியிடம் ஈர்க்கப்படுவது அறிந்தான். இருட்டின் நழுவலில் சட்டென்று மிகப் பெரிய வெளிச்சத்திற்கு புகுவது போல உணர்ந்தான். தானும் வெளிச்சமாய் தன்னைச் சுற்றியும் வெளிச்சமாய் ஒரு விழி விரியும் ஆச்சரியம். சந்தோஷம், பரபரப்பு தோன்றியது. அந்த சந்தோஷம் மிகுந்த ஆனந்தமாய் மாறியது. ஐயோ என்று மனசு ஒரு நிறைவில் கூவியது. இதுதான் இறுதி, இதுதான் முடிவான சந்தோஷம். இதுக்குத்தான் எல்லா அவஸ்தையும். இதுதான் ஆனந்தம். புலன்கள் இல்லாத ஆனந்தம். மனசே மனசை உணரும் சுகம். தன்னுள் தானே கூடும் கூடல். எல்லாம் நின்றுபோய் இனி சுகம்தான் என்று நிற்கும் நிலை. எது குறித்தும் எதிர்ப்பு இல்லை. எதிர்ப்பு இல்லாதபோது விருப்பு இல்லை.

தூங்குவதற்கு முன்பு கண் கிறங்கித் தள்ள. சகல கயிறுகளும் நழுவி தூக்கம் அணைத்துக்கொண்டது. அந்த நாலைந்து வினாடி சுகம் நிரந்தரமாயிற்று.

பார்த்தசாரதி அப்படியே முன்னால் கவிழ்ந்தான் சுருண்டு மல்லாந்தான், கிடந்தான். ஐயர் மெல்ல எருந்து அவன் நெஞ்சுக்கூட்டைத் தடவினார். கண்கள் நிலைக்

குத்தி கைகள் நிற்பதும், முகத்தில் நிலைத்த புன்னகையும் கண்டு பரவசப்பட்டார்.

வெளியே இருட்டு அதிகமாயிற்று. குடிசைகளில் கூச்சல் மெல்ல மெல்ல அடங்கிற்று. சேரி உறங்கத் துவங்கிற்று. கிழவி எழுந்து நின்றாள். ஐயர் அவளுக்கு அருகே போக, அவர் தோள் பிடித்துக்கொண்டாள். படுத்திருந்த பார்த்தசாரதியை அப்படியே விட்டுவிட்டு வெளியே போனார்கள். கிழவியைத் தூக்கிக்கொண்டு வந்த மீனவன், திண்ணையில் சுருண்டு தூங்கிக் கொண்டிருந்தான். தெருவில் பாய் போட்டு குழந்தைகளும் ஒரு பெண்மணியும் உறங்கிக் கொண்டிருந்தார்கள்.

கிழவி கடற்கரை நோக்கிப் போனாள். நடக்க முடியாதவள். போல் நின்றாள். ஐயர் அவளை அப்படியே வாரி தூக்கிக்கொண்டார். கடல் நோக்கி கை காட்டினார். சுருட்டின பாய்போல கிழவி லேசாக இருந்தாள். கட்டு மரங்களூடே நடந்து அலைகளை நெருங்கியதும் ஐயர் மெல்ல இறக்கினார். இருட்டிலும் அதன் பளபளப்பு சீற்றம் புரிந்தது எதற்கோ யாருக்கோ கிழவி காத்திருப்பதுபோலப் பட்டது.

இருட்டில் சட்டென்று யாரோ அலைகளில் நடந்து வருவது தெரிந்தது. ஒரு புல்வெளியில் நடந்து வருவது போல் வயது நிர்ணயிக்க முடியாத ஆளாய் ஒருவன் நடந்து வந்தான். ரோமம் கறுத்திருந்தது. உடம்பில் உறுதியிருந்தது. ஆனால், கை விரல்கள் கொக்கியாய் மடங்கியிருந்தன. மூக்கு சப்பையாய் இருந்தது. காது கொழுத்திருந்தது.

"என்னாடி.... எதுக்கு கூப்பிட்ட!" கடலில் நடந்து வந்த ஆள் அதட்டலாய் கூவினான்.

கிழவி ஐயரை காட்டினாள். அந்த ஆள் தோள் பிடித்து ஏதோ பேசினாள். ஐயர் உலகத்தில் எதுவும்

நடக்க வாய்ப்புண்டு என்பதுபோல பேசாது நின்றார். உலகம் மனிதர்கள், ஜந்துக்கள் மட்டும் நிறைந்தது அல்ல என்று புரிந்தவர்போல் அமைதியாய் இருந்தார். நமக்குத் தெரியாதது நிறைய உலகத்தில் உண்டு என்று முழுவதுமாய் நம்பினார்.

'இவனுக்கு வராது....'' அவன் கிழவியை விலக்க, கிழவி மறுபடி அவனை உலுக்கினாள்.

'இந்தா' என்று ஐயரைப் பார்த்து அதட்டினாள். காலில் பரவிய அலைகள் ஊடே ஐயர் நெடுஞ் சாண்கிடையாய் விழுந்து வணங்கினார். ஈரம் சொட்ட எழுந்து நின்றார்.

"நீ குடும்பத்து ஆள், உனக்கு எங்கள் வழி ஒத்து வராது." கடலில் வந்தவன் கடுமையாய் பேசினான்.

"நிற்கிற என் காலின் கீழ் நிலம் இருக்கிறது. நீர் இருக்கிறது. என் காலின் கீழ் இருப்பதால் அது என் னுடையதா? என்னைத் தாங்குவது இந்த இடம் மட்டுமா.... இங்கே நிற்கிறேன், இப்போதைக்கு அவ்வளவுதான்." ஐயர் கூப்பினார்.

"நீ பொல்லாதவன் என்கிறாயா?"

"என்னுடையது என்று உரிமை பாராட்டாதவன்."

"எங்களோடு வந்தால் பிச்சை எடுக்க வேணும்."

"சரி...."

"போய் பிச்சை எடு..."

"சரி...."

ஐயர் அவர்களைவிட்டு நடந்தார்.

"நில்."

"இது என்ன கோலம். இப்படி வேட்டி சட்டை யோடு எவன் பிச்சை எடுப்பான்"

ஐயர் யோசித்தார். 'என்னுடையது என்று எதுவுமில்லாதபோது சட்டை உண்டா? சட்டை கௌரவம். நன்மதிப்பு இல்லையா.... கௌரவம் ஊர் மதிப்பு தேவைப்பட்டால் எப்படி? எதுவுமில்லாதவன் ஆவான்.... எனக்கு கௌரவம் தேவையில்லை.' சட் டென்று வேட்டியும் அவிழ்த்தெறிந்தார். அலைகள் துணிகளை சுருட்டி வாங்கிக் கொண்டு உள்ளே போயின. மல்லில் தைத்த அண்டர்வேரையும் களைந் தார். பிறந்த மேனியாய் நின்றார்.

"போய் பிச்சை கேள்... போ" என்னவென்று பிச்சை கேட்பாய்?"

"ஐயா!"

"எதன் பெயரால் பிச்சை கேட்பாய்?"

"கடவுள் பெயரால்!"

"கடவுளுக்கு கடவுள் பிச்சை எடுக்கும். நீர் உமக்காக பிச்சை கேளும்."

"சரி."

"யாரிடம் பிச்சை கேட்பது?"

"உனக்குத் தெரிந்தவர்களிடம்."

"தெரிந்தவர்களிடம் கேட்பது பிச்சையா.... எதிரிகள் உண்டல்லவா?"

சண்டை போட்ட ஆட்கள் முகம் நினைவுக்கு வந்தது. தண்ணீருக்கு காசு கேட்கிறான் என்று கை ஓங்கின ஆட்கள் ஞாபகம் வந்தது. பார்த்தசாரதி பாப்பான்கூட சேர்ந்து கிழவனை வச்சு வியாபாரம்

ஆரம்பிக்கிறான் என்று கூவிய மனிதர்கள் ஞாபகம் வந்தது.

"பகைவர்கள் உண்டு."

"அவர்களிடம் பிச்சை கேளும்."

"சரி."

ஐயர் விலக, கிழவி ஓடி வந்தாள். பச்சைப் புடைவையின் மேல் துணி கிழித்து அவரிடம் நீட்டினாள். ஐயர் இரண்டு கைகளையும் தாழ நீட்டி துணி வாங்கி இடுப்பில் சுற்றிக் கொண்டார்.

பார்த்தசாரதி தன்னிலிருந்து வெளிச்சம் பிரிவது உணர்ந்தான். ஓட்டைப் பாத்திரத்தில் நீர் வழிந்து வெளியே செல்வது போல் சரசரவென்று ஒளி அவனிடமிருந்து விலகி புள்ளியாகி சதக்கென்று மறைந்தது.

எழுந்து உட்கார்ந்தபோது உடம்பு கனம் மிக அதிகமாய் தெரிந்தது. அதிகம் பருத்துவிட்டோமோ என்கிற உணர்வு தோன்றியது. நின்றபோது தள்ளாடியது. வெளியில் வந்து குளிர்காற்று வாங்கியபோது உடல் நிலை சீராயிற்று. மறுபடியும் குடிசைக்குள் போய் பார்த்தான். வெளியே வந்தான். தூங்கும் மனிதர்களை நோக்கினான்.... கடற்கரை நோக்கி நடந்தான்.

கிழவி எதிர்ப்பட்டாள். ஐயர் நடந்த திசை நோக்கி கை காட்டினாள். கிழவிக்கு அருகே போய் அவளை ஆரத் தழுவிக் கொண்டான். கிழவி அவன் தலைவருடி முத்தமிட்டது. முதுகு தட்டியது. மெல்ல தள்ளி விலக்கிற்று.

மிக அழுத்தமான மௌனம் தன்னைப் பிடித் திருப்பதை உணர்ந்தான். விரைவாய் வடக்கு நோக்கி நடந்தான்.

கலாவதிக்கு சட்டென்று தூக்கம் கலைந்தது எழுந்து உட்கார்ந்தபோது உடம்பு சூடாய் இருப்பது போல் பட்டது. கொல்லைக் கதவு திறந்து பின்பக்கம் போனாள். படல் திறந்து குளியல் அறைக்குப் போய்விட்டு வெளியே வந்தாள். காலில் நீர் பட்டதும் உடம்பு அவஸ்தைப்பட்டது. உஷ்ணம் தலைக்கு ஏறிற்று. முகத்தில் நீர் அடித்து அலம்பினாள். கழுத்து பின்புறத்தை ஈரக்கையால் துடைத்துக் கொண்டாள். ஹால் கடிகாரம் மணி இரண்டேமுக்கால் காட்டியது.

வாசல் கதவு திறந்து எட்டிப் பார்த்தாள், தெரு அமைதியாய் இருந்தது. வீட்டுத் திண்ணைக்கு வந்தாள். கிழம் சுவரில் சாய்ந்திருந்தது.

"என்னப்பா.... எதுனா வேணுமா?"

செம்பு ஜலம் பாதி குறைந்திருந்தது.

சிலீர்னு குளிருதே. ஏதும் போர்த்திக்கலையே. போர்வை மறைப்பாய் தொங்கவிடப்பட்டிருந்தது. பெரிய பழைய கறுப்பு கோட்டு ஆணியில் மாட்டியிருந்தது.

"கோட்டு போட்டுக்கிறியா.... குளிருதே?" கோட்டு எடுத்து உதறி சுத்தமாக்கி கிழவனுக்கு அருகே போய் தூக்கி உட்கார வைத்து குழந்தைக்கு அணிவிப்பது போல் கோட்டு போட்டுவிட்டாள்.

மறுபடியும் தூக்கி மூலையில் சாய வைத்தாள். அதற்குப் பக்கத்தில் நெருங்கினாற்போல் உட்கார்ந்து கொண்டாள். விடியல் குளிர் உடம்பை, மனசை நிறைத்தது. குயில்கள் குரல் கொடுத்தன. ஏனோ எல்லோரையும் நேசிக்க வேண்டும் என்று தோன்றியது. எல்லோருக்கும் எல்லாமும் தர வேண்டும் என்று ஆசை வந்தது. அந்தக் குயிலின் குரலுக்கு பதில் குரல் தர

எண்ணம் வந்தது. தன் குரலுக்கு குயில் பயப்படுமோ என்கிற பயம் வந்தது.

கிழவனின் கையை எடுத்து தன் கைக்குள் பொதிந்து கொண்டாள். சொரசொரப்பாய் உள்ள அதன் புறங்கையைத் தடவிக் கொடுத்தாள். கைகளைப் பிடித்துவிட்டாள். சிரித்தாள்.

நேற்று மாலை இங்கேதான் பெரிய சண்டை நடந்தது. வீண் சண்டை, வம்புக்கு அலைகிற ஆவேசம்.

"தண்ணி கொண்டாந்துட்டேன்னு ஆடாதே. அடக்கி வைப்போம். உன்னால தண்ணி வரலை... எங்களுக்கு தண்ணி வரணும்னு ஒரு நேரம். வந்துச்சு. புழலேரியில் தண்ணி இல்லாட்டி எங்கே இருந்து எடுத்தாருவ? பைப்பு போட்டா தண்ணி வந்துருமா?"

"கவர்மெண்டே போடறதா இருந்தது. என்னா ஒரு வாரத்துல போட்டிருக்கும். இவனுங்க ரெண்டு நாள் முன்னாடி முடிச்சிட்டானுங்க."

"கவர்மெண்ட் போட்டிருந்தா வூட்டுக்கு வூடு குழா போட்டிருக்கும்.... இப்ப ஊர் வாசல்ல வுட்டுட்டாங்க."

"கவர்மெண்டு என்னா சொல்லும் இனிமே? அதையும் நீயே செய்துக்கன்னு கை காமிச்சிட்டுப் போயிடும். நீ போடுவியா?"

"போட சொல்லும்.... பைப்பு வாங்கிக் கொடுத்துடலாம்."

"அப்ப துட்டு கேளு.... எதுனா புரட்டி தரலாம்."

அப்பாவும் ஆத்திரத்தில் பேச, கூட்டம் மேலும் பேச, அம்மா ஆத்தா என்று ஏகத்துக்கு கூச்சல் வந்தது.

யாரோ போய் சொல்லி போலீஸ் உள்ளே நுழைந்ததும் தெருக்கூட்டம் நாலா திசையிலும்

மறைந்தது. யார் யாரோ பளீர் பளீரென்று அடிபட்டார்கள். 'இனிமே இல்லீங்க, இனிமே இல்லீங்க' என்று கெஞ்சினார்கள்.

கெட்ட வார்த்தை விறைப்பாய் பேசினவர்கள், நாக்கு குழறினார்கள். கை முட்டி காட்டினவர்கள், குறுக்கே நெஞ்சோடு பொத்திக் கொண்டார்கள்.

கால் அகட்டி நின்றவர்கள் குனிந்து, குறுகி உட்கார்ந்திருந்தார்கள்.

"யாரு பார்த்தசாரதி இதுல?" போலீஸ் இன்ஸ்பெக்டர் கேட்டார்.

"அவரு இல்லீங்க..."

"எங்க ஓடிட்டானா?"

"வரவே இல்லீங்க"

"பாலசுப்ரமண்ய ஐயர்?"

"அவரும் வரலீங்க."

"அவங்க இந்த கிராமம் இல்லை?"

"இதுதான்...."

"எங்க?'

"தெரியலையே.... என்ன விஷயம்?"

"என்னவோ வித்தை காட்டினாங்களாமே.... ரத்தம் காட்டி மறைய வச்சிட்டாங்களாம்...."

"ஆமா பேசிக்கிட்டாங்க."

"அப்படியான ஆள்தானா?"

"இல்லீங்க. ஊரோட ஒட்டாத இருப்பாரு ஐயரு. பார்த்தசாரதி கொஞ்சம் பேசும்."

"பைப்புக்காரரு விவரமா சொல்வாரு. அவருதாங்க நல்லா பழக்கம்..."

"அவங்க ரெண்டு பேரும் மனுஷங்க. மத்தது எல்லாம் நாய் ஜென்மங்க."

"ஏய்!" மறுபடி குதித்து எழுந்தவர்களை இன்ஸ்பெக்டர் ஒரே வீச்சில் அடக்கி உட்கார வைத்தார். "யார் அது?" கிழவரை நோக்கிக் கேட்டார்.

"அது லூஸு துணியில்லாத ஓடும்."

"வேற?"

"கொஞ்சம் பயம் காட்டும்."

"காட்டச் சொல்லு."

அருகே வந்து உட்கார்ந்தார். உற்றுப் பார்த்தார். கழியால் போர்வை விலக்கினார்.... "இத்தினி வீக்கான ஆளா பயமுறுத்தறது. சும்மா நீங்க மிரண்டு அதையும் பயமுறுத்தறீங்க. பாலசுப்ரமணிய ஐயர் இடம் காட்டுங்க."

"கூட்டம் வழி காட்டியது....

பாலு ஐயர் வீட்டில் வீடு சுற்றிக் காட்டிவிட்டு வெளியே அனுப்பி விட்டார்களாம்.

"நாளைக்கு ஸ்டேஷனுக்கு வரச் சொல்லு" என்று ஜீப் ஏறிப் போய் விட்டாராம்.

கிழம் ஏதாவது அந்த இன்ஸ்பெக்டரை செய்திருக்கக் கூடாது... கழியால் துணி விலக்கிய போது வேறு உருவம் காட்டியிருக்கக்கூடாதா? ஏன் விட்டுவிட்டது.

அவள் யோசித்தபடி திரும்பினாள். பார்த்தாள் கிழவன் நாயைச் சுட்டிக் காட்டியது. நாய் எழுந்து குரைத்தது. ஊர் எல்லை நோக்கிப் போயிற்று.

நாய் போன திசையில் எட்டிப் பார்த்தாள். பார்த்தசாரதி ஐயரோடு வருவது தெரிந்தது.

29

"அப்பா... அவங்க வராங்க!" திண்ணையை விட்டு இறங்கி கலாவதி தெருவில் குதித்தாள். தெருநாய்கள் எழுந்தன. வேகமாய் ஓடி அவர்கள் அருகே நின்று உற்றுப் பார்த்தன. முனகின. மெல்ல பின்னடைந்தன. வழி விட்டு நகர்ந்தன. பின்னே வால் குழைத்துத் தொடர்ந்தன.

கிழவன் போர்வை உதறி கைகள் ஊன்றித் திண்ணை விளிம்புக்கு வந்தான். அவர்களை ஊடுருவி பார்த்தான். ஐயர் முன்னேறி கிழவனுக்கு அருகே நின்றார். அவரின் நெஞ்சுக் கூட்டைகிழவன் வருடினான். இது எல்லார்க்கும் கிடைக்கிறதில்லை என்பதாய் ஐயரைப் பார்த்தான். "இதுக்கு அப்புறமும் சறுக்கி விட்ரும். விடாத இதையே பார்த்துக்கிட்டு இருக்கணும். சறிக்கிச்சுன்னு மூச்சு வுடறதுதான் வேலையா போயிடும். இதே நினைப்பாக, இதே தொழிலா இருக்கணும். போய் வாங்க."

மெல்ல ஐயரை நகர்த்தினான். பார்த்தசாரதியைப் பார்த்தான்.

"வாடா.... வைராக்கிய புருஷா."

வெளிச்சம் எரிந்தபோது உள்ளே மிரட்சியாய் தோன்றிய கிழவன் இன்று பூ மாதிரி தோன்றினான்.

"எல்லாம் கேட்டு தெரிஞ்சுக்கிட்ட போல இருக்கு. கேளு.... விடாத கேளு.... எல்லாத்தையும் கேளு வா." இப்படிக் கிழவன் பேசவேயில்லை. கை நீட்ட

பார்த்தசாரதி குனிந்து கிழவர் கால் தொட்டான். அது தலை தடவிற்று.

"நிறைய வேலை இருக்கு. இன்னும் பைப் போடணும். தண்ணி கொண்டாரணும். இரும்புப் பைப்பும், குடிக்கிற தண்ணியும் இல்லை. ஜனங்க ஒரு இடத்துல கும்பலா சேர்ந்து கோவில் மாதிரி ஒன்று போடணும். உன் மனசுல இருக்கிற அன்பை தண்ணியாய்க் கொட்டணும் - என்ன செய்யறியா?"

கிழம் ஏறிட்டு நோக்கியது.

பார்த்தசாரதி சரியென்றான்.

"இந்தா இதை வெச்சுக்க...." பக்கத்தில் உள்ள பெண்ணை இழுத்து அவனருகே தள்ளிற்று. கலாவதி கால் இடறி அவன் மீது சாய்ந்தாள். அவன் வலது கையில் அவளை அணைத்துக் கொண்டான். நிறுத்தினான்.

"இத்தோட இரு. வேலை செய். ஏகத்துக்கு வேலை இருக்கு உனக்கு...."

பார்த்தசாரதி அவள் விருப்பம் என்ன என்பது போல் பார்த்தான். கலாவதி அவன் புஜம் பிடித்து நின்றாள். எப்படி கிழவனுக்கு அருகே ஒண்டிக் கொள்ளத் தோன்றியதோ, எப்படி கிழவனுக்கு உதவியாய் ஆதரவாய் இருக்க வேண்டும் என்று எண்ணம் வந்ததோ, அது போலவே பார்த்தசாரதிக்கு இதமாய் இருக்க மனசுக்குள் பரவசம் தோன்றியது.

நான் வரட்டுமா' என்பது போல் பார்த்தாள்.

'இரு.' பார்த்தசாரதி ஒற்றை வார்த்தையில் அவளை நிறுத்தினான். ஐயரை தோள் பிடித்து அவர் வீட்டுக்கு அழைத்துப் போனான். திண்ணை கூரை

சரிவில் போடப்பட்டிருந்த வேட்டியை உருவி அவருக்குக் கட்டினான். இடுப்புப் பச்சை துணியை அவர் தோளில் போர்த்தினான். கைகூப்பி விடை பெற்றான்.

ஐயர் கதவு தட்டினார்.

வீடு ஒட்டிய சந்தில் புகுந்து கொல்லைக்கு போனதும், ஆள் அரவம் பார்த்து மாடுகள் அசைந்தன. தலை தூக்கின. நாக்கு மடக்கி கூப்பிட்டதும் கயிறு உலுக்கி தலையசைத்தன.

கொல்லைப்புற வராந்தாவில் வைத்த பொட்டும். புண்ணாக்கும் பேஸினில் வாரி தொட்டியில் போட்டு நீர் ஊற்றி மாடுகளை அவிழ்த்து விட்டான். மாடுகள் தொட்டியைச் சூழ்ந்து கொண்டன. நாய்கள் சுற்றி நின்றது நினைவுக்கு வந்தது.

மற்ற தொட்டியிலும், பொட்டும் புண்ணாக்கும் கலக்க, மாடுகள் ஓசையுடன் உறிஞ்சின. பார்த்தசாரதி கால் கழுவிக் கொண்டு கைகள் அலம்பி பசுவின் மடியில் கைவைத்தான். பின் கதவு திறந்து தாய் கிழவி விளக்கு போட்டு 'யாரு' என்று குரல் கொடுத்தாள்.

"நான்தாம்மா?"

"எங்கடா போயிட்ட?"

"ஐயரோட மைலாப்பூர் போயிருந்தேன்."

"சொல்லிவிட்டுப் போறதுக்கென்ன?'

"ஏன்? என்னாச்சு?'

"போலீஸ் நிறைய ஆளுங்களைப் புடிச்சிட்டுப் போச்சு."

'எதுக்கு?"

"பைப்புக்காரரோட கலாட்டா.... எவனாவது சொன்னானுங்களோ, சும்மா ரோந்து வந்தவங்க பார்த்தாங்களோ தெரியலை.... வாரிக்கிட்டுப் போயிட்டாங்க..."

"அப்புறம்?"

"உன்னையக் கூட கேட்டாங்களாம்."

"என்னை எதுக்கு?"

"தெரியலையே."

"ஐயரையும் கேட்டார்களா?"

"ஆமா. ஒரு விஷயம்?"

"என்ன?

"இன்னிக்கு ஒரு கனா.... உங்கப்பா ஒரு விளக்கு கொண்டாந்து வீட்ல வைக்கிற மாதிரி... வீடே வெளிச்சமாயிடுச்சு."

"ம்ம்..."

"அது நல்லதா, கெட்டதா?"

"நல்லதுதான்...."

"உன்னிய தொட்டு நல்லா இருன்னாரு..."

"ம்ம்..."

"என்னண்டை பேசவேயில்லை..."

"திட்டலை.... பேசவும் இல்லை. அழுதுட்டேன்."

"ம்ம்... அப்பால...."

"சாயந்திரம் பால் கறந்தேன். எனக்கு முடியல."

"சும்மா சுரப்பு புடிச்சிட்டு வுடர்றதுதானே கன்னுக்குட்டிக்கு."

"டீக்கடைக்காரன் கேட்டானே? பால் இல்ல போடான்னுட்டேன்."

"நான் மாடுகளைக் கொடுத்துடப் போறேன்."

"கொடுத்துட்டு..."

"எனக்கு வேற வேலை இருக்கு."

"என்ன வேலை?"

"ஒரு கல்லு கிடைச்சுது. கோயில் கட்டணும்."

"நம்மூர்லயா?"

"ஆமா."

"என்னடா திடீர்னு?"

"திடீர்னு இல்லை, ஒரு மாசமாவே எண்ணம்."

"மாரியாத்தா கோயிலா?"

"தெரியல? எது மாதிரியென்று யோசிக்கணும்."

"பெத்தவங்களைக் கூப்புட்டு நிலம் பார்த்து, இடம் பார்த்து. நாள் பார்த்து கட்டுடா"

"தேவையில்லை.... ஆத்தாளா இடம் காமிச்சிது."

"யாருக்கு?"

"ஐயருக்கு, எனக்கு...."

"ஆமா, அது இருக்கட்டும். ஐயரு என்னவோ கைல வெட்டுப்பட்டாராம். ரத்தம் கொட்டிச்சாம்.... அப்புறம் பார்த்தா ரத்தமும் காணமாம், வெட்டுப்பட்டதும் காணமாம்"

"தெரியல."

"மாடு வித்துட்டா சோத்துக்கு வழி?"

"ஆத்தா தரும்."

"இந்த ஊரு கேடு கெட்டது. எதுக்கும் உதவாது."

"எல்லா ஊரும் இப்படித்தான். அதான் கோயில் கட்டறது."

"இருக்கற கோயிலை பெருசு பண்ணினா போறாதா?"

"இது வேற விதம்"

"அது என்ன விதம்?"

"எல்லாரும் பூசை பண்ணலாம்."

"ஆணு, பொண்ணு அல்லாருமா, ஐயரு கிடையாதா?"

"ஐயரு இல்லை. நீகூட கிட்ட நின்னு குங்குமம் போட்டு, பூ போட்டு தொட்டுக் கும்பிடலாம்."

"ஜனம் ஒத்துக்குமா?"

"ஒத்துக்கற ஜனம் வரும்."

"பொம்பளைக்கு தீட்டு உண்டே.... தீட்டுக்காரி வந்தா..."

'அது கிடையாது."

"தீட்டே இல்லையா?"

"இல்லை"

"அது எப்படிடா?"

"ஆத்தாக்கிட்ட குழந்தை வரதுக்கு தீட்டு என்ன...?"

"ஊர் எதிர்க்கும்...."

"ஆத்தா பார்த்துக்கும்?"

"ஒரு வேளை சோத்துக்குக் கஷ்டம் வந்தா?"

"அது ஆத்தா விருப்பம்."

"நான் இருக்கேன்டா... அதாவது நினைப்பிருக்கா?'

"எனக்குக் கிடைக்கற சோத்துல பாதி உனக்கு."

"காப்பாத்துவியா?"

"என் வேலை அது."

"எல்லா மாடும் வித்துரப் போறியா?"

"எல்லாம்..."

"யாரு சொன்னது?"

"கிழவரு."

"பைப்புக்காரரு வீட்டுக் கிழவனா?"

"ஆமாம்...."

"நிசமாவே அந்தாள் பெரியாளா?"

"போய் நில்லு தெரியும்."

"பார்த்தசாரதி, நீ கோயில் கட்டு. ஊருக்கு உதவியா இரு.... என்னைக் கரையேத்தி வுட்டுருப்பா..."

"என்னம்மா.... இது?"

"என் உசிரு உம்மடில போகணும்."

"ஏம்மா திடீர்னு?"

பொம்பளை விசித்திரமான பொறவி."

"ஆமா..."

"ஆம்பளை இல்லாத அதால முடியவே முடியாதுடா? புருஷனோ.... புள்ளையோ அதுக்கு ரொம்ப அவசியம். வேணாம் போன்னு அறுத்துக்

கிட்டதுகூட, அடுத்த ஜென்மத்துல நல்ல ஆம்பளையா எனக்குக் கிடைக்கணும், பகவானேன்னுதான் இருக்கும்."

"ஏம்மா! ஆம்பளைக்கும் பொம்பளைக்கும் இப்படி அத்துப்போச்சு.... யார் குத்தம்? படைப்பில் வந்த கோளாறா.... பாதியில் வந்த கோளாறா?"

"குத்தமா எது படைச்சிருக்கு இங்கு சொல்லு. அப்படிக் குத்தமாக படைச்சா இத்தினி காலம் நின்னிருக்குமா? இது பாதியில் வந்ததுதான்."

"எப்ப.... எதனால?"

"எனக்கென்னடா தெரியும்."

"உனக்குத் தெரிஞ்சது சொல்லேன்."

அம்மா தலைகுனிந்து யோசித்தாள் கொல்லைப் புற சுவருக்கு அந்தப் பக்கம் கொலுசு சத்தம் கேட்டது ஹுக்கும் என்று சிரிப்பு சத்தம் கேட்டது.

"யாரு?" பார்த்தசாரதி குரல் கொடுத்தான்.

"அம்மா, காரணம் யோசிக்குதுபோல இருக்கு" - குரல் மட்டும் வந்தது.

"பயம்... பயம்தான் காரணம்." மறுபடியும் ஆள் தெரியாது குரல் வந்தது.

"யாரு அது?"

"நான்தான்."

"எப்படி இருக்க?" அம்மா தலை நிமிர்த்தி கேட்டாள். ஆஸ்பத்திரி போனியாமே."

"ஆமா."

"என்ன சொன்னாங்க?"

"உண்டாயிருக்கேன்."

"நல்லா இரு. உம் புருஷன்கிட்ட சொன்னியா."

"அது வரலை. ரெண்டு நாள் கேம்ப் இன்னிக்கு. ராத்திரிக்குத்தான் வரும்."

"பாலுக்கு நிக்கறியா... டேய், புள்ளதாச்சிப் பொண்ணு கேக்குது. பசும்பால் கொடு."

"ஏதோ பயம்னுச்சு." பார்த்தசாரதி தலை எம்பி அவளைத் தேடினான்.

"ஆம்பளைக்கு பொம்பளைக்கிட்ட பயம். பொம்பளைக்கு ஆம்பளைக்கிட்ட பயம்."

"என்ன பயம்?"

"கட்டினவ அவிசாரியாப் போயிடுவாளோன்னு ஆம்பளைக்கு பயம். கட்டினவன் பாதியில கை வுட்டுவானோன்னு பொம்பளைக்கு பயம். எப்பவும் ஒருத்தர்மேல ஒருத்தருக்கு சந்தேகம்."

"அதான் எப்ப வந்தது?"

"என் புள்ளை எனக்குப் பொறந்த புள்ளையான்னு தோணிச்சே ஆம்பளைக்கு, அன்னிக்கு...."

"ஏன் தோணிச்சு ஆம்பளைக்கு?"

"என் ஊரு.... என் நிலம்னு பிரிச்சானே அன்னிக்கு தோணிருக்கும். என் ஊரும் எம்புள்ளைக்குதான்னு நினைப்பு வந்துருக்கும்..."

"அப்போ ஊரு பிரிச்சதுதான் காரணமா?"

"ஆமா. நிலத்தை என் சொத்துன்னு ஆரம்பிச் சாங்க. நிலம் எப்படி என்னதுன்னு சொந்தம் கொண் டாட முடியும்? பொறக்கறபோது கொண்டாந்தமா? இருக்கறவரை நீ திங்கறதுக்கு பயிர் பண்ணு, செத்த பிறகு

யார் பயிர் பண்ணினா என்ன? நிலம் என்னுது. நீர் என்னுது.... என்னுது மட்டும்னு பிடுங்கி நின்னப்ப பொம்பளையும் மாட்டிக்கிட்டா.... சரி, நீ பிடுங்கின நிலம் உனக்கு. நீர் உனக்கு. உனக்கப்புறம் உன் புள்ளைக்கு.... உன் பிள்ளைக்கப்புறம் புள்ளையோட புள்ளைக்கு. உன் புள்ளைன்னு எப்படித் தெரியும். என்ன அடையாளம். அதான் பொம்பள தலை நெருப்பு காச்சி ஊத்தினது. கற்புன்னு ஆண் அடிச்சுது."

அம்மா நிமிர்ந்தாள்.

பார்த்தசாரதி யோசித்தான்.

30

பசுவின் மடி கனம் குறைந்ததும் பார்த்தசாரதி பால் கறப்பதை நிறுத்திவிட்டு, கன்னுக்குட்டியை அவிழ்த்து விட்டான். கன்னு முட்டிக் குடிப்பதை கனிவோடு பார்த்தான். பால் குவளையை எடுத்துக் கொண்டு சுவர் பக்கம் போனான். சுவர்மீது வைத்திருந்த சொம்பில் நுரையை விரல்களால் நிறுத்தி சொம்பு முழுவதும் பால் விட்டான்.

"போதும்.... போதும்." மரகதம் பதட்டமாய் கூவினாள்.

சொம்பின் கழுத்து வரை பால் நிரம்பியது.

"ஒரு அளவு, கிளவு இல்லையா.... நீபாட்டுக்கு சொம்பு நிறைய ஊத்திட்டா என்னானு காசு தர்றது."

"வியாபாரமா இது இருந்தா, அளவு காசு, ஏமாத்து ஏய்ப்பு எல்லாம் இருக்கும். உங்கிட்ட நான் எதுக்கு வியாபாரம் பண்ணணும்."

"வாயும் வயிறும் வேறுதான். வயித்துக்குதானே வியாபாரம்."

"வெவ்வேற வயிறுதான். ஆனா, எனக்கு பேய் பசி இல்ல மரகதம்! ஒரு வேளைக்கு மூணு பிடிச் சோறு போதும், அடுத்த பிடி சோறே, இலையில் இருக்கு துன்னு சாப்பிடறதுதான். இனிமே அப்படிச் சாப்பிட முடியாது."

"ஏன் ஐயரோட சேர்ந்து சாமியாரா போயிட்டீங்களா?"

"அத்தினி யோக்கியதை வந்திடலை. அடக்கமா இருக்கலாமேன்னு தோணுச்சி."

"என்மேல ஆசை போயிடுச்சா?'

"ஆசைப்பட்டு ஆடறது போயிடுச்சி."

"நாம ஆட்டமா போட்டோம். ஒருத்தர் மேல ஒருத்தர் எத்தினி அன்பா இருந்தோம்."

"சொம்பு நிறைய பால் ஊற்றினது, அந்த அன்பில தான்; போய் சுண்டக்காய்ச்சி பால் குடி.... உடம்பு கவனிச்சிக்கோ."

'இப்ப வரமாட்டியா?"

"வேணாம் மரகதம். எனக்கு மனசு ஒப்பலை."

"ஏன்.... நான் வேற ஒருத்தர் பொண்டாட்டிங் கிறதனாலயா?'

"இல்ல மரகதம்.... மறுபடி மறுபடியும் ஒரே விஷயந்தான். இதுக்கு முடிவேயில்லை."

"பேசக்கூட மாட்டியா?"

"நிறைய பேசலாம். பேச்சுக்கு என்ன... பேசாதயும் பிரியமா இருக்கலாம்."

"பிரியத்த காட்டுவதுக்கு இது ஒரு வழியில்லை."

"எனக்கு சந்தேகமா இருக்கு மரகதம். கொஞ்சம் ஏமாத்திக்கறமோன்னு தோணுது. மோந்து பார்க்கிறது, முத்தம் குடுக்கிறதுமா பிரியம்? தட்டு நிறைய இருக்கு துன்னு சோறு தின்னுகிட்டே இருக்கிற மாதிரி தோணுது. விதவிதமா சேர்மானம் கலந்து உப்பு உரைப்புக்காக உள்ள தள்றோம்."

"மறுபடியும் பசிச்சா வரமாட்டியா?"

"இவருக்கு எப்ப பசிக்கும்? எப்ப சோறு பரிமாற லாம்னு உட்கார்ந்திடாத.. எனக்கு சோறு போடறத மட்டுமே உன் வேலையா நினைச்சிடாத. தட்டுப் பார்த்ததும் நாய்க்கு ஜொள்ளு வந்திடுமாம்.... உனையை பார்த்தா சோறு தின்றதா எனக்கு ஞாபகம் வரும். வெறும் காரக் குழம்பா ஆய்டாத மரகதம். உன்னால பல வேலைகள் செய்ய முடியும்."

"நான் பொம்பளைதானேப்பா.... குழாய் போடறதும், கோயில் கட்டுறதும் எனக்கு முடியுமா?"

"கூட நின்னல்ல.... யாரும் கூப்பிடாம துணைக்கு வந்தல்ல. தலை முழுக்க நொரநொரன்னு மண்ணு வச்சி கூடை தூக்கினில்ல.... யாருக்கு செஞ்ச.... எனக்கா, உனக்கா? அந்த மாதிரி செய்."

"எவனாவது குழாய் வெட்டியிருந்தா நான் கூட போயிருப்பேனா.... எனக்குன்னு ஒரு ஆளு.... அது நீ.... அந்த வேகத்தில் வந்தேன்..."

"அது செய் போதும்..."

"அப்போ வரமாட்டியா.... எதுவுமே வேணாம்னு அறுத்துக்குவியா?"

'எங்கேயிருந்து அறுத்துக்கிடறது.... எப்படி அறுத்துக்கிடறது. எல்லோருக்கும் எதுனாலும், செய்யணுங்கிறபோது உன்னை அறுத்துகிட்டு எங்க போறது?"

""கோயில் கட்டப் போறியா..."

"தெரியலை.... அந்த மாதிரி ஏதோ. என்னான்னு மனசுக்குள்ள தெளிவாயில்லை..."

சுவரிலிருந்து சொம்பை வெடுக்கென்று எடுத்தாள். தன் வீட்டுக் கொல்லைப்புறம் போனாள். கொல்லை வாசலில் கால் வைத்து மறுபடி திரும்பினாள்.

'எல்லா ஆம்பளைங்களுமே அயோக்கியனுங்க கூட இருக்கிற ஆள காய விட்டுட்டு... ஊருக்கு உழைக்கிறேன்னு போயிடுவானுக.... தன் வயித்துவலி போகணும்னு ஊருக்கு அன்னதானம் பண்ணுவானுங்க.... உன் வலிக்கு நீ மருந்து சாப்பிடு.... உன் சந்தோஷத்த ஊர் சந்தோஷத்துக்குக் குடு.... சவுக்கால அடிச்சிகிட்டு சாமி கும்புடுற விசித்திரமெல்லாம் நம்மூருலதான். அய்யோ பாவம், எத்தின ரத்தம்னு ஊர் முகவாய்கட்டை தாங்கி நிக்கணும். அப்ப நவ துவாரமும் குளிர்ந்து போயிடும். ஊர் கும்புடுற ருசி குழா போட்டதில தெரிஞ்சி போச்சி. சும்மாயிருக்க முடியுமா உன்னால.... கட்டு, கோயில் கட்டு.... உயரமா கட்டு.... உள்ள இருட்டு பண்ணி சாமி தேடு."

கொல்லைக் கதவு படீர் என்று மூடிக்கொண்டது. பார்த்தசாரதி குவளையுடன் தொழுவத்திற்கு திரும்பினான். மற்ற மாடுகளையும் தடவிக் கறந்தான். சிறிய தவலைகளில் பால் ஊற்றி திண்ணையில் கொண்டு வந்து வைத்தான். குளித்தான். அம்மா சுழற்றி சுழற்றிப் போட மூன்று ஆப்பம் சாப்பிட்டான். நாலாவது ஆப்பம்

கரண்டியின் பரப்பில் ஆவி பறக்க எதிரே நின்றது. ஆப்பத்தின் புளிப்பும் முறுகலும், சூடும் ஆசையைக் கிளறின. வேண்டாம், போதுமென்று சொல்லிவிட்டு வாசலுக்கு வந்தான். மணைக் கட்டையை தலைக்கு வைத்துக்கொண்டு மேல்துண்டால் முகம் மூடி அயர்ந்து தூங்கினான்.

நாலு பனை உயரத்திற்கு கோபுரம் உயர்ந்து விட்டது. இரும்புக் கம்பி உயரே கட்டி, அதில் கயிறு சுற்றி, மூங்கிலை எடுத்து மேலே அனுப்ப, ஐயர் மூங்கிலால் கோபுரம் எழுப்பிக் கொண்டு போனார். எவ்வளவு உயரம் போனாலும் கோபுரத்தின் முனை கூடவேயில்லை. கீழேயுள்ள மூங்கிலை நகர்த்தினால் மேலே கோபுரம் கூடும் என்று ஐயர் சொன்னார்.

இடதும், வலதும் நகர்ந்து முழு பலத்தோடு மூங்கிலை அசைத்து மூங்கிலை அகலப்படுத்த, மூங்கில் கூடிற்று. ஆனால், விழுந்துவிடுமோ என்கிற பயம் வந்தது. மொத்தமும் விழுந்து உள்ளே இருக்கிற கல் காயப்பட்டுவிடுமோ என்கிற கலவரம் வந்தது. இன்னும் ஒரு அங்குலம் நகர்ந்து உச்சியில் இறுகக் கட்டிவிடலாம் என்று ஐயர் கத்தினார். இடது பக்கம் ஒரு அங்குலமும், வலது பக்கம் ஒரு அங்குலமும் நகர்த்தினார். உச்சி நடுங்கிற்று. ஐயர் இறுகக் கட்டினார். ஐயர் கீழிறங்க கால் வைத்தார். கோபுரம் ஆடிற்று. கால் வைத்த இடத்தில் மூங்கில் பிய்த்துக் கொண்டது. எல்லா மூங்கில்களும் பிடிப்பில் இருந்து கழன்றன தடதட வென்று கோபுரம் சரிந்தது. ஆயிரக்கணக்கான மூங்கில் தரை நோக்கி வந்தன. பூமியைத் தாக்கின. தடதடவென்று பார்த்தசாரதி விலகி ஓடினான். அவன் முன்னும், பின்னும் பெரிய மூங்கில் தூண்கள் விழுந்தன. வெகு நேரம் மூங்கில்கள் விழுந்த பிறகு, படுக்கை வாட்டத்தில்

விழுந்து கிடந்த மூங்கில்கள் கோட்டை மாதிரி அமைய, ஒரு சிறிய குடிசை மட்டும் உள்ளே இருந்த கல்லை மூடிக்கொண்டு இருந்தது. குடிசை உச்சியில் ஐயர் பத்திரமாக இருந்தார். கோபுரம் இப்படி விழுந்து விட்டதே என்ன குற்றம் என்று கவலைப்பட்டபோது, குடிசை பிளந்து கல் வெளியே வளர்ந்தது. ஐயர் தூக்கி எறியப்பட்டார். கல் வளர, மரகதம் சூலத்துடன் வெளிப்பட்டாள். மூங்கில் சூலம். இவனை நோக்கி முழு பலத்துடன் எறிந்தாள். 'அம்மா' என்று கத்த, விழிப்பு வந்து விட்டது.

எழுந்து உட்கார்ந்தபோது உடம்பு நடுங்கிற்று. வியர்த்துவிட்டிருந்தது. கவலையோடு மறுபடியும். திண்ணையில் சரிந்தான். சுருண்டு படுத்துக் கொண்டான். வெயில் உச்சிக்கு வந்திருப்பது தெரிந்தது. மனசை ஒருமுகப்படுத்திக் கடற்கரை கிழவியின் பாதங்களைத் தொட்டான். எது வேண்டுமானாலும் விடியட்டுமென்று இன்னும் சுருண்டு படுத்துக் கொண்டான். கனவிலும் நினைவிலும் ஆணுக்கு மிகபெரிய சோதனை பெண்தான். அவள் அங்கீகாரம்தான். அவளை அறிய முற்படுவதுதான். பெண் மாயா. மாயப்பிசாசு. அவள் நேசிப்பிற்கு முன் எந்த மரபும் இல்லை, எந்த இலக்கணமும் இல்லை, எந்த நெறிமுறையும் இல்லை, எந்தக் கட்டுப்பாடும் இல்லை, எத்தனை வளையங்கள் மாட்டினாலும் அவள் வசப் படுவதில்லை. மூக்கு வளையம், காது வளையம், கழுத்தில் தாலி வளையம், காலில் கொலுசு வளையம், இடுப்பு ஒட்டியாண வளையம், மெட்டி வளையம், எதற்கும் அவள் கட்டுப்படுவதில்லை. கற்பு ஈயம் காய்ச்சி ஊற்றினாலும் அவள் பொசுங்குவதில்லை. பெண் மாயா, மாயப் பிசாசு. விவரிக்க முடியாத வேகமுள்ள ஜந்து. ஆழம் காண முடியாத கடல். அடக்க முடியாத பேரலை

அடங்காத மலை, நதி, ஆரவாரமான பறவை. திசை தெரியாத புயல், உணர்ச்சி ரூபம்.

மூடி போட்டோ, வலை வீசியோ, கயிறு கட்டியோ, திசை திருப்பியோ, பெண்ணை மடக்கிவிட முடியாது.

"சுந்தரமுள்ள புருஷனைக் கண்டால் அவன் உடன் பிறந்தவனாயினும், பிதாவாகினும், புத்திர னாகினும், ஸ்திரீகளுக்கு காமமுண்டாகிறது. இதற்குக் காரணம் தெரியவில்லை." ஐயர் வழியிலே வடமொழி மந்திரம்போல எதுவோ சொல்லிக்கொண்டு வந்தார்.

"அத்திப்பூவை பார்த்தாலும் பார்க்கலாம். வெள்ளைக் காக்கையைக் கண்டாலும் காணலாம். ஜலத்தில் மீன் காலை பார்த்தாலும் பார்க்கலாம். ஸ்திரீகளின் இருதயத்தை அறியவே முடியாது. ஏனெனில், பெண் மாயா.

வெறும் கல் சிவம், வீசியெறியப்படுகிறபோது சக்தி. வெறும் உளியும் சுத்தியும் சிவம். அவை இயங்கும்போது வெளிப்படுவது சக்தி. பிரபஞ்சம் முழுவதும் இந்த சக்தியிருக்கிறது. சிவத்தை புரட்டிப் புரட்டி எடுக்கிறது. சிவத்தைப் புரட்டி கோவில் ஆக்குகிறது. இடித்து தரைமட்டமாக்குகிறது. உடம்பு சிவம். உயிர் சக்தி. சக்தி சிவத்தை அசைக்கிறது. நடமாட விடுகிறது. வெறும் சக்தி இயக்கமில்லை. வெறும் சிவம் இயங்குவதில்லை. சிவத்தை இயக்கும் விஷயம் சக்தி, சக்தியால் இயங்குவது சிவம்.

ஒரு ஈயக்குண்டை தூக்கிப் போட்டால் இரும்பு உடைவதில்லை. அதே ஈயக்குண்டு துப்பாக்கியிலிருந்து வெளியே வரும்போது பல இரும்புத் தகடுகளைத் துளைக்கிறது. அங்கு சிவம் ஒன்றே. சக்தியின்

வெளிப்பாடு அதிகம். சிவத்தின் உருவம் சின்னதாய் இருந்தாலும், சக்தியின் அளவு கூட, சிவத்தின் மதிப்பும் கூடும். நல்லதோ நாசமோ சக்தியின் அளவால் மதிப்பிடப்படும்.

ஆணை இயக்குவது பெண். ஆண் சிவம். பெண் சக்தி. சக்தியை சிவம் அடக்க முடியாது. அடக்கினதாக சரித்திரமும் இல்லை அடக்க, அடக்க சக்தி ஆட்டம் போடுகிறது. சிவத்தை அலற வைக்கிறது. மூக்கு வளையமோ, தாலி வளையமோ மெட்டி வளையமோ அத்தனையும் சிதறடித்து எழுந்து நிற்கிறது. எப் போதுமோ பிரச்சினைக்குரிய பொருளாய் மாறுகிறது. கற்பு ஈயத்தைப் பிய்த்து எறிந்துவிட்டது. எதற்கும் கட்டுப்பட மறுக்கிறது. கட்டக் கட்ட சக்தி எல்லை மீறுகிறது. எப்போது வெடிக்கும் என்று தெரிய வில்லையே என்கிற பயம் வருகிறது.

ஏன் கட்டுகிறாய்? உள்ளே கேள்வி வந்தது. கட்டுப் பட மறுப்பதை எப்படிக் கட்டுப்படுத்த முடியும் என்கிற எண்ணம் வந்தது. பெண்ணைக் கட்டியவன் முட்டாள். புத்தி பேதலித்தவன் என்கிற தீர்மானம் வந்தது. கட்டி விட்டோம் என்று கொக்கரிக்கிறபோதே கட்டவிழ்த்து காறித் துப்புகிறது. கட்ட முடியாததைக் கட்டாதே, கட்டவிழ்த்து விடு. முடிவு தோன்றியது. வழி நெடுக ஐயர் இதைத்தான் சொல்லிக்கொண்டு வந்தார்.

சக்தியை வணங்குவதற்கு பெயரே சாதகம் என்றார். நம்ம கோயில் சாக்த கோயில். நம்ம விஷயம் சாக்தம். இந்த உலகத்து இயக்கத்திற்கு எது காரணமோ அதை வணங்குவது என்றார். உருவமில்லாது கிடைக்கிற சக்திக்கு கிடைக்கிற உருவம் பெண் என்று சொன்னார்.

பெண்ணை வணங்கு. பெண்ணை நேசி, பெண்ணை உயர்த்து. வா. பெண்ணுக்கு அடங்கு. ஏனெனில்,

உன்னால் பெண்ணை அடக்கவே முடியாது ஒருநாளும், ஒரு பொழுதும் உலகம் முடியும்வரை. இதுவரை அவளை அடக்க நினைத்தவன் அறிவிலி. இலக்கணம் சொன்னவன் பேடி. தன் இழுத்த இழுப்பிற்கு சுகம் கிடைக்கும் என்று நினைத்தவன் முட்டாள். இயற்கைக்கு எதிராய் மனிதன் ஒரு அங்குலம் கூட நகர முடியாது. நகர்வதில் எதிர்விளைவுகள் உண்டு. சக்தியின் சுழற்சிக்கு பலியாக நேரும். இயற்கைக்கு எதிரான கண்டுபிடிப்புகள் எல்லாம் இன்னும் இன்னல்கள்தான் தரும். அடங்கிப் போ. அரவணைத்து இரு. அமைதியாய் வாழ்க்கை போகும்.

பெண் மாயா. மாயப் பிசாசு. அவளை பூஜை செய்.

உலகத்தின் வாசலான யோனியே. தீபத்தின் வடிவே.... உன்னை நமஸ்கரிக்கிறேன் என்னை ஆதரிப்பாயாக. என்னை அரவணைப்பாயாக. உலகத்தில் வேறு எங்கும் இல்லாத அமைதியை உன்னுள் கண்டேன். அதை இன்னும் கொடு. என்றும் கொடு."

உள்ளே சுடர் எரிந்தது. அவனை விழுங்கிற்று. சாம்பலாய் வெளியே ஊதிற்று. வெளியே பறந்த சாம்பலை உள்ளே இழுத்தது. தன்னுள் கரைத்துக் கொண்டது. அவனும் சுடரானான். பார்த்தசாரதி எழுந்தான். எல்லா கறவைகளுக்கும் முதுகில் தண்ணீர் ஊற்றி மேல்துண்டால் துடைத்தான். மடிகளை சுத்தமாகக் கழுவினான். இடுப்பு தடவி பால் கறந்தான். உணவு போட்டான் இறைத்து இறைத்து தலைக்கு தண்ணீர் ஊற்றி சுத்தமாய் குளித்தான். தலை துவட்டி முதுகிலும், நெஞ்சிலும் வாசனைப் பவுடர் போட்டான். வேறு சட்டையும், வேட்டியும் அணிந்து சுவரேறிக் குதித்து மரகதம் வீட்டிற்குப் போனான்.

மரகதம் இடது முழங்கையால் முகம் மூடி, ஹால் நிலைப்படியில் தலை வைத்து படுத்துக் கொண்டிருந்

தாள். கால் மீது கால் போட்டு இறுக்கிக் கொண்டிருந் தாள். கீழே பனை விசிறி இருந்தது. எடுத்து மெல்ல விசிறத் துவங்கினான். காற்றுப் பட்டதும் அவள் கண் திறந்து அவனைப் பார்த்தாள். கண் சுருக்கினாள். எழுந்து உட்கார்ந்தாள் "என்னா?" என்று வினவினாள்.

நெற்றியில் வியர்வை பூத்திருந்தது. பார்த்தசாரதி அவள் சேலைத் தலைப்பால் அவள் நெற்றியைத் துடைத்தான். வியர்வை ஒற்றி எடுத்த தன்மையில் அவள் பலதும் விளங்கிக் கொண்டாள். "என்னப்பா!" மறுபடி வினவினாள். உட்கார்ந்தவளுக்கு பார்த்தசாரதி மறுபடி விசிறினான். அவள் முழங்காலிட்டு நின்றாள். விசுறுவதை இடக்கையால் தடுத்தாள். தலையைக் கோதி தன் நெஞ்சில் அவன் முகத்தை இறுக்கிக் கொண்டாள். முதுகு தடவினாள். நெற்றியில் முத்தமிட்டாள்.

'எனக்கிது போதும் போ!' என்று அவனை விலக்கினாள்.

'இத்தினி பிரியம் கொட்டுனா உள்ள இருக்கிற தெல்லாம் செத்துப் போயிடும். சகல ஆத்திரமும் தண்ணி ஊத்தின தணலா போயிடுது. இத ஆம்பளை காட்டமாட்டேங்குறானே....' மறுபடியும் உச்சி முகர்ந்தாள்.

'நீ கோயில் கட்டு.... குளம் வெட்டு.... நான் நிக்க றேன், கூட... மரகதத்தாலே முடியுமான்னு நினைக்காத.... உனக்கோசரம், மரகதம் எதுவும் செய்வா... நீ சாவு, அது எனக்கு நல்லதுன்னு சொல்லு.... சந்தோஷமா கழுத்த அறுத்துக்கிட்டு சாவா.... நீ கோயில் கட்டு. நான் நிக்கறேன் கூட..."

எல்லா பெண்ணும் மரகதம்தான்.... பார்த்தசாரதிக் குள் மறுபடியும் சுடர் தெரிந்தது. உலகத்தின் வாசலான

யோனியே.... தீபத்தின் வடிவே.... உன்னை வணங்குகின்றேன். மந்திரம்போல உள்ளே தமிழ்ச் சொற்கள் எழுந்தன. பார்த்தசாரதி கை கூப்பினான். சகல துடிப்புகளும் அவனுள் அடங்கிப் போயின.

வாசற்கதவை யாரோ தட்டினார்கள்.

31

மனித வாழ்க்கையில் அற்புதங்கள் நேருவது உறைந்து போய் உட்கார்ந்து விடுவதற்கில்லை. தொடர்ந்து போக, உத்வேகம் பெறுவதற்குத்தான் நடக்கும்போது பிரமிப்புத் தரும் அற்புதங்கள் நகர்ந்து வந்ததும் ஆயிரம் கேள்விகள் எழுப்புகின்றன. எல்லாம் பொய்யோ என்கிற மாயையைத் தருகின்றன.

எதற்கு இது எனக்கு நிகழ்ந்தது. வழக்கம் போல் விபூதி கடைக்குப் போய் ஊதுவத்தி சந்தனம் விற்று என்ன விசேஷம் வீட்ல? பன்னீர் தசாங்கம் எல்லாம் வாங்கற. குழந்தைக்கு பொறந்த நாளா, தீர்க்காய்ஸுமான் பவ. சாயந்திரம் கடையை மூடிட்டு வரபோது வந்து குழந்தையைப் பார்த்துடறேன். நரைத்த தலைக்கு தானே வந்த கம்பீரத்தை பேச்சால்கூட அதிகரித்து வியாபாரத்துக்கு வியாபாரம், கம்பீரத்துக்கு கம்பீரம் என்று பகிர்ந்து மூலைக்கடை முழுக்க ராஜ்ய பரிபாலனம் செய்து கொண்டிருக்கலாம். வீட்டிற்கு வந்து கடையில் கேள்விப்பட்ட கதைகளை காதும் மூக்கும் வைத்து பேசிக் கொண்டிருக்கலாம். காலையில் கிளம்பும்போதே இன்னது செய்து வை என்று கட்டளையிடலாம். இரவு வந்து ருசித்து சாப்பிடலாம். உறங்கலாம். உடம்பு தினவெடுத்தால் மனைவி மீது உரசலாம்.

பிறகு.... பிறகு...?

தினசரி இதுதானா? இந்த சுகங்கள் போய்விடுமே என்கிற பயமா? சுகமா இது.... எல்லாரும் செய்து செய்து சலித்தவை அல்லவா! எல்லோரும் செய்வதையே நானும் செய்கிறேன் என்கிற நிம்மதியா? பத்திர உணர்வா... அல்லது இப்போது கொண்ட இந்தத் தனிமை உணர்வு ஏற்படுத்திய பயமா?

இன்னமும் உள்ளே ஒரு துக்கம் வாட்டுகிறதே.... மந்திரம் தந்திரம் எதுவும் வேண்டாம். எவர்க்கும் தீங்கு செய்யா வாழ்க்கை போதும் என்று இருந்து விடலாமா? எவர்க்கும் தீங்கு செய்யா வாழ்க்கையைவிட எல்லோர்க்கும் உதவி செய்யும் வாழ்க்கை பெரிதில்லையா?"

யாருக்கும் கிடைக்காத அனுபவங்கள் கிடைத்த பிறகும் ஏன் மனசு இவ்வளவு குழம்புகிறது. எதைக் கண்டு பயப்படுகிறது.... என்ன தயக்கம்...

பாலு ஐயர் திண்ணையிலிருந்தபடியே யோசித்தார்.

என்ன தயக்கம்?

அடுத்தபடி என்ன செய்யவேண்டும் என்கிற தெளிவில்லை. அதனால் தயக்கம். கடற்கரையில் ஆனந்தக் கூத்து ஆடினாயே.... உன் மனசுக்குள் வெகு ஆழம் தொட்டுத் திரும்பினாயே.... அது என்வரையில் உண்டான அனுபவம்.... என் விழிப்பு நிலை.... அதையெல்லாம் இங்கு சொல்வதில் லாபமில்லை. மக்களோடு பேசுகிறபோது அதற்கு ஒரு மதிப்புமில்லை.

பின் ஏன் அது நிகழ்ந்தது?

என்னைச் சுத்தப்படுத்த, என் புத்தியை அலம்பி நான் அலை மோதாது இருக்க, மற்றபடி கடற்கரை

கிழவியோ, கடலிலிருந்து வந்தவரோ என்ன செய்ய வேண்டும் என்று சொல்லவில்லை.... சொல்லவும் மாட்டார்கள்.

எனவே நீ யோசி.... நீயில்லாது யோசி... என்ன செய்யப் போகிறாய்? முகம் முழுவதும் வேதனை படர, திசையில்லாது மனசு அலைய, பெரும் சோகத்தோடு ஐயர் சுருண்டு சாய்ந்தார்.

கடற்கரைக் கிழவி உனக்குக் கொடுத்தது கட்டிக் கொடுத்த சோறு, உன்னால் உன்னிலிருந்து உண்டானதல்ல. கட்டிக் கொடுத்த சோறு எத்தனை நாள் வரும்? மறுபடியும் சாதாரண ஆளாய் விபூதி விற்ற மனிதனாய் போகும் முன், ஏதேனும், செய். எல்லோரும் கட்டுகிற கோவிலை நீயும் கட்டி எவர் எவரோ உள்ளே புகுந்து எல்லா குழப்பமும் வருவதுபோல் இல்லாமல் செய்கிறதை சரியாய் செய்.

என்ன செய்ய?

என்ன செய்ய என்று யாரிடம் கேட்க?

"சரஸ்வதி!" அவரையும் மீறி அவரிடமிருந்து குரல் வந்தது.... குரல் வரட்டும் என்று காத்திருந்தது போல கதவு திறந்தது.

சரஸ்வதி வெளியே வந்தாள். அவள் முகமும் கலங்கியிருந்தது.

அருகே வந்து உற்றுப் பார்த்தாள். மெல்ல அவர் புறங்கையைத் தொட்டாள்.... நெற்றி நீவினாள்....

"என்ன?"

என்ன கேட்பது என்று புரியவில்லை... "குடிக்க எதாவது கொடேன் சரஸ்வதி!"

சரஸ்வதி உள்ளே போய் மூன்று நிமிடத்தில் காபியோடு வந்தாள். அவரிடம் கொடுத்துவிட்டு அருகே உட்கார்ந்தாள்.

"எங்கே நேத்து காணோம்?"

"மைலாப்பூருக்கு போயிருந்தேன்."

"என்ன விஷயம்?"

"அந்த கிழவர் போக.... போன்னார். உடனே கிளம்பிட்டோம்."

"யார்கூட.... பார்த்தசாரதியா?"

"ஆமாம்."

"ஒரு வார்த்தை என்கிட்ட சொல்லிட்டுப் போகக் கூடாதா?"

"உடனே போன்னு கட்டளை."

"சரி. முகம் ஏன் இப்படி இருண்டு கிடக்கு. இது போட்டுண்டு போன சட்டை வேஷ்டி இல்லையே."

"இல்லை..."

"என்னாச்சு?"

"கடல்ல அவுத்து எறிஞ்சுட்டேன்."

"கட்டளையா?"

"ஆமாம்."

"சந்நியாசம் மாதிரியா?"

"தெரியலை. அவுத்து எறிஞ்சவுடனே நிம்மதியா இருந்தது."

"இங்க வந்தவுடனே இருண்டு போச்சு முகம்."

"கவலை சரஸ்வதி."

சந்நியாசிக்கு கவலையா?"

"உண்டு சரஸ்வதி."

"எதுபத்தி... சந்நியாசியா போயிட்டேன்ற..."

"இல்லை..."

"வேற என்ன?"

"என்ன செய்யணும் இனி?"

"சந்நியாசம்தான் கடைசி. அதுக்குப் பிறகு என்ன செய்யணும் ஒருத்தர்?"

"அடுத்த ஸ்டேஜ் போறது பத்தி கவலைப்படலை சந்நியாசியா இருந்து என்ன செய்யணும்?"

சரஸ்வதி சிரித்தாள்.

"ஏன் சிரிக்கிறே சரஸ்வதி?"

"ஆக மனுஷாளுக்கு என்ன வேஷம் போட்டாலும் கவலை உண்டு."

"உண்டு சரஸ்வதி, ஆனா, எது பத்தின கவலைங்கறது மாறும்."

"இப்போ உங்களுக்கு எதுபத்தி கவலை?"

பாலு ஐயர் மௌனமாய் இருந்தார்.

"ஒரு வேளை அதான் கவலையா? எது பத்தி கவலைப்படறதுன்னு தெரியாத கவலையா?"

"ஜனங்களுக்கு ஏதாவது செய்யணும் சரஸ்வதி."

"வீட்டைத் தெருவுல விட்டுட்டா."

"இனிமே எனக்கு ஊர் முக்கியம்."

"நான்.... நான் முக்கியமில்லையா?"

"நீயும் ஊர்ல ஒருத்திதானே. அந்த அளவுக்கு உனக்கு முக்கியத்துவம் உண்டு."

"சந்தோஷம். உதறிட்டுப் போகமாட்டேளே."

"உதறி எங்க போக?"

"சந்நியாசம்னு சொன்னேள்?"

"சத்தியத்தில் நினைப்பதே சந்நியாசம். இதுக்கு வீட்டை விட்டு ஓடத் தேவையில்லை. நீ, இந்த ஊர் மக்கள், மாடு கன்னு எல்லாம் சத்திய சொரூபம். இதை விட்டு எங்கே போக?"

"அப்ப என்ன தவிப்பு?'

"உள்ளே இன்னமும் அகந்தை இருக்கிறது. அறுக்க அறுக்க எழுகிறது."

"அகந்தையோடவே இருங்களேன்."

"என்ன?"

"அறுத்தா வளர்ந்துடறதுன்னு தெரியறபோது அறுப்பானேன்."

"வாஸ்தவம்."

பாலு ஐயர் கண் மூடினார். உள்ளே நான், இவள் என், வீடு, என் மக்கள் என் ஊர் எல்லாம் தோன்றியது. பிரிவு பிரிவாய், குவியல் குவியலாய் எல்லா விஷயங் களும் இருந்தன. ஒன்றுக்கு ஒன்று வித்தியாசப்பட்டன. எல்லாம் ஒன்றுதான் என்கிற விஷயம் வார்த்தையால் மட்டுமே தோன்றியது. உணர முடியவில்லை.

உணராது பேசினால் பொய்யனாய் மாறிவிடு வோம் என்கிற பயம் வந்தது. எப்போது உணருவது என்கிற கேள்வி வந்தது கேள்வி துக்கம் தந்தது.

"என்ன தவிப்பு உங்களுக்குள்ளே?" சரஸ்வதி அருகே நெருங்கிக் கேட்டாள்.

என்ன தவிப்பு? உள்ளே அவரும் கேட்டுக் கொண்டார்.

தன்னை மீறி எதையோ தேடுகிறோமோ?

தன்னை மீறி என்றால்,

உள்ளே என்ன? என்ன ஓடுகிறது உள்ளே..

எது நீ?

கண்கள் சொருகின. தூக்கம் வருவது போல ஒரு உணர்வு. தூங்குகிறேனா... இது தூக்கமா... இப்போது விழிப்பு. தன் தூக்கத்தை தானே உற்றுப் பார்க்க உடம்பு மெல்ல கழன்று அவர் வசம் இல்லாது போவது உணர முடிந்தது. உடம்பு யோசித்து உறுப்பில் செயலற்றுப் போவது தெரிந்தது. புத்தி விழித்திருந்தது. இது தான் அறிதுயிலா? அறிந்துகொண்டே தூங்குவதா? தூக்கத்திலும் உள்ள விழிப்பா? இப்போது நான் யார்? உடம்பா? மனசா?

உனக்கென்ன பிரச்சினை?

எனக்கெந்த பிரச்சினையும் இல்லை.

பிறகு ஏன் அலட்டல்?

மற்றவர்களுக்கு....

மற்றவர்களை மற்றவர்களே பார்த்துக் கொள்வார் கள். உனக்கேன் கவலை?

அவர்கள் கவலை என்னை கவலைப்படுத்துகிறது. ஏன்?

அவர்கள்தானே நான்.

அப்படியானால் உடனே கவலை தீர்க்கப் புறப்படு.

எப்படித் தீர்ப்பது?

தனியே நீயில்லாது, எல்லா உயிர்களும் நீ என்று உணர்ந்துவிட்டால், நீ எது செய்யினும் சரியாய் இருக்கும். இந்த உணர்வு நகர, சகலமும் பொய்யாய் போகும்.

புரிகிறது.

என்ன செய்யப் போகிறாய்?

இங்கு வேதனைப்பட்டவர்களை ஆசுவாசப் படுத்துவது.

யார் இங்கே வேதனைப்பட்டவர்கள்?

பெண்கள்.

எப்படிச் சொல்கிறாய்.?

ஆண்கள் அவர்களைப் படுத்தியது பாதி. அவர்களாகவே அவர்களை நொந்தது மீதி.

சரி, அதற்கென்ன?

நொந்ததை நிமிர வைக்க வேணும்.

எப்படி?

நீயே எல்லாம் என்று சொல்ல வேணும்.

நிறைய பேர் சொல்லி ஏமாற்றியிருக்கிறார்கள்.

ஏமாற்றாமல் சொல்ல வேண்டும்.

தெளிவாய் சொல்.

நீயே கடவுள், நீயே சக்தி, உன்னை உன்னுள் அறி.

"எப்படிச் சொல்லப் போகிறாய்?"

"அவளுக்கு முதலிடம்."

"எதில்?"

"எல்லாவற்றிலும்."

"வெட்கப்படுவாள்."

"சொல்லிக் கொடுக்கப்பட்டது இது. பெண் வெட்கம் துடைத்தலே முதல் வேலை."

வெட்கம் என்பதென்ன?

எது குறித்தும் தயங்குதல். தன்னை முன்னிறுத்த பயப்படுதல்.

ஏன் இது நேர்ந்தது?

அவளால் எதுவும் இயலாது என்று சொல்லப் பட்டு.... சொல்லப்பட்டு...

நிறைய பெண்கள் இதை உடைத்து வெளியே வந்து விட்டார்கள்...

போதாது. உடைத்தவர்களும் உணர்வு இல்லாது உடைத்தார்கள். தான் முன்னிற்க முடியும் என்கிற முடிவு இல்லாது முன்னேறியிருக்கிறார்கள். இவர்கள் எப்போது வேண்டுமானாலும் பின்னடைவார்கள்.

எங்கே, எந்த இடத்தில் முன்நிறுத்தப் போகிறாய்?

எது உயர்வான விஷயம் என்று எங்கே பேசப்படுகிறதோ அங்கே.

எது உயர்வான விஷயம்?

கடவுள், கடவுள் வழிபாடு.

வழிபாடு என்றால் என்ன?

வழி நடத்தல், அது ஒரு பாதை.

உருவ வழிபாடா?

ஆமாம். உருவம் இல்லாது அருவம் தெரியாது. அருவம் தெரிய உருவ வழிபாடு ஒரு வழி. அருவத்தை வணங்கு என்றால் வழியே தெரியாது போகும். ரூபத்தை ரூபமே காணும்.

இதன் முடிவு என்ன?

உருவம் அழிதல், எந்த பொம்மை குழந்தைக்கு உயிராய் இருந்ததோ. வளர்ந்தபிறகு அது சாதாரணமாய் போகும். இதையா உயிருக்கு உயிராய் நினைத்தேன் என்று சிரிப்பு வரும்.

பிறகு?

சிரிப்பு வரும் நேரத்தில் ஏன் இப்படி என்கிற சிந்தனை வரும். தன் வளர்ச்சி பற்றி யோசிக்கத் துவங்கும்.

ஆக...

பெண்களை வைத்து பெண்ணை பூஜித்தல். நீ பூஜை செய். அபிஷேகம் நடத்து. அலங்காரம் செய். ஆரத்தி எடு. எல்லா விளையாட்டும் விளையாடு. கடவுள் ஆண்கள் விஷயம் அல்ல; எல்லோருக்கும் உண்டு, நீ முன் வா.... விளையாடு இது உன் கோயில்.

அதாவது...

பெண்களுக்கான கோயில், பாலு ஐயர் தூக்கத்தில் சிரித்தார்.

32

"அப்போ நாம கோயில் கட்டிக்கிட்டு ஒதுங்கிட றமா... எல்லாம் பொம்பளைங்களே பார்த்துக்கு வாங்களா?"

பார்த்தசாரதி வியப்புடன் கேட்டான்.

"இல்லை, பார்த்தசாரதி. நாம கூட நிக்கணும். ஆம்பளையும் பொம்பளையும் பிரிச்சுப் போடற கோயில் இல்லை பார்த்தசாரதி இது. ஒண்ணாக்கற கோயில்."

"ஏங்க, ஒரு சந்தேகம்..."

"கோயில்ன்றது பெரிய விஷயம். அதுல போய் நாம நம்ம இஷ்டத்துக்கு மாத்தினா ஏத்துக்குவாங்களா? லேடீஸே 'வேணாம் போ உன் கோயில்'ன்னு சொல்லிட்டா?'

"சொல்லிட்டுப் போகட்டும். அவங்களுக்குப் புரியற வரைக்கும் காத்துக்கிட்டு இருக்க வேணும்."

"வீட்ல அம்மாகிட்ட சொன்னீங்களா?"

"சொன்னேன். பதிலே பேசலை."

"நாலு பொம்பளைங்கள கேட்டுக்கிட்டு செய்ய லாங்களா?"

"யாரையும் கேட்க வேண்டிய அவசியமில்லை பார்த்தசாரதி! இதுதான் நடக்கணும். நடக்கும்."

"ஏன் இந்த மாதிரி லேடீஸுக்குன்னு ஒரு கோயிலு. எல்லாரும் வந்தா என்னன்னு ஊர் கேட்குமே."

"யாரையும் வராதேன்னு தடுக்கலை. யாரையும் ஒதுக்கலை பார்த்தசாரதி. பெண்களை முன்ன வாங்கன்னு சொல்றோம். தள்ளி நிக்க வேணாம். இது உங்க இடம்னு முன்னுரிமை தரோம்."

"ஏங்க இது..."

"மதம்தான் பெண்களை பின்னுக்குத் தள்ளிச்சு. மதம்தான் முன்னுக்குக் கொண்டாரணும்."

"இல்லையே.... பெண்ணை கடவுளா சக்தியா நிக்க வச்சோமே.... தாயேன்னு கூப்பிடறோமே..."

"பொம்மை பண்ணிட்டு பொம்பளைய பின்னுக்குத் தள்ளிட்டம். வழிபாடு அவ பேர்ல நடத்திட்டு வாழ்க்கைல மடக்கி வச்சுட்டம்."

"வழிபாடு மாத்தினா வாழ்க்கை மாறிடுங்களா?"

"மாறும் பார்த்தசாரதி."

"எப்படிங்க?'

"தன்னம்பிக்கை வரும். அவளுடைய இறை உணர்வு அதிகரிக்க, அவள் மண்டி போடறது நின்னு போய் அவளை நாலு பேர் மண்டி போட்டு மதிக்கிறது வரும்."

"சாமியாடறது மாதிரி..."

"இல்லை."

"வேற..."

"பூஜை, புனஸ்காரம், தியானம். அமைதின்னு அவள் உள்ள அடங்கணும்."

"ஆம்பளைக்கே வரலீங்க இது."

"பெண்ணுக்கு சுலபத்திலே வரும் பார்த்தசாரதி."

"ரொம்ப கஷ்டப்படுது பார்த்தசாரதி. அமைதி யில்லாத அலையல் நடக்குது. ஆம்பளைக்குப் போட்டியா சம்பாதிச்சுட்டா ஜெயிச்சுடலாம்னு நினைக்குது. ஜெயிக்கறது அது இல்லை, தன்னை ஜெயிக்கணும். தன்னை ஜெயிக்க பெண்களுக்கு சொல்லித் தரவேயில்லை யாரும், எப்போதும். அதுக்கு இது முதல் படி..."

"என்னன்னு வருவாங்க? என்ன செய்வாங்க இந்த கோயில்ல....?'

"கும்பிடறதுக்குன்னு வருவாங்க. உள்ள வா... கும்பிடு. பூ போடு. பூஜை செய். அபிஷேகம் நடத்து. கற்பூர ஆரத்தி காட்டு."

"யார் வேணும்னாலுமா?"

"யார் வேணா."

"ஆம்பளைங்ககூடத்தானே."

"ஆமாம். ஆனா, ஒரு வித்தியாசம்."

"என்னாங்க."

"லேடீஸ் மாதிரி புடவை சுத்திக்கிட்டு செய்."

"ஐயா."

"பெண்ணாகி பூஜை செய்."

"ஏங்க?"

"ஆண் என்கிற அகந்தை அறு."

"பெண்ணுக்கு அகந்தை இல்லீங்களா?"

"பெண் தன்மைக்கு இல்லை. பெண்ணில் பெண் தன்மை அதிகரித்தல், ஆணுக்குள் பெண் தன்மை வளர்த்தல்."

"கேள், பார்த்தசாரதி."

"தெளிவா இருக்கீங்களா?"

"அவள் கொடுத்த தெளிவு இது."

"பீச்சுல பார்த்த அம்மாவா."

"அவளுக்குள்ளிருக்கற அம்மா."

"இதுனால என்னங்க மாறிடும். இதுவும் ஜாலியா போய்டும் ஜனங்களுக்கு."

"இருக்கலாம் பார்த்தசாரதி. இதுவும் அழியலாம். அழிந்தவை இங்கு அதிகம். அழியும் முன் அது தன் தாக்கம் நிறைவேற்றும்."

"லேடீஸ்னா எல்லா லேடீஸுமா, சில ஜாதி மட்டுமா?'

"ஜாதியே இல்லை இங்கு."

"கொஞ்சம் அழுக்கு அவதியா வந்தாங்கன்னா?"

"குளித்துவிட்டு ஈரத்துடன் வாருங்கள்."

"சுத்தம் பத்தம் பார்க்க வேணாங்களா?"

"சுத்தம் மனசு விஷயம். உன் புத்தி குளிரும் விதமே உடம்புக் குளியல்."

"அது இல்லீங்க. லேடீஸ்ன்னா மாதவிடாய்..."

"தவறே இல்லை. தாராளமாய் வரலாம்."

"உள்ளயா?"

"கருவறைக்குள்,"

"நம்ம கோயில் விதி வேற மாதிரி சொல் வாங்களே."

"இது பெண்களின் கோயில். பெண்களை பெண்கள் வணங்குமிடம், சகலரும் பெண்களை வணங்குமிடம்."

"பெரியவங்க யாரும் தடுத்தா?"

"அம்மா பதில் சொல்வாள்."

"எப்படிங்க?"

"தடுக்கும்போது தெரியும்."

"அப்ப நம்ம வேலை என்னங்க?"

"கோயில் எழுப்புவோம். காத்திருப்போம்."

"கேலியாயிடுமோன்னு தோணுதுங்க."

"ஆகட்டும். அவள் சித்தம்."

"அல்பத்துக்கெல்லாம் அடிதடி நடக்கற ஊரு."

"இதற்கும் வரும்."

"என்னங்க?"

"எல்லாம்."

"சரிங்க, கோயிலுன்னா நாலு சுவரு கட்டினா போதுங்களா? ஏகப்பட்ட சாங்கியம் இருக்குங்களே."

"இங்க இல்லை. அப்படி தேவையெனில் அம்மா ஆள் அனுப்பி நடத்திக் கொள்ளட்டும்.

"ஊர்ல சொல்லி செய்வமா இல்லை, நாமளே கட்டிடம் கட்ட ஆரம்பிச்சுடுவமா...."

"குழாய் போட்டதை ஊருக்கு சொன்னோமோ? நீர் வர, ஜனம் ஓடி வரவில்லையா? நீ ஆரம்பி, ஜனம் வரும்."

"எப்படிங்க வேலை துவங்கறது?"

"பைப்புக்கார வீட்டுக் கிழவர் சொல்வார். நேரம், காலம் எல்லாம் தெரியும் நமக்கு."

"மாடு வித்த காசு பதினெட்டாயிரம் இருக்கு."

"கடப்பாரை, மண்வெட்டி வாங்கு. வேணுமென்ற சாமான்கள் கொண்டுவா. கல்லும் சிமெண்டும் மணலும் வரச் செய்றது என் பங்கு."

துணி மூட்டையைப் பாலு ஐயர் நகர்த்தினார்.

"எவ்வளோங்க?"

"இருபதாயிரம். கடை பைசல் பண்ணிட்டேன்."

பார்த்தசாரதி மௌனமாய் தலைகுனிந்து தரை பார்த்தபடி இருந்தான்.

"என்ன கலக்கம் பார்த்தசாரதி?"

"உங்க சரஸ்வதியம்மா எத்தனை கவலையோட இதுக்கு சம்மதிச்சிருப்பாங்கன்னு யோசிச்சேன்."

"இதுதான் நமது பலம், பார்த்தசாரதி. உன் காசு பார்த்ததும் வயதான உன் தாயார் நினைவு வந்தது. என் காசு பார்த்ததும் உனக்கு என் மனைவியின் கவலை தோன்றுகிறது. இந்த அன்பு பெரிய விஷயம். மகத்தான காரியங்களை இது சாதிக்கும்."

"பெரியவங்க யார்கிட்டயும் போய் கேட்க வேணாங்களா?"

"வேண்டாம் பார்த்தசாரதி. நமது எண்ணங்கள் நகர்வதே அவர்களால்தான்."

"யாரும் உதவிக்கு வந்தா கூப்பிட்டுக்கலாங்களா?"

"தாராளமாய்."

"கேக்கறவங்ககிட்ட சகலமும் சொல்லலாமா?"

"ஒளிவு மறைவு ஏதுமில்லை."

"மரகதம் வரேன்னு சொல்லிச்சு. கலாவதியும் பிரியமா பேசுதுங்க. ஐயா, நேத்திக்கு மரகதம்கூட உட்கார்ந்துக்கிட்டு இருந்தேன்." மேலே பேச முடியாது யோசனையில் மூழ்கினான்.

கலாவதி கதவு திறந்ததும் படியேறி வந்தாள்.

"என்னக்கா, எப்படி இருக்கீங்க? ஒடம்புக்கு முடியலையாமே."

"ஒரே ஒக்காளிப்பு கலாவதி."

"அப்படித்தான் இருக்கும். எதுனா குடிச்சுகிட்டே இருங்க. ரசம் இருக்குதா... சூடு பண்ணித் தரட்டுமா?" பார்த்தசாரதி பக்கம் திரும்பினாள். "என்ன, மரகதத்த பார்க்க வந்தீங்களா? வந்து உட்கார்ந்திருந்தா எப்படி? எதுனா உதவி செய்யறது."

"ஐயோ, அதையேண்டி திட்டற.... கண்ணு சொருகி தூங்கிட்டேன். உட்கார்ந்து விசிறிச்சு."

"விசிறட்டும், ஆண்ட ஆம்பளைதானே."

பார்த்தசாரதி திகைத்தான்.

"ஏன், பயம்மா இருக்கா நான் பேசறது. நானும் மரகதம் அக்காளும் உட்கார்ந்தா உன்னைய பத்தித்தான் பேசறது. நீ சுவரு தாண்டி ஆடினதெல்லாம் சொல்லி ருச்சு. அது உண்டாகியிருக்கிறதுக்குக்கூட நீதான் காரணம்."

பார்த்தசாரதி எழுந்தான்.

"கொஞ்சம் உட்காருப்பா." மரகதம் அவன் தோள் தொட்டாள். "நாலு நாளா நானும், கலாவதியும் தினம் பேசறம். ஊருஉலகம் பத்தி பேசும். உன்னையபத்தி நாங்க பேசறம்."

அவள் மூச்சிரைத்து நிற்க, கூடத்தில் மௌனம் நிலவியது.

"உனக்குக் கலாவதியைப் புடிக்குதா?"

"நல்ல பொண்ணு."

"உன்மேல இஷ்டமா இருக்குது. நான் பேசறேன் டின்னேன். அதைக் கட்டிக்கிறியா?"

பார்த்தசாரதி, கலாவதியை நோக்கி ஊடுருவி னான்.

"நான் ஒண்ணும் நல்லவன் இல்லை கலாவதி."

"நானும் நல்ல - பொண் இல்லை." கலாவதி பதில் சொல்லிற்று. கண் சிமிட்டியது.

"எனக்கு வயசு வேற ஆயிடுச்சு."

"சொன்னாங்க, மரகதம் அக்கா!" மறுபடி கண் சிமிட்டல்.

மறுபடி கூடத்தில் மௌனம் நிலவியது.

"உன்னையே நினைச்சு உருகலை பால்காரரே. உனக்கு சரின்னா எனக்கும் சரி. உன் வயசு, உன் உயரம், அது கணக்கு இல்லை. அக்காளும் நானும் பேசுவோம். வெறும் பொம்பளையா அடுப்படி ஆளா, முறை வாசல் பொம்பளையா இருக்கோமே.... நாமும் நாலு பேருக்கு எதுனா செய்யற இடம் கிடைக்காதான்னு பேசுவோம்."

"வேற மதத்துல சேர்ந்து அங்கி போட்டு, கன்னியாஸ்திரியா போயிடலாம்னுச்சு கலாவதி. ரொம்பநாள் ஆசையாம். கன்னி கழியறதும், கழியாததும் முக்கியமில்லை. கலாவதி நல்ல ஆம்பளை கிடைச்சா குடித்தனக்காரியாகூட ஊருக்கு உதவி செய்ய லாம்னேன்."

"என்ன உதவி?"

"நீ என்ன செய்யறியோ.... அதுக்கு உதவி."

"எனக்கு ஊர்ல ஒரு கோயில் கட்டணும்னு ஒரு கட்டளை கிடைக்சிருக்கு."

"எதுக்குக் கோயிலு?"

"தெரியலை, ஐயர் பலது சொன்னாரு. பொம்ப ளைய கும்பிடணும்ங்கறாரு. அவங்களுக்கு மரியாதை தரணுங்கறாரு."

"அதான் விசிறினியா?"

"விசிறிட்டா உதவியா? காபி போட்டுக் கொடுத்தா கருணையா?" கலாவதி குரல் உயர்த்தினாள்.

"என்ன செய்யணும்ங்கற கலாவதி?"

"அவளை எல்லாத்துக்கும்கூட சேர்த்துக்கப்பா. நீ கத்தி எடுத்து சண்டைக்குப் போனாலும் சரி, கல்லு எடுத்து கோயில் கட்டினாலும் சரி, கூட நிக்க வை. ஒதுக்கி, ஒதுக்கி வைக்காதீங்க. ஒதுங்க ஒதுங்க எனக்கு ஒண்ணும் தெரியாதோன்னு போயிடுது. பொம்பளைக்கு ஒண்ணும் தெரியாதது ஆம்பளைக்கு சௌகரியம். அப்புறம் அடங்கறதுதான் குடித்தனம். அடிக்கறதுதான் ஆம்பளைத்தனம். நல்லதா இது?"

பார்த்தசாரதி விழித்தான்.

33

வாழ்க்கை என்பது விதியின் இழுப்பா.... இல்லை விளைவுகளின் விளைவா... இங்கே எல்லா விஷயமும் முன்கூட்டியே தீர்மானம் செய்யப்பட்டவையோ, இல்லை காற்றுக்குத் தகுந்தபடி, உருவத்திற்கு ஏற்றபடி அலையும் சோப்புக் குமிழியா...

எனக்கு ஏன் இவ்விதம் நேர்ந்தது? ஏன் என்னால் மாடு மேய்த்து, பால் கறந்து வாழ முடியவில்லை? கடற்கரை கிழவியை, பைப்புக்காரர் வீட்டுக் கிழவனை நான் மட்டும் ஏன் சந்தித்தேன்? எதனால் இழுக்கப் பட்டேன்? இந்த ஊரில் எத்தனை ஆட்கள் இல்லை... ஏன் என்னை அழைத்து நெஞ்சுக்குள்ளே ஒளிப்பந்து வீச வேண்டும்? முன் வினையா? பழைய கடனா? கெட்ட குமாரனை பிணைத்துக் கொள்ளும் தந்தை போலவா.

சிரிப்பும் பேச்சுமாய் இருந்த வாழ்க்கை சட்டென்று எப்படி அறுந்து போயிற்று, என்ன நடக்க வேண்டும் என்னால்.... என்ன சிரிப்பு என்னிடம். இந்த இரண்டு பெண் பிள்ளைகளும் இத்தனை இணக்கமாய் தன்னோடு கைகோத்துக்கொள்ளும் காரணம் என்ன? யார் இவர்கள்.... என்ன பந்தம் என்னிடம்...?

இதமாய் இருந்ததால் இணக்கமாய் இருக்கிறார்களா.... இவர்களிடம் இதமாய் இருந்தது நான் மட்டுந்தானா. எது இயக்கிற்று? என்னை நோக்கி இவர்களை அழைக்கும்படி எதற்கிந்த கூட்டு? எவ்விதம் விளைந்தது,?

கண் கட்டி வித்தையாய் கிழவி காட்டியவை எதன் பொருட்டு?

மின்னல் வெளிச்சத்தில் பாம்பைக் கண்டது மாதிரி? உள்ளே நிரந்தரமாய், ஒரு மிரளல் வந்துவிட்டது. பாம்பு இப்போது எங்கே இருக்கிறது.... என்று தெரியாத பயம் வந்துவிட்டது. அமானுஷ்ய சக்திகள் உண்டு என்பது தெரிந்துவிட்டது. என்னை என்ன செய்யும்..... என்ன செய்விக்கும்? பயம் வருகிறது.

பாடிக்கொண்டே புண்ணாக்கு பிசைந்து போடுவது அறவே நின்று மௌனம் கவ்விக் கொண்டுவிட்டது. முகம் இருண்டு வருவதை உணர முடிகிறது. பாலு ஐயர் இதைவிட மோசமான நிலையில் இருக்கிறார். உயிரோடு நெருப்பில் தள்ளியதுபோல தவிக்கிறார். இனி மீள முடியாது என்கிறார்.

பெண்களுக்காக பெண்களை வைத்துக் கோவில் நடத்துவது என்கிறார். இறையுணர்வு கேலியாய் போயிற்று, அன்பு வளர்கிற வழி அடைத்து போய் ஆள் ஆர்ப்பாட்டம் வாழ்க்கையாயிற்று என்கிறார். பெண்கள்

அலைக்கழிய, பிறந்தவையும் பேதமுற்று நிற்கின்றன. விரிசல் பெரிதாகி கொண்டிருக்கிறது.

விரிந்த பானை எதற்கு உபயோகம்? தூக்கி எறி. வேறு பானை கொண்டு வா. மொத்த அமைப்பையும் மாற்று என்கிறார். என்ன வகை மாற்றம் என்பதில் குழம்புகிறார்.

மலை உச்சியிலிருந்து உருண்டு விழுந்து உடைந்த வண்டியை மறுபடியும் மலை உச்சிக்குக் கொண்டு போகிற வேலையாய் வேதனை கவிழ்ந்தது அவருக்கு.

மரகதத்துக்கு உலகத்தில் எவர்மீதும் அக்கறையில்லை. யாரும் லட்சியமில்லை. பார்த்தசாரதிதான் அவள் உலகம். கள்ளக்காதல்தான் இது. சோரம் போகிற பெண்பிள்ளைதான். தேவை நேரிட்டதெனில் கள்ளத்தை உடைத்துவிட்டு காதல் என்று எழுந்து நிற்பாள் அவள். எதையும் தாங்குவாள். சோரமில்லை, இது சேவை என்று பதில் சொல்வாள். என்னை உந்தித் தள்ளுவதே அவள் நோக்கம். எங்கே உந்தித் தள்ளுவது என்பது கவலையில்லை.

இந்தப் பெண் கலாவதியும் இயல்பு தாண்டி பேசுகிறது.... நடக்கிறது.... யாரோ இயக்கிவிட்டது போல் அருகே வருகிறது. ஊருக்கு எதுனா செய்யறவன்கூட ஒன்றுசேர்ந்துக்கணும். அவன்கூட நின்று ஊருக்கு செய்யணும். இங்க நிக்காதே, அங்க நிக்காதே எல்லாம் ஒழியணும். பொம்பளை உடம்பா..... மனசில்லையா.... என் மனசை நான் எப்படிச் சாவடிக்கிறது?

எல்லாரும் உதவின்னு தோணுதே. அதை ஏன் குறைக்கணும். எல்லார்கிட்டேயும் பேசறதுக்கு எது இடைஞ்சல்? உத்து முலை பார்க்கவென்று ஓடணுமா.. பாரேன். மறைச்சு உங்கம்மாளுக்கும் இப்படித்தான்னு

பாரேன். மறைச்சு ஆட்டங்காட்டினா உத்துப் உத்து பார்ப்பான். பாருடான்னு வுட்டுட்டா?"

புரிந்து பேசுகிறதா, இல்லை புரியாத ஏக்கமா? ஒதுக்கி வைத்து இழிவுபடுத்துவது உணர்ந்துவிட்டாளா? இல்லை வாசற்படி வரை விட்டதும் தெருவுக்கு குதிக்கும் ஆசையா? தெருவுக்கு இறங்க அனுமதி கிடைத்ததும் அடுத்த ஊர் போகும் வேட்கையா? இது விடுதலை உணர்வா, இல்லை விட்டுவிட்டுப் பறக்கும் ஆசையா?

ஒருவேளை இந்த இரண்டு பெண்களுமே தவறோ, இல்லை எல்லா பெண்களுக்குள்ளேயும் இது மாதிரி வேட்கை உண்டோ?

ஆமெனில், என்ன பயம்.... யாரிடம். ஏன் வெளிப்படவில்லை?

"கட்டிக்க கட்டிக்கன்னா. மரகதத்தோட எனக்கு தொடர்பு உண்டு."

"தெரியும். என்ன இப்ப..."

"உனக்கு பொறாமை வரலையா?"

"ஏன் பொறாமை? என் ஆள்கூட பேசாத, கலாவதி கெட்ட பொம்பளைன்னு சொல்லியிருந்தா ஏங்க்கா இப்படின்னு கேட்பேன். அவனை என்கிட்டேர்ந்து இழுக்க முடியாதுன்னு சவால் விட்டா கோவம் வரலாம். அதுதானே சொல்லிச்சு, உனக்கு பார்த்த சாரதிதான்னு."

"அப்புறம் போன்னா...."

"என்ன, பாதி உன்னை தின்னுட்டு, மிச்சம் மீதி போடப் போறாங்களா.... மரகதம் அக்காளுக்கு இடுப்பு நோவுன்னா இரண்டு பேரும் வரமாட்டமா? வலிக்கிற

போதுதான் துணையா? சிரிக்கிறபோதும் இருக்க லாமே."

"அப்ப ஏன் பொம்பளைங்க, புருஷன் தப்பா கால் வெச்சா கத்தறாங்க."

"புருஷன்தான் உலகம்னு இருந்தா போச்சே போச் சேன்னு கத்தல் வரும். அவனை விட்டா வேற கதியே இல்லைன்னா மயங்கிப் போவும்."

"அப்போ...."

"யாரையும் நம்பி யாரும் இல்லை."

"யார் உனக்கு இதெல்லாம் சொல்லித் தந்தது?"

"எனக்கா நிறைய தோணும். அக்காளும் நானும் மாறி மாறி கேட்டுக்குவோம்."

"என்ன கேள்வி?'

"ஆம்பளையைக் கண்டா உனக்கு பயமா இருக்கான்னு கேட்டேன். பயம் இல்லை கலாவதி, ஒரு அதிசயம். ஏன் ஆம்பளை, பொம்பளைய சொத்தா நினைக்கிறான்னு அதிசயம் என்று சொல்லிச்சு. நீ சொல்லு, ஏன் பொண்ணு சொத்து மாதிரி ஆயிட்டா?"

"ஒருத்தனுக்கு ஒருத்திதான்."

"அதான் ஏன்?'

"ஏன்?"

"உனக்குப் பிறந்தது உன் பிள்ளைன்னு நீ நம்பணும். நீ நம்புறபடி அவ நடந்துக்கணும்,. அதுக்குத் தான் தாலி, வேலி, கல்யாணம் கற்பு."

"சரிதானே இது?"

"முட்டாத்தனம்?"

"ஏன்?"

"நான் சொல்லி நீ புரிஞ்சுக்க வேண்டிய நிலைமை இது. எந்த வேலியும் தாண்டி எதுவும் நடக்கலாம். இது தான் உன் பிள்ளைன்னு நான் சொல்லறது கேட்டுக்கற தலையெழுத்து உனக்கு."

"ஆமாம்."

"எவ்வளவு பெரிய குறை.... படைப்புல எவ்வளவு பெரிய வஞ்சனை, உன் பிள்ளைதான் இதுன்னு உனக்கு ஏன் தெரியலை? ஏன் பொம்பளைய கேட்கற? எப்படி அவளை நம்புறே?'

"வேறவழி..."

"ஆங்? அப்படி கேளு. வேறவழி என்ன? வழியில்லா வழிக்கு..... வாழ்க்கை மாறிப் போச்சுது புரியுதா? வேற வழியில்லாததை நம்புறதாவது புரியுதா? நீ நம்பறதுக்கு என்னை நெருப்புல வச்சுட்டேன்னு புரியுதா?"

"புரியுது!"

"ஏன் படைப்புல அது இல்லை. உன் பிள்ளைன்னு உனக்கு எதுவும் காட்டலை,"

"தெரியலை."

"நீ முக்கியமில்லை. நான் முக்கியம். அவன் எம் பிள்ளை, இவ எம் பொண்ணு. என் உடம்பிலேர்ந்து இவங்க பிரிஞ்சதை எத்தனை பேர் வேணும்னாலும் பார்க்கலாம். சாட்சி சொல்லலாம். உனக்கு சாட்சி யில்லை. வந்த பிள்ளைக்கு அப்பன் காலைல பார்த்த பால்காரனா, பகல்ல வந்த பிச்சைக்காரனா, ராத்திரி வந்த புருஷனா? யார் வேணா இருக்கலாம். ஏன்

இப்படிப் பண்ணுச்சு இயற்கை? ஏன்னா நீ முக்கிய மில்லை. நான் முக்கியம். பொம்பளை முக்கியம்." கலாவதிக்கு மூச்சிரைத்தது.

மரகதம் தொடர்ந்தாள்...

"பொம்பளைய நம்பி, உன் பிள்ளை, உன் பொண்ணுன்னு இருக்கிறது உன் நிலைமைன்னா, நீ போட்ட சட்டமே தப்பு. அது சரியா வர, நீ கட்டின கதை, வுட்ட பொய். எல்லாம் தப்பு."

"எம்பிள்ளைன்னு உனக்கு ஏன் தோணுச்சு?"

"என்ன மாதிரியே ஒரு ஆளு இங்க வேணும்."

"ஏன்?"

"நான் சாவக் கூடாது."

"அதெப்படி முடியும்?"

"முடியும். நான் செத்தாலும் எனக்குப் புரிந்தது. என் மாதிரி ஒரு பால்காரன் இந்தத் தெருவில் இருப்பான். அந்த பால்காரனுக்கு ஒரு பால்காரன். பார்த்தசாரதிக்கு சாவே இல்லை. தெருவுல போற அந்தப் பிள்ளைய இழுத்து, மாட்டுக்கு சுரப்புக்கு சொல்லிக் கொடு. உன் கூடவே வச்சுக்க. பால்காரனா வரமாட்டானா?"

"என் ரத்தம் அவனைவிட நல்லா சுரப்பிடிக்கும். தானே எழுந்து மாடு ஓட்டும்."

"இல்லை, உன்னை ஐயர் வீட்டுக்கு அனுப்பிட்டா துன்னூறு பூசி மந்திரம் படிக்கும். விபூதி பொட்டலம் போடும். வளர்ப்பு ஆளை மாத்தும்."

"அது அப்ப பேச்சு இல்லை கலாவதி. ஆம்பளைக்கு ஏன் தன் பிள்ளைன்னு சொல்லிக்க ஆசை வருது."

"அப்படித்தான் சொல்லிக் கொடுத்தாங்க."

"ஏன்?"

மூவரும் பேசாதிருந்தார்கள். பார்த்தசாரதி எழுந்து ஐயர் வீட்டுக்கு வந்தான். உள்ளே நிலைக்கு வந்து போயிருந்தான். யார் தனக்கு தகப்பன் என்று யோசித்தான். யார் வேண்டுமானாலும் இருக்கலாமே என்று பயந்தான். அம்மா சொல்லி, அப்பா.... அம்மா பொய் சொல்லியிருந்தால் யார் அப்பா? சிந்தப்பாவா, பைப்புக்காரரா, ஒரு வேளை அந்தக் கிழவனோ, இல்லை யாரேனும் பிச்சைக்காரனா.... அப்பா எப்படி என்னை நம்பினார். என்ன ஆதாரம்? எங்கே எழுதியிருக்கிறது? படைப்பு ஏன் பிறப்பை ரகசியமாக்கிவிட்டது.

ஐயர் பதில் சொன்னார்.

'நிலம் பிரிக்கப்பட்டது. என் நிலம், என் ஆறு, என் தேசம், என் மலை, என் காடு என்று உடைமையாய் பேசப்பட்டது மனிதன் தான் கொண்டு வராத பொருளை, தனக்கு உரிமை இல்லாத பொருளை தன்னுடையது என்று தவறாக நினைத்தான். தன் நிலம், தன் தேசம், தனக்குப் பின் தான் பெற்றதற்கு என்று போர் செய்தான். நிலம் கொள்ளையடிக்கப்பட்டது. கொள்ளை போயிற்று. புத்தி வரவில்லை. தனக்குப் பின் தான் ஆண்டது, தன் பிள்ளைக்கு என்ற புத்தி வர, தன் பிள்ளை எது என்கிற பயம் வந்தது. பயத்தில் சட்டங்கள் போடப்பட்டு பெண் சிறையில் வைக்கப்பட்டாள். கற்பு பூட்டால் பூட்டி வைக்கப்பட்டாள். பூட்டை அவள் உடைக்காமல் இருக்க கதை சொன்னான். புத்தி கலைத்தான். நீ தெய்வம், நீ மழை பெய்யென்றால் பெய்யும். நீ சூரியனை நில் என்றால் நிற்கும்."

"ஐயோ! நீ இடையே செத்துப் போனால் மரணம் எவருக்கும் எப்போது வேண்டுமானாலும் வருமே!" பெண் கதறினாள்.

"நீயும் செத்துப்போ.... என்னை எரிகிற நெருப்பில் நீயும் குதி. என் புதை குழிக்குள் நீயும் உயிரோடு படு. அப்படிச் செய்தால் உனக்கும் உன்னால் எனக்கும் சுவர்க்கம் நிச்சயம்."

"உண்மையாகவா?"

"உண்மை. அப்படிச் செத்தவளுக்கு சிலை உண்டு. நித்தியபடி பூஜை உண்டு."

"நான் சாக மறுத்தால்...."

"விபசாரி."

"சாகவும் மனசில்லை. விபசாரி என்கிற கேலியும் தாங்க முடியவில்லை."

"ஒன்று செய், தலையை முண்டிதம் செய். கைமைக் கோலம் பூண். உடலழகு ஒழி. உபவாசம் இருந்து உடம்பைக் குறை. உருக்குலைந்து உயிரோடு இரு."

"ஒன்றா இரண்டா, மூன்று, நாலா எத்தனை ஆயிரம் சவுக்கடிகள். எவ்வளவு விலங்குகள். எத்தனை சித்ரவதைகள் எதனால் இது.... ஏன் நடந்தது?"

நிலத்தை உடைமை என்று சொல்லியது தவறு. உடைமையை எவருக்கும் தராது தான் உற்பத்தி செய்வதற்கே தரவேண்டும் என்கிற வெறி. நிலம் உன் உடைமையும் இல்லை. இது உன் பிள்ளை. உன் உற்பத்தி என்கிறதுக்கு ஆதாரம் இல்லை.

பொய்யில் எழுந்த மாயை கற்பு. மனிதன் விதித்த வேதனை சட்டம். உண்மைக்கெதிரே எழுதிய பெரும்

பொய். ஓர் உயிரினம் தனக்கே பூட்டிய விலங்கு. ஆணென்னும் மடமையின் ஆத்திர விளைவு.

வயல்களைத் தாண்டி புல்வெளியில் நட்ட கல்லுக்கு அருகே பார்த்தசாரதியும் ஐயரும் கலக்கத்துடன் வாழ்வியல் சிந்தனையுடன் உட்கார்ந்திருந்தார்கள்.

"இப்ப என்ன செய்யணும் ஐயர்?"

ஐயர் வெகு தொலைவில் லயித்திருந்தார்.

"தெரியலை பார்த்தசாரதி, எதுவும் தெரியலை."

"பொம்பளைங்களுக்கு ஏக கஷ்டம் தந்திருக்கோம்னு புரியுது."

"உண்மை. இது பெண்களுக்கேகூட புரியாத உண்மை."

"இனிமே இதை எதிர்க்க முடியுமா நம்மால்?"

"வெட்டிப் போடுவார்கள்."

"வேற வழி தெரியாதுங்களா?"

"வருது."

"எதுங்க?"

"சாமி வருது..."

"யாருங்க"

அதோ கை காட்டினார். அந்தக் கிழவன் அந்தி சிகப்புக்கு முன்னே உயரமாய் வெகு தொலைவில் நின்றபடி அவர்களைப் பார்த்தான்.

34

நடந்து வருமா? அது கை வீசி கால் எடுத்து வைத்து நடக்கத் தெரிந்த அந்தாளு முதுகு நிமிர்த்தி நிற்க முடியுமா? வழித்தடம் தெரியுமா? கல்லோ.. புல்லோ தடுக்காமல் இடம் பெயர முடியுமா? பார்த்தசாரதி வியப்புடன் அந்தக் கிழவரைப் பார்த்தான்.

எழுந்து பார்த்தசாரதி மண் துகள் படர, கிழவரை நோக்கி ஓடினார். ஓடுகின்றபோதே ஒரு பயம் வந்தது. ஒரு வேளை இது அந்தக் கிழம் இல்லையோ.... அப்படி வருவது பார்த்துவிட்டால் ஊர் பின்னாலேயே வருமே.... பைப்புக்காரராவது பின்னால் நிற்பாரே. யாருமே காணமே.... அந்தி நேரத்தில் ஊர்ஜனம் வாசலில்தானே உட்கார்ந்திருக்கும். யார் கண்ணுக்கும் படாது எப்படி வரமுடியும்? ஒருவேளை உடம்பை அங்கு விட்டு விட்டு வெறும் உயிரால் வந்திருக்கிறதோ.... இத்தனை அருகில் அதை நோக்கி ஓடுவது சரியா.... பயம் வந்தது. ஓடுவது நிறுத்தி அருகே மெல்ல நடந்தான். தலைகேசம் காற்றில் அசைய, கிழவர் அவனைத் தாண்டி கல்லை நோக்கி பார்த்துக் கொண்டிருந்தார்.

ஐந்தடி தொலைவில் வெயில் அற்ற வெளிச்சத்தில் அவரைத் தெளிவாய் பார்க்க முடிந்தது.

"சாமி..." குரல் தழுதழுப்பாய் வெளியேறிற்று.

"என்னடா...." கண்கள் கேட்டன.

'ஒண்ணுமில்லை சாமி!' மனசுக்குள்ளேயே பதில் சொன்னான்.

'வா' கை நீட்டியது.

அருகே போக, அவன் தோள் பற்றிக் கொண்டது. கல் திசை நோக்கி நடந்தது. கிச்சலி இலையை கசக்கிப் பார்த்த வாசனையாய், கொஞ்சம் நெடியாய் ஒரு மணம் அவரிடமிருந்து வீசிற்று. கை தோளில் சாமந்தி மாலை மாதிரி கனமே இல்லாமல் இருந்தது. நடையில் பிசிறில்லை. ஆனால், கணுக்கால் ஆழ ஆற்றில் கால் வைப்பது போல் ஒரு நிதானம். பூச்சி பொட்டு மிதிச்சி சாவடிக்கக் கூடாது என்பது போல் ஒரு நடை. புல்லு முதுகு உடைச்சிடக் கூடாது என்கிற மாதிரி ஒரு கவனம். மேடேறிற்று. கல் அருகே போய் உற்றுப் பார்த்தது. கல் தலையில் கைவைத்து பூமிக்குள் அழுத்திற்று. கல் இன்னும் உள்ளே போனது போல் ஒரு பிரமை. இல்லை அப்படியே இருந்துதா தெரியவில்லை. திரும்பி இடம் மொத்தமும் சுற்றிப் பார்த்தது. கல்லுக்கருகே பாலு ஐயர் பக்கத்தில் சம்மணம் கட்டி உட்கார்ந்து கொண்டது.

பாலு ஐயர் மரியாதைக்குக்கூட எழுந்து நிற்க வில்லை அவமரியாதையாகவும் பார்க்கவில்லை. எந்த நேரத்தில் கிழவரை நோக்கி ஓடினாரோ.... அதே நேரத்து தொடர்ச்சியாய் இருந்தார். ஒரு ஆள் இடையே வந்ததும், பேச்சுக் கலைந்ததும் பார்க்காது உட் கார்ந்திருந்தார்.

"நீ சொல்லறது சரி. அதான்!" கிழவர் வாய் திறந்து பேசிற்று. முற்றி முறுகின குரல். நாக்கு தடித்தபோது வளையாது தழுதழுக்கப் பேசுவோமே, அது மாதிரி உச்சரிப்பு.

பாலு ஐயர் திரும்பினார்.

"அம்மா கோயில்தான இது." பார்த்தசாரதி சந்தோஷமும் வியப்புமாய் அவரைப் பார்த்தான்.

"பொம்மை பண்றதும், பூஜை பண்றதும் பெரி சில்லை சாமி. நெருப்பு மிதிக்கறதும் கூழ் ஊத்தறதும்

எல்லா இடத்துலயும் நடக்குதே!" ஐயர், கிழவரை வினவினார்.

"அது இல்லை. அம்மா மட்டும்தான்."

"அம்மா மட்டும்னா?"

"வேற யாரும் இல்லை. அம்மா மட்டும்தான் அவளை தலைல வச்சுக்கிட்டு ஆடணும். எல்லாரும் அம்மாவுக்கு துணையா நிக்கணும்."

"ஐயா! புரியலையே நீங்க பேசறது..." ஐயர் கை விரித்தார்.

"அம்மாவுக்கு அப்பா கிடையாது."

"புரியலையே?"

"அம்மாதான் முதல், அப்புறம்தான் எல்லாம்."

ஐயர், கிழவரை உறுத்துப் பார்த்தார்

மனசு மொத்தமும் குவித்து அவர் பேச்சில் லயித்தார்.

"எந்த அம்மாவுக்குமா?"

"ஆமா...."

"எல்லா அம்மாவுக்கும் அப்பா இல்லை. அம்மாதான் முதல். அவளைத்தான் தலைல தூக்கி வச்சுக்கிட்டு ஆடணும்." அதாவது உள்ளே மின்னலடித்தது.

'அம்மா' என்கிறது பெண்ணா.... பெண்ணுக்கு எந்த உறவும் இல்லையா?'

அவர் எண்ணம் பிரித்து படித்தது போல பேசினார்.

"நாமெல்லாம் அம்மாவுடைய குழந்தைங்க."

"அதாவது."

"அம்மா நிசம். அப்பா பொய்,"

அதாவது.... ஐயருக்குப் புரிந்தது. அதிர்ச்சியானார்.

"பொண்ணுக்குப் புருஷன் இல்லைன்றீங்களா?" பார்த்தசாரதி அடிவேர் தொட்டான்.

"அம்மாவுக்கு குழந்தைங்க போறாதா... புருஷன் எதுக்கு?"

"விதை, விதைக்குள்ள முளை. முளை கிளை விட்டு வெளியே வந்ததும் நாலு நாள்ல விதை விழுந்துரும். அஞ்சா நாள்லேர்ந்து தானா செடி முளைக்கும். எங்கம்மா வளர்ப்பா..." கிழவர் பூமியைத் தட்டினார்.

"இரட்டை விதைத் தாவரம்..." கிழவர் முணு முணுத்தார்.

"மனுஷாள்கூட அதான்!" கிழவர் ஆமோதித்தார்.

"அதாவது புருஷனே இல்லாத வாழ்க்கையா?"

"அப்படித்தான் இருந்தது இங்க." மறுபடி பூமியை அடித்தார். "பூமில விதை யார் நட்டது? யார் நட்டால் என்ன? நாய் உரசி ஒரு விதை.... மாடு நசுக்கி ஒரு விதை.... மனுஷன் பிரிச்சு ஒரு விதை.... காக்கை கொத்தித் தின்ன மிச்சம் ஒரு விதை... எப்படி நட்டால் என்ன.... என்ன முளைக்குது... எப்படி வளருது."

"அதாவது, தாய் வழிச் சமூகம்." ஐயர் அடிக் குரலில் பேசினார்.

கிழவர் ஆமென்று தலையசைத்தார்.

"என்னாங்க அது?" பார்த்தசாரதி ஆவலுடன் கேட்டான்.

"தாய்தான் முதல். தந்தையென்று யாரும் இல்லை."

"எப்படிங்க அது?"

"அப்படித்தான் இருந்தது." கிழவர் குரல் கொடுத்தார்.

"அப்பன் பேர் தெரியலைன்னா...."

பார்த்தசாரதி பாதி பேச்சில் யோசித்தான் நாம் மரகதம், கலாவதியோடு பேசியதுதானே...

ஆமென்று கிழவர் தலையசைத்தார்.

"எப்படிங்க இது.. நல்லா இருக்குமா?" பார்த்தசாரதி ஐயரை வினவினான்.

ஐயர் கவலையானார்.

"அப்படித்தான் இருந்தது."

"புருஷனே இல்லாதயா?"

"ஆண்கள் உண்டு பார்த்தசாரதி. புருஷன் இல்லை. பெண்ணே முதல். அவள் குழந்தை எவருக்குப் பிறந்தது என்று கேள்வியில்லை." ஐயர் விளக்கினார்.

"யார் ஆதரிப்பார்கள்?"

"எல்லோரும்."

"எப்படி ஐயர்?"

"குழந்தை என்பது பொதுச் சொத்து. அதை வளர்க்க வேண்டியது பெற்றவள் கடமை. அதற்கு உதவ வேண்டியது எல்லா ஆண்களும்."

"எப்படிங்க அது.... ஆம்பளைக்கு பொம்பளை மேல பிடிப்பு விட்டுப் போயிடாதா?"

"தனக்குப் பிள்ளை பெற்றவளிடம் மட்டும்தான். இப்போது ஆணுக்குப் பிடிப்பு இருக்கிறதா?"

"இல்லீங்க."

"எல்லா பெண்கள் மீதும் ஆணுக்கும் ஆசை உண்டு."

"வரைமுறை இல்லாது போயிடுமே?"

"இப்போது என்ன வரைமுறை இருக்கிறது. இருக்கிறது போல் ஏமாற்றுகிறோம்."

"எல்லா பொம்பளையும் எல்லா ஆம்பளைக்கும் உடைமையா?"

"அவள் விருப்பம். அவள் தேர்வு. எவனால் குழந்தை என்பது முக்கியமில்லை. குழந்தை என்பது முக்கியம்."

"இது என் குழந்தை இல்லைன்னா எனக்கு ஈடுபாடு வராதே?"

"இது உன் குழந்தை என்பது படைப்பு ரகஸ்யம். உனக்கு இறுதிவரை தெரியாத விஷயம்."

"ஆம்பளை நகர்ந்துட்டா, பொம்பளை கஷ்டப்பட மாட்டாளா?"

"விட்டு எங்கே போவான். இங்கதானே இருக்க வேண்டும். எல்லா இடத்திலும் பெண் இருக்கிற நாள் வரை ஏதோ ஒரு பெண்ணிடம் நிற்க வேண்டுமல்லவா.... அவளிடமும் இவன் மட்டுமே என்கிற கட்டாயம் இல்லை. பெண் தலைவி. ஆண் அணுக்கள். அவளுக்கு ஊழியம் செய்பவன்."

"எப்படிங்க இது..." பார்த்தசாரதி குழம்பினான்.

"வயசான பொம்பளைய எவனும் சீண்ட மாட்டானே?"

"அவள் மகன் அவளைப் பார்த்துக் கொள்வான்? காப்பாற்றுவான். அப்பா இல்லை.... அம்மா உண்டா. கணவன் இல்லை. மகன் உண்டே. பெண் எப்போதும் அநாதை இல்லை, எல்லோரும் அவளுக்கு ஆதரவு."

"சரிங்க, புரியது.... இப்ப என்ன அதுக்கு?"

"அதான் இது." கிழவர் கல்லை கை காட்டியது.

"எது?"

"இந்தக் கோயில்ங்கறது." ஐயர் சொன்னார்."

"இந்தக் கோயில்ல அதைச் சொல்றமா?"

"ஆமாம்..."

"இப்படியா?"

"ஆமாம்..."

"இந்த ஊர்லயா?"

"ஆமாம்..."

"அடிச்சே கொன்னுடுவான்."

"அப்படித்தான் இங்க இருந்தது." கிழவர் மறுபடி தரையில் தட்டினார்.

"காட்டுமிராண்டின்னுட்டா?"

"இப்பத்தான் அப்படி!"

"எப்படி?"

"நீ சொன்னபடி....

"எனக்கு சரியாப்படலைங்க...."

"கேள்வி கேள் பார்த்தசாரதி."

"யோசி. உனக்குள் கேள்வி மேல் கேள்வியா கேட்டு யோசி."

"இப்ப இருக்கற வாழ்க்கலை என்ன தப்புங்க?"

"அடக்கி ஆள்கிறாய்."

"யாரை?"

"பெண்ணை..."

"அதனால என்ன...?"

"அடக்கப்பட்டது அலறுகிறது. அழுகையோடு வாழ்கிறது. தந்திரம் செய்கிறது பொய் சொல்கிறது. ஆணை எப்படியெல்லாம் ஏமாற்றலாம் என்கிற கணக்கே வாழ்க்கையாகிறது. தனக்குப் பிறந்ததை மறந்துவிட்டு, தன்னைக் காப்பாற்றிக் கொள்ள ஆணிடம் நாடகம் போடுகிறது. திட்டம் தீட்டுகிறது. ஆண் வாழ்க்கையைச் சிக்கலாக்குகிறது."

"அவுத்து விட்டுட்டா..."

"யாரும் யாரையும் அடக்காதபோது அன்பு தானாய் வரும். எவரையும் எவரும் சார்ந்திராதபோது எல்லாம் நல்ல முறையில் இருக்கும்"

"கற்பனையா இருக்குங்க."

"அப்படித்தான் இங்க இருந்தது."

"நிசம்மாவாங்க அவரு சொல்றது?"

"நிஜம். அப்படித்தான் இருந்தது பார்த்தசாரதி. தாய்வழிச் சமூகம். வேளாண்மையும், குழந்தை வளர்ப்பும் வீட்டுப் பொறுப்பும் பெண்ணுக்கு..."

"அப்ப ஆணுக்கு?"

"அவனுக்கு உழைத்தல்"

"யாருக்கு?"

"பெண்ணுக்கு உழைத்தல். உதவி செய்தல். அவளுக்கு இணக்கமாய் இருத்தல்."

"பொம்பளை வந்தா எழுந்து நிக்கணுங்களா?"

"செய்யேன்"

"ஐயோ.... தலை விரிச்சு ஆடிடாதுங்களா?"

"அடக்கப்பட்டதுதான் ஆடும். பிடிக்கப்பட்ட முதலை வாலை சுழற்றும். குழியில் விழுந்த யானை திமிறும். கூண்டில் இருந்த சிங்கம் சீறும்."

"எழுந்திருக்க முடியாதுன்னுட்டா?"

"பெண் அண்மை கிடைக்காது."

"போகட்டும்."

"துறவி, துறந்தவனையும் பெண் நேசிப்பாள்."

"என்னங்க இது.... உங்களுக்கு சரின்னு படுதா இது. இப்படித்தான் இருந்ததுன்னு சொல்லாதீங்க இனிமே முடியுமா?'

"இங்கு பிரச்சினை தீர இதுவே வழி."

"என்ன பிரச்சினை?"

"எல்லா பிரச்சினையும்."

"ஐயா, தனக்குப் பிறந்த குழந்தைங்கறதனாலதான் ஆம்பளை வீட்ல இருக்கான். அதுங்க மேல் உள்ள பாசத்தால தாலி கட்டினவளை கவனிக்கிறான். இந்த பொம்பளை தனக்கு மட்டும் இல்லை. இந்தக் குழந்தையும் தனக்குப் பிறந்தது இல்லைன்னா"

"எங்கே போவான், பார்த்தசாரதி."

"ஆம்பளைங்க, தனியா ஒரு குழுவா இருந்துடலாம்."

"இயலாது."

"தகப்பன் கிட்ட ஒழுங்கா இருந்தான்னுதானே தாயைப் பிள்ளை மதிக்கிறான்."

"இல்லையெனில்?"

"தள்ளிடுவான்."

"எங்கே தள்ளி, எங்கே போக...."

"இது நல்லதுக்கா?'

"உண்மையான விடுதலை."

"யாருக்குங்க?"

"பெண்ணுக்கு. பெண்ணால் ஆணுக்கு"

"இத ஊர்ல போய் பேசப்போறமா?"

"ஆம்...."

"எப்பங்க?"

"கோயில் கட்டியதும்."

"இப்ப சொன்னா என்னங்க?'

"கட்டியதும் கூடுவார்கள்..."

"கட்டின பிறகு கேட்பாங்க."

"செய்வோம்."

"ஊர் ஒத்துக்காது."

"தெரியும்."

"கிழவரு இதுவா சொல்றாரு."

கிழவர் தொலைதூரம் பார்த்து உட்கார்ந் திருந்தார்.

"ஏங்க, இடம் விட்டு இங்க வந்துட்டாரு."

"இனிமே இங்கதான்."

"இந்த வெட்டவெளியிலயா?"

"கோயில் கட்டுவோம் சீக்கிரம்."

"கொட்டா மாதிரியா?"

"சுற்றி சுவர், மேல கூரை இப்போதைக்கு."

"எப்போ கோயிலாவும்?"

"ஜனங்க ஒத்துக் கொண்டதும்."

"ஒத்துக்குமா.... மடக்கி மடக்கி கேள்வி கேட்குமே..."

"சொல்லுவோம்..."

"கிழவருக்கு சாப்பாடு..."

"தேவையில்லை..."

"இங்க ஏன் வந்துட்டாரு?"

"நமக்குத் துணையா..."

"ஊர் அடிக்க வந்துடுமே?"

"இவரை அடிக்க முடியுமா பார்த்தசாரதி?"

"இவரு இத்தினி சக்தி வெச்சிட்டிருந்தது இது சொல்லவா?"

"ஆமா..."

"ஏங்க?"

"இதுதான தீர்வு."

"எப்படிங்க?;'

"வேறு எதுவும், இங்கு எதையும் தீர்க்கவில்லை."

"ஐயா..."

"நானும் பயப்படுகிறேன். பார்த்தசாரதி, இனி வேறுவழியில்லை. எல்லா வழிகளும் அடைந்து விட்டன. எல்லாம் பொய்யாகிவிட்டது. இயற்கைக்கு எதிராய் போய்விட்டது."

"ஒருத்தனுக்கு ஒருத்தி இயற்கைக்கு எதிரா?"

"ஆமா...."

"எப்படிங்க?"

"யோசி...."

"கடவுளே..."

"ஒருவேளை இங்கு ஏதும் பயப்படும்படி நடந்தால்.... பார்த்தசாரதி நீ ஓடிவிடு."

"ஏங்க?"

"உன்னுள் கேள்வி விதைத்தாகிவிட்டது. அது புழுங்க, புழுங்க பதில் வளரும். கேள்வி உதிரும். பதிலை வளர்த்து வா. நீ நல்ல பூமி. உன்னால் வளர்ந்த பயிர் பெரிதாகும். பல பயிர்கள் வளரும்."

"கலாட்டா ஆவும்ன்றீங்க?"

"ஆகலாம்."

"எதுவும் வேணாம்னு ஒதுங்கிட்டா?"

"இனி முடியாது."

"ஏங்க?"

"நெருப்பு எரிய ஆரம்பித்து விட்டது."

"எங்க ஐயர்?"

கிழவரை நோக்கி கை காட்டினார்.

கிழம் விறைப்பாய் உட்கார்ந்திருந்தது. இன்னும் முதுகு நிமிர்த்தி சம்மணமிட்டது. மெல்ல இருள் கவியும் பொழுதில் சிவந்து சரியும் அந்தியை உறுத்துப் பார்த்தது. கண்ணின் வெள்ளையெல்லாம் சிகப்பு ஏறியது. மெல்ல கண்களிலிருந்து ரத்தம் வழிந்தது.

"ஐயா...' பார்த்தசாரதி துடைக்க கை நீட்டினான்.

ஐயர் தடுத்தார்.

"ஏங்க?"

"இது இங்கே இனி நிரந்தரம்."

"அப்படின்னா?"

"ஜீவசமாதி."

"ஐயா..." பார்த்தசாரதி அலறினான்.

"அமைதியாய் இரு பார்த்தசாரதி."

பட்டென்று தேங்காய்மட்டை பிளந்ததுபோல சப்தம் கேட்டது. இன்னும் இருட்டியது. கைரேகை தெரியும். வெளிச்சம் உச்சியிலிருந்து கிழவருக்கு ரத்தம் வந்தது.

மேல் வஸ்திரத்தால் அவர் சம்மணமிட்ட காலை தொடையில் இறுக்கி ஐயர் கட்டினார்.

இன்னும் இருட்ட இருட்ட கிழவர் நீல வெளிச்சமாய் எழுந்தார். உடம்பு அப்படியே இருந்தது.

காற்று சுழன்று அடித்தது. மண் வீசிற்று. திமிறி எழுந்து மண்ணை உருட்டி தூண் மாதிரி வெகு உயரம் எழுப்பிற்று. நீல வானம் பின்னணியில் தூசு உயரமாய் நிற்பது தெரிந்தது. சரக்கென்று மேற்கு நோக்கி தூண் தூசு நகர, இடம் மொத்தமும் இருட்டயிற்று.

பார்த்தசாரதியும், ஐயரும் எழுந்து கிழவரை வணங்கினார்கள். மெல்ல மேடுவிட்டு கீழே இறங்கினார்கள்.

"பார்த்தசாரதி...."

"அவர்கள் இதற்கு என்ன சொல்வார்கள்?"

"யாருங்க...?"

"மக்கள். நீ ஓடிப்போ பார்த்தசாரதி."

"எப்பங்க?"

"வேளை வரும்!" ஐயர் ஊர் நோக்கி நடந்தார். பார்த்தசாரதி குழம்பியபடி அவருடன் நடந்தான்.

காற்று கல்லில் தேய்த்து தேய்த்து ஒரு படிமம் வரைந்தது. தலை, வளைந்த கைகள், வளைந்த கால்கள்.

மறுநாள் ஊர் கூடி கிழவருக்கு சடங்கு செய்யும் போது ஒருவன் கேட்டான்:

"என்ன பொம்மைங்க கல்லுல?"

ஐயர் 'தாய்' என்றார்.

35

மஞ்சள் பொடியும் உப்புக் கற்பூரமும், வாசனை விபூதியும் நிரப்பிய பையில் கிழவரை வைத்து அவர் மறையும் வரை மேலே கொட்டி, அப்படியே சதுரக்குழி கட்டடத்தில் இறக்கினார்கள் கட்டடத்திலும் இவைகளை நிரப்பினார்கள். மேலே கருங்கல் மூடிக் கட்டடம் எழுப்பினார்கள்.

ஊர் கைகோத்து காரியத்தில் இறங்கி கவனமாய் செய்தது. "கபாலம் உடைச்சி ஆவி போறதுன்றது

சாதாரணம் இல்லை. பெரிய சாமியார்களுக்குத்தான் வருமாம் இப்படி சாவு, அப்படி உயிர் போகலைன்னா தேங்காய் தலைல அடிச்சு உயிர் போக வைப்பாங் களாம்."

"உடம்புல ஒரு சின்ன வாட்டம் கூட இல்லை. ஊதின மாதிரிகூட இல்லை. தூங்கறாப்பலிருந்தது. ஆனா, இவரு எனக்குத் தெரிஞ்சு சித்து ஏதும் செய்யலையே."

"ஏன் செய்யலை? நம்ம ஊரு காத்துல விபூதி, பொம்மை வரவழைச்சாதான். நம்பும். இவரு பேசாத பேசறவரு."

"இந்தக் கல்லு கொண்டாந்து நட்டுருக்காங்களே, அது ஏன்?"

"அவரு கட்டளையாம்."

"எங்கிருந்தது கல்லு?"

"நம்ம தண்ணி பைப்பாண்ட கிடந்துதாம். பார்த்தசாரதி சொல்லமாட்டேங்கறான். வரப்புல கோடு கிழிச்ச மாதிரி கிழிச்சதும் பள்ளம் வந்துடுச்சாம்."

"டூப்பு..."

"ஒரு ஆளு தோண்ட முடியுமா? அதுவும் ஒரே ராத்திரில நூறு அடி தூரம்."

"அதும் கஷ்டம்தான்."

"சரி, சும்மா ஏம்பா கேள்வி கேட்டுக்கிட்டு. ஊர் பெரியவரு போயிட்டாரு. கும்புட்டுக்க" அழுகை இல்லை விசும்பல் இல்லை. "கோவிந்தா கோவிந்தா" என்று கிழவரை உள்ளே வைத்தது கூட்டம். கல் மூட, பைப்புக்காரர் மட்டும் 'தெய்வமே தெய்வமே!' என்று அலறி தரையில் விழுந்து வணங்கினார்.

"லிங்கம் வச்சு கோயிலா எழுப்பிடணும்."

"அப்படி இல்லையாம் பலகை மேல சக்கரம் வரைஞ்சு பூசையாம். இந்தக் கல்லுதான் அம்மனாம்."

"தாய்னு ஏதோ சொன்னாரே ஐயரு."

"அதான்யா அம்பாளு."

"பேர் வேணாமா?"

"தாயம்மான்னு வச்சுடுவோம்."

"ஆளுக்கு அஞ்சு பத்து போடுங்கய்யா. இந்த மாதிரி இடத்துல கோயில் கட்டறதுக்குன்னு ஆளுங்க இருக்காங்க. நான் கூப்பிட்டு வரேன்."

"அஞ்சு பத்துல முடிஞ்சுடுமாய்யா இது?"

"மெயின் ரோட்ல வண்டி மடக்கி உண்டி குலுக்கணும்."

"இவரு போட்டோ இருந்தா நல்லா இருக்குமே."

"பார்த்தசாரதி ஆளு கூட்டிக்கிட்டு வந்து எடுத்தானே அவன் கிட்ட கேட்கணும்."

"ஏம்பா... ஊர்ல இருக்கறவனுக்கு வேலை வெட்டி இல்லைன்னு நினைப்பா... வண்டி மடக்கி உண்டி குலுக்கற வேலையெல்லாம் என்னால முடியாது."

"உடனே ஏன்ய முடியாதுன்னு வாய வைக்கிற.... அஞ்சு அஞ்சு பேரா உண்டி குலுக்கணும். வேலை செய்யற இடத்துல பேசி துட்டு வாங்கணும்."

"முதல்ல போட்டோ கேளு."

பார்த்தசாரதிக்கு முன்னால் அன்று மாலையே போட்டோகிராபரை மடக்கி, ஊர்ல பல பிரதிகள் வாங்கிக் கொண்டது.

சென்னை நகரம் பூராவும் அலைந்தது. காசு திரட்டி கோயில் எழுப்பி கோயில் ஓரம் கடை போட்டு கூட சம்பாதிக்க ஆசைப்பட்டது. பொட்டை வெயில் கோயிலுக்கு அருகே கூரை போட்டு, கட்டடம் கட்டி, நிலத்தை துண்டுபோட்டு ஆக்கிரமித்துக் கொண்டது. தினசரி பத்திரிகைகளுக்கு வலிய போய் செய்தி சொல்லிற்று.

ஐயருக்கு அதிக மரியாதை கொடுத்தது. பார்த்த சாரதியைத் தலைவர் என்று அழைத்தது. சுற்றுச் சுவர் எழுப்பி மேலே கூரை வேய்ந்து தந்தது.

ஐயர் கேள்வி வரட்டும் என்று பொறுமையாய் இருந்தார். ஒரு பகலில் கார் வண்டி மடக்க, அதில் உள்ளவர் படம் பார்த்துவிட்டு கீழிறங்கினார்.

வெளேர் என்கிற வேட்டி சட்டையும், காதுக் கடுக்கனும், திருநீறுமாய் கோயிலுக்கு எதிரே வந்து கரம் குவித்தார்.

"உடம்பு சிலிர்க்கிறதே, பெரியவர் சமாதி பார்க்கறச்சயே.... யாரு, சித்தரா...."

"ஆமாங்க."

"லிங்கப் பிரதிஷ்டைக்கு ஏற்பாடாறதா?"

"இல்லீங்க."

"வேற எப்படி?"

"சக்கரம் வரையணுமாம்."

"கூடாதே!"

"ஏங்க..."

"அது வழக்கமில்லை. உள்ள என்ன?"

"தாயம்மாங்க."

"தாயம்மாவா....?"

"தெய்வங்க."

"காளி கோயில் கூடாதே. சிவலிங்கம்தான் பிரதிஷ்டை செய்யணும்."

"சரிங்க."

"யார் அது?"

"பாலு ஐயருங்க. பெரியவரு சீடரு!"

"உபதேசம் ஆயிடுச்சா."

"அப்படீன்னா.... தெரியலீங்களே."

"சந்நியாசியா?"

"இல்லீங்க. சம்சாரம் இருக்குது."

"என்னய்யா ஒரே குழப்பமா இருக்கு."

"ஆமாங்க, குழப்பம்தான். என்னமோ கிழவர் செத்ததும் அவசரமா பண்ணிட்டோம். நீங்க முறைப்படி செய்யுங்க ஐயா. நாங்க கூட இருக்கோம்"

"டார்ச் கொண்டா.... கல்லுல என்ன?'

கல்லில் இருந்த உருவம் பார்த்தார்கள், புரியாது தவித்தார்கள்.

"என்ன இது?"

"ஐயரு சொன்னாரு தாய்னு. நாங்க தாயம்மான்னு வச்சோம்."

"நமஸ்காரம்!" அவர் கும்பிட, ஐயர் வணங்கினார்.

"என்ன இது?"

"தாய்!"

"என்ன வித உபாசனை?"

"சக்தி வழிபாடு!"

"எல்லை காளி மாதிரியா?"

"இல்லை. எல்லாவற்றுக்கும் மேலே உள்ள தாய்."

"யார் பூஜை செய்யப் போறா?"

"எல்லோரும்."

"எல்லோரும்னா?'

"எல்லா உயிர்களும்."

"சரி. அசுத்தம் பண்ணாத இருக்கணுமே இடத்தை."

"எந்த இடம் சுத்தம்?'

"என்ன பேச்சு இது... நியமம் வேண்டாமா?"

"எது நியமம்?"

"ஆகம விதி."

"ஆகமமே இல்லாத இடத்தில் தெய்வம் இல்லையா. ஆகமம்தான் தெய்வமா?"

"அப்படி இல்லை. சில வழிமுறைகள் உண்டு."

"ஒரே வழிமுறை."

"என்ன அது?"

"எல்லா உயிரும் சமம்."

"எனக்குப் புரியலை. உங்க ஏற்பாடு என்ன?"

"பெண்கள், ஆண்கள், சிறுவர், சிறுமிகள் எவரும் தொட்டு வணங்கலாம்."

"எதை...?"

"கல்லை... கல்லான மனசை!"

"வழிபாடுங்கறது அப்படியா?"

"வழிபாடு என்பது கல் பூசையல்ல, வழி நிற்றல்"

"என்ன வழி?"

"எவரும் உயர்வு இல்லை. எவரும் தாழ்ச்சியில்லை."

"சந்தோஷம்!"

"தன்னையறிய கல்பூசை ஒரு உபாயம்."

'யார் உபதேசம் இது?"

"பெரியவர்"

"இவர் தத்துவம் என்ன?"

"எல்லாம் அம்மா. தாயே முதல்."

"உண்மை. காமகோட்டம் வச்சுடலாம். சிவலிங்கம் பிரதிஷ்டை ஏன் வேண்டாம்?"

"ஆண் முக்கியமில்லை."

"ஏன்?"

"அவன் பெண்ணின் உப பகுதி."

"எப்படி?"

"அவன் சூல் கொள்வதில்லை."

"வித்து அவன்தானே."

"விதை முக்கியமில்லை. மர வளர்ச்சியே முக்கியம்"

"நிறைய விஷமா விதைச்சுட்டா?"

"பூமிக்குத் தெரியும். பூமி முழுவதும் விஷச் செடியா இருக்கிறது. காட்டில் நல்ல செடிகளைப் பயிரிட்டவர் யார்?"

"உங்க ஐடியா தப்பு. சரியா வராது."

"இங்கே இப்படித்தான் இருந்தது. நடுவே திசைமாறிப் போயிடுத்து."

"அப்ப நான் தப்பா?"

"சர்வ நிச்சயமாய்."

"நீங்க என்ன பேசறேள், புரியறதா?"

"இல்லீங்களே."

"இவரு இங்க பொம்பளைதான் முக்கியம் கறார்."

கூட்டம் விழித்தது.

"அதாவது ஆம்பளைதான் பொம்பளைக்கு உதவியாம். பொம்பளை தன் இஷ்டம் போல இருக்கலாம்."

"இஷ்டம் போலன்னா?'

"அப்படி தள்ளி வாங்க சொல்றேன்."

கூட்டம் இலவச நாட்டுச் சர்க்கரைக்குச் சுற்றும் பிள்ளைகளாய் அவர் பின்னே நகர்ந்தது. அவர் பேச்சு கேட்டது.

"அந்த ஆள் சரியில்லீங்க. எனக்கு அப்பமே தெரியும்..."

"இங்க இப்படி இருந்ததுன்றாரே எங்க இருந்தது. இப்படி.... இந்த ஊர்லயா?"

"அப்படிச் சொன்னவன் வாய்மேல போடுவேன்." யாரோ பெண்பிள்ளை குரல் ஓங்காரமாய் ஒலித்தது.

"அமைதி.... அது ஒரு விஷயம்தான். எப்பவோ மனுஷாள் காட்டுமிராண்டியா இருந்தபோது இருந்தது. இப்பம் நடக்குமா?"

"இப்ப என்னங்க பண்றது?"

"அவரை நகர்த்திட்டு சமாதி கோவிலா கட்டிடுங்க. ஊருக்கு நல்லது. பெரியவரு சமாதி பெரிய விஷயம். சக்தியான இடம்."

"அவரு சொன்னதா சொல்றாரே...."

"தள்ளுப்பா அவரை வெளியே. நமக்கு கோவில் முக்கியம். ஊரு முக்கியம். புதுசா ஏதாவது செஞ்சு கெடுதல் வந்தா.... ஏதோ கோயில் கட்டி நாலு காசு சம்பாதிக்கிற வழி பார்க்காம..."

"கோயிலுக்கு நீங்க ஏற்பாடு பண்ணணும் சாமி.'

"நாலு பெரியவங்கக்கிட்ட பேசறேன்.'

கூட்டம் அவரோடு நடக்க, டெய்லர் கூட்டம் விட்டு விலகி ஐயர் அருகே வந்தான்.

"யோவ் ஐயரே.... உன் பேச்சு கேட்டிருந்தா ஊர் அசிங்கப்பட்டிருக்கும். நாங்க திரும்பி வர்றதுக்குள்ள ஓடிப்போயிடு. இல்ல உதை விழும்." எச்சரித்துவிட்டுப் போனான்.

கூட்டம் முற்றிலும் போக, ஐயர் ஆழ்ந்த கவலையோடு உட்கார்ந்திருந்தார். அரவம் கேட்டு தலை நிமிர்ந்தார்.

அந்த புல்லுக்கட்டுக்காரி மேடேறி வந்தாள். வணங்கினாள்.

"சாமி, ஊர் என்னமோ சொல்லுதே. இது பொம்பளைய உசத்துற கோவிலாமே."

"ஆமாம்."

"ஆம்பளை பத்தி கவலை இல்லையா?"

"இல்லை."

"இது சரியா சாமி?'

"இது மட்டுமே சரி."

"பொம்பளைக்கு கர்வம் வந்துராதா?'

"வராது. வலியில் பிள்ளை பெற்றவள், சுமை தாங்கிப் பெற்றவள். கர்வப்படமாட்டாள்."

"இப்பமே சிலது கர்வியா இருக்குதே."

"அது அடக்கப்பட்டதன் விளைவு. அன்பு போதிக்க ஆணையிட பெண் தகுதியானவள்."

"இத்தினி காலம் அடங்கியிருந்தே பழகிப் போச்சே சாமி.... எழுந்து நிக்க முடியுமா?"

"நிக்கணும்."

"இதான் பெரியவரும் சொன்னாரா?"

"ஆமா"

"ஊரு உன்னை வெட்டிப் போட்ரும் சாமி."

"விதை நடுவோம். பூமிக்குத் தெரியும் எப்படி வளர்ப்பதென்று. இந்த ஒரு மரம் வளர்ந்தால் போதும். ஊர் முழுவதும் இம்மரம் பரவும்."

"நான் என்னங்க பண்ணணும். இதுக்கு ஏதாவது செய்யணும்னு தோணுது."

ஐயர் யோசித்தார்.

"இப்போது விலகியிரு. விலகியிருந்து உதவி செய்."

மறுபடி ஆள் வரும் அரவம் கேட்டது.

மரகதம் மேலேறி வந்தாள்.

"ஐயா..."

"என்னம்மா?"

"கெட்ட கனவு வருதுய்யா."

"என்ன?"

"இன்னொரு சமாதி தோண்டறாங்க."

ஐயர் மெல்ல சிரித்தார்.

36

யாரும் தன்னைத் தன்னுள் தள்ளி விடாது தானே தனக்குள் மூழ்க, பாலு ஐயர் முயற்சி செய்தார். ஆழ்ந்து உள்ளே இதை யார் யோசிப்பது, யார் இப்படி மூழ்க விருப்பம் கொள்வது என்று பார்த்தார். தேடத் தேட ஏகப்பட்ட எண்ணங்கள் தோன்றின. மிரட்டிவிட்டுப் போன டெய்லர் முகம், இது தப்பாச்சே என்கிற புதிய மனிதர் குரலும், கூட்டமும், நான் என்ன செய்யணும் என்கிற கிழவி முகம், இன்னொரு சமாதி கட்டறாங் கய்யா என்கிற மரகதம் குரலும் மனசுள் மோதின.

ஐயர் சகலமும் கவனித்தபடி இருந்தார். அப்படித் தான் நடக்கும் என்று எதோடும் மறுப்பு சொல்லாது எண்ணங்களை மடக்காது இருந்தார். சோப்புக்

குமிழிகள் மாதிரி தோன்றிய எண்ணங்கள் தானே வெடித்துச் சிதற, எண்ணமில்லா இடத்துக்குப் போனார். உடல் சுமை காணாமல் போனது. மனசு நழுவியது. நழுவின இடத்தில் தோன்றிய வெறுமையிலேயே ஏதோ இருந்தது. அந்த ஏதோவோடு ஆனந்தமாகி இருந்தார்.

"ஐயா." யாரோ கலைத்தார்கள்.

கண் விழித்ததும் நனவுலகம் வர சிறிது நேரம் ஆயிற்று.

எதிரே பார்த்தசாரதி நின்றுகொண்டிருந்தான்.

"என்ன?'

"ஊர் தனியே கூடிப் பேசுதுய்யா."

"என்ன?"

"தாய் கோயிலு, பேய் கோயிலெல்லாம் கிடையாது. பெரியவங்க சொன்ன மாதிரி சிவலிங்கம் வச்சுடணும்னு தீர்மானம் போடறாங்க."

"அப்போது பேய் கோவில்தான்."

"நாம என்னங்க செய்யணும்?"

"நான் இங்கே இருக்கும் வரை எந்த லிங்கமும் வைக்க முடியாது."

"வுட்டுட்டு வேற இடம் போனா என்னங்க?"

"அங்கேயும் இதுவேதான்.... கோவிலா முக்கியம்.... கட்டடமா எண்ணம்...."

"வேற எதுங்க?"

"சிந்தனைக்கு செயல் வடிவம் கொடுக்கப்படும் விதம், இடம் கோவில். இடம் சிந்தனையைச் சிதிலமாக்கிவிடக் கூடாது."

"பொம்பளையைக் கட்டுப்பாடு இல்லாத அவுத்து வுட்டுட்டா ஆம்பளைக்கு மரியாதை இல்லாத போயிடும்னு கத்தறாங்க ஐயா."

"அதனால்தான் எதிர்ப்பு என்பது உண்மை. ஆனால், மரியாதை அடக்குமுறையில் வராது. வரவும் இல்லை."

"பெண்ணுக்கு உரிமை கொடுத்துட்டா ஆம்பளையை அவ அடக்க மாட்டாளா?"

"இத்தனை காலம் எதிர்க்காமல் இருந்தாளே. ஏன், எதனால என்று கேட்டாயா? வளர்த்தலை, தன் இனம் வளர்வதை பெண் பிராணிகள்தானே செய் கின்றன. ஆணின் வேலை பெண்ணுக்குத் துணையாய் இருத்தல்."

"இனப் பெருக்கத்துக்குத்தான் ஆண் அப்படின்னு ஆயிடும்."

"இப்போது வேறு என்ன செய்கிறான். வேறு செய்வதாய் காட்டிக் கொள்வதைத் தவிர..."

"அப்போ வேத காலத்துலயே தப்பா நடந்து போச்சுன்றீங்களா?"

"எந்த காலம் என்று இங்கே உட்கார்ந்து எப்படிச் சொல்வது? எப்போதுதான் உடைமை, தன் சொத்து என்று நினைத்தானோ அப்போது ஆரம்பித்தது. பெண் சொத்து என்று நினைத்ததும் காரணம்..."

"காட்டுமிராண்டிப் பயல்னு பேசறாங்களே."

"நானும் அதே வார்த்தை சொல்றேன்."

"உங்களைப் கடைசியா வந்து கேட்டு நகர்ந்துக் கோன்னு சொல்லி..."

"மாட்டேன்."

"எதுனா அடிதடி ஆயிடுச்சுன்னா?"

"ஆகட்டும்."

"உங்களை பலி கொடுத்து இதை நிக்க வைக்க ணுமா?"

"உலகம் உருண்டை என்று சொன்னவனையும் எதிர்த்தார்கள். எரித்தார்கள்."

"நாம நகர்ந்து தனியே போய் ஒரு அமைப்பா...."

"இங்கே துவங்கி விட்டோம். இது துவங்கிற்று."

"யாருங்க?"

"இது!" சமாதி காட்டினார். "இத்தனை வருடம் பேசாது யோசித்து நம்மைப் பேச வைத்திருக்கிறது. இத்தனை நாள் இது, இதுபற்றியே விசாரப்பட்டு, விசாரப்பட்டு வெளியே வந்திருக்கிறது. இது தவறாகாது."

"ரத்தம் சிந்துமே இங்கே..."

"பெண்களுக்குப் புரியட்டும் இது."

"அதுக்காக ரத்தமா?"

"தேவையெனில் ஆமாம்."

"உங்க வீட்டம்மா கஷ்டப்படும் ஐயா."

"அவள் சரஸ்வதி. அவளுக்குப் புரியும். புரிய வைத்துவிட்டேன். அவளை வணங்கியே இது

துவங்கப்பட்டது. வணங்கி அவளை நேசித்து அவளுக்கு காட்டியாயிற்று."

"வந்திடுங்கய்யா."

"துவங்கிவிட்டது."

"எதுங்க?"

"அதோ...?'

ஊர் அவர் கை காட்டிய இடத்தில் வந்து கொண்டிருந்தது.

"பார்த்தசாரதி..."

"என்னங்க.."

"மரகதம் இந்தக் கல் எடுத்துக்கொள்ளட்டும். நீ கலாவதியோடு கிளம்பு.... மணியக்காரர் வழியனுப்புவார். போ. இந்த இடம் விட்டு போ."

"என் வேலை என்னங்க?"

"வாழ்தல்."

"எப்படிங்க?"

"பெண்ணை வணங்கி வாழ்தல். உன்னால் கலாவதி வணங்கப்படட்டும். அவளை வணங்குவது உன் குழந்தைகள் உணரட்டும். அவர்களும் அவ்விதமே வணங்கட்டும். வித்து நட்டாகி விட்டது. கலாவதி வளமான பூமி. தாவரம் வளரும். ஒன்றாய் நூறாய் ஆயிரமாய் பெருகும். துணையாய் இரு."

"ஐயா நீங்க."

"இன்னொரு சமாதி இங்கேயே இருக்கும், எவரும் அறியாது நான் புதைக்கப்படுவேன். பிற்பாடு உன்னால் கண்டுபிடிக்கப்படும்."

"ஐயா..."

"உன்னுள்ளும், என்னுள் வெளிச்சம் எரிந்தது விளையாட்டிற்கில்லை. பார்த்தசாரதி உன் வெளிச்சத்தில் உன்னைத் தேடு. உன்னை கேள்வி கேள். உன்னை உன் உண்மையைத் தெரிந்துகொள்...."

"சமூக நியதி மாற்றம்தானே ஐயா?"

"இல்லை, இதுவே இயல்பு. இதுவே இயற்கை இயல்பாய் இருத்தலே தன்னை அறிதல்."

"ஐயா நீங்க?"

"போ - இடம் விட்டு ஓடு.... ஊர் விட்டு காணாமல் போ...."

ஊர் வயலில் இறங்கி ஓடிவர, பார்த்தசாரதி இருளில் எதிர்ப்பக்கம் போனான். வெட்டவெளியை சுற்றி பைப்புக்காரர் வீட்டு வாசலில் நின்றான். கொல்லைக் கதவு திறந்தது. கலாவதி வந்தாள்.

"மரகதம் எங்கே?"

"கூட்டத்துக்குப் பின்னாடி போச்சு..."

"உங்க அப்பா எங்கே?"

"இங்கன இருக்கேன் பார்த்தசாரதி, ஊர் நம் மேலேயும் கோவமா இருக்கு. நான் சேரமாட்டேன்னே ஒதுக்கிட்டோம்னுடுச்சு."

"அப்ப என்ன செய்யறது?"

"கிளம்பிவிடலாம்?"

"உங்க அம்மா வேணாமா?" பைப்புக்காரர் கேட்டார்.

"அவங்க மரகதத்தோட போயிட்டாங்கப்பா." கலாவதி பதில் சொன்னாள்.

"சரியா பிரிஞ்சுட்டம்."

"சரி, போகலாம்."

"பார்த்துட்டுப் போகலாம்."

"எதை...."

"அங்க நடக்கற கண்றாவியை..."

வெட்டவெளி அமைதியை மீறி எவனோ குரல் கொடுத்தான்,

"வெட்டிக் கொன்னுடுவேன். மரியாதையா போயிடு." யாரோ ஐயரை கூட்டத்திலிருந்து இழுத்துப் போட்டார்கள். மண்மேட்டில் உருட்டிவிட்டார்கள்.

ஐயர் எழுந்து மேட்டுப் பக்கம் போனார். ஒருவன் சகலரையும் தள்ளினான். தள்ளப்பட்ட ஒருவனின் கை ஆயுதம், இன்னொருவன் நெஞ்சு குத்த, அவன் அலறினான். ஆங்காரமாய் எழுந்து ஐயர் முகத்தில் அடித்தான். ஐயர் அடிவாங்கி உள்ளே போனார். மறுபடியும் தள்ளினார்கள். மறுபடியும் எழுந்து ஐயர் கூட்டம் விட்டு விலகினார். இந்த முறை முதுகில் அடித்தார்கள். காலில் கட்டையால் போட்டார்கள். படுத்தபடி ஐயர் அடித்தவன் தொண்டைக் குழியில் மனசு செலுத்தி திருகினார்.

"இந்தாளு கடிக்கிறான், கடிக்கிறான்!" பலர் பல கைகள் தள்ளப்படுவதை உணர்ந்தார்கள். கால் இடறி விழுந்தார்கள்.

"ஏய் கிழவன் வேலை காட்டறான். இந்த ஆளும் பில்லி சூன்யம் பண்றான். அடி... அடி.... அடிறா." தரையில்

நகரும் சாரையை சாத்துவது போல் ஒன்று, இரண்டு, மூன்று.... நான்கு.... பத்து... இருபது.... முப்பது அடிகள் விழுந்தன. ஒரு பெரிய கடப்பாரை நச்சென்று அவர் நெஞ்சுள் குத்தி பூமி தொட்டது.

பார்த்தசாரதி 'ஐயோ' என்று முகம் அறைந்து அழுதான் கலாவதி இரண்டடி அவனுக்கு முன்னே போய் அதிர்ச்சியுடன் கூட்டம் பார்த்தாள், பைப்புக்காரர் கையெடுத்துக் கும்பிட்டார்.

ஐயர் புலன்களில் வலியில் எகிறிய நெஞ்சுக் கூட்டை கூடித் தொட்டன. விலகின. தொட்டு விலகியதில் வலி போயிற்று. புலன்கள் நகரத் துவங்கின. ஐயர் எல்லாம் கரைய, தான் எது என்று தேடினார். குபீர் என்று ஒரு ரீங்காரம் காது துளைத்தது. கண் பஞ்சடைந்தது. நாக்கு உலர்ந்தது. மரகதம் ஓடிப்போய் சேறு தண்ணீரில் புடவை முந்தானை பிழிந்தாள். ஐயர் கண்கள் அவளை உற்றுப் பார்த்தன. தாய்.... தாயம்மா... தாயம்மா என்று உதடு கூடிப் பேசியது. ஐயர் உள்ளே இறங்கினார். இருட்டாயிற்று. இருட்டிலிருந்து சிறிய பொட்டாய் ஒளி வந்தது. ஒளி பெரிதாயிற்று. வட்டம் போட்டது. அடி பொத்துக் கொண்ட பானை நீர் போவது போல் ஒளி ஒளியோடு கலந்தது.

"போ.... பார்த்தசாரதி போ."

பார்த்தசாரதிக்கு காதருகே குரல் கேட்க, வயல்களூடே நடந்தான். பைப்புக்காரர் தோல் பை எடுத்து வந்தார். கொல்லைக் கதவு பூட்டினார். இருபதடி தொலைவில் பின்தொடர்ந்தார்

வரப்பு இடற, கலாவதி தடுமாறினாள். பார்த்தசாரதியின் தோள்பிடித்துக் கொண்டாள்.

"எங்கே போறோம்?"

"ரொம்ப தூரம்."

"எவ்வளோ தூரம்.?"

"நடந்தேவா...." கலாவதி வரப்பில் தடுமாறினாள்.

"முடியலையா... வா" அவளைத் தூக்கித் தோளில் உட்கார வைத்துக கொண்டான். அவன் கழுத்தையும், தோளையும் அவள் பிடித்துக்கொள்ள, பார்த்தசாரதி வேகமாய் ஓடினான்.

தொலைவில் போய் நின்று திரும்பினான்.

கோயில் இடிபட்டு கூரைச் சுவர் சரிந்தது. இழுத்து போட்ட கூரைக்கு நெருப்பு வைக்கப்பட்டது.

கடப்பாரையும், அரிவாளும் உயர்த்திக் காட்டப் பட்டது நிழலில் தெரிந்தது.

பார்த்தசாரதி மேலும் ஓடினான், மேலே மேகங்கள் திரண்டன. புல்வெளியில் இறங்கினான். ஏரிக்கரை சுற்றி நடந்தான். கிழவி புல் கூடையைச் கட்டிக்கொண்டு தலைகுனிந்தபடி உட்கார்ந்திருந்தாள். ஓடி வரும் சத்தம் கேட்டு எழுந்தாள்.

'கிளம்பிட்டியா?"

"ஆமாங்க."

"மழை வரும் போல இருக்கு."

"குடை இருக்கு. குடை இருக்கு"

"பைப்புக்காரர் கக்கத்தில் உள்ளதைக் காட்டி னார்."

தூறல் தரை தாக்கிற்று. குடை பிரித்துக் கொடுத் தார். பார்த்தசாரதி வாங்கி தான் தோளில் அமர்ந்த கலாவதிக்கு உயர்த்திப் பிடித்தான்.

'எதுனா சாப்பிட்டீங்களா எல்லாரும்?"

"இல்லை. கிளம்பறோம்."

"இந்தாங்க. இந்தாங்க"

கூடையிலிருந்து பேரிக்காய்களை நீட்டினாள். பார்த்தசாரதி வாங்க முடியாது தவித்தான். தோளிலிருந்த கலாவதி வாங்கினாள். சேலை மடிப்பில் போட்டுக் கொண்டாள்.

மழை வலுத்தது. கலாவதி பேரிக்காயை இடது கையில் எடுத்து கடித்தாள். வலது கை அவன் முடியை பிடித்திருந்தது. அமர்ந்திருந்த தலைக்கு மேல் குடை மழைகாத்தது.

"யாரும் தேடினா..."

"சொல்ல மாட்டேன். வெட்டினாலும் சொல்ல மாட்டேன்."

மழைக்குக் கலைந்த கூட்டத்தை சிலர் நிறுத்தினார்கள். "அந்த பார்த்தசாரதி இவனோட ஆளு. அவனை விட்டுட்டா எப்படி? தேடுங்கய்யா. இல்லை நம்மளைக் கூண்டோட உள்ள போட்டுருவாங்க."

"இதை என்ன பண்றது?"

"கல்லு புரட்டி உள்ள போட்டுருவம். அப்பத்தான் போலீஸ் தேடாது."

"வேணாம். பக்கத்துலயே வெட்டிப் புதைச்சுடுங்க, சமாதி மண்ணு, தொடாதேன்னுடலாம்." முதலில் குழி வெட்டித் தள்ளி கோபுரமாக்கினார்கள். மண்ணை அப்புறப்படுத்தித் தோண்டினார்கள். ஐயரைப் புரட்டி உள்ளே போட்டார்கள். மண் தள்ளினார்கள். மறுபடி மேடாக்கினார்கள்.

"யாரும் வாய் திறக்கக் கூடாது."

"திறந்தா அவனும் மாட்டிக்குவானே."

"சீக்கிரமா தளம் போட்டு கோயில் கட்டிட்டா எதுவும் தெரியாது."

"ஆளுக்கு கொஞ்சம் துட்டு போட்டுரலாம்."

"ஆயிரம் ரூபா ஆனாலும் கோயில் கட்டிறணும்."

"என்ன கோயிலு?"

"தாயம்மா கோயிலு கட்டிரலாமா?"

"கிடையாது. இந்த கல்லே வேணாம். இது அசிங்கம்."

எவனோ காலை வைத்து கல்லை எட்டித் தள்ள, கல் புரண்டு மல்லாக்க விழுந்தது. எவனோ கடப்பாரை ஓங்கினான்.

"வேணாம் வுட்டுரு. எதுனா செஞ்சு தொலைக்கப் போவுது. கோயில் கட்டற கல்லோட கல்லா ஆயிடட்டும்,'

"ஆமாய்யா, ஆளு மேல உள்ள கோவத்தை சாமி மேல காட்டாதீங்க. கல்லை வுட்டுருங்க."

"இந்த மரகதம் எதுனா சொல்லுமா கேட்டுக்க."

மாட்டேன், மாட்டேன் என்று தலையாட்டினாள். கை கூப்பினாள்.

"சொன்னே..." எவனோ கட்டையை ஓங்கினான்.

"வேணாம், வுடுப்பா. அது புள்ளைத்தாச்சி. அடிக்காத."

"இத பாரு.... ஊரு பேச்சு கேட்டு அடங்கி நடந்தா போனா போவுதுன்னு வுட்டுருவேன். இல்லை...

புள்ளைத்தாச்சின்னுகூட பார்க்க மாட்டேன். ஒரே வெட்டு வெட்டிருவேன், போ."

"யாராவது ஐயர் எங்கன்னு கேட்டா?"

"தெரியாதுன்னுடுவோம்"

"ஐயர் வூட்டம்மா கேட்டா?"

"அதே பதில் சொல்லுவோம்."

"அப்போ கலைஞ்சு போயிடலாம். யாருக்கும் எதும் தெரியாது. ஆமா.... தெரியாது.... என்ன..."

கதவு தள்ளி திறந்தது. சரஸ்வதி எழுந்து உட்கார்ந்தாள்.

"வருத்தமா சரஸ்வதி!" காற்று கேட்டது.

சரஸ்வதி அழுதாள்.

"எழுந்திரு சரஸ்வதி. நீ மகா மனுஷி. எல்லாம் தெரிந்தவள். உன்னால் வலி தாங்க முடியும். துயரம் தாங்க முடியும். நாம் நமக்கு என்று வாழ்ந்தது போதும்."

"சரஸ்வதி நெற்றி குங்குமம் அழிக்க கை தூக்கினாள்.

"வேண்டாம்."

ஏன் என்று தலை தூக்கினாள்.

"நான் உன்னோடு சில காலம் இருந்தேன். இப்போது இல்லை. அவ்வளவே. உன்னிடம் மாறுதல் ஏதுமில்லை. கோல மாற்றம் எதுவும் அவசியமில்லை. உன்னை வதைத்துக்கொள்ள வேண்டாம். வாழ்ந்து நீ பிறர் வாழ்க்கைக்கு உதவி செய். உன் மகனுக்கு சொல்லிக் கொடு. உன் மருமகள்களை மதித்து நில். இந்த விஷயம் பற்றி ஆழ்ந்து யோசனை செய். அண்டிவந்த

ஆண்களுக்கு, பெண்களுக்கு சொல்லிக் கொடு. மெல்ல பரப்பு. நான் துவக்கம். நீ வழி."

காற்று கொல்லை வழியே போயிற்று.

சரஸ்வதி கிணற்றடிக்குப் போய் நீர் இறைத்து தலையில் கொட்டிக் கொண்டாள். ஈரப் புடவையுடன் கொல்லைப்புறத்தில் உட்கார்ந்தாள், இது பற்றி ஆழ்ந்து விசாரம் துவக்கினாள்.

"ஏய் கிழவி, பார்த்தசாரதி இப்படி ஓடினானா?"

"ஆமா. கலாவதி, பைப்புக்காரர் கூட போனாங்க."

"பாத்தியா..... வுட்டுட்டமே. போலீஸ் ஸ்டேஷன் போயிட்டானா."

"ஆமா, இப்படிப் போய் பாதை ஏறினாங்க." கோயிலுக்கு எதிர்ப்புறம் கை காட்டினாள். கூட்டம் ஓடிற்று.

பின்னால் வந்தவர்களுக்கும் கிழவி அதே வழி காட்டினாள்.

"மாட்டிக்கிட்டா என்ன ஆவும்." கவலைப்பட்டுக் கொண்டே கூட்டம் மழைக்கு ஊடே கலவரத்துடன் ஓடியது.

"மாமா, வடக்க போயிடலாமா?'

"மேற்கே போயிடலாம் தம்பி. மலை பக்கமா, மலையாளத்து கரைப் பக்கமா போயிடலாம்."

"சரி..."

"தம்பி, திரும்பி நில்லுங்க."

"என்ன மாமா."

"பாத்துக்கறேன்."

பார்த்தசாரதி திரும்பினான்.

அவன் தோளில் கலாவதி இடுப்பு பதித்து உட்கார்ந்திருந்தாள். இடது கையில் பேரிக்காய். பார்த்தசாரதி வலது கை அவளுக்குக் குடை பிடித்திருந்தது.

"சௌகர்யமா இருக்கியா தாயி?"

கலாவதி சிரித்தாள்

"பயப்படாதம்மா, நாம தாண்டிட்டம்."

"எனக்கு என்ன பயம்? இவரும் நீங்களும் இருக்கச் சொல்ல.... அப்பா பேரிக்கா வேணுமா?"

ஒன்று எடுத்து அவரிடம் தூக்கிப் போட்டாள்.

"பார்த்தசாரதி சாப்பிட்டுச்சோ என்னவோ..."

"எப்படிங்க சாப்பிடறது?"

"இந்தாங்க." வாயில் மென்றதை எடுத்து அவனுக்கு ஊட்டினாள்.

வாய் நிறைய பேரிக்காயோடு அவன் சிரித்தான். அவளும் சிரித்தாள்.

"அம்மா..." பைப்புக்காரர் கை கூப்பினார்.

"இதுவே.... இனி இதுவே..."

"மேல போவமா?" பார்த்தசாரதி கேட்டான்...

அவர்கள் மேற்கு நோக்கி நடந்தார்கள்

மரகதம் மேலேறி சுற்றும்முற்றும் பார்த்தாள். கல்லை பலம் கொண்டு தூக்கி தலைமேல் வைத்துக் கொண்டாள். ஊர் சுற்றி இருட்டில் நடந்து தன் வீட்டுக் கொல்லையில் நட்டாள். மேலே மழையில் நனைந்த மண் சேறு தடவினாள். தடயம் மறைத்தாள்.

நிலம் தொட்டு வணங்கினாள்.

"ஆத்தா, இப்போதைக்கு இரு இங்க. ஒரு காலம் வரும். நாம எல்லாம் வெளிய வருவோம். அப்படியே இரு ஆத்தா."

"எதுவும் முடிவல்ல. மாறும். எல்லாம் தேடித் தேடி மனுஷக் கூட்டம் இங்கேதான் வரும். இதுவே இயல்பு, இதுவே தடம். இதுவே வழி" என்று சரஸ்வதிக்குத் தோன்றியது.

மழை விடாது கொட்டியது.

முற்றும்